வெளியீடு: 216

# அகலிகை வெண்பா

(வசனம், குறிப்புரையுடன்)

ஆசிரியர்:

ராவ் ஸாஹிப்

வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. ஸி.

Dy. Superintendent, C. V. D. (Retired)

UNIVERSITY EXTENSION LIBRARY
22 DEC 1960
MADURAI

மூன்றும் பதிப்பு

முகவுரை ஆசிரியர்:

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சியாளர்

ஸேது ஸமஸ்தான மஹா வித்வான், பாஷா கவிசேகரர்

ரா. இராகவையங்கார்

பதிப்பாசிரியர்:

வித்வான் கு. அருணாசலக் கவுண்டர்,

தமிழ்த் தலைமை ஆசிரியர்,

மதுரைத் திரவியம் தாயுமானவர் ஹிந்து கலாசாலை,

திருநெல்வேலி.

முதற் பதிப்பு — 1914.
இரண்டாம் பதிப்பு — 1920.
மூன்றும் பதிப்பு — 1938.

13730

விலை: ராப்பர் ரூ. 0—10—0. காலிகோ ரூ. 1—0—0.

கிடைக்குமிடம் :—
தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட்,
கீழ ரதவீதி, திருநெல்வேலி.
கிளை நிலயம்:
6, பவளக்காரத் தெரு, சென்னை.

திருநெல்வேலி ஹிலால் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது

# உரிமையுரை

பூமேவு பன்னாட்டும் போந்தவளம் யாவையுந்தன்
தேமேவு செம்பித் திருநாடன்—நாமேவு
மின்னு மலர்மகளு மேவிப் பலநலமும்
மன்னு முகவைநகர் மன்.

ராசரா சேசமுத்து ராமலிங்க சேதுபதி
போசனே போற்சங்கம் போந்துமுத—லாசனமேல்
மேவவுறு மோகை விளக்க அகலிகைவெண்
பாவுரிமை செய்தேன் பரிந்து.

மதுரைத் தமிழ்ச்சங்க வான்றலைவன் சேது
பதிமுத்து ராமலிங்க பானு—அதிகப்
பரிவோ டகலிகைவெண் பாவையினி தேற்றான்
உரிமை யெனநெஞ் சுவந்து.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 33 | 8 | புன்செயலா | புண்செயலா |
| 35 | 8 | வஞ்சித் | வாஞ்சித் |
| 46 | 7 | சேர்ந்திடினும் | சேர்த்திடினும் |
| 5 | 9 | ஆகத்தோர் பாகம் | ஆகத் தொருபாகம் |
| 5 | 10 | மாதோ | மாதரோ |
| 22 | 17 | விடம்ஓர்உரு | விடம்ஓர்உரு |

பிழைகளைத் திருத்திக்கொண்டு வாசிக்க.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# பொருளடக்கம்


| வரிசை எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | உரிமையுரை ... ... | iii |
| 2. | பொருளடக்கம் ... ... | v |
| 3. | பதிப்புரை ... .... | vii |
| 4. | முன்னுரை ... ... | ix |
| 5. | முகவுரை ... ... | xi |
| 6. | நூல் | |
| | i. இந்திர காண்டம் ... ... | 1 |
| | ii. அகலிகை காண்டம் ... ... | 24 |
| | iii. கௌதம காண்டம் ... ... | 48 |
| 7. | அகலிகை வெண்பா வசனம் ... ... | 65 |
| 8. | செய்யுள் முதற்குறிப்பகராதி .... | 111 |
| 9. | அநுபந்தம் | |
| | i. முதற்பதிப்பு முன்னுரை ... | 114 |
| | ii. இரண்டாம் பதிப்பு முன்னுரை ... | 116 |
| | iii. இரண்டாம் பதிப்பு அநுபந்த முன்னுரை ... | 120 |
| | iv. சிறப்புப்பாயிரம் (முதற்பதிப்பைப் பற்றியது) | 122 |
| | v. அபிப்பிராயங்கள் : | |
| | (1) முதற்பதிப்பைப் பற்றியவை | 124 |
| | (2) இரண்டாம் பதிப்பைப் பற்றியவை | 125 |
| | vi. ஆசிரியரியற்றிய நூல்கள் ... | 128 |

# பதிப்புரை

இரண்டாம் பதிப்பில் ஆளப்பெற்ற பதிப்பு முறை, குறிப்புரையல்லாத எல்லாப் பகுதிகளிலும் இப்பதிப்பில் பின்பற்றப்பெற்றிருக்கின்றது. குறிப்புரைகள் ஒரு சேரப் பதிப்பிக்கப்பெருமல் அவற்றுக்குரிய பாட்டுக்களின் கீழ், வாசிப்போர் உடனுடன் பார்வையிட்டு எளிதாகப் பொருள் கண்டுகொள்ளுதற் கேற்றவாறு, அடிக்குறிப்புக்களாகப் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன. குறிப்புரையாலும் விளங்காத பாட்டுக்களின் பொருள், அகலிகை வெண்பா வசனத்தில் அப்பாட்டுக்களின் எண்களுடனுள்ள வசனப் பகுதிகளைப் பார்ப்பதனல் நன்கு விளங்கும். பாட்டுக்களில் குறியீடு செய்திருக்கும் முறையைப்பற்றிய குறிப்பு இரண்டாம் பதிப்பில் தனியாகப் பதிப்பித்திருந்ததைக் கீழே தருகிறேன்.

'இந்நூலில், பொருள் எளிதாகப் புலப்படும்பொருட்டுப் பாட்டுக்களில், சீர் முடிவில் மட்டுமன்றி, ஒரு சீரின்கணுள்ள அசை நடுவிலும், வேண்டுமிடத்தே, சந்தி பிரித்தலும் குறியீடும் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, கடவுள் வாழ்த்துப் பாவில், 'என்னுமெதை' என்பது 'என்னும்? எதை' என்று பதிப்பிக்கப்பட்டிருப்பதைக் காண்க. 'காட்டுவழி' என்ற வெண்பாவில், 'கள்ளர் பயம்' என்ற சீர், எழுத்துக்களால் தேமாங்கனியாயினும், ஓசையால் கூவிளங்காயாகக் கொள்ளப்படல்போல 'என்னும்? எதை' என்ற சீரும் எழுத்துப்பற்றித் தேமாங்கனி யென்று கொள்ளப்படாமல் ஓசைபற்றிக் கூவிளங்காயாகக் கொள்ளப்படல்வேண்டும். 'என்னும் எதை' என்பது இருக்குமிடத்து 'என்னும் விதை' என்பதிருந்தாலும், ஓசை வேற்றுமையின்றி வெண்பாத்தளை சிதையாதிருத்தலை நோக்குக. 'கள்ளர் பயம்' என்பது இருக்குமிடத்துக் 'கள்ளன் பயம்' என்பதிருந்தாலும், 'என்னும் எதை' என்பது இருக்குமிடத்து 'என்னும் விதை' என்பதில்லாமல் 'என்னும் கதை' என்பதிருந்தாலும் தளை சிதைந்துவிடு மென்பது சொல்லாமலே தெரியும்.

இதுபற்றியே 'எழுத்துக்கு மாத்திரை கோடலும், அசைத்தலும், சீர்செய்தலும், தளையறுத்தலும், ஓசைபற்றியல்லதெழுத்துப்பற்றியல்ல வென்க' என்பது நன்னூல் விருத்தியுரையில் எழுத்தியலின் 16-ம் சூத்திரத்தின் உரையிற் கூறப்பட்டது.

'மேற்கூறியவாறு ஓசை கெடாமற் குறியீடு செய்யக்கூடாத இடங்களில், எவ்வெழுத்தைப் பிரித்து எக்குறி இடவேண்டுமோ, அவ்வெழுத்தைப் பிரியாமல் அதற்குப் பின் அக்குறி, மற்றைய வழக்கமான குறியினின்றும் பிரித்தறியும்படி, சிற்றளவினதாக, இடப்பட்டிருக்கின்றது. உதாரணமாக, 8-ம் பாட்டின் இறுதியில், 'மிக்கினிதவ்வாறு' என்பது 'மிக்கினிது;அவ் வாறு' என்று பதிப்பிக்கப்படாமல், 'மிக்கினித;வ் வாறு' என்று பதிப்பிக்கப்பட்டிருத்தலைப் பார்க்க.'

இந் நூலில் சற்றுக்குறைய எல்லாப் பாட்டுக்களிலும், எதுகைகள் முற்றும் சந்த ஒற்றுமையுடையனவாகவும், மோனைகள் ஒவ்வோரடியிலும் மூன்றுஞ் சீரில் அமைந்தனவாகவும் வருதலும், வகையுளி வாராமையும், கருத்துடை அடைகளே அன்றி இசை நிரப்புதலே பயனாகவுடைய அடைமொழிகள் இல்லாமையும், விளச்சீர்கள் மிகக் குறைவாகவும் நெடிலீறுடையவைகளாகவும் ஆளப்பட்டிருத்தலும் கவனிக்கத்தக்கவை. இந் நூலின் எல்லா அருமைகளும் பெருமைகளும் பின்னுள்ள அனுபந்தத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ள அபிப்பிராயங்களைப் பார்ப்பதனால் விளங்கும்.

முந்திய பதிப்புக்களில் இல்லாத பல புதுப் பாட்டுக்கள் இப்பதிப்பிற் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. அவை 45, 89, 91, 96, 150, 159, 160, 175, 177, 208, 214, 215 எண்ணுடையன.

ம. தி. தா. இந்து காலேஜ்,
திருநெல்வேலி.

கு. அருணசலக் கவுண்டர்
12—6—38

# முன்னுரை

இந்நூலை இப்பதிப்புக்காக யான் ஆராய்ந்துகொண்டிருந்த போது நேராகவும் நிருப வாயிலாகவும் திருத்தங்கள் குறிப்பித்துதவிய நண்பர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் S. சோமசுந்தர பாரதி, M. A., B. L, (Advocate), T. K. சிதம்பரநாத முதலியார், Ex. Commissioner, H. R. E. Board, மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலைத் தலைமையாசிரியரும் செந்தமிழ்ப் பத்திராசிரியருமான திருநாராயணையங்கார், ஷை கலாசாலை ஆசிரியர் நல்லசிவன் பிள்ளை, 'செந்தமிழ்' உதவி ஆசிரியர் T. K. ராமாநுஜையங்கார், புத்தேரி தேசிகவிநாயகம் பிள்ளை, தூத்துக்குடி கவிராச பண்டிதர் ஜெகவீரபாண்டியன் ஆகிய வித்துவ சிரேட்டர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனங்கள் உரியனவாம்.

இந்நூலை என்னுடனிருந்து பன்முறை ஆராய்ந்து திருத்தமுறப் பதிப்பித்த திருநெல்வேலி, மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கலாசாலைத் தமிழ்த் தலைமையாசிரியர், வித்துவான் கு. அருணாசலக் கவுண்டர் அவர்களுக்கு எனது நன்றி என்றும் உரியது.

இந்நூலை செவ்வையாக அச்சிட்டுதவிய ஹிலால் பிரஸ் அதிபரவர்களுக்கும், தங்கள் வெளியீடாக வெளியிட உதவிய தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளகால் போஸ்டு
திருநெல்வேலி ஜில்லா.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்
12—6—'38.

# முகவுரை

---

அகலிகை வெண்பா என்பது, அகலிகையைப் பற்றிய வெண் பாவாலாகிய நூல் என்று பொருள் தரும். இது, 'பாரி பாட்டு', 'நளவெண்பா' என்ற பெயர்களோடு ஒப்பதாகும்.

இந் நூலியற்றியவர், கல்வி யறி வொழுக்கம் இவற்ருல் நிரம்பிய ஸ்ரீமான் வே. ப. சுப்பிரமணிய முதலியார் எனப் பெயர் சிறந்தவர். இவர் நெடுங்காலம் இந் நாட்டின்கண் விலங்குகளின் உறுபிணி நீக்கும் புண்ணிய காரியத்தை நன்ருற்றிப் புகழ்படைத்தவர். இவர் இராசாங்க பாஷையாகிய ஆங்கிலத்தை வேண்டிய அளவு கற்ற காலத்தும், நந் தாய்மொழியாகிய நறுந்தமிழை மறவாமல், அதன்கட் பேரன்பு பாராட்டிப் பயின்று அம் மொழியின் மேம்பட்ட கல்வித் திறம் வாய்ந்தவர். பெரிதாகிய கல்வித்திறம் வாய்ந்தார்க்கும் அரிதாகிய கவித்திறம் இவர்க்கு இனிதினமைந்துள்ள தன்மை, இவ்வினிய நூலானன்றி, இவரிதற்குமுன் பாடிய 'கோம்பி விருத்தம்', 'சுவர்க்க நீக்கம்' என்னும் நூல்களானும் இத் தமிழுலகம் நன்கறிந்த தொன்ரும்.

கற்றவரெல்லாங் கவிகளாகாராதலான், ஒருவர்க்குக் கவித் துவம், கேவலம் கல்விமாத்திரையான் எய்தலாவ தன்று. கவி யாவான், குற்றமிலிலக்கண முற்றப்பெற்ற சிந்தைக்கினிய, செவிக் கினிய, வாய்க்கினிய வளமிக்க செய்யுளில், உலகுக் குறுதிபயக்கும் விழுமிய பொருளை, இனிதமைத்துத் தருபவனே என்ப. செய்யுள், இலக்கணம் நிரம்பிய பலவகை யுறுப்புக்களாலும், கண்டார்க்கு விழைவுறுத்தும் அழகுடைச் சரீரமாகுமென்றும், அதன்கண் நிறைந்து விளங்கும் விழுமிய பொருள், உத்தம குணங்கள் மலிந்த சீவனுகுமென்றும் துணியலாம். இதனுல் விழுமிய பொருளாகிய உத்தமாபிப்பிராயம் இல்லாத செய்யுளினழகு உயிரில் பிணத்தழகு போல்வதென்று கொள்க.

கூன், குருடு, செவிடு, மூங்கை முதலாகிய குறையுடற்கண் ஆன்மசக்தி நிறைந்திருந்தபோதும், அச்சத்தியின் நிகழ்ச்சிக்கு உற்ற வாயில்களில்லாமையாற், குன்றி, உலகிற்குப் பயன்படாத வாறு போல, இலக்கணங்களாற் குறைபட்ட வுறுப்புக்களையுடைய

செய்யுளின்கண் உள்ள அபிப்பிராயமும், தன்னை இனிது புலப் படுத்தும் வாயில்கள் ஏற்ற பெற்றியான் அமையப்பெருமையாற், பயன்படாதென்று தெரியலாம்.

இவற்றால் மக்கட் குறுதிபயக்கும் நல்லதோ ரபிப்பிராயத்தை, அவர்க்கு விழைவூட்டும் நல்ல தோர் செய்யுளில், அழகுபெற அமைக் கும் ஆற்றலே கவித்துவ சக்தி எனத் தெளியலாகும். இதனையே ஆசிரியர் தொல்காப்பியனார், 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்' என்பதனால் நன்கு புலப்படுத்தியருளினார். இதன்கண் உலக நிகழ்ச்சிக்கு நல்லுடலும் நல்லுயிருமாகிய இவ்விரண்டன் கூட்டம்போல, இன்றியமையாது என்று, இழுமென்மொழியும் விழுமியதும் ஆகிய இரண்டன் கூட்டமும் வேண்டுதல் காண்க.

இவ்வரிய கவித்துவசத்தி, உத்தம குணங்கட்கிருப்பிடமாகிய நல்ல மனோபாவத்தா லுண்டாவதொன்று. இஃ தொருவன் பிரயாசையான் மட்டும் உண்டாவதின்று என்பது அறிஞர்க் குடன்பாடு. 'பாவருங் கிழமைத்தொன்மைப் பருணிதர்' என்று, கல்வியிற் பெரியார் கூறினார். இதன்கட் பாவருங் கிழமை என்றது, பாடல் இயல்பாகவே வரும் உரிமை என்றவாறும்.

இப் பாவருங் கிழமை, பண்டைக்காலத்து இத்தமிழ் நாட்டு உத்தம மனோபாவத்தால் ஆண்மக்கள் மட்டிலில்லாமற், பெண் மக்கள்பாலும் மலிந்து நிலவியது என்பது, வான்றோய் நல்லிசைச் சான்றோராகிய சங்கப்புலவருள் எத்துணையோ பலர் பெண்பாலா ராதலாற் றெரிந்தது. பெண்பாலார் செய்யுட்டிறம், 'கந்துக வரி', 'அம்மானை வரி', 'ஊசல் வரி', 'குரவைப்பாட்டு' முதலிய விளை யாடற் பாடல்களானும் 'பிணக்கானம்' முதலிய இரங்கற் பாடல் களானும் நன்கறிந்துகொள்ளலாம்.

'கல்லுருகுங் காலங் கழுகறியு மக்காலம்
வையக மெல்லா மலர்ந்தபூ வண்டறியும்
ஓங்க லறியு முயர்கடலி னுள்ளாழம்
பாங்கனுக்குப் பாங்கன் பயனறிவான்: மன்ற
அறிவா ரறிவா ரறியா ரறியா
ரொருகாம் பிருதலையும் பூ.'

என்பது, கழைக் கூத்தி ஒருத்தி கழைமே னின்று பூத்த போது பாடியது.

'மாகுன் றனையபொற் றோளான் வழுதிமன் வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்தென்னைப் பார்த்திலன் பையப்பையப்
போகின்ற புள்ளினங் காள்புழற் கோட்டம் புகுவதுண்டேற்
சாகின் றனளென்று சொல்வீ ரயன்றைச் சடையனுக்கே'

என்ற அருமைப் பாட்டு, கூத்தருமை காணுதான் முன்னர்க் கூத்தாடப் புக்கதற்கு வெறுத்துக் கழைமேனின்று வீழ்ந்திறப்பாள் தன் கூத்தருமை கண்டானைப் பாராட்டிப் பாடியது.

'இன்றுவரி னென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு
நின்றுவரி னன்னதுவு நீயறிவை.'

என்ற விழுமிய வடிகள் முனையர்கோன் காதற்பரத்தை பாடியன.

'மாப்படைக்குங் கோயிலிலே மண்ணைப் படைத்தேமோ
பூப்படைக்குங் கோயிற் புழுதி படைத்தேமோ'

என்பது பிணக்கானம்.

இவை யல்லாமல்,

ஏற்றப் பாட்டு மிறைவைப் பாட்டும்
காவடிப் பாட்டுங் கப்பற் பாட்டும்
படையி னெழுச்சியும் பள்ளி யெழுச்சியும்
சிந்தமுஞ் சந்தமுந் திருத்தா லாட்டும்
கல்லுளிப் பாட்டுங் கவணெறி பாட்டும்
பாவைப் பாட்டும் பலகறைப் பாட்டும்
மறத்தியர் பாட்டுங் குறத்தியர் பாட்டும்
பள்ளுப் பாட்டும் பலகடை திறப்பும்
வள்ளைப் பாட்டும் பிள்ளைப் பாட்டும்
கறத்தற் காயர் திறத்துரை பாட்டும்
பொருத வேந்தர் விருதுப் பாட்டும்
கணலப் பாட்டுங் காதற் பாட்டும்
என்றிவை முதலா வெத்துணை யோபல,

இக் காலத்தும் ஆங்காங்கு வழங்குதல் கொண்டு, பண்டைக் காலத்து இத் தமிழ் நாட்டுச் செய்யுட் சுவை, யாண்டும் மலிந்து விளங்கியது, ஊகித்துக் கொள்ளலாம். இங்ஙனமே,

அழுகையுந் தொழுகையு மசதி யாடலும்
ஏத்து மிழிப்பு மிரத்தலு மெல்லாம்
பாட்டாய் வரலிந் நாட்டின் வழக்கெனக்

கண்டுகொள்க. இவ்வன்றி, உலகிய லறிவுறுக்கும் அளவிறந்த பழமொழிக ளெல்லாம், செய்யுட் கதியைத் தழுவி, மோனையோ எதுகையோ முற்றப் பெற்று, உரைப்பாட்டுக்களாக இந்நாட்டு நெடுங்காலமாக வழங்குதலும் ஆராய்ந்து கொள்க.

இவ்வாறு, பஃறொழின் மாந்தரும் இனிய ஓசையும் பொருளும் நிறைந்த பாடல்களையே தமக்கு இளைப்பாறி மகிழும் வாயிலாகக் கொண்டு, உத்சாகத்துடன் போற்றி வளர்க்கும்படி, உத்தம மநோபாவத்தையும் அதற்கேற்ற இன்சொற் றொடையையும் ஊட்டி, இக் கவித்துவசக்தியை, இந்நாட்டுப் பலவகை நிலத்தும் பரவச் செய்த மகோபகாரிகள், பண்டை நல்லிசைப் புலவரும் அவரை அன்புடனாதரித்த மூவேந்தரும் பெருவள்ளல்களும் ஆவர். மநோபாவத்தின் சிறப்பானன்றே 'தேவரனையர் புலவர்' என்பது. 'தேவர் தமரனைய ரோரூ ருறைவார்' என்பது, அப்புலவர் சொல்லுடனும் பொருளுடனும் பயிலுகின்ற சிறப்பினால், அவ்வூராரும் அப்புலவர் தமரோடொப்பர் என்று, தெளிவித்தவாறும்.

இச் தகைப் புலவர்கள் இக்காலத்து மிகவுங் குறைதற்குக் காரணம்,

'பெற்ற-தாயிருக்க மணைவெந்நீ ராட்டுதிரோ மாட்டாத தகவற்றீரே' என்று கலிகன்றியார் அருளிச்செய்தபடி, தமிழ் நிலத்துப் பிறந்த பலரும், தம்முயிர்க் குறுதிபயக்குந் தந் தாய்மொழியை விட்டு வேற்றுமொழியையே ஆளப்புக்கதேயாகும்.

சீவநோபாயத்திற்காக வெவ்வோர் தொழிலை மேற்கொள்ளினும், நல்லோனொருவன் தன் பாஷை, ஜாதி, மதம் அவற்றிற்குச் சிறந்த ஒழுக்கம் வழக்குகளை விடாது போற்றுவானாயின், அவனே முன்னைத் தொட்டுப் பெருமை வாய்ந்த தன்றேயத்தை யழியாது காத்து வளர்ப்பவனாவன். ஒரு தேயத்தார் மற்றையரின் வேறாக நிலைத்து வளர்தற்கு இப்பாஷை முதலியன முக்கியமான வேர்களாக

விளங்குதல் ஒருதலை. தன்றேயத்தின் பாஷையை மறப்பவன், தன்றேயமாகிய பல்லோர் பயன்றுய்க்கும் பழுமரத்தின் வேரினை அடியறுத்தவனுத லுண்மை. இங்ஙனந், தானும் பிறரும் வாழ்தற்கு இனிய நிழலும் உரிய பயனும் அளிக்கும் தாய்நாடாகிய பழுமரத்தின் அடிவேரறுப்பார் பலர் மலிந்த இக்காலத்து, எத்துணையோ இடையூற்றை எதிர்த்து அதனைப் பாதுகாத்து வளர்க்கப்புகும் பெரியோர் மிகவும் அரியரேயாவர். இவரே இக்காலத்துச் செயற்கரிய செய்வாராகிய பெரியர் எனப்படுவார். இவ்வரிய பெரியார் மிகச்சிலருள், இச் சுப்பிரமணியப் பெருந்தகையே முதலியார் என்று யான் கூறுதற்குப் பலரும் உடன்படுவர் என்று கருதுகின்றேன். இவர் தமிழன்புந் தமிழறிவுந் தமிழ்க்கவிவன்மையும் பல்காலும் பயின்றறிந்த நன்மக்கள் இதனைத் துதிவாதம் என்று கருதாரென்று துணிகின்றேன். இனி, இவர் எடுத்தோதிய அகலிகை வெண்பாவினை ஆராய்ந்து யான் கண்ட சிலவற்றை ஈண்டுக் கூறுவேன்.

## கடவுள் வாழ்த்து

இவர், கடவுள் வாழ்த்தில், 'மதமெல்லாம் எதை யேத்தியறிந்தேம் என்னும், சாத்திரங்கள் எதை நன்காய்ந்து சலிக்கும், நாத்திகம் ஓர்ந்து எதைச் சற்றுமே இல்லதாகச் சாதித்திடும், அதையே நெஞ்சே பரிந்து பற்றுவாய்' என்று கூறியுள்ளார். இதன்கண், நாத்திகந் தான் துணிந்துகொண்ட பிரத்தியக்ஷ அளவை யான் ஆராய்ந்து காணுமையான், ஒருசிறிது மில்லாததாகவே சாதித்திடும் என்றதனுற், பரம்பொருள் இந்திரியங்கட்கு அகோசரன் என்பதுணர்த்தியவாறும். தருக்க முதலிய சாத்திரங்கள், அநுமான அளவையாலும் கண்டவர் சொல்லாலும்,பரம்பொருள் உண்டென்று கண்டும், அநுபவத்திற்கு விஷயமாதலில்லாமையாற் காணுதும் சஞ்சலிக்கும் என்றார். சலிக்கும் என்ற வினையாற் கண்டுங் காணுமை குறித்தவாறும். இனி, 'மதமெதை யேத்தியறிந்தே மென்னும்' என்றது, நாத்திகத்திற்கு இல்லதாகவும் சாத்திரங்கட்கு உள்ளதும் இல்லதுமாகவும் இருக்கும் பரம்பொருள், ஏத்திய மதங்கட்கெல்லாம் உள்ளதேயாம் என்று புலப்படுத்தி, அதனையறிதற்கு வாயிலுங் கூறியவாறும். 'ஏத்தி யறிந்தேம்' என்றலாற் பரம்பொருளை யறிதற்கு அதனை யேத்துதலே வாயில் என்று

காட்டியவாறு காண்க. 'ஏத்துவார்க் கெளியன்' என வருதல் காண்க. இதனாற், பரம்பொருளை யில்லதாகவே சாதித்திடும் நாத்திகர் அதமர் என்றும், அப்பரம்பொருளை யுண்டென்று கொண்டு அதனை யுள்ளபடி யுணரமாட்டாத சாமானிய நூலாசிரியர் மத்திமர் என்றும், அதனை யேத்தி யறிந்த சமயாசிரியர் உத்தமர் என்றும் வெளிப்படுத்தவாறும். இங்ஙனம் முத்திறப் படுத்தது, இவர் தாமெடுத்துக்கொண்ட இந்நூற் கதைக்குரியராகிய இந்திரன், அகலிகை, கௌதமர் என்னும் மூவரையும நோக்கி என்று உய்த்துணர்ந்து கொள்ளப்படும். இந்நூலுள், இந்திரன் தான் செய்த கொடிய காரியத்தால் தெய்வமே யில்லை யென்னும் நாத்திகர் தன்மையனாதல் கண்டுகொள்க. அன்றியும், இந்திரன் பிரகற்பதி பகவானிடம் முதற்கண் உலோகாயத நூல் கேட்டவனாதலும், ஈண்டைக்கு நினைக்கத்தகும். அகலிகை கௌதமருடன் பயிறலாற் றெய்வத்தை உண்டென்று கேட்டறிந்தவளாகவும், தன் அநுபவத்திற்கு விஷயமாகாமையாற் கண்டறியாதவளாகவும், கருதப்படுவாள். தெய்வத்தைக் கண்டறிந்தவளாயிற், பாஞ்சாலி போலத் தெய்வத்தைச் சரண் புகுந்து தன் ஆபத்தை மாற்றுபவளாவள் என்றுணர்க. சாபாநுக்கிரக வன்மையாற் கௌதமர் தெய்வத்தை யேத்தியறிந்த சமயாசிரியர் நிலையினராதல் தெளியப்படும். இம்முறையால் இஃது இந்நூற்கேற்புடைத்தாக உய்த்துணர வைத்துக் கவி கூறிய சாதுரியம் கற்றார்க்குப் பெருமகிழ் செய்யுமென்க.

## அவையடக்கம்

இதன்கண் இந்நூல் 'ஆசொருவும் தேசுடையதாகும்' என்று துணிந்து, அங்ஙனந் துணிதற்குக் காரணங்காட்டுவாராய், 'உன்னுபவர் தோடமொரூஉ மொண்சீ ரகலிகை' என்று விசேடித்துக் கொண்டார். ஆசொரூஉ மென்றது, உன்னுபவர் தோடமொரூஉ மகலிகை கதை யாதலானும், தேசுடையதாகும் என்றது, ஒண்சீ ரகலிகை கதையாதலானும் என்று, ஏற்ற பெற்றியான் ஏதுப்பட விசேடித்துக்கொண்டது கவித்திறங் காட்டுமென்க. அன்றியும் இந்நூலுள் அகலிகையை நிர்தோஷவதியாகவே வைத்துக் கதையை நடத்தலால், அதனைக் கவி சூசனத்தா லீண்டுணருமாறு இங்ஙனம் விசேடித்தாரென்பதும் பொருந்தும்.

## நூல்

இந்நூல் 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே; நாணினுஞ் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று' என்று ஆசிரியர் தொல்காப்பியனூர் சிறப்பித்தோதிய உத்தம ஸ்திரீ தர்மத்தை வற்புறுத்த எழுந்ததாகும். இவர் கதாநாயகியை 'ஒண் சீரகலிகை' என்று கூறிப் புகுந்ததற்கேற்ப, மனத்தினுன் மறுவுருதவளாகவே கொண்டு கதையமைத்துப் பாடினூர். இது, 'துஷ்ட புத்தியையுடைய அகலிகை முனி வேஷத்தையுடையவனை ஸஹஸ்ராக்ஷனென்றறிந்துகொண்டு தேவர்க்கு வேந்தன் என்னும் குதூகலத்தால் ஸம்மதஞ்செய்தனள்'* என்று கூறி யருளிய வான்மீகி பகவான் கருத்துக்கு மாருயினும், 'நெஞ்சினுற் பிழைப்பிலாள்' என்று கொண்ட கல்வியிற் பெரிய கம்பர் கருத்துக்குப் பெரிதும் பொருந்துவதேயாகும்.

அவர் அகலிகையின் சரிதத்தை இராமபிரான் தெரிந்து கொண்ட பின்னர் அவளை 'அன்னையென்று பொன்னடி வணங்கிப் போனுன்' என்றும்,

'நெஞ்சினுற் பிழைப்பிலாளை நீயழைத் திடுதி யென்னக்
கஞ்சமா முனைவ னன்ன முனிவனுங் கருத்துட் கொண்டான்'

என்றும் பாடியதனுன் இஃதறிந்து கொள்ளலாம்.

அவர் அகலிகையை 'மனையின் மாட்சியை யழித்திழி மாதவன் பன்னி' என்று கூறியுள்ளாரே யெனின், தீயினைத் தெரிந்து தொடினும் தெரியாது தொடினும் சுடப்படும் பயன் ஒன்றே யாதல் போலப், பரபுருட கமனத்தை மனமறிந்து செய்யினும் அறியாது செய்யினும் மானக்கேடுற்று இழிவடையும் பயன் ஒன்றேயாதல் புலப்பட அவ்வாறு கூறினூரென்க. அவர்,

'மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே கொண்டு புக்கான்'
'புக்கவ ளோடுங் காமப் புதுமண மதுவின் றேற
லொக்கவுண் டிருத்த லோடு முணர்ந்தன ளுணர்ந்த பின்னுந்
தக்கதன் றென்ன வோரா டாழ்ந்தனள்'

---

* பாலகாண்டம் 48—49.

என்று கூறியவிடத்தும், மனத்துக்கண் மாசிலளாகவே பொருள் கோடலே அவர்க்குடன்பாடென்பது, மேல் 'நெஞ்சினுற் பிழைப் பிலாளை' எனவும், 'மாசறு கற்பின்மிக்க வணங்கினை' எனவும், சிராமர் அவள் சரிதத்தைத் தெரிந்த பின்னர், அவளை அன்னை யென்று அடிவணங்கினுரெனவும் கூறியவாற்ருன் நன்கு துணியப் படும்.

ஆண்டுப் பொய்யுடை யுள்ளத்தனுன இந்திரன், பொய்யிலா வுள்ளத்தரான கௌதமர் வடிவத்தைமட்டுங் கொண்டு, அவ் வுபாயத்தானே உட்புகுந்து, அகலிகையோடும் புதிய கூட்டத்தா லாகிய காமமதுவினுடைய இனிய தெளிவை ஒக்கவுண்டிருக்கும் அந்நிலையிலே, அவ்வகலிகை, இது முன்னெல்லாம் அனுபவித் தறியாததோர் புதிய வின்ப மென்று உணர்ந்தனளாயினும், அவ் வின்பம் தக்கதென்றும் அன்றென்றும் ஆராய்ந்திலளாய், அவ் வின்பத்திலே மனந் தாழ்ந்தனள் என்பதே பொருளாம். 'தக்க தென்ன, அன்றென்ன ஓராள்' என்று பிரித்துப் பொருள்கொள்க. ஈண்டு 'உணர்ந்தனள்' என்பதற்கு இப்புது மண வின்பத்தினை யுணர்ந்தனள் எனக் கூருது, இந்திரனை யுணர்ந்தனளென்றும், 'தக்கதன்றென்ன வோரா டாழ்ந்தனள்' என்பதற்கு அவ்விந்திர னைச் சேர்தல் தகுதியுடைத்தன்றென ஆராயாதவளாகித் தன் குல வொழுக்கத்திற் ருழ்ந்தனளென்றும், பொருள் கொள்ளின், அக லிகை நெஞ்சினுற் பிழைப்பிலளாகாமை கண்டுகொள்க. அன்றி யும், இந்திரன் முனி வடிவம் பூண்டது, அகலிகையை வஞ்சித் துச் சேர்தற்கே என்பது தெள்ளிது. அதற்கேற்பவே, கம்பர் இந்திரனை யுணர்ந்தன ளென்னுதொழிந்தனரென்று கண்டு கொள்க. முனி வடிவத் துள்ளவனை இந்திரனெனத் தெரி தற்கோரேதுவும் அந்நூலுட் கூருமையு நோக்கிக்கொள்க. என் றும் அநுபவியாத புதியதோர் இன்ப விசேடத்தை உணர்ந்தன ளென்று கூறியவாற்ருல், இது புதியனொருவன் கூட்டமோ வென்று சங்கிக்கப்படுமெனின், அதற்கே கல்வியிற் பெரியார் இவ்வின்பம் தக்கநெறியான் உற்றது அல்லாத தீவழியானுற்றது என்று ஆராயாதபடி, அப்புதிய வின்பப் பெருக்கம் அவளை மயக்கலால், அதன் கண்ணே மனந்தாழ்ந்தனள் என்று புலப்படுத் தினுர் என்க. முனி வடிவு புதியனென வுணரவொட்டாமற் றடுத்தலும், இன்பமொன்றே புதியதென் றுணரப்படுதலும் நோக்கிக்கொள்க.

கௌதமர் தன்பாலெய்த வந்தபோதுதான், அந்நியனால் வஞ்சிக்கப்பட்டதற்கு அஞ்சி, 'நெடும்பழி பூண்டவளாகி நின்றாள்' என்று கம்பர் மேற்கோடலானும் அவர்க்கு இதுவே கருத்தென்க. அவர்,

'சரந்தரு சாப மல்லாத் தடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர முலகி னிற்கு நெடும்பழி பூண்டா ணின்றாள்'

என்னுமிடத்து, 'முனிவனெய்த வருதலும் வெருவிப் பழி பூண்டாளாய் நின்றாள்' என்றதனால், அம்முனி யெய்த வாராத போது, இந்திரனையே முனிவனென்று நினைந்திருத்தலால், வெருவுதலின்றிப் பழிபூணாதவளாயினாளென்று நன்கு துணியப் படுமென்க. இங்ஙனம் கொள்ளாக்கால், மேல் அகலிகையை 'மாசறு கற்பின் மிக்க அணங்கு' என்று கம்பர் தங்கூற்றாலே கூறுதல் சிறிதும் பொருந்தாமை கண்டுகொள்க. கம்பர் 'புது மண மதுவின்றேறல்' என்பதனால் இப்புதிய கூட்டத்திற் பிறந்த இன்பத்தை மதுவின் றேறல் என்று உருவகப்படுத்தியது, மதுவின்றேறல்போல் இவ்வின்பம் தன்னைச் சுவைத்து மகிழ் தலிலே கால்தாழப்பண்ணுதலேயன்றிப் பிறிதோருணர்ச்சியின் கட் செல்லவொட்டாது மனத்தை மயக்குதல்பற்றி யென்று எளிதிலறியலாம். தேறலுண்பார் தேறற் சுவையுணர்தற்கல்லது பிறிதொன்றினை ஆராய்ந்து தெளிதற்கு மனவலியிலராதல் காண்க.

மற்றுக் கௌதமர் 'மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயுங் கல்லிய லாதி' யென்றார் என்றது, விலை மகள் போலப் பலராற்றழுவப்படும் உடம்புடைய நீயுங் கல்லின் இயல்புடையை ஆகுதி யென்றார் என்றவாறு. அந்நியர் தொடு மிடத்துப் பயிர்ப்புணர்ச்சியற்றுக் கற்போன்றதுபற்றிக் கல்லாக என்றார் என்க. பொருளிலாரை விட்டுப் பொருளுடையாரைச் சேர்தல் விலைமகளியல்பு. பொருளிலான் தானாகவும் பொரு ளுடையாரிற் சிறந்தான் இந்திரனாகவும் கருதி, அவனைச் சேர்த லால் விலைமகள் என்றார் எனினு மமையும்.

இனிக் கம்பர் 'ஒக்கவுண் டிருத்த லோடும்' என்று கூறியத னால், அகலிகையும் இந்திரனை முனிவனென்றே எண்ணி, அவ னோடொத்த அநுபவம் உடையளாயினா ளென்றுகொண்டார்.

இந்நூலுடையார், இவ்வஞ்சமான சுகத்தின் சுவையை, ஒரு கற்புடைப் பெருந்தகையாள் ஒக்கவுண்டிருந்தாளென்று கூறுதற்குடன்படாது, மாநுஷ்ய சக்திக்கு மேம்பட்ட சக்தி விசேஷத்தையுடைய தேவகணத்திற்குத் தலைவனால் வலிய அபகரிக்கப்படும்போது 'உயிர் நீங்கின ளென்ன நினைவிழந்தாள்' என்று நயம்படக் கற்பித்துக்கொண்டாராவர். இவர் உத்தம ஸ்திரீ புருஷருடைய உறவு உயிருறவே யென்றும், கேவலம் உடலுறவுமட்டிலாகாதென்றும் கொண்டு, முனிவேடங்கொண்ட சரீரத்துடன் கூடி ஒக்கவுண்டனளென்று கூறுதற்குடன்படாராயினரென்று நினைக்கத்தகும். மற்று இந்திரன் முனிவேடம் பூண்டானென்று கூறியதனாற் பயனென்னெனின், அகலிகை பிரதமப் பிரவேசத்தே தள்ளாது இன்முகங்காட்டி வரவேற்று உரையாடலே பயனென்க. இது வான்மீகி பகவானுக்கும் ஒக்கும். முனிவேடம் பூண்டவனை இந்திரனென்றுணர்ந்தனள் என்று அவரும் முதற்கட் கூறுதலானுணர்க.

அகலிகை இந்திரனென்று தெரிந்தே உடன்பட்டாள் என்ற வான்மீகி பகவான் கதையினும், இந்திரனை முனிவனென்றே போகந்துய்த்தனள் என்ற கம்பர் கதையினும், இந்திரனென்று தெரிந்து உடன்படாது மூர்ச்சித்துப் பிணம்போலாயினள் என்ற இந்நூலுடையார் கதையினும், அகலிகை முனிவனாற் கல்லாக்கப்பட்டமை கேட்கப்படும். இது, செய்த தீமைக்குத் தக்க தண்டமாகி, வான்மீகி பகவான் கூறிய கதைக்கே பெரிதும் பொருந்துவது, மற்றையிருவர் கொண்ட கதைக்கும் யாங்ஙனம் பொருந்துமெனிற் கூறுவேன். நல்லுயிருள்ளதோர் நல்லுடற்கு, ஓர் தீயனாலுண்டாக்கப்பட்ட அசுத்தியைப் போக்கி, அதனைத் தூய்தாக்கற்கே கல்லாக்குதல், கழுவாயாய்ப், பயனாவதென்று கொள்ளின், நன்கு பொருந்துவதேயாமென்க. இந்நூலுடையார் அகலிகை கல்லுருவம் நீங்கியபோது, அட்டபாலும் சுட்டபொன்னும்போல, இனிமையும் ஒட்பமும் உடையாளாயினளென்று கூறுதலும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க.

## இந்திர காண்டம்

இஃது, இந்திரன் கொலுவிருக்கை முதலாக, அவன் அகலிகையை விரும்பிக் கௌதமர் ஆச்சிரமம் புகுதல்வரை நிகழ்ந்தன

கூறுவதாகும். இதன்கண், இந்திரன், தனக்குரிய சசிதேவி யுடன் பேரத்தாணியிற் பெருஞ் செல்வப் பரிகரஞ் சூழக் கொலுவீற்றிருக்கும்போது, அகலிகையை மனம் வேட்டது கூறினர். வீட்டுலகின்கணல்லாமல் எவ்வுலகத்தும் இன்ப நிறைவில்லை யென்பது காட்டுவாராய்ச், சுரர் முதலோர் குறை தவிர்த்து மகிழ்ந்தவன் நெஞ்சை, ஓர் குறை போழ்ந்தது என்று கூறினர். அக்குறைதான் அகலிகையை எய்தாக்குறை என் பார், அவன் உளத்துக்கு ஆரமுதமான அகலிகை என்றார். அவன் வாய்க் கெளிதான அமுதத்தின் வேறுபடுத்த, இவளை அவன் உளத்துக்கு அரிய அமுதம் என்றார். இவ்வகலிகை நினைவு, மிக்க சசி பக்கமுறுநிற்கையிற் றோன்றியது, அச் சசியி னும் எத்துணையோ பங்கு அதிகமாக அகலிகை அழகுடைய காரணத்தால் என்பார் 'மாசில் சசி பகற்சசிபோலானுள்' என்றார். இந்திரன் அகலிகைபொருட்டு 'உயிர் ஈதலுமே செய்வேன் இனிது' என்று துணிந்ததாகக் கூறியது, 'தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற் றன்றே' என்று கல்வியிற் பெரியார் கண்டுரைத்த காமத்தியல் பற்றியதாகும். இந்திரன் அகலிகையை நினைந்து,

> 'நரகத்தீத் தானும் நலியுமோ, இந்த
> விரகத்தீப் போல வெகுண்டு?' * (66)

என்றான் என்றது, இங்ஙனம் முறைபிறழ்ந்து காமிக்கும் உல கோர்க்கு உறுபயன் இதுவென்று குறிப்பான் உணர்த்தியவாறு.

> 'வம்புலாங் கூந்தன் மனைவியைத் துறந்து பிறர்பொரு
> ளாரமென் றிவற்றை,
> நம்பின ரிறந்தால் நமன்றமர் பற்றி யெற்றிவைத்
> தெரியெழு கின்ற
> செம்பின லியன்ற பாவையைப் பாவீ தழுவென
> மொழிவதற் கஞ்சி
> நம்பிநான் வந்துன் றிருவடி யடைந்தே னைமிசா
> ரணியத்து ளெந்தாய்'

என வருந் திருவாக்கான் இஃதுணரப்படும். இந்திரற்கு அகலிகை மயல் 'போகினுயி ரோடுதான் போம்.' என்றது 'மூர்க்கன்

---

* இக் குறியிடப்பெற்றவைகள் மூன்றும் பதிப்புப் பாடங்கள்,

முடித்தலை, யற்ற போதன்றி யாசை யறுனென்றான்' என்ற கம்பர் கருத்துக் கொப்பதாகும். இதன்பின்,

'தென்திசைக்கோ மாற்குஞ்—செயலரிதே,
மாருத மையலைஎன் மாளா உயிரினின்றும்
வேறாக நீக்கும் வினை' (73)

என்றது, வீடுபெறுவார்க்கன்றி மற்றெவராலும் அவாவறுத்தல் இயலாமை காட்டியவாறு. கன்னியரைக் 'கூற்று' என்றும், 'ஆவி' யென்றும் சொற்றார் என்புழி, அருளாதபோது கூற்றமும் அருளும் போது ஆவியும் ஆதல் காட்டவேண்டிக், கூற்றினை அருளில் வெங் கூற்றம் என்று விசேடித்த நயம் கற்றார் நயப்பதாகும். இந்திரன் அகலிகையை அனுபவிக்கும் கௌதமரை ஓர் எளிய வைதிகன் என்றான் என்புழி, எளிய என விசேடித்தது, போகோபகரணங் கள் குறைந்தவர் என்பது பற்றியாம். வைதிகன் என்றது, உடலை ஒறுத்து உயிரைப்போற்று நெறியின்கணுள்ளவன் என்ற வாறும். பெண் இன்பத்தைப் பாராட்டற் குரியனாகாமை காட்டிய வாறு காண்க. அகலிகையை ஒழியத் தான் பெற்ற பெரும் பாக் கிய மெல்லாம் வெறும் பாக்கியமென்று அவன் கருதினான் என்ற தற்கேற்பவே 'சிறிய வறியனைப்போல் விம்மாந்து தாழ்வேன்' என்றான் என்றார். 'பாவநோயாவு முயர்மேருவில்லோன் தாளடைய நீங்கும்' என்று பிறன்மனை விழையும் இந்திரன் தன் னுட் கருதிக் கொண்டானாகக் கூறியது, இவன்றான் செய்யப்புகுங் கொடிய பாவத்தினின்று விடுபடுதற்கும் வாயிலுண்டென்று துணிந்தவனுமாயினான் என்று குறித்தவாறும். தெய்வம் உள தென்று கொண்டு தீய செய்யும் ஆஸ்திக நாஸ்திகரினும், தெய்வ மிலதென்று தீய செய்யும் நாஸ்திகர் ஈசுவராநுக்கிரகத்திற்குரிய ராவர்.

'தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றெறுக்குந்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வர் பயன்.'

என வருதல் காண்க. அன்றியுங் கழுவாய் உண்டென்னுந் துணி வாற் செய்யப்படும் பாவங்கட்குக் கழுவாய் பயனற்றதாதலும் காண்க. இந்திரன் 'வேண்டுவரம் நல்குதெய்வம் நீயாக நான்

தொண்ட னுக' என அகலிகையை நோக்கிக் கூறினுன் என்ருல், இவன் லோகாயதிகன் ஆதலையுணர்த்தும்.

இனி இந்திரன்,

'ஆற்றல்மிகு காமத்தீ அன்றி, யான் கோதமற்குத்
தோற்றஅவ மானத்தீச் சுட்டிடுவெப்—பாற்றரிதே'* (79)

என்ருன் என்ருர். இதனு லிந்நூலுடையார், அகலிகையை இந்திரன் பற்றற்குக் காரணம், காமமேயல்லாமல், கௌதமரால் அவனுக்குநேர்ந்த அவமானத்திற்குப் பிரதிசெய்யவேண்டுமென்ற தீய விருப்பமும் ஆம் என்று துணிந்தாரெனத் தெரியலாம். இந்திரற்கு, அகலிகை நினைப்பு உண்டாம்போதெல்லாம், அவள் மஹா தபஸ்வியாகிய கௌதமருடைய தர்மபத்தினி என்ற நினைப்பும் உடனிகழ்வதாகும். அகலிகை இந்திரனுல் அழகுபற்றி விரும்பப்படுவா ளாயினும், தபோபலமுடைய கௌதமருடன் வாழ்க்கை காரணமாக அஞ்சிக் கிடைத்தற்கரியளென்று அவனுல் விடப்படுதற்கும் உரியளென்று நினைத்தலாகுமெனின், இந்திரன் தனக்கு அவமானம் விளைத்தவராகக்கொண்டு கௌதமரை விரோதியாக நினைத்தபடியால், 'காய்வதன்கண் உற்றகுணந்தோன்ருதாகும்' என்ற நியாயப்படி, அவருடைய தவவலியை ஒரு பொருட்டாக எண்ணுதவனுகித், தன் காமத்தை நிறைவேற்றுதல் பகைமையானும் பொருந்துவதென்று துணிந்தனனென்று 'அவமானத்தீச் சுட்டிடுவெப் பாற்றரிது' என்ருன் எனக் கூறினுர். காமத்தின் உயர்வினைக் கவிமறந்திலாமை 'ஆற்றல்மிகு காமத்தீ அன்றி' யென்றதனு லறியப்படும். கௌதமரிடம் இந்திரனுக்கு விரோதம் முதற்கட்டான் விழைந்த அகலிகையை அவரும் விழைதலான் உண்டாயது. தேவராசன் விழைந்தவளை ஓர் வறியன் விழைந்து அவனுக்கில்லையாக்கித் தான் எய்தலான் உண்டாகியது அவமானம் என்க. 'எப்படியு மொருவன் தன்னுயிரோம்புவானுகுக' என்னும் நீதிபற்றி,

'ஒப்பு நெறியினுற வொண்ணுத வொண்டொடியைத்
தப்பு நெறியிலின்னே சார்வல்; அன்றேல்,—எப்படியும்
உய்வதரி தென்றெணி, ஆங் குற்ருர்ச் செலப்பணித்தான்
தெய்வசபை நீத்திந் திரன்.'* (80)

என்ருர். இதன்கண் இந்திரன் அகலிகையைக் காமித்து நினைந்தன பலவும் அவன் பேரவைக்கண்ணுள்ளபோதே நிகழ்ந்தன என்று கவி கருதியது புலனுகும். இது, 'காமத்திற்குக் கண்ணின்று' என்ற வழக்கினையும் 'மையலாலறிவு நீங்கி' என்ற கம்பர் கருத்தையும் உட்கொண்டு அமைக்கப்பட்டதுபோலும்.

பிற னில்வாழ்க்கைத் துணையாகிய நல்லாளொருத்தியைக் கற்பழிக்கப் புகும் ஒரு தீயன் உள்ளத்துத் தோன்றும் எண்ணங்கள் பலவற்றையும் சித்திரிப்பது ஓர் அரிய பெரிய காரியமேயாகும். இத்தீமை செய்யப்புக்க இராவணன் உள்ள நிகழ்ச்சிகளைக் கல்வியிற் பெரிய கம்பர் சித்திரித்துக் காட்டின பலவும் அறிஞர் நெஞ்சிடங்கொண்டு நிலவுவனவேயாகும். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் என்னும் மகாகவி Rape of Lucrece என்னும் நூலில் இவ்விஷயத்தை மிகவும் அழகாகக் காட்டிய தன்மையை அது கற்றுணர்வர். இவ்விரு மொழியிலும் நன்கு பயின்ற இந்நூலாசிரியர், நூதனமாகச் சில நயங்களைப் படைத்துக்கொண்டும், அந்நூல் நயங்களைத் தழீஇக்கொண்டும், ஏற்றபெற்றியான் அழகுபெற இவ்விந்திர காண்டத்தை முடித்துள்ளார்.

## அகலிகை காண்டம்

இக்காண்டம், இந்திர காண்டத்தினுஞ் சொல்லானும் பொருளானுஞ் சிறந்து விளங்குவது. இந்திர காண்டம், ஒருவன் தன் மனத்துள் தனியேயுண்டாகிய எண்ணங்களையே பெரும்பான்மை புலப்படுத்துவதாகும். இஃது, அங்ஙனமன்றி, ஒரு முறை கடந்த வேந்தற்கும் நெறிகடவாக் குலமகட்கும் நிகழ்ந்த சம்வாதத்தை விரித்தெடுத்துக் கூறலாற் சிறப்பது. இதன்கண் இந்திரனும் அகலிகையும் முறையே யெடுத்துக்கொண்ட தீமைக்கும் நன்மைக்குந் தகப், போலி நியாயங்களையும், உண்மை நியாயங்களையும், அவரவர் வாயினமைத்துக் கவி கூறிய திறம், அறிவாளராற் பெரிது பாராட்டத்தக்கது. இதன்கண்,

> 'கோதமனே போலவுருக் கொண்டு, மகவான்அம்
> மாதவன்வாழ் தூய மனையகத்துப்—போத,அவண்
> நின்றதையல் இல்லதனை நீங்குமுனி மீண்டுவந்தா
> னென்று வரவேற்ருள்.' (112)

என்ருர். ஈண்டு, கோதமனேபோறலே 'முனி மீண்டுவந்தானென்று வரவேற்ருள்' என்றதனுல் உறுதிப்படுத்தியது அழகுடைத்தாகும். இந்திர வுருவெடுத்தற்கு நூறு வேள்வி வேட்டவன் என்பது மகவான் என்னும் பெயரால் குறித்தார். அவன் இத் தூய மனையகத்துத் தீயது புரிய இக்கோதம வேடம் பூண்டான் என்பது கருதினுர் ஆவர். 'அவண் நின்றதையல்' என வரவேற்ற அகலி கையை விசேடித்தது, தன் கணவன் எழுதற்கு முன்னெழுந்து நின்றவள் என்பது குறித்ததாகும். இந்திரன் அகலிகை கையைப் பிடிக்க அவ்வளவிலே அவன் வஞ்சமுணர்ந்து 'சீ விட்டிடு' என் ருள் என்ருர். இதன்கண் வஞ்சமுணர்தற்கு ஏது வெளிப்படக் கூருது, அவன் பிடித்ததே காரணமாக வுணர்ந்தனள் என்று சாதுரியமாக அமைத்தனர். இதனுல் மகளிர்க் கியல்பாகிய நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களிற் பிறனெருவன் தொடுதற்குச் சகியாத பயிர்ப்பினுலிது வஞ்சமென் றுணர்ந்தா ளென்று கருதினுர். கோதம ருடம்பு போன்ற உடம்பன்றி அவருடம் பாகாமையானும், அவ் வுடம்பின்கண்ணுள்ள உயிர் வேருதலானும், கற்புடையளாகிய அகலிகை பயிர்ப்பா லுணர்த லியல்பென்க. அகலிகை அப்போது புலி பற்றிய மான்போல் ஆயினள் என்ருர். இந்திரன், அகலிகை உயிர் வருத்த நோக் காது, அவள் உடலேயே உண்ணப்பற்றியதனே இதனுல் குறித்தா ராவார். இது முதல், கவி, பிறன் கைப்பட்ட ஓர் கற்புடைய பெண்கொடி மனத்துண்டாம் பலபல நினேப்புக்களே மிகவும் அழகாக வருணித்துள்ளார். இதன்கண் 'தீண்டார்கள் தொட்டிட்ட செம்மட் கலத்தினே' என்று அகலிகை நினேந்தது கற்புடைமைக்குத் தக்கதேயாகும். அங்நியன் தொடுதலே தன் கணவன் றெடாமைக்குக் காரணமாதல் காண்க. அகலிகை, தன்னேப் பற்றியவனே, இந்திரனென்றுணராமல், 'இந்திரனும் எங்கோன் வெங்கோபத்தீயினின்றும் மீளானே' யென்று கூறினு ளென்றும், அதுபற்றி 'அமரர் நன்கோவே உன்னேடிருக்கின் ருன்' என்று இந்திரன் றன்னேப் புலப்படுத்தினுனென்றும், ஓர் சந்தர்ப்பம் கவியமைத்துக்கொண்டது நயமுடைத்தேயாகும். இது முதல் இந்திரனென்று தெரிந்து அகலிகை கூறுவனவெல்லாம் கற்ருர் பாராட்டத்தக்கன. அகலிகை கோபகாலத்தும் அழகுடை யளாகவே காணப்பட்டாள் என்றது, உத்தம ரூபமுடையார்

எல்லா ரஸ நிலையினும் அழகு மிகுவர் என்னும் வழக்குப்பற்றி எடுத்துக்காட்டியதாகும். 'காதற் கெதிர்காதல் கைம்மாறு' என்பது, 'தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர்' என்னும் பெரியார் திருவாக்குப் பொருளைத் தழீஇ வந்ததாகும். இந்திரன் அகலிகையை விடாமை பற்றி அவள் கொடுந் துன்பத்திற்குள்ளாய காரணத்தால் நினை விழந்தாளென்றும், அவள் நினைவிழந்து உயிர் நீங்கினளெனக்கிடந்த நிலையில் இந்திரன் தனது கருத்தை முடித்தான் என்றும், கவி மிகவும் நாகரிகமாகக் கூறியது அறிஞர் ஆராயத்தக்கது. இந்திரன்

'பிணத்தினிடத் தேய்பொருளும் பெட்டுக் கவருங்
குணத்திருடர்க் காங்குவமை கொண்டான்' (225)

என்றதனால், அகலிகை அந்நிலையிற் பிணம்போலக் கிடந்தாள் என்று குறித்தாரவர். காரிகையார்க்குக் கற்பே அருங்கலமாத லால், அதனைப் பொருள் என்றார் என்க. இக்காண்டம்,

'எத்தகையோ ரேனும் இழிவுறுவார், வெங்காமப்
பித்துடையா ரீடேறார் பின்பு' (225)

என்னும் நீதியை முடிவுரையாகக்கொண்டு போந்தது, கதைக்கேற்ற பெற்றியது என்பது அறிஞர் நன்கறிப. 'எத்தகையோரேனும் இழிவுறுவார்' என்பது 'எனைத்துணையராயினும் என்னும்' என்னும் கருத்தைத் தழீஇயதாகும்.

## கௌதம காண்டம்

இனிக், கௌதம காண்டம் முன்னுள்ள காண்டங்களினும் சாலச் சுவை பயந்து நிற்பது ஆராயத்தக்கது. இதனா லிந்நூல், நுனியினின்று அடிவரை கரும்பு தின்றாற்போல், மேன்மேற் சுவை மிக்கு நிலவுவது என்று அறியலாகும். இதன்கண், மனத்துக்கண் மாசிலளாகவே அகலிகை யிருந்தும், அவளுடல் மாசுண்டது கொண்டு, கற்பிழந்தாளாகவே தன்னைத்தானே மதித்துக் கூறுவன வெல்லாம், உத்தம பத்தினிப் பெண்டிரியல்பை நன்கு விளக்குவன வாம். இந்திரனைக் கோதம முனிவர் பார்த்ததனை

'இல்வாழ்வின் மாண்பை இரித்த மகவானைக்
கொல்வானின் நோக்கினன் கூர்ந்து'* (228)

என்று கவி பாடியது, சந்தர்ப்பத்திற்கேற்ப மிகவும் காம்பீரிய மாகவுள்ளது கவனிக்கத்தகும். கௌதமர் அகலிகையைக் கல்லாகுக

என்றபோது, அவள் அதனைத் தண்டமாகக் கருதாது தலைவன் அநுக்கிரகமாகவே ஏற்றுக்கொண்டனளென்று

'உணர்வுளதேல் துன்பும் உளதென்—றுணர்விலாக்
கல்லாக என்று, கருணைவெள்ளத் தாழ்த்தினன், என்
பொல்லாத குற்றம் பொறுத்து' * எனவும், (258)

'கொன்றனதீங்
கென்போ லிழைத்தவர்க ளில்லை; பொறுத்தவர்கள்
உன்போ லிலை' யென்று ளோர்ந்து எனவும், (272)

கூறுதல் மிகவும் இன்பந் தருவது. இந்திரனுக்கிட்ட சாபநிவாரணத்தில் ஏனையவர்க்குக் கண்களாகத் தோன்றுவன இந்திரற்குள்ளவாறு தோன்றா நின்றமை கூறி, அது பிறரை மகிழ்வித்து அவனை வருத்தியதுபோலவே, அவனுடைய விண்ணரசாட்சியும் காண்போரனைவரையும் குதூகலமடையச்செய்து தன்னெஞ்சுணர் குற்றமுண்மையால், அவனைமட்டும் துன்புறச்செய்ததென்றது, கவியின் மதி நுட்பத்தை நன்கு புலப்படுத்தும். இனிக் கம்பர்,

'கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன்
போதினின்ற தெனப்பொலிந்த பொலங்கழற்காற் பொடி
கண்டாய்.'

என்றதன்கட் கூறிய முன்னையுரு, கோதம பத்தினியாதற்கு முன்னே உள்ள உரு; அதுவே கோதம பத்தினியாதற்கு யோக்கியமான உரு என்க. அவ்வுருவம் ஒருவரானும் தீண்டப்படாதது என்றுணர்க. சிராமமூர்த்தியின் காற்பொடி இந்திரன் சேர்ந்த கௌதம பத்தினியை அங்ஙனம் புதியளாக்கி யளித்தது என்பது கருத்து. இக்கருத்து அகலிகைக்கு முன்னையுருக்கொடுத்தது என்னுமல், கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக்கொடுத்தது என்றதனுற் பெறப்பட்டது. இந்நூலுடையார் அம்முன்னையுருவினும் சிறந்தவுருவம் எய்தினள் என்றுகொண்டு,

'முந்தவிவள் உற்றவுரு, முண்டகத்தோன் கைசமைத்த
திந்தவுரு நின்றிருத்தா ளீந்ததால்' (283)

என்று தரதமந் தெரிய ஏது முகத்தாற் கூறியது காண்க.

இந்நூற்கதை,

‘பொல்லாரைச் சேரினுறும் பொல்லாங்கு ; பூதலத்தே
நல்லாரைச் சேரினுறும் நன்று’ (285)

என்னும் நீதியைப் புலப்படுத்துவதென்று கவி துணிந்ததியா வர்க்கும் இன்பம் பயக்கும். கௌதமரால் அகலிகை முன்னையினும் அதிகமாக அன்பு பாராட்டப்படுவாள் என்று ‘அடுதலுற்ற இன் பால்போல் முன்னி னினியளாம்’ * எனப் பாடியது,

‘வஞ்சம் வலியிவற்றால், மற்றதனால்,—எஞ்சலுற்ற
மாதர், குற்ற மற்றவரே; மன்ற, அவர் முன்னையினும்
ஆதரிக்க மிக்குரிய ரால்’ (264)

என்று கூறிப்போந்த தர்மத்தைக் கதைமேல்வைத்துக் காட்டிய வாறும். இவ்வாறே இந்நூலிலுள்ள நயங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டப்புகின் மிகவும் விரியுமாதலின், அறிஞர் தாமே ஆராய்ந்துகொள்வாராகுக.

இவ்வினிய நூல் பன்னெறியானும் கற்றார்க்குப் பெருவிருந் தாதல் ஒருதலை. இந்நூல், செந்தமிழ் நாட்டின் செய்தவப் பயனாகத் தோன்றிய பெருந்தமிழ் வேந்தரும், நுண்ணிய பேரறிவானும் அரசியலைச் சீர்பெற நடாத்தும் தகைமையானும் செந்தமிழ்ச் சங்கத்தினைத் திறம்பெறப் பாதுகாத்தலானும் தேவகாரியமும் இராசகாரியமும் சிறக்கச்செய்யும் ஆற்றலானும் அறிவாளர் பலரும் மனத்தோடு வாயாரப்புகழும் கண்ணிய சீலரும், எம்போற் புலவர்க்கு எய்ப்பினில் வைப்பும் ஆக விளங்கும் மாட்சிமை தங்கிய ஸ்ரீமான் ராச ராசேசுவர சேதுபதி மகாராசா அவர்கள் நல்லவைக்கண்ணே இவ்வாசிரியர் அரங்கேற்றிய காலத்து, ஆண்டு அந் நல்லவையினை அணிந்த தமிழ் மக்களெல்லாம் இதன் அருமை பெருமைகளை மிகவும் பாராட்டியதனை யான் நன்கறிந்துளேன். இஃது அக்கால நிலையினும் அறிஞரெல்லாம் விழைவுறுமாறு பல்வகை அழகுடனும் சிறந்து வளர்ந்து விளங்குகின்றது. இந்நூலினைத் தமிழ்க்கணியாக உதவிய ஸ்ரீமான் முதலியாரவர்கள் இதுபோல இன்னும் பலநூல்களை இயற்றிப் புகழும் புண்ணியமும் பெற்றுவாழ இறைவன் திருவருள் புரிக.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்.

# அகலிகை வெண்பா

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# அகலிகை வெண்பா

### கடவுள் வாழ்த்து

ஏத்திமத மெல்லாம் எதையறிந்தேம் என்னும்? எதைச்
சாத்திரம்நன் காய்ந்து சலிக்கும்? எதை—நாத்திகமோர்
சற்றுமே ஓர்ந்திலதாச் சாதித் திடும்? அதையே
பற்றுவாய் நெஞ்சே! பரிந்து.

### அவையடக்கம்

உன்னுபவர் தோடமொரூஉம் ஒண்சீர் அகலிகைப்பேர்க்
கன்னிகதை, கற்றோரைக் கண்ணி,யான்—பன்னுமிந்நூல்,
ஆசொருவும்; தேசுடைய தாகும்; அவையடக்கம்
பேசிடுதல் வேண்டா பிறிது.

## இந்திர காண்டம்

### இந்திரன் தனது சபாமண்டபத்தில் கொலுவிருத்தல்

எந்நாடும் எந்நகரும் ஏத்தி வருணிப்போர்
பொன்னாடும் பொன்னகரும் போதுமென்பர்;—அந்நாடும்
அந்நகருங் காக்கும் அமரர்க் கிறைகொலுவில்
நன்னரமர்ந் துற்றனன்ஓர் நாள். 1

மேல்வெண் குடைமிளிர, மிக்கசசி பக்கமுறப்,
பால்வெண் கவரியிரு பால்அசையச்,—சால்கின்
னரர்யா ழொடுபாட, நாகமின்னார் ஆட,
அரியா தனத்திருந்தான் ஆங்கு. 2

மேனகைபொன் ஆலவட்டம் வீசத், திலோத்தமைஓர்
பானணுகி நின்றடையும் பாகும்நல்க,—ஏனை
உருப்பசிஅு ரம்பைமுதல் ஒண்டொடியார் உற்றார்,
திருப்பணிகள் செய்வான் தெரிந்து. 3

கடவுள் வாழ்த்து :— ஓர்ந்திலதா(க்) - அறியப்படாததென்று.

கின்னரர்கள், கந்தருவர், கிம்புருடர், விஞ்சையர்கள்,
பன்னகர்,இ யக்கர்,தவர், பண்ணவர்,பூ—மன்னர்,
உருத்திரர்கள், கோள்கள், உடுக்கள், வசுக்கள்,
மருத்துவர்கள் மொய்த்தனரால் வந்து. 4

### கோலுவிருக்கும் இந்திரன் அகலிகையை நினைதல்

தரு,நிதிகள், தேனு,மணி சாற்றுபணி ஆற்ற,
விருதுகளை மாகதர்கள் விள்ளச்,—சுரர்முதலோர்
தாழ்ந்துகுறை செப்பத், தவிர்த்துவந்தான் நெஞ்சைமிகப்
போழ்ந்தொர்குறை தோன்றியதப் போது. 5

அவையடக்கம்:— தோடம் - பாவம்; குற்றம் (தொனிப் பொருள்). ஒரூஉம் - ஒருவும் - நீங்கும். கதை - கதையை. கண்ணி - எண்ணி மனத்தில் வைத்து. அகலிகை, திரௌபதை, சீதை, தாரை, மண்டோதரி என்ற பஞ்ச கன்னியரை நினைத்தால், பாவம் நீங்குமென்பது ஐதிகம். 'பஞ்ச கந்யா ஸ்மரணம் பாவநாசநம்' என்று வழங்குதல் காண்க.

[ கன்னி: அகலிகை பஞ்ச கன்னியருள் ஒருத்தி யாதலின், கன்னி என்றார். கன்னி, இங்கே, கலியாணமாகாத பெண், இளமை நீங்காத பெண் என்ற சிறப்புப் பொருளைக் குறிக்காமல், பெண் என்ற பொதுப் பொருள் குறித்தது. கன்னி - பெண்.—சூடாமணி.

முத்தரிச் சிலம்பு கொஞ்ச முகிழ்முலை குழைய மோந்து
வித்தரிக் கின்ற தெல்லாம் வியன்பொருட் பங்கி வாங்கும்
கத்தரி யென்ப தோரான் கன்னிஎன் உயிர்நீ என்றான்
புத்தரி விழிகள் சேப்பப் புலந்தனள் உடல்வே றென்று.—குற்றா. தலபுரா.

—பதிப்பாசிரியர் ]

1. நன்னர் - நன்மை - நன்றாக.

2. சசி - இந்திராணி. சால் - (எண் அல்லது இசைஞானம்) மிகுந்த.

3. பொன் ஆலவட்டம் - அழகிய விசிறி; பொன் இழைத்த விசிறி. பானணுகி நின்று - பால் நணுகி நின்று - பக்கத்தில் நெருங்கி நின்று. அடை - வெற்றிலை. பாகு - பாக்கு. செய்வான் தெரிந்து - தெரிந்து செய்வான் - தெரிந்து செய்யும்படி.

4. கீழ்க்குறித்த காஞ்சிப்புராணம் திருநெறிக் காரைக்காட்டுப் படலம் 12-ம் பாட்டைப் பார்க்க:—

மருத்துவர் வானவர் கின்னரர் சித்தர் வசுக்கள் மருத்துக்கள்
உருத்திரர் சாத்தியர் கந்தரு வத்தர் உடுக்கள் நவக்கோள்கள்
திருக்கிளர் மெய்த்தவர் யோகிகள் கையிணை சென்னி மிசைக்குவியா
நெருக்கினு ளெய்தி யிறைஞ்சி மருங்குற நிரல்பட நிற்பவரோ

5. விருது - வெற்றி. மாகதர் - புகழ்வோர். தவிர்த்து உவந்தான் - (குறை) தீர்த்து மகிழ்ந்திருந்தவன் ஆகிய இந்திரன். போழ்ந்து - பிளந்து.

பேரழகு முற்றுமொரு பெண்ணுருக்கொண் டென்னுளத்துக்
காரமுதம் ஆன அகலிகையைச்—சாரப்
பெறும்பாக் கியம்அல் பெரும்பாக் கியந்தான்
வெறும்பாக் கியமாய் விடும். 6

ஒருமுறையே அம்மாதின் ஒண்கடைக்கண் நோக்கை
மருவுவெனேல், மற்றதற்கு மாறுத்,—தரு,நிதி,ஆன்
ஆதியவாஞ் செல்வம் அனைத்தும் அளிப்பென்;உயிர்
ஈதலுமே செய்வேன் இனிது. 7

நம்மகவை நாம்எடுக்க நண்ண, இசையாமல்
நம்மையது தள்ளில், நலிவெய்தி—விம்மும்
மனநிலை,நம் பாற்பிறர்சேய் வந்தணைய எய்தும்
மனநிலையின் மிக்கினித்வ் வாறு, 8

'தையல்! சரணம் சரணம்!'என யான்அடையத்,
தையல் இரங்காது தள்ளிவிடில்,—தையலினை
எய்துறு இன்னல்,வே றேழை வலிந்தென்னை
எய்துறாஉம் இன்பின் இனிது. 9

**அகலிகையை அடைதற்குப் பிரமதேவர் நியமித்த முதற் சபதம்**

ஆரமுதொ டன்னுள்தோன் றந்நாளே யான்காதல்
கூர,மயல் கோதமனுங் கொள்ள,அயன்,—'நீர்முழுகி
முன்னெழுந்தார் தோற்பர்'என்றான்; மூழ்கினேம்; யான் முன்எழப்
பின்னெழுந்தான்: வென்றான். பிறகு, 10

**இரண்டாஞ் சபதம் நியமிக்கும்படி பிரமதேவரை இந்திரன் வேண்டல்**

'வேத,இவன் கும்பகமா வித்தை மிகப்பயின்ற
சாதனையின் நீருள்நனி தங்கினான்:—நீதி
தவறு தெமக்குச் சமமாம் ஒருசூள்
நுவல்வாய் பிறிதெ'ன்றேன் நொந்து. 11

8. நலிவு - வருத்தம் - துன்பம்.

9. தையல் - பெண், மூன்றிடங்களிலும் அகலிகையைக் குறித்தது. சரணம் சரணமென - பாதமே தஞ்சமென்று. எய்துறு - எய்தா - அடையாத. இன்னல் - துன்பம். ஏழை - பெண்.

10. அன்னாள் - அப்படிப்பட்டவள் - அகலிகை. கோதமன் - கௌதமன். அயன் - பிரமன்.

11. வேத - பிரமனே. கும்பகம் மா வித்தை - மூச்சடக்குதலாகிய பெரிய வித்தை. பயின்ற சாதனையின் - பழகிய பழக்கத்தால். நனி - (என்னினும்) மிக (நெடுநேரமாக). பிறிது ஒரு சூள் நுவல்வாய் - வேறொரு சபதம் கூறுவாயாக,

'சீசீ! இனையமொழி செப்புதலும் சீர்மைத்தோ!
ஆசை மதியை அழித்ததோ!—நீசர்
புகலுமொழி சொற்றாய்! புரந்தர,போ! போபோ!
அகலஒழி!' என்றான் அயன். 12

என்னலுமே, கோதமனும், 'ஈசன் திருவருளால்,
இன்னமும்யான் வெல்வேன்: இவன்நொந்து—சொன்னபடி
வேறுசூள் கூறுவாய், வேத,' எனப்,பிரமன்
கூறினான் வேறு குறித்து. 13

'எதிரியே சூள்வே றியம்பென் றதனால்,
புதுமையா ஓர்சூள் புகல்வேன்:—இதுவே
இறுதி; பிறிதொன் றினிமேல் இசையேன்:
உறுதி இது.நன் குணர். 14

## இரண்டாம் சபதம்

முன்போலப் பின்னும் முகமுடைய ஓர்பசுவை
முன்பாகக் கண்டதனை மூன்றுமுறை—அன்பா
வலம்வருதல் செய்ய வலவன்எவன்? அன்னான்
வலவன்எழில் கூர்இம் மகட்கு.' 15

### இரண்டாம் சபதத்தைப் பற்றி இந்திரன் எண்ணுதல்

என்ன அயன்கூற, எனக்கே இதுநன்றென்
றுன்னி,இவன் காலால் உழந்துதிரிந்—தன்னபசுக்
காண்பனலன்; கார்மேற் கடிதெங்கும் சென்றுகண்டு
மாண்பொடிவண் மீள்வேன் மகிழ்ந்து. 16

12. சீர்மைத்தோ - சிறப்புடையதோ. சொற்றாய் - சொன்னாய். புரந்தரன் - இந்திரன். அயன் - பிரமன்.

13. என்னலுமே - என்று சொன்னவுடனே.

14. புதுமையா - புதிதாக - ஆச்சரியமானதாக.

15. வ(ல்)லவன் - வல்லமையுடையவன்; கணவன். எழில் - அழகு. கூர் - மிகுந்த. மகட்கு - பெண்ணுக்கு.

16. இது - இந்தச் சபதம். உழந்து - பிரயாசப்பட்டு - வருந்தி. காண்பனலன் - காணமாட்டான். இவண் - இங்கே. மீள்வேன் - திரும்புவேன்.

அணிலேற விட்டநா யாகஇவன் ஏங்க,
மணிலேஇம் மாதை மணந்து,—விணிலார்
குடிக்கரசி யாக்கியிவள் கோகனகச் செம்பொன்
அடிக்கடிமை செய்வேன் அமர்ந்து. 17

உரைமகளைக் கொண்ட உலகீன்ற தேவும்
மரைமகளைக் கொண்டநெடு மாலும்-வரைமகளைக்
கொண்ட அரனும்இவட் கொண்டஎனை நேரார்;வே
றண்டர் தமில்நேர்வார் ஆர் ? 18

அன்னமின்னர், தங்கொழுநர் ஆகத்தோர் பாகம்
மன்னிஉறை பேதையர்;இம் மாதோ,—தன்னுரியோன்
உள்ளம் முழுதும் உறையுளாக் கொள்ளைகொளும்
கள்ளம் மிகுசமர்த்தி காண். 19

இவருசைக் கேள்வன் இதயத்தே வாழ்வை
இவள்போலப் பெற்றிலே மென்றே—அவருள்
ஒருத்தி வெளுத்தாள் ஒருத்தி சிவந்தாள்
ஒருத்தி கறுத்தாள் உடம்பு. 20

17. 'அணில் ஏறவிட்ட நாய்போல' என்பது ஒரு பழமொழி. தான் பிடிக்கமுயன்ற அணிற்பிள்ளையைத் தான் ஏறக்கூடாத மரத்தின் மேல் ஏறவிட்டு ஏங்குகின்ற நாய்போல என்பது கருத்து. கோகனகம் - தாமரை. அமர்ந்து - திருப்திப்பட்டு அமர்ந்து. அமரர்க் காசனாக வாழ்தலி னும் அகலிகைக் கடிமையாக வாழ்தல் அதிக இன்பந்தருவதாக, இந்திரன் கருதினன்.

18. உரை - சொல். உரைமகள் - சரசுவதி. மரை - தாமரை. மரைமகள் - இலக்குமி. வரை - மலை. வரைமகள் - பார்வதி. இவட் கொண்ட - இவளைக் கல்யாணஞ்செய்துகொண்ட. நிச்சயம்பற்றி எதிர் காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது.

19. தன் உரியோன் - தன் கணவன். உறையுள் - இருக்குமிடம். ஆகத்தோர்பாகமென்றது, தத்தம் கணவர் தேகத்தில் சரசுவதி நாவையும், இலக்குமி மார்பையும், பார்வதி இடப்பாகத்தையும் உறைவிடமாகக் கொண்டதை.

20. இவறுதல் - ஏறுதல் - மிகுதல். தன் கணவன் இருதயத்தில் இவள் வாழ்தல்போல, நம் கணவர் இருதயத்தில் நாம் வாழப்பெற்றோ மில்லையென்று கருதியே என்பது முதலிரண்டடியின் கருத்து.

அவரெலாம், அவ்வவர்தம் அன்ப ருடலைத்
தவிருறு தெக்காலும் சார்ந்து—தவருக்(கு)
உடலொடுட லானுர்: உயிரொடுயி ரானுள்
இடுகுமிடை இம்மா தெனக்கு. 21

கண்ணின்மிகு கண்ணுய்க் கருத்தின் மிகுகருத்தாய்
எண்ணுயிரின் மேலான இன்னுயிராம்—பெண்ணிெனுடு
வாழ்கின்ற வாழ்வேநல் வாழ்வாம். பிறவாழ்வு,
தாழ்வன்றி வேறின்று தான். 22

**இந்திரன் இரண்டாம் சபதத்தை நிறைவேற்ற முயன்று தவறி வருந்தல்**

என்று பலபலவும் எண்ணிக் கருமுகில்மேற்
சென்று திசைஎல்லாம் தேடினேன்—துன்றும்
இருளைமுகில் மின்னி இரிக்க, இரவும்
துருவிமிக நொந்தேன் துயர்ந்து. 23

பூதலத்துங் கண்டிலென்,யான் போற்றும் புலவர்உறை
மீதலத்துங் கண்டிலேன், மேதினிக்கீழ்ப்—பாதலத்துங்
கண்டிலென்அவ் ஆ.அதனைக் காணமே உள்ளத்துக்
கொண்டதுயர் சாலக் கொடிது. 24

இரவுபகல் யான்பலநாள் எவ்வயினுந் தேடிக்
கருவிமுகில் மேலலைந்துங் காண—ஒருபசுவைக்
கோதமன்ஓர் காற்கண்டான் கொல்லோ வெனமரண
வேதனையை உற்றேன் வியர்த்து. 25

21. அன்பர் - கணவர். தவிருறு - நீங்காமல். தவருக்கு - (தங்கள் தங்கள்) கணவருக்கு. இடுகுதல் - சிறுகுதல்.

22. எண் - மதிக்கப்பெற்ற.

23. துருவி - தேடி. துயர்ந்து - வருந்தி. "தூமமென் கூந்தற் செவ்வாய்த் துடியிடை துயர வன்றே" நைடதம்.

24. யான் போற்றும் - என்னுல் காக்கப்பெறும். புலவர் - தேவர். ஆ - பசு.

25. வயின் - இடம். கருவி - காரணம். கருவிமுகில் - (உலகம் வாழ்தற்குக்) காரணமான (மழையைப் பெய்யும்) மேகம். வியர்த்து - வேர்த்து.

**நாரதர் உதவியால் கௌதமர் இரண்டாம் சபதத்தை நிறைவேற்றல்**

இவ்வா றுளைந்தலைந்தேன் யான்.'அப் பசுக்காண,
எவ்வா றெனினும், இறைவன் அருள்—செய்வான்,
பெருந்தவந்தான் செய்வெனெ'ன்று, பிஞ்ஞுகனைச் சிந்தை
புரிந்திருந்தான் கோதமன்.அப் போது, 26

சோதிஒன்று வானில்நெடுந் தூரத்தே தோன்ற,அவன்
யாதிதென்று சிந்தித் திடுமுனம்,அச்—சோதி
நெருங்க,மிளிர் செம்மேனி நீள்சடைகண் டீசன்
இருங்கருணை செய்துவந்தா னென்று, 27

பாரதன்மேல் வீழ்ந்து 'பகவ!' எனத்தொழுதான்.
நாரதனுங் கன்னவனை நாரதனால்—வாரி
எடுத்திருகை கொண்டுதழீஇ 'என்நேய, இங்கண்,
அடுத்ததனை யான்அறிவ னால். 28

ஒருவன் தனதுள்ளத் துள்ளுவது, சேய்த்தின்
மருவும் பிறன்தன் மனத்தே—தெரிதல்,
இனியதோர் அற்புதமே யென்னினுமெய் யன்றோ?
அனையதாம் தூரஉணர் வால், 29

26. உளைந்து - மனவருத்தமுற்று. செய்வான் - செய்யும்படி. பிஞ்ஞுகன் - சிவன். சிந்தைபுரிதல் - தியானித்தல்.

27. யாது இது என்று. இருங் கருணை - பேரருள்.

28 ஆங்கு - (தொழுத) அவ்விடத்தில். நார் - அன்பு. நாரதனால் - அன்பினால் - அன்போடு. இங்கண் - இங்கே. அடுத்தது - சம்பவித்தது - நிகழ்ந்தது.

மிகுந்த தூரத்திலே கேவலம் பகுத்தறியக்கூடாத சோதிமயமாகவும், குறைந்த தூரத்திலே சிவந்த உடலும் சடையும் புலப்படத் தாம் தியானித்துக்கொண்டிருந்த சிவனேயாகவும், (சிவனென்றெண்ணிக் கீழே விழுந்து தொழுது கிடந்த தாம் தூக்கி நிறுத்தப்பட்டபோது) சமீபத்திலே தம் சிநேகிதராகவும் கௌதமர் கண்டது ஆகாயகமனமாக வந்த நாரதர் உருவை.

29. சேய்த்தின் - தூரத்தில். பிறன் - மற்றொருவன். தூர உணர்வு - தூரத்தில் உணர்தல். இதனை ஆங்கில சாஸ்திரிகள் 'டெலிபதி' என்பர். இவ்வாறு "உணர்ச்சியொத்தல் பிசிராந்தையார்க்கும் கோப்பெருஞ் சோழற்கு முண்மை புறப்பாட்டிற் கண்டது."

மனக்கவலை நீஉற்ற வாறென்உளம் ஓர,
நினக்கவலம் நீக்கும் நிமித்தம்—உனைத்துனினேன் :
துன்பம் அரையாம் துணைவரது கூட்டத்தால்
இன்பம் இரட்டியா மே. 30

உனைப்பிரம சாரியென ஓதல் ஒழிய,
மனைக்கண்உனை மாதொடியான் வைக்க,—நினைத்த
நெடுநாள் நினைவு நிறைவேறு காலம்
கடிதே புகுந்துளது காண். 31

அயல்வயத் தொழுவினில்ஓர் ஆயிரம்ஆ உண்டால்,
வயவார் பருவமிதால், வாளா—முயலாதே,
முன்னோடு பின்னும் முகமுடைய ஓர்பசுவை
என்னோடு காண்பாய்' என, 32

'இப்பாரில் ஓர்கன் றிரண்டுமுகம் முன்புறம்வய்
உற்பாதம் யான்கண் டுளனெனினும்—எப்பாலும்
உற்றபசு முன்பின்முகம் உள்ளதனைக் கண்டிலேன்,
நற்றபசு செய்நா ரதா,' 33

என்ன,அவன் வாய்பேசா திட்டன் கரம்பற்றிச்
சொன்னதொழு உய்த்தத் தொழுவிலுறும்—நன்னிரையுட்
சூலுளையும் ஓர்பசுவைச் சுட்டி, 'முகம்அதன்பின்
பாலும்உள தாங்குற்றுப் பார்' 34

30. அவலம் - மனக்கவலை. "நெஞ்சத் தவல மிலர்" குறள் 1072. பின் இரண்டடியும் ஓர் ஆங்கிலப் பழமொழியின் கருத்தைத் தழுவியது.

31. கடிதே புகுந்துளது - (எதிர்பார்த்ததினும்) விரைவாக வந்திருக்கின்றது.

32. வயவு ஆர் பருவம் இதால் - இது (அப்பசுக்கள்) கருப்பம் நிறைந்திருக்குங் காலமாதலால். வாளா முயலாதே - (அப்பசுவைக் காணத்தக்க இடமாகிய அந்தத் தொழுவைவிட்டு வேறு இடங்களில்) வீணே (தேடும்) முயற்சி செய்யாமல்.

33. உற்பாதம் - (இயற்கைக்கு மாறான) பிறவி. எப்பாலும் உற்ற பசு - எங்கும் உள்ள பசுக்களுள்ளே. நற் றபசு - நல்(ல)தபசு.

34. என்ன - என்று சொல்ல (உடனே). சொன்ன - முன் சொல்லப்பட்ட. நல்(ல)நிரை (- பசுக்கூட்டம்). சூல் உளைதல் - பிரசவ வேதனைப் படுதல்.

என்ன, அவன்,' என்னை எள்ளுதியோ நீ' என்று
பன்னு முனம்அப் பசுவினது—பின்னோர்
முகந்தோன்ற மூன்று முறைவலம்வந் துள்ளம்
உகந்தான்தன் தோழனைநோக் குற்று, 35

**நாரதருக்குக் கௌதமர் நன்றி கூறல்**

'அவலமெலாம் நீக்கும் அரனடியைச் சிந்தித்(து)
அவனருளால் வேட்ட தடைந்தேன்.—அவனடிகள்
வாழி! அவனேபோல் வந்தென்னை வாழ்வித்தாய்.
வாழி! பலநலமும் வாய்ந்து. 36

உடுக்கை இழந்தவன்கை யொப்ப உடனே
இடுக்கண் களைந்தாய்; எனக்குக்—கிடைக்கரிய
தேவியையோ ஈந்தாய்; சிறியனேன் ஆவிக்கோர்
ஆவியையே ஈந்தாய் அறிந்து. 37

விண்ணிடைநான், சேந்தொளிரும் மேனி சடைகண்டு,
கண்ணுதலே யென்று கழல்பணியப்—பண்ணும்
உருவாலும் உன்னியதை உன்னியவா றீந்த
அருளாலும் ஈசனொத்தா யால். 38

மின்னை அளித்தாய்க்கு வேறொருகைம் மாறுமிலேன்
என்னை யளித்தேன். இறைவ,நின்நேர்—உன்னினால்,
உன்னையலால் இல்லை; உனதுடைமை யானதனால்,
என்னையலால் என்நேரு மில்.' 39

35. எள்ளுதியோ - பரிகாசம்பண்ணுகின்றாயோ. பின் ஓர்முகம் - பிற்புறத்தில் ஒருமுகம் (-பிறந்துகொண்டிருக்கும் கன்றின் முகம்.)

36. அவலம் - மனக்கவலை. வேட்டது - விரும்பியது.

37. உடுக்கை - உடை. இடுக்கண் - துன்பம்.

38. சேந்து ஒளிரும் - சிவந்து பிரகாசிக்கும்.

39. மின்னை - (எனக்கு என் உயிரினும் இனியவளும் எல்லாப் பொருள்களினும் சிறந்தவளுமாகிய ) அகலிகையை. அளித்தாய்க்கு - கொடுத்த உனக்கு. உன்னினால் - ஆராய்ந்து பார்த்தால்.

என,நா ரதன் ‘முகமன் எற்றுக்(கு?)யான் வேறோ?
உனினால் இருவேம் ஒருவேம்:—நினின்நான்வே
றல்லேன். எனின்நீவே றல்லாய். இஃதெல்லாம்
வல்லாய் அறியாயோ மற்று. 40

இருவேம் ஒருவேமா எய்தலா னன்றே,
ஒருநீ உனதுள்ளத் துள்ளே—கருதியதென்
உள்ளம் உணர,உனை உற்றேன்; எனைவேறாக்
கொள்ளல் தகுமோ?நீ கூறு. 41

### அகலிகையைக் கௌதமர் அடைதல்

நான்முகமன் வேண்டலேன்; நங்கை தனையடைவான்,
நான்முகமன் ஆணைபெறல் நன்றென்று,—பான்மிகநல்(கு)
ஆத்தானம் ஆம்தொழுநீத் தன்பனொடு சென்றலரோன்
ஆத்தானம் தன்னை அடைந்து, 42

சூள்முடித்த வாறுரைத்தான். ‘தோகை மணத்தினைஇந்
நாள்முடிக்க’ என்று நளினத்தோன்—சூள்முடித்த
கோதமற்கம் மாதைக் கொடுத்து விடைகொடுத்தான்.
மாதவத்தர் சென்றார் மகிழ்ந்து. 43

இமையா விழிகொண் டிளைப்பா றிடற்கும்
அமரா தலைந்தனைய ஆவைக்—கமையோடு
தேடுநாள் அந்தோ! செவியுற்றேன் இவ்எல்லாம்.
வாடினேன் என்செய்வேன் மற்று. 44

40. முகமன் - உபசார வார்த்தை. எற்றுச்கு - எதற்கு. உ(ன்)னினால் நி(ன்)னின் (நின்று), எ(ன்)னின் (நின்று). மற்று, அசை.

42. முகமன் - துதிமொழி. நால் (- நான்கு) முகம் (உடைய) மன் (- இறைவன்) - பிரமன். பால் மிக நல்கு ஆ தானம் ஆம் தொழு - பால் மிகுதியாகக் கொடுக்கும் பசுக்களின் இடமாகிய தொழு. அலரோன் - பிரமன். ஆத்தானம் - சிறந்த உறைவிடம்.

43. தோகை மணத்தினை இந் நாள் முடிக்க - அகலிகை கல்யாணத்தினை இன்றைத்தினமே நிறைவேற்றிடுக. நளினம் - தாமரை. நளினத்தோன் - பிரமன்.

44. கமை - பொறுமை. இவ் - இவை.

நிலமேல் விழுந்துருண்டேன்! நெட்டுயிர்த்தேன்! மண்ணைத்
தலைமேல் எறிந்தேன்! தவித்தேன்!—தலையின்
மயிர்பிய்த் தெறிந்தேன்! மறுகி அழுதேன்!
உயிர்செற் றிடப்படுவா ரொத்து. 45

முகில்மிசைநான் மூவுலகு முற்றும்போய் எய்தா
அகலிகைதான் நொய்தின் அவன்கைப்—புகுதல்,
முடவனது வாயுள் முகில்தோய் கிளைத்தேன்
வடிதலினை நேருறுமால் வாய்ந்து. 46

வெந்தீயில் வீழ்ந்து வெதும்பினவர் மீட்டுமந்தச்
செந்தீயில் வீழ்ந்த செயலென்ன,—அந்தோ!
ஒருமுறைமுன் செத்தார்பின் ஓர்முறைசெத் தென்ன,
இருமுறையும் தோற்றேன் இளைந்து. 47

**அகலிகையின் வடிவ வருணனை**

சூழ்தலுறீஇத் தற்புதைத்த சூல்முகிலைப் பிற்புறத்தே
தாழ்குழலாச் செய்தொதுக்கித், தாக்கணங்கும்—வீழ்கவினு
பெண்ணுருவேய் மின்னே,என் பெட்பார் கருத்திநெடு
கண்ணகலா அவ்வகலி கை. 48

ஒளி,நீழல் உள்ளதன்றென் றோதுவிர்காள்! நீழல்
தெளிநீல வானமே தேர்வீர்;—ஒளிதான்அவ்
ஆயிழையா ளாய தறிந்தந் நிழல்குழலா
மேயினதால்; ஈதுமறி மின். 49

45. செறுதல், செற்றல் இரண்டும் கொல்லல் குறிப்பன.

46. மூ உலகு - மூன்று உலகம். நொய்தின் - எளிதாக. அவன் கைப் புகுதல் - (கௌதமன் தழுவும்படி) அவனுடைய இரண்டு கைகளின் உள்ளே செல்லுதல். கிளைத்தேன் - கொம்புத்தேன். வாய்ந்து (வாய்க்கு நேராக வாய்ந்து) வடிதலினை நேருறும். ஆல், அசை.

47. செத்தென்ன - செத்தாலென - செத்தாற்போல இளைந்து - வருந்தி.

48. சூழ்தல் உறீஇ - சூழ்தலுற்று சூழ்ந்து. தற்புதைத்த - தன்னைப் புதைத்த - தன்னை (மின்னை) மறைத்த தாக்கணங்கு - இலக்குமி: தீண்டி வருத்தும் தெய்வமுமாம். வீழ் கவின் ஏய் - விரும்பும் அழகு பொருந்திய.

49. ஓதுவிர்காள் - சொல்வோர்களே. நீழல் - நிழல்.

தாமரையைச் சைவலமும், சைவலத்தைத் தாமரையும்,
தூமதியைச் சூழிரவும், சூழிரவைத்—தூமதியும்,
துன்றிநின்றோர் மிக்குறுத்தும்; தோகை முகங்கூந்தல்
ஒன்றையொன்றோர் மிக்குறுத்தும் ஊங்கு. 50

பெடையோடு வண்டு பிறங்குமலர், ஒண்கண்
ணெடுமேவு மின்வதனம்; ஒண்பூ—வடிதேன்,சொல்;
பூவின் மலர்ச்சி, பொலிவு,மணம், மென்மை,தண்மை
யாவும் முகத்தும்உள வே. 51

மதிமானும் மாதின் வதனம்; மதியுள்
வதிமானை நேரும் மழைக்கண்;—மதிமேவு
தெள்ளமுதொப் பாகும் திருவாய் மொழி;மதியின்
உள்ளொளிர்முத் தாம்பல் லொழுங்கு. 52

பவளக் கொடிபடர்ந்த பால்வேலை நாப்பண்
அவிருற் றிடுவிடம்நே ராகும்,—அவள்செவ்
வரிசிதறி இன்னழகு வாய்வெள் விழியுட்
கருவிழியின் காட்சிக் கவின். 53

காதலலை தத்திடும்அக் கட்கடல்,நோய் நோக்கும்அந்த
நோய்தவிர்தல் செய்மருந்து நோக்குமென—ஓதலுறும்
நீலநிற வெவ்விடமும் நேரரிய வெள்ளமுதும்
சாலவினி தீதலுறும் தான். 54

விரூபமிலள் என்றபொருள் மேவுபெயர் மின்னாள்
மரீஇயது’ரு ஒன்றுமொரு மாசும்—இராதபெண்வே
றில்லென் றுணர்த்திடுதற் கென்னின், அவள்அழகு
சொல்லுந் தரமுடைய தோ. 55

50. மிக்கு உறுத்தும் - மிக உறச் செய்யும்.

52. மானும் - ஒக்கும். முத்துப் பிறப்பதாகப் பூர்வ நூல்கள் சொல்லுமிடங்களுள் சந்திரனு மொன்று. மழை - குளிர்ச்சி.

53. நாப்பண் - நடு.

55. ஹலம் - விரூபம் ; அஹலம் - விரூபமல்லாதது ; அஹல்யை - விரூபமல்லாததை உடையவள் - விரூபமில்லாதவள். மரீஇயது - மருவியது.

கரும்புருவ வில்லைக் கரும்புருவ வில்லாக்,
கருங்கணையே வெல்பூங் கணையாப்,—பொருந்தஎய்து,
மின்னாள் உலகைவென்றாள்; வேளுமவன் வில்லுமம்பும்,
மின்னாள் இருக்க, மிகை. 56

## இந்திரன் காமம்

சுடரெனப்பெண் சோதி,கடற் றோன்றுதலும், முன்னென்
னுடையசித்த வானத் துடுவா—மிடைதலுற்ற
மானார் எவரும் மறைந்தொழிந்தார்; மாசில்சசி
யானாள் பகற்சசிபோல் ஆங்கு. 57

தாருமுறி மென்மேனி, சங்குகளம், கஞ்சமுகம்,
சீரியநல் ஆவின்பால் தேமொழி,ஏர்—கூரும்
மணியினொளி தன்னொளியா மன்னுதலால், அந்த
அணியிழைஎன் செல்வமெலாம் ஆம். 58

தருவுளுயர் கற்ப தருவென்ன, ஆனுள்
சுரபியென, மிக்கபெருஞ் சோதிப் — பருமணியுள்
மாசிலாச் சிந்தா மணியேபோற் பெண்மணியுள்
ஏசிலாத் தையலுளாள் எற்கு. 59

56. கரும் புருவ வில்லை - கரிய புருவமாகிய வில்லையே. கரும்புருவ வில்லா - கரும்பு உருவ வில்லா - கரும்பாகிய அழகிய வில்லாக. கருங் கணை - கரிய கண்ணை. மிகை - அதிகம் - அநாவசியகம்.

57. சுடர் - (இங்கே கடலிலே காலையிலே எழுகின்ற) பால சூரியன் - இள ஞாயிறு. பெண் சோதி, அகலிகையைக் குறித்தது. அகலிகை கண் ணெடுத்துப் பார்க்கமுடியாதபடி விளங்கும் நடுப்பகற் சூரியன் போல விளங் கினாளென்று வான்மீகி கூறியிருப்பதை நோக்குக. உடு - நக்ஷத்திரங்கள். மிடைதல் - நெருங்கல். சசி - இந்திராணி; சந்திரன்.

58. தாரு முறி - கற்பக தருவின் தளிர். சங்கு - சங்கநிதி - சங்கு வடிவமான பொற்குவியல். கஞ்சம் - பதுமநிதி - தாமரை வடிவமான பொற்குவியல். ஆ - பசு - காமதேனு. மணி - இரத்தினம். அணியிழை - அலங்காரமான ஆபரணத்தையுடையாளாகிய அகலிகை. ஆம் - ஆவாள்.

59. ஆன் - பசு. சுரபி - காமதேனு. ஏசு - குற்றம்.

பொருள்கள் பலவுட் புகல்காந்த மொன்றே
கருவல் லிரும்பைக் கவரும்;—தெரியிழைபூண்
மெல்லியலார் பல்லாருள் மேலாம் அவளேயென்
வல்லியலார் நெஞ்சுகவர் வாள். 60

திசையைத் தெரிகருவிச் சிற்றூசி, மற்றைத்
திசையைக் குறியாது' தீசித்—திசையைத்தான்
நாடும்; பிறமாதை நாடா த்வளேயே
நாடும் எனதுமனம் நன்கு. 61

அவள்உருவே நோக்க, அவள்குரலே கேட்க,
அவள்அருகே எப்போதும் ஆர,—அவள்நிழலே
போலப் பரிவொடவள் போம்எங்கும் போக,யான்
சாலப் பிரியமுளேன் தான். 62

கன்னி எழில்காணக் கண்களே ஆயினேன்;
கன்னி உரைகேட்கக் காதானேன்;—கன்னிஎனை
நீங்கநினைந் தோ்யா நினைவானேன்; யான்உயிரைத்
தாங்கல்பினுங் கண்டுவக்கத் தான். 63

அவ்வா யிழைஎழில்கண் டானேன் இமையான்; 'வேங்
தெவ்வா றவாறுகுடி' என்பரன்றே?—அவ்வாறே
ஆனார் சுரர்இமையார். அஃதறியார் தாம்,'இயல்பால்
வானோர் இமையார்'என் மார். 64

கண்ட கணமே கதுவியவெங் காமத்தீ,
மண்டி மிகவும் வளர்ந்தெரிந்து—கொண்டுயர்வ
தன்றி,அணு வானும் அடங்கித் தணியாதெ'ற்
கொன்றிடுதல் போல்வருத்தும் கூர்த்து. 65

61. உதீசி - வடக்கு.

64. அவாறு - அவ்வாறு. என்மார் - என்று சொல்வார்.

65. கதுவிய - பற்றிய. அணுஆனும் - அணு (அளவு) ஆயினும். கூர்த்து - மிகுத்து.

வேகின்றேன்! வேகின்றேன்! வெவ்வியதோர் தீப்பற்றி
வேகின்றேன்! அந்தோ! விளிந்தேனே!—வேக
நரகத்தீத் தானும் நலியுமோ இந்த
விரகத்தீப் போல வெகுண்டு? 66

### அக் சர்மத்தின் நெறி பிறழ்வு

அடைவுற்றேய் வெங்காம அங்கி பெருகி,
வடவைத்தீ நேர்ந்தென் மனத்தின்—இடையுற்ற
நீதிநெறிப் பேராழி நீர்ஓர் துளியுமின்றிச்
சீதமறச் செய்ததந்தோ! தீத்து. 67

நல்லா ரலார்உளம்போல் நல்லார் உளத்தினிலும்
பொல்லா நினைவு புகல்இயல்பே;—நல்லார்தாம்
புக்கவுடன் அந்நினைவைப் போக்கிடுவர்; பொல்லாதார்
மிக்குறைய விட்டிடுவர் வேட்டு. 68

அகமதனிற் பற்றுமயல் அங்கி,பற்றும் போதே
உகஅவியச் செய்தலெளி தோங்கி—மிகவளர்ந்த
பின்னர் அவிக்கொண்ணுப் பெற்றியது; மற்றிதனை
முன்னி அவித்திலெனே! முன்பு. 69

அயலவன தில்லம்மா தாகுமுன்யான் கொண்ட
மயல்பிழைய தன்றெனினும், மற்றம்—மயலை,
அவள் அயலான் தன்பொருளாள் ஆனஉடன் நீக்காத்
தவறதுவே என்றன் தவறு. 70

66. விளிந்தேன் - செத்தேன் (போன்றேன்). நலிதல் - நெருக்கி வருத்துதல்.

67. அடைவுற்று எய் - (என்னை) அடைந்து பொருந்தியுள்ள.

69. அகமதனிற் பற்றுமயலங்கி - அகம் மதனில் பற்றும் மயல் அங்கி - மனத்திலே மன்மத(ன் செய்கையி)னால் பற்றுகின்ற காமத்தீ; அகம் அதனில் பற்றும் அயல் அங்கி - வீட்டிலே பிடிக்கின்ற (வழக்கத்துக்கு) அன்னியமான தீ. உக - அழிய - கெட. எளிதோங்கி - எளிது ஓங்கி.

**அக் காமத்தின் வன்மை**

அவ்வா யிழைபிறன்இல் ஆனபின்னர் என்னுளத்துள்
ஒவ்வா மயற்பேய்புக் குற்றதனைச்—செவ்வே
வெளியகல ஓட்டி விடாமையினாற், போக்கற்
கெளியதல தாயதஃ தின்று. 71

பொறிகள்வழி யாகப் புலமயமாய்ப் புக்குள்
உறைதலுறும் உள்ளத்தோ டொன்றி,—அறிவொடறி
வாகி,உயி ரோடுயிரே ஆயமயல் போகாது;
போகின்,உயி ரோடுதான் போம். 72

உயிரையுடல் நின்றெளிதா ஓவப் புரியும்
வயமுடைய தென்திசைக்கோ மாற்கும்—செயலரிதே,
மாறுத மையலென் மாளா உயிரினின்றும்
வேறாக நீக்கும் வினை. 73

துன்புதரும் இன்பென்று சொல்லுகோ? அன்றென்னில்
இன்புதரு துன்பென் றியம்புகோ?—என்புகல்கேன்?
இன்பம்போல் இன்னலாய், இன்னல்போல் இன்பாதல்
தன்பண்பாம் காதல் தனை. 74

காதல் இயல்பிதாங் காரணத்தா லன்றோ,தாம்
காதல் கொளலுற்ற கன்னியரைக்,—காதலர்கள்
ஆவியுண்டு வாழும் அருளறுவெங் கூற்றென்றும்,
ஆவியென்றுஞ் சொற்றார் அறிந்து. 75

72. [புலம், இங்கே சுவை ஊறு ஒழிந்த அகலிகையின் உருவ ஒளி, குரலோசை, கூந்தல் மணம் ஆகியவற்றைக் குறித்தது.—பதிப்பாசிரியர்.]

73. ஓவ - நீங்க. வயம் - வல்லமை. தென்திசைக் கோமான் - எமன்.

75. 'பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன் - பெண்டகையாற் பேரமர்க் கட்டு' என்பதனையும் 'காணு மரபிற் றுயிரென மொழிவோர் - நாணிலர் மன்ற மெய்ம்மொழிந் தனரே - யாஅங்கண் டும்மே யருப் பெற லுயிரே - சொல்லும் ஆடும் மென்மெல இயலும் - கணைக்கால் நுணுகிய நுசுப்பின் - மழைக்கண் மாதர் பணைப்பெருந்தோட்டே' என்பதனையும் நோக்குக.

காதல்செய்தென் காலனே, காமரமு துண்டியான்
சாதல்தவிர் வுற்ற தகைநோக்கிக்,—காதல்செயும்
தென்கால னய்வெம்போர் செய்கின்றான்; கொல்வேன்என்
முன்காணில் இம்மென்னு முன். 76

### இந்திரன், அகலிகையை அடைய நிச்சயித்தல்

விண்ணமுதாற் சாதனேய் வீந்த த்கலிகைப்பேர்ப்
பெண்ணமுதாற் பேர்தலன்றிப் பேராது,—துண்ணெனுமச்
சாதனேய் தன்னினும்யான் தாங்கற் கருங்கொடிய
நோதலே செய்காதல் நோய். 77

ஐதெனிறை மாட்சி!யான் ஆள்குடியுள் ஓர்எளிய
வைதிகன்,அம் மாதர் மணிதன்னை—நொய்துவெளவிச்
செம்மாந்து வாழச், சிறிய வறியனைப்போல்
விம்மாந்து தாழ்கின்றேன் மிக்கு. 78

ஆற்றல்மிகு காமத்தீ அன்றி,யான் கோதமற்குத்
தோற்றஅவ மானத்தீச் சுட்டிடுவெப்—பாற்றரிதே;
தேந்தாழ் மலர்க்குழலாள் சீத வனமேனி
தோய்ந்தால் தணியும் துனைந்து. 79

ஒப்பு நெறியில்உற வொண்ணுத ஒண்தொடியைத்
தப்பு நெறியிலின்னே சார்வல்;அன்றேல்,—எப்படியும்
உய்வதரி தென்றெணி,ஆங் குற்றூர்ச் செலப்பணித்தான்
தெய்வசபை நீத்திந் திரன். 80

76. காதல் செய் தென்காலன் - கொல்லுதலைச் செய்கின்ற தென் திசைக் குரிய இயமன். காதல் செயும் தென்காலனுகி - மோகத்தை உண்டாக்கும் தென்றற் காற்றை(த் தேராக)உடைய மன்மதனுகி. இம்மெனல், விரைவுப் பொருளுணர்த்தும் குறிப்புச்சொல்.

78. ஐது - அழகிது; இகழ்ச்சி குறித்தது. மாதர் மணி - அழகிய இரத்தினம்; ஸ்த்ரீரத்நம். விம்மாந்து - பொருமி. 'பொய்ம்மா மயிலூர்ந்து போகிப் புறங்காட்டுள் - விம்மாந்து - யான்வீழ' சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், 245-ம் பாட்டு.

79. வனமேனி - அழகிய தேகம், ஜலம்போல மென்மையுள்ள தேகம். துனைந்து - விரைந்து.

80. ஒப்புநெறி - கல்யாணமாகிய எல்லாரும் ஒப்பிய வழி.

**அவன் கௌதமரது ஆச்சிரமமுள்ள வனத்தைச் சேர்தல்**

தானைபரி வாரம் தவிர்த்துத், தனியேஅம்
மானையடை வண்ணம் வழிச்சென்று,—ஞானகலை
ஆய்தந்த கோதமன தாச்சிரமம் சூழ்வனத்தே
போதந்தான் அந்திப் பொழுது. 81

**வன வருணனை**

இலை,நறுங்கட் பூவாய்ப்,பின் இன்கனியா மாறே
இலையிரும்பைச் செம்பூச்செம் பென்ன—நிலவப்
புரிந்து,பினும் பைங்கனியாம் பொன்னுஇக் கானம்
புரிந்தி'ரத வாதியரைப் போன்ம். 82

தப்புநெறி - அஃதல்லாத வழி. ஒண்டொடி - பிரகாசமான வளையல் (அணிந்த அகலிகை).

[ கொலுவிருக்கும் இந்திரன் அகலிகையைப்பற்றி நினைவுகூர்தல், 6 முதல் 80 ஈறாக எழுபத்தைந்து பாட்டுக்களால் வித்தரித்துக் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு நினைதற்கு நீண்டகாலம் செல்லுமென்றும் அவ்வளவு காலம் சபையோர் ஆடல் பாடலன்றி வேறு கவனித்தற்கொன்றுமின்றி வாளா இருக்கும்படி நேர, இந்திரன் தன் காமக் கருத்திலேயே ஈடுபட்டுச் சபையோரைப் புறக்கணித்தானாகக் கருதும்படி இருக்கின்றது. ஆயின், தோற்றத்தின்படி உண்மையில் அவன் நினைவுகூர்ந்த காலம் நெடிதன்று; கயிற்றில் தூக்குண்டேனும், நான்றுகொண்டேனும் இறந்தாரும், தண்ணீரில் மூழ்கி இறந்தாரும் உயிர்ப்பிக்கப்பெற்ற போழ்து, தாம் சாகும்தருவாயில் எண்ணியவைகளைச் சொல்லி, தாம் சொல்லுவதற்கு இவ்வளவு நேரம் வேண்டிய விஷயங்கள் எவ்வளவு விரைவாகத் தம் மனத்துள் தோன்றினவென்று தாமே ஆச்சரியப்பட்டது கூறப்பட்ட சில சம்பவங்கள் உள்ளன. இவற்றால் அகலிகையைப் பற்றி இந்திரன் நினைக்கச்சென்ற நேரம் மிகச் சிறியதாயினும் அதனை வெளிப்படுத்தும் பாட்டுக்கள் அதிகமானவையாயிருத்தல், ஆராயுங்கால், இயல்பானதே என்பது விளங்கும்.

—பதிப்பாசிரியர். ]

81. மானை - அகலிகையை. அடைவண்ணம் - அடையும்படி. 'மானை அடைவண்ணம் வனத்துற்றான்' என்பதில் மானை (அதாவது, மான் என்னும் மிருகத்தை) நாடி அது உள்ள வனத்தை அடைந்தான் என்ற பொருள் தொனிக்கின்றது.

82. இலைப்பகுதியே பூவாகப் பரிணமித்துப் பின்பு பழமாகின்றதென்பது தாவர சாஸ்திர முடிவு. 'இரும்பு செம்பானால், திரும்பப் பொன்னாகும்' என்பது ஓர் இரசவாதப் பழமொழி. செம் பூச் செம்பு - சிவந்த பூவாகிய செம்பு. போன்ம் - போலும்.

மழைபெய்து தற்புரக்கும் வான்முகில்ஊர் வேந்தன்
உழைஎய்த லுற்றுனென் றேகை—தழையஅவற்
போற்றித் தலைவணங்கல் போலும், வனம்அவன்முன்
காற்றிற் றலைவணங்கு கை. 83

பனிநீர் அருக்கியமும் பாத்தியமுந் தீந்தேன்
எனும்ஆ சமனியமும் ஈந்து,—நனிவீழ்மென்
பூவிருக்கை தந்த'திதி பூசை புரிந்த'வனை
மாவிருப்பின் ஏற்கும் வனம். 84

மர வருணனை

நிழலே அபிடேக நீரா, அவன்மேல்
விழுபூ அருச்சிக்கும் வீயாப்,—பழமே
நிவேதனமாப், பூசிக்கும் நீள்தருக்கள் என்னே!
விவேகமுள கொல்லோ மிகுந்து! 85

அண்ணுவா நோக்கி அதிசயமுற் றங்காப்பார்
உண்ணுவாய் இன்தேன் ஒழுக்கி,உயர்—விண்ணோர்
கிளைக்கட் குயிற்பாட்டும் கேகயத்தின் கூத்தும்
திளைக்கத் தருக்கள் செயும். 86

83. தற்புரக்கும் - தன்னை(வனத்தை)க் காக்கும். உழை - பக்கத்தில்.

84. 'அருக்கிய முதலிய வாச னங்கொடுத் - திருக்கென' என்ற இராமாயணம் திருவவதாரப் படலம் 42-ம் செய்யுளை நோக்குக. பெரியோருக்கு உபசாரமாகத் தலைமேல் தெளிக்கும் நீர், அருக்கியம்; பாதங் கழுவும் நீர், பாத்தியம்; குடிக்கக் கையில் வார்க்கும் நீர், ஆசமனீயம். வீழ் - விரும்பும்; விழுந்த - உதிர்ந்த.

85. வீ - பூ.

86. அண்ணுவா நோக்கி - அண்ணாந்து பார்த்து - தலைநிமிர்த்தி மேல் நோக்கி. உண்ணுவாய் - உள் நாக்கில்; உண்ணும் நாக்கில். கேகயம் - மயில். திளைக்க - அனுபவிக்க. மிகவுயர்ந்த மரங்களைப் பார்ப்போர் (பிடரியில் கைவைத்துத் தலையைத் தாங்கி நிமிர்த்தி) மேல்நோக்கிக் காணலும், அப்படிக் காணும்போது ஆச்சரியமடைதலும், ஆச்சரியமடைந்தோர் வாய் திறத்தலும் இயல்பான மெய்ப்பாடுகள். மயில் ஆடலும் குயில் பாடலும் ஏககாலத்தில் நிகழ்வதாகக் கூறுவது நூன்மரபன்றென்பாரும் உளர்: காஞ்சிப்புராணம் திருக்கண்புதைத்த படலம் 25-ம் பாட்டில் சில காரணம் பற்றி இரண்டும் ஒருசேர நிகழ்தலைக் கூறியதை நோக்குக. திருநாவுக்கரசு நாயனார் திருவாரூர்ப்பதிகம் 'மெய்யெலாம்' என்ற திருப்பாசுரத்தில் 'சோலைக்குயில்கூவ மயிலாலும் ஆரூரர்' என்றிருப்பதனையும் நோக்குக.

சிலகொம்பு தீங்கனியைச் செவ்வாயிற் சேர்ப்பச்,
சிலகொம்பு செங்கையுறச் செய்யச்,—சிலகொம்பு
கால்இடற வீழ்ப்பக், கனிகள் எளிதுறுத்தெ'க்
காலுமுண வூட்டுமரங் கள். 87

### கோடி கொம்புகளின் வருணனை

தண்பனிநன் னீராடிச், சந்தமுறிப் பட்டுடுத்து,
வண்பனிற ஒண்பூ மணிப்பூண்கள்—கண்குளிர
வேய்ந்து,குலாய் ஆடுவன மென்கொடியும் கொம்பினமும்
ஏந்திழையார் நேர்வ இனிது. 88

தளிர்க்கையினுல் வாஎன்று சைகைசெய்து, வாயால்
விளித்திடல்போல் மென்மலர்வாய் விண்டின்—அளித்தொனியால்
கூவிவர வேற்கஎதிர் கொள்மாதர் போல்வ,வந்தால்
காவில்அலே கொம்புகொடி கள். 89

### மலர் வருணனை

மலர்களெனும் மாதர், மணங்களென லான
சிலதிகளைத் தூதாச் செலுத்திச்,—சுலவலுறும்
வண்டாம் விருந்தை வரவழைத்து, மாமதுரத்
தண்டே னமுதூட்டும் தான். 90

பாடிவரும் பாவலர்க்குப் பைம்பொன்னைத் தானநன்னீ
ரோடுதவும் காவலர்கள் ஒக்குமே,—தேடிவரும்
பாங்குடைய பாட்டளிக்குப் பைந்தாதைச் செந்தேனே
டாங்குதவும் இக்கா வலர். 91

87. வீழ்ப்ப - விழச்செய்ய. எளிது உறுத்து - எளிதாக உறச் செய்து.

88. சந்த முறி - அழகிய தளிர்.

89. அளி - வண்டு. வந்து - காற்று.

90. சிலதி - தோழி. சுலவல் - சுழலல். தான், அசை.

91. காவலர் - கா(த்தல்)வ(ல்)லர் - அரசர். காவலர் - கா(- வனம்)அலர் (- மலர்) - காட்டுப் பூ.

தன்மணமே தூபமாத், தானேஒண் தீபமா,
நின்மலமாம் தேனே நிவேதனமாத்,—தன்மிசைவய்
தேசின்அளி பாட்டிசைத்தல் தேவாரப் பாட்டாகப்
பூசைசெயும் ஈசனுக்குப் பூ. 92

புறஇதழ்கள் கண்ணிமைகள் போல, அகத்தே
உறும்இதழ்கள் கண்ணிணையே ஒப்ப,—நறியமது
உண்மணிவண் டொண்கண்மணி ஒத்தொளிர்தல் ஓர்ந்துரைத்தார்,
'கண்மலர்'என் றுன்றோர் களித்து. 93

ஒண்டொடியின் கண்ணே உளஐம் புலனுமென்றார்
கண்டிலர்கொல், மென்மை,மணம், கள்ளொடு,கார்—வண்டின்
ஒலியும், கழிபே ருவகைபுரி பொற்பும்,
மலரின் கணுமுறலை மற்று? 94

விரிந்து, சுருங்கி, மிளிர்பல் வருணம்
பொருந்து சிறையுடைய பூச்சி,—திருந்துகொம்பின்
வம்பார்பூ மேவல், மடக்கு விசிறி,எழிற்
கொம்பார்கை வைகுதலொக் கும். 95

மாலையிடை மாலை வளர்க்கும் வனப்புமிகு
சோலையிடை நின்று துயருழக்கும்—வேலையிடைப்
புந்தி தளர்ந்து புகல்வான்,புன் காமத்தால்,
இந்திரன்,தன் நெஞ்சோ டிவை. 96

**வனக்காட்சி முதலியவற்றல் இந்திரன் காமநோய் மிகுதல்**

காமன் புரிபோர் கடந்திடுவான் போந்தயான்,
காமன் படைவீட்டின் கண்ணுற்றேன்;—காமன்
படை,மயில்க ளாதி பலவடிவு கொண்டென்
புடைஉறுவ, போர்புரிவ போன்று. 97

92. தேசின்அளி - ஒளியையுடைய வண்டு.

94. இது, 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும் - ஒண் டொடி கண்ணே யுள' என்ற குறட் கருத்தைக்கொண்டு கூறியது.

95. பொருந்து சிறை - பறவைகள் இறகுகள் போலன்றி, ஒன்றோ டொன்று பொருந்தி ஒன்றுபோலவாகின்ற இறகுகள். வம்பு ஆர் - மணம் நிறைந்த. கொம்பார் - மாதர்.

96. மாலை - அந்தி. மாலை - காமத்தை.

97. காமன் படைவீடு - சோலை - வனம். காமன் படை(கள்) - பெண்களின் கூட்டங்கள்.

ஏக வெளியினிலும் என்னைமயற் றுன்புறச்செய்
தோகை எழிலுருவம் தோன்றுமெனில்,—மோகமுறப்
பூங்கொடிகள் கொம்பொடவள் போனிறைந்த இவ்வனத்தே
யாங்கணுயிர் தப்புவேன் யான். 98

விருத்தப் பருவத்தெவ் வேட்கை அறினும்,
பொருட்பற் றுறும்;பகல்முப் போதுள்—விருத்தப்போ
தாகியசெவ் வந்திப்போ தத்த வரைவெய்யோன்
ஏகியடை வுற்றான் இனிது. 99

நீருடைச்செல் சேந்த நிறத்தீயாச் செய்து,மறு
பேருறச்செய் வானென்று பேர்மாற்றிச்,—சூருறுத்தே,
அத்தீயால் என்னை அழற்றுகின்றாய், அந்தி!சொல்,
எத்தீதோ நிற்கிழைத்தேன் யான்? 100

மாலையிடை வெய்யோன் மறைந்தும்ஒளி நீங்காமை,
காலனன கண்ணுள்என் கண்ணகன்ற—காலும்,எனைச்
சால வருத்துமவள் தன்காதல் நீங்காமை
போலும்; இவையற் புதம். 101

விடம்ஓர்உருக் கொண்டனைய மெய்க்குயிலே! நீகூ
விடுதொனியும் அவ்விடம்நே ரேனும்,—அடுதகைய
அவ்விடத்துக் கஞ்சேன், அமுதுணலால்; நின்தொனியாம்
இவ்விடத்துக் கஞ்சுகின்றேன் யான். 102

98. ஏகவெளி - தனியான (ஒரு பொருளுமில்லாத) வெளிப்பரப்பு.

99. பகல் முப்போது - காலை, மத்தியானம், மாலை; இவை முறையே சூரியனுக்குப் பால குமார விருத்தப் பருவங்களாகக் கூறப்பட்டன. அத்தவரை - அத்தமனகிரி; பொருள் மலை (பெருந்தனக் குவியல்).

100. செல் - மேகத்தை. சேந்த - சிவந்த. தீயா - தீயாக. சூர் உறுத்து - அச்சம் உறச்செய்து. அந்தீ - அந்தியே; இதில் தீ (நெருப்பு) என்ற பொருள் தொனிக்கின்றது.

101. கண் அகன்ற காலும் - கண் பார்வையினின்று நீங்கிய காலத்திலும்.

102. குயிற்றொனியாகிய விஷம் அகலிகையாகிய அமுதால் தீருமென்பது குறிப்பு.

'சங்கரன்கண் மூன்றுள்ளே தண்ணிதொன்றே, அன்னதுவெண்
திங்களே'ன்று செப்புவோர், தீக்கணினும்,—வெங்கதிர்க்
கண்ணினும்,இவ் வெண்திங்கட் கண்மிகுந்த வெம்மையுறும்
வண்ணமதை ஓரார்கொல் மற்று. 103

மாலைப் பொழுதாம் மறலிக்கு, வான்உடலாப்,
பாலப் பிறைபிறழ்வெண் பல்லாகக்,—கோலச்செவ்
வானஞ் சிவந்தபேழ் வாயா மருவ,அந்தோ!
யானிங் குணவானேன் இன்று. 104

கரிய இருள்வண்ணன் காலனென ஓதும்
பொருளை அறிந்தேன்இப் போழ்து,—வெருவுறுத்துக்
கொல்லும் கொடியதொழில் கூற்றினுக்கும் கூர்இருட்கும்
ஒல்லும் தகையை உணர்ந்து. 105

புதிய மலர்தோறும் புக்கு,நறுந் தாதும்,
மதுவும், நறுமணமும் வாரி,—எதிரும்
வசந்தவிள மென்காலும் வாட்டுமெனை; வெல்லம்
கசந்திடுதல் வாய்க்குற்றம் காண். 106

தீருநோ யாவும்சஞ் சீவியினல் தீர்தலுறும்;
யாருமுறாஉம் பாவநோ யாவும்,உயர்—மேருவிலோன்
தாள்அடைய நீங்கும்;எனைச் சாடுபல நோவும்,அவள்
தோள்அடைய நீங்கும் தொலைந்து. 107

என்றுநினைந் தந்தி,யுடன் இந்து,கருங் கங்குல்,பசுந்
தென்றல்,குயில், ஐங்கணைவேள் செய்துன்பாற்—கன்றிக்,
கமையொடவன் கொண்ட கருத்தை முடிக்கும்
அமயமெதிர் பார்த்திருந்தான் ஆங்கு. 108

103. இரண்டாம் மூன்றும் அடிகளில், கண் - கண்; இடம்.

104. மறலி - எமன். பேழ்வாய் - பெருவாய். இந்தப் பாட்டு, மாலைக் காலத்தில் வானத்தில் செவ்வானமும் பிறைச் சந்திரனும் விளங்கிக்கொண்டிருக்கும் சமயத்தைக் குறித்தது. இதற்கடுத்த பாட்டு, சந்திரன் மறைந்த பின் பரவும் இருளைக் குறித்தது.

105. இருள்வண்ணன் - இருளின் நிறத்தையுடையவன்; இருளின் குணத்தையுடையவன்.

107. மேருவிலோன் - மேரு வில்லையுடைய பரமசிவன்.

108. கன்றி - வருந்தி. கமை - க்ஷமை - பொறுமை. அமயம் - சமயம். ஆங்கு - அவ்வனத்தில்.

அவ்வமயம், ஆந்தையொலி அல்லாமல், வேறொலிஇல்
வெவ்வமயம்; மிக்கவிருள் மேவமயம்;—வவ்வுபொருட்
சோரர், பிறன்கடைசெல் சோரர்,கொலை மாக்களன்றி
ஆரும் உறங்குமம யம். 109

---

## அகலிகை காண்டம்

### இந்திரன், கௌதமர் வெளியேபோக உபாயஞ்செய்தல்

பாதிநிசிப் போதினில்விண் பார்த்திபன்,ஓர் கோழியெனக்
கோதமன்இற் பக்கம்போய்க் கூவினன்;அப்—போதுமுனி
காலைக் கடன்கழிக்கும் காலமென எண்ணித்தன்
சாலைக்கண் நின்றகன்றான் தான். 110

அஞ்ஞான அல்லகல, அம்மா தவன்அகந்தான்,
மெய்ஞ்ஞான தீபத்தை மேவியென,—இஞ்ஞாலம்
யாவும் விழுங்கும் இருளைவிழுங் கோர்விளக்கு
மேவி விளங்கியதவ் வீடு. 111

கோதமனே போலவுருக் கொண்டு, மகவான்அம்
மாதவன்வாழ் தூய மனையகத்துப்—போத,அவண்
நின்றதையல் இல்லதனை நீங்குமுனி மீண்டுவந்தா
னென்றுவர வேற்றாள் எதிர்ந்து. 112

### இந்திரன் அகலிகையைப் பற்றல்

தன்னை மகிழ்நனென்று தாழ்ந்தெதிர்ந்தாள் தன்கரத்தை
மன்னன் பிடிக்க,அவன் வஞ்சமுணர்ந்—த’ன்னவள்,சீ!
விட்டிடெனப் பின்னிடைய, மிக்கிறுகப் பற்ற,வலைப்
பட்டமயில் ஒத்தாள் பதைத்து. 113

109. மாக்கள் - மனிதர்கள்; மிருகங்கள்.

112. போத அவண் - போக அங்கு.

113. உருமாறிவந்த இந்திரனைக் கௌதமரென்று பயந்தின அகலிகை அவன் கையைப் பிடிக்கவே உண்மைக் கௌதமரல்லனென்று அறிந்து கொண்டாள்.

[ உருவத்தால் கௌதமரே என்று அகலிகை கருதிய இந்திரன் தன்னையைப் பிடித்த மாத்திரையிலே கௌதமர் பற்றும் முறையினின்றும்

மன்னன் வலக்கை, மடந்தைஇடக் கைபற்ற,
வெந்நை இடக்கை விடாதுபற்றப்,—பன்னகத்தால்
பாய்வன் புலிகௌவிப் பற்றியமான் போன்று,பயம்
மேய்,வெம் துயரடைந்தாள் மின். 114

அலக்கணீர் வாளா அவள்நெஞ்சைப் போழக்,
கலக்கணீர் வாளா கவிழ்த்தாள்,—மலக்கமுறீஇ
விம்மினள், வெய்துயிர்த்தாள், வேர்த்தாள், விதிர்விதிர்த்தாள்,
அம்மினள் செய்வதறி யாள். 115

### அகலிகை தன்னுள்ளே வருந்தித் தவித்தல்

'என்செய்கேன்! என்செய்கேன்! எவ்வா றினிஉய்கேன்!
முன்செய்மா பாவமெனை முற்றியதோ!—வன்செயலால்
இக்கணமே சாதல் இயலாதே! எங்ஙனமித்
துக்கமியான் தாங்குவனந் தோ! 116

இந்திரன் பற்றுதல் வேறுயிருத்தல் கருதியும், ஊற்று வேற்றுமை (ஸ்பரிச வித்தியாசம்) உணர்ந்தும் உண்மையில் கௌதமரல்லன் என்று தெரிந்து கொண்டாள் என்பது "மன்னன் பிடிக்க" என்றதனல் போந்தது.— காஞ்சிப்புராணம், திருக்கண்புதைத்த படலம் 277-ம் பாட்டில் 'நீ யெமை யறியாவண்ணம் புதைப்பினும் நீயே என்று, சேயிதழ்க் கரங்கள் தோய்ந்த ஊற்றினல் தெளிந்துகொண்டாம்' என வருதல் காண்க. —பதிப்பாசிரியர். ]

114. வெந்நை - முதுகை. வன்புலி பல் நகத்தால் கௌவிப் பற்றிய மான் - வலிய புலி பற்களினற் கௌவி நகங்களினற் பற்றிய மான். மேய் - மேவி - பொருந்தி.

115. அலக்கண் ஈர் வாளா - துன்பம் அரிகின்ற வாளாக. கலக் கணீர் வாளா - கலக் கண்ணீரை (மிகுந்த கண்ணீரை)ப் பிரயோசனமில்லா மல். கலம் - ஒரு முகத்தலளவை. மலக்கம் - கலக்கம்.

116. முற்றியதோ - (தப்பவிடாமல்) வளைந்துகொண்டதோ.

[ வன்செயலால் - (இயற்கையாகவன்றி வலாத்காரமாக உயிர்மாயச் செய்கின்ற, நான்று கொள்ளல், நஞ்சுண்ணல் போன்ற) வலிய(ச் சாகும்) செயலினல்,—பதிப்பாசிரியர். ]

மேகமின்றி மின்னின்றி வெள்ளிடிமேல் வீழ்ந்தாற்போல்,
மாகொடுந்துன் பாம்விபத்து வந்ததே!—ஆ! கெடுவேன்!
முன்னறிந்து தப்ப முடியவில்லை; சாகவில்லை;
என்னதஞ்சம்! உண்டிங் கெனக்கு. 117

தப்பிடற்கோ மார்க்கமில்லை; சாவதற்கும் அப்படியே;
இப்படிக்கோ என்னூழ் இருந்ததந்தோ!—சொப்பனத்தும்
யாவளுமே எய்துவளென் றெண்ணுக் கதியெனக்கே
மேவியதே! ஆ! தெய்வ மே! 118

வெய்யபுலி கொல்லாதோ! விண்ணேறு வீழாதோ!
சையமுயிர் சாக,மேற் சாயாதோ!—மையுததி
பொங்கி அழுத்தாதோ! பூதலம்வாய் அங்காந்து
நுங்கி ஒழிக்காதோ! நொய்து. 119

துஞ்சொருத்தன் சென்னியிற்கற் றூக்கி எறிந்துகொலல்,
நஞ்சருத்தி மாய்த்தல்இவை, நாடுங்கால்—வஞ்சகத்தின்
இப்பாவி என்னையிப்போ திவ்வாறு செய்ததனுக்
கொப்பாகு மென்னலா மோ. 120

போகிவிடம், சங்கரன்றன் பூங்கழுத்தில் மேவி,வெம்மை
போகிஅமர் வுற்றதத்து, போகியே—ஆகுமிவன்
நெஞ்சகத்து வஞ்சகமாய், நீங்கியஅவ் வெம்மைமுற்றும்
எஞ்சலற்று மீண்டடைந்த தே. 121

118. வேறு எவளுக்கும் நேருமென்று நான் சொப்பனத்திலும் எண்ணாத இந்தத் துர்க்கதி எனக்கே சாக்கிரத்திலேயே நேர்ந்ததே.

119. விண்ணேறு - இடி. சையம் - மலை. மை உததி - கருங்கடல். வாய் அங்காந்து - வாய் பிளந்து. நுங்கி - விழுங்கி. நொய்து - விரைவாக.

120. துஞ்சு - தூங்கு(ம்). வஞ்சகத்தின் - வஞ்சகத்தினையுடைய.

121. போகி - (வாசுகி என்னும்) பாம்பு. போகி - போய் - நீங்கி. போகி - பாம்பு (போன்ற கொடியோன்). 'போகி' என்பதில் இந்திரன் என்ற பொருள் தொனிக்கின்றது. 'இவன்', இந்திரன் என்பது அகலிகைக்கு இப்போது தெரியாது. நீங்கிய - (சிவபிரான் கழுத்திலுற்றதனால்) நீங்கி யிருந்த.

நிறை,கேட்டை எய்திடுமா நேரின்,உயிர் நீத்தந்
நிறைகாத்தல் நல்ல நெறியாம்;—நிறைகாத்தற்
கென்னுயிரை நீக்கறமும் இல்லேன்;இப் போதுசெய்தற்
கென்னுரிய தென்றாள் இனைந்து. 122

**அவள், கற்பழிந்துபோமென்று நிச்சயித்து, அவ்விரவே சாகத்துணிதல்**

பையரவம் வாயுளகப் பட்ட தவளையினை,
வெய்யயமன் கையகத்து மேவுயிரை,—உய்ய
விடினுமெனைத் தப்பவிடான் வெய்யோன், கெடுத்தே
விடுவனெனத் தேறினாள் மின். 123

தென்றல் உலவுதலும், திங்கள் நிலவுதலும்,
மன்றல் மலர்கள் மலருதலும்,—துன்றெழில்கூர்
வான்மயில்கள் ஆடுதலும், மாங்குயில்கள் பாடுதலும்,
யான்மகிழச் செய்யா இனி. 124

தீண்டார்கள் தொட்டிட்ட செம்மண் கலத்தினை,முன்
ஆண்டார்கள் தீண்டாத வாறென்னை—வேண்டான்என்
கேள்வன்;அவன் வேண்டாமற் கெட்ட உடலைவிட்டு
மாள்வன்;இது நல்ல வழி. 125

கற்பழியா வாறு கழிக்கவொணா என்னுயிரைப்,
பிற்பழிசேர் முன்பே, பிரித்திடுவேன்;—எற்பிரியா
நாதன் தனைப்பிரிந்து நான்வாழேன்! தாழாமே
சாதல் மிகநிச் சயம். 126

122. எய்திடுமா - எய்திடுமாறு - அடையும்படி. அறம் - புண்ணியம்.

123. உய்ய - தப்ப.

[ கற்பழிந்து விடுமென்று கலங்கித் தைரியமிழந்தவள், விலக்கொணாத கேடுபற்றி வருந்துதல் பயனற்ற செயலென்று தெளிந்து தைரிய மடைந்தாளென்பது குறிக்கத் தேறினாளென்றார்.—பதிப்பாசிரியர். ]

124. மன்றல் - வாசனை (உடைய).

126. எற்பிரியா - என்னைப் பிரியாத. தாழாமே - தாமதியாமல்.

அன்னியரும், எங்கோன் அருளுக் கருகராய்த்,
துன்னியரு கார,நிறை தோற்றுயான்—என்னிறையைக்
காணவொணா நீள்சேய்மைக் கண்ணகன்றும் வாழ்வேனோ!
நாணதனால் மாயேனோ நைந்து! 127

முடியாத துன்பம் முடிய முடிவேன்;
விடியாது கங்குல், வினையேற்—கடிவானில்
எல்லாருங் காணவெழும் எல்லோன்,யான் காணவெழான்;
எல்லாமிங் கில்லாம் எனக்கு! 128

வையமே! வானே! வனமே! அருவியே!
சையமே! யாறே! சலதியே!—பெய்செல்
லினமே! விடைதருவீர், இன்றே இறப்பேன்!
இனிமேல் உமைக்காணேன் யான்! 129

எனையான் மறந்திடினும் யாரை மறவேன்,
அனையான் தனைப்பிரியு மாறு—வினையால்
விளைந்ததே!' என்றுளைந்தாள், வெய்யிலிடை வாடுங்
களைந்தபூ மாலை கடுத்து. 130

127. அருகர் - தக்கவர். அருகு - சமீபத்தில். தோற்று - இழந்து. சேய்மைக்கண் - தூரத்தில்.

128. முடியாத - முடிவில்லாத. முடிவேன் - சாவேன் - என் உயிரை மாய்த்துக்கொள்வேன். எல்லோன் - சூரியன். இங்கு - இவ்வுலகத்தில்.

129. சையம் - மலை. சலதி - கடல். பெய் - மழைபெய்யும். செல் - மேகம். இனம் - கூட்டம். பூமியும் பூமிக்குமேல் உள்ள வானமும் வானத்தை அளாவிய வனங்களும் வனங்களினூடு சென்று மலையுச்சி நின்று பாயும் அருவிகளும் அருவிகள் வீழும் மலைகளும் மலைகளினின்று செல்லும் ஆறுசளும் ஆறுகள் சங்கமமாகும் கடல்களும் கடல்களின் நீரைக்கொண்டு பூமிமேற் பெய்யும் மேகங்களுமென இங்கே கூறிய பொருள்கள் ஒவ்வொன்றும் அததற்குப் பின்பும் முன்பும் அடுத்த பொருள்களோடு தொடர்புடையனவாய் மண்டலித்து வருதலை நோக்குக. (முதலிற் பூமியும் இறுதியில் பூமிமேற் பெய்யும் மேகமுமென்றதனால் முதலும் இறுதியும் இயைந்து மண்டலித்தலாயிற்று. சங்கமம் - கூடுதல் - சேர்தல்).

130. என்று உளைந்தாள் - என்றெண்ணி வருந்தினாள். கடுத்து - ஒத்து.

என்னின் இனியான் எனக்கிறைவன் எற்றுறப்பன்
என்னின், இனியான் இருப்பனோ?—என்னினிச்
சாவத் தடை? தடைஇச் சண்டாளன் என்றாள், விஞ்
சாவத் தடைந்த அணங்கு. 131

**அவள், அவன் செய்கை அபாயமானதென, அவன் தன்னை வெளிப்படுத்தி, அவ்வபாயத்தினும் தன்கர்மம் கொடியதெனல்.**

'சடைதாடி சீரை தரித்தெங்கோன் போலும்
வடிவோடு வஞ்சிப்பான் வந்தாய்!—மடிவாய்நீ,
வன்புலியின் தோல்போர்த்து மாளப் புடையுண்ட
புன்பகடு தன்னையே போன்று. 132

இறைபொற் கிரீடஞ்சு டிச்சையொடு தொட்ட'வ்
இறைசக் கரத்தால் இறந்த—அறிவற்ற
ஏழை யெனத், தகா எண்ணமோடெற் பற்றினாய்;
ஏழை உனைப்போல் இலை. 133

131. என்னின் இனியான் எனக்கு இறைவன் - எனக்கு என்னினும் இனியவனும் தலைவனுமாகிய கௌதமன். எற்றுறப்பன் - என்னைத் துறப்பான் (நீக்கிவிடுவான்). என்னின் இனி யான் - என்றால் இனிமேல் யான். என்னினிச் சாவத் தடை - என் ? இன்னினி (இப்போது) சாவத் தடை (சாகத்தடை). என்றாள் - என்றெண்ணினாள். விஞ்சாவத்து - விஞ்சு ஆவத்து - மிகுந்த ஆபத்து.

132. சீரை - மரவுரி. ஒருவன் தன் எருதைப் புலித்தோல் போர்த்து அயலான் வயலில் இரவில் மேயவிட, அவ்வயலான் உண்மை தெரிந்து அவ்வெருதை நையப் புடைத்துக் கொன்றானென்ற கதையுளது. அந்த ஒருவன் இந்திரனுக்கும், எருது இந்திரன் தேகத்துக்கும், புலித்தோல் போர்த்தல் கௌதமர்போல உருத்தரித்தலுக்கும் உவமானம். மடிவாய் - (தேகம்)மடி(யப் பெறு)வாய். புன்பகடு - அற்பத்தன்மையுடைய எருது.

133. இறை - அரசனுடைய. முன் ஏழை எளியவனையும், பின் ஏழை அறிவில்லாதவனையும் குறிக்கின்றன.

எங்கோன்நிற் காணின்,என்னும்! என்றறியாய்; இந்திரனும்
வெங்கோபத் தீயினின்று மீளானே!—பொங்கோத
ஞாலமெலாம் தீந்திடுமே! நன்குணரா தீதுசெய்தாய்;
சாலவும்நீ பேதை,'என்றாள் தான். 134

'உன்காமத் தீயினின்றும் உய்யினன்றோ, என்னையுன்கோன்
தன்கோபத் தீச்சுடும்;நீ சாற்றமரர்—நன்கோவே
இப்போழ்தீங் குன்னோ டிருக்கின்றான், செந்திருவும்
ஒப்பாகாய்' என்றான் உவந்து. 135

**அவள், அவன் செய்கை தகாததெனல்.**

'சுரபதிகொல்! நீ!இனைய துட்டச் செயல்வே
றொருபுருடன் செய்யில், உவனை—வெருவ
ஒறுத்தல்செயும் ஆணை உளையால், இதனை
வெறுத்திடெனை விட்டு விடு. 136

விருதுகள்வெம் மாசுபடும்; வீரம் பழுதாம்;
பொருவயிர வாள்மழுங்கிப் போகும்;—செருவிலுயர்
சூரனலன், சோரன்,எனத் துன்னார்கள் தூற்றுவரால்:
வீர,எனை விட்டு விடு. 137

அற்பர்ப்பழி அவ்விடத்தே அப்பொழுதே மாயும்;நின்போல்
முற்படுநர் தம்பழிபோய் மூவுலகும்—நிற்கும்;நிற்கெம்
மட்டுயர்வு வாய்ந்துளதம் மட்டிழிவு மன்னியிடும்!
விட்டிடெனை, விட்டே விடு. 138

134. நிற்காணின் - உன்னைக் கண்டால். ஓத ஞாலம் - கடல் சூழ்ந்த பூமி. பூமி, பெரிய கடல் (நீர்) சூழ்ந்திருந்தாலும் கௌதமருடைய கோபத்தீக்கு உட்படுமானால் தப்பாது தகிக்கப்பட்டுவிடுமென்று அகலிகை கூறினாள். நன்குணராது ஈது செய்தாய் - நன்றாக ஆலோசியாது (என்னைப் பற்றுதலாகிய) இந்த அகிருத்தியத்தைச் செய்தாய்.

135. உய்யின் - தப்பிப் பிழைத்தால். நீ சாற்று அமரர் கோவே - நீ ('இந்திரனும்' என்று சிறப்பித்துக்) கூறிய தேவராசனே.

136. இனைய - இத்தன்மையான. ஆணை - ஆக்கினை; கடமை. 'எப்பொழு திப்பெரும் பழியி னெய்தினேன் - அப்பொழு தேயுயிர் துறக்கும் ஆணையேன்'. கம்ப ராமா. உருக்காட்டு. 15.

என்னன்பன் இன்னவனே! எந்தையின்னன் கொல்!இவனு
என்நண்பன்! எங்கேள் இவன்கொல்!எம்—மன்னிவனே!
என்னச் சசிமுதலோர் எண்ணிவெள்கி நோவாமே
மின்னற் குலிசீ, விடு. 139

இழிகரவில் அச்சத் திடைக்கொள்பொய் யின்பம்
கழியும்;இடர் செய்யும்; கழியாப்—பழிவிளைக்கும்;
ஆவிக் கழிவுசெயும்; ஆழ்தீ நிரயத்துள்
வீழ்வித் திடுமால்; விடு. 140

பாபபயம், நிந்தைப் பயம்,தரும தேவதையின்
கோபபயம், எங்கோன் கொடுத்திடுவெம்—சாபபயம்,
நெஞ்சு சுடுபயம்,தீ நீடும் நிரயபயம்
விஞ்சி உடனே விடு. 141

அவள், ஒருபோது இன்பத்திற்காக் நிலையான
கேடு புரியாதபடி வேண்டல்.

'தருவினைச்சார் வுற்றுத் தழைக்கும் கொடியை
ஒருகனிக்கே கொய்தொழித்தல் ஒக்கும்,—கரவொடுற்றே
செய்திடுவான் நீபுகுந்த தீயசெயல்; ஆதலினல்
வெய்தெனநீ என்னை விடு. 142

நடுயாமம் கோழியொரு நாள்போற்பன் னுட்கூ
விடுமேனும், இன்றேபோல் எங்கோன்—தடுமாறிப்
போய்விடான்; கற்பிழந்தாற் பொன்ரு து'யிருடனே
மேவிடேன்; என்னை விடு. 143

என்நிலையில் நீஉளையா எண்ணவல்லை யல்லையேல்,
உன்நிலையில் வேருருவன் உற்றிடலும்—என்நிலையை
நின்மனையாள் எய்தல்கண்டு'ன் நெஞ்சுபடும் பாடுன்னி,
மின்மலிவேல் வேந்தே, விடு. 144

139. அன்பன் - கணவன். இன்னன் - இன்னவன் - இப்படிப்பட்டவன். கேள் - உறவினன். சசி - இந்திராணி. குலிசி - இந்திரன்.
142. வெய்தென - விரைவாக.
144. உளையா - உள்ளாயாக.

தெவ்வு பொருள்வெளவல் தீத'தனிற் றீயதுயிர்
வெளவல்; அதிற்றீது மாதரார்—செவ்வுயிரின்
மிக்கநிறை வெளவல்;இந்த வெய்யவினை செய்யஉனல்
தக்கதல; விட்டிடெ'ன்றுள் தான். 145

**அவன், தன் கையுள் அவள் உற்றதற்குக் காரணம் அவள் அழகே எனல்**

'மதனின்உறு துன்பம் வகுத்தற் கரிதால்;
அதனளவென் காத லளவாம்;—கதுவி
ஒழிவில் மயலளவோ, ஒண்ணுதால், உன்றன்
அழகெவ் அளவவ் அளவு. 146

நின்னழகே, உண்ணமல், நித்திரையே கொள்ளாமல்
இன்னுயிரை ஓர்பொருளா எண்ணமல்,—என்னைஉன்பால்,
அன்னமே, சேர்த்துளதால்; அவ்வழகை நோவாமல்,
என்னைநீ நோவ தெவன்? 147

களவாளி யானே? கருதுங்கால், நீயே!
அளவேஇல் மையலுக்குள் ளாக்கி,—எளியேனுக்
குள்ளவுள்ள முற்றவுமே உள்ளஉள்ள நோமாறு
கொள்ளைகொள்ளல் செய்திலையோ? கூறு. 148

145. தெவ்வு பொருள் வெளவல் - (நல்வழியிற் சம்பாதித்துக்) கொள்ளுதற்குரியதாம் பொருளைத் திருடுதல். உயிர் வெளவல் நிறை (-கற்பு) வெளவல் என்பவைகளில் உள்ள வெளவல், இலக்கணையாக நீக்கல் அல்லது அழித்தலென்று பொருள்பட நின்றது.

146. கதுவி - பற்றி.

148. மையல் - காமம்; மை அல் - கரிய இருட்டு. உள்ள உள்ள முற்றவும் - உள்ள உள்ளம் முற்றவும் - (எனக்கு) இருக்கின்ற மனம் முழுவதையும்; (எனக்கு) உள்ளவை உள்ளவை (என்று சொல்லக்கூடியவை) எல்லாவற்றையும் - எனக்கு உள்ள பொருள்கள் ஒன்றும்விடாமல் எல்லாவற்றையும். உள்ள உள்ள நோமாறு - (யான்) நினைக்க நினைக்கத் துன்பமடையும்படி.

விட்டிடெனப் பல்கால் விளம்பினுய்; உள்ளமுற்றும்
தெட்டிவவிக் கொண்டஉனைத் தேடியுற்றுக்—கட்டினன்யான்:
குற்றங் கொலோ,களவு கொண்டார்க் கொடுத்தார்தாம்
பற்றுஞ் செயல்?நீ பகர். 149

நாவேவல் வில்லா, 'நயவேன்' எனுமொழியே
ஏவா,என் ஆவி இலக்காகப்,—பாவாய்நீ
சொல்லுதலே எய்தலாத், துன்புறுத்தல் புன்செயலாக்,
கொல்லுதலோ, உன்றன் குறிப்பு? 150

**அவன், அவள் கோபகாலத்தழகை வியத்தல்**

நாகாவா நின்று, நவில்வ எலாம்நவின்று,
சோகாவா நிற்றல்வெளித் தோற்றுவித்தாய்;—தோகாய்,உன்
உள்ளச் சினத்தை ஒளியா தியானறிந்து
கொள்ளச் சிவந்ததுன்மெய் கூர்ந்து. 151

உள்ளேவெங் கோபம் உற,இயல்பாச் சேந்தநின
தொள்ளாகஞ் சாலச்சேப் புற்றதுதான்,—கிள்ளாய்,
கரிய விழிசிவந்த காட்சியொடொப் பிட்டால்,
பெரிய அதிசயமோ? பேசு. 152

சினத்தீநின் செய்ய திருமேனி தானே
எனத்,தூமம் கார்க்குழலே என்னச்,—சினத்தீமிக்
கார்த்து முழங்கி அவிர்தல் புரைய,நீ
வார்த்தை வழங்கிஅவிர் வாய். 153

149. உள்ளமுற்றும் - உள்ள(வை) முற்றும் - உள்ளபொருள்களெல்லாவற்றையும்; உள்ள(ம்) முற்றும் - முழு மனத்தையும். தெட்டிவ(வ்)வி - வஞ்சித்துத் திருடி. களவுகொண்டார்க் கொடுத்தார் - களவுகொண்டவர்களைக் களவு கொடுத்தவர்கள்.

150. நயவேன் - விரும்பேன் - (உன்னைக்) காதலிக்கமாட்டேன். ஏ - அம்பு.

151. நாகாவாநின்று - நாவைச் சொல்லத்தகாதவற்றைச் சொல்லாமல் காத்துக்கொண்டு. நவில்வ - சொல்லத்தக்கவை. சோகாவாநிற்றல் - துன்புறுதல். தோகாய் - தோகையே - மயிலே - மயில்போன்ற சாயலுடையவளே. உள்ளச்சினம் - மனத்தினுள்ளே உண்டாகிய கோபம்.

152 சேந்த - சிவந்த. ஒள்ஆகம் - பிரகாசமான தேகம். சாலச் சேப்புஉற்றது - மிகச் சிவந்தது. கிள்ளாய் - கிள்ளையே - கிளியே - கிளி (மொழி) போன்ற (சொல்லுடைய)வளே.

வெங்கோப மேவி, வியனுலகம் யாவும்அடும்
சங்கார மூர்த்தியே தையலா—இங்கேவந்
துற்றா லெனக்,கோபம் உற்றொளிரா நின்றாய்,வன்
கற்றா னெனுமனத்தோ காய். 154

பயந்துசவி குன்றிப் பகல்மதியம் போல
வயங்கல்குறை வுற்ற வதனம்,—பயந்தவிர்ப்பு,
தேறிச், சினந்து, சிவந்துதிக்கும் திங்களென
வீறித் திகழும் மிகுந்து. 155

சீறும் நினதுமுகம், தேனார் பிறர்முறுவல்
வீறும் முகத்தின் மிகவினிது;—சீறியுரை
வன்சொல்,பிற மாதர் மகிழ்கூர்ந் தியம்புகின்ற
இன்சொலினும் சால இனிது. 156

காயும் முகத்தாற், கடுமொழியால், இத்தனைஇன்
பேயும் எனின்,மகிழ்நீ எய்துங்கால்,—வாயுறும்வெண்
முத்தனைய மூரல் முகிழ்முகத்தால், இன்சொல்லால்,
எத்தனைஇன் பெய்தும் எனக்கு! 157

கடியசினம் கூர்உனது காலால் உதைக்கப்
படின்அடையும் இன்பம் பயவா(து)—அடியனுக்கு,
மெய்யே பிறமாதர் வேட்டுக் களிபொங்கிக்
கையால் அணைத்திடுதல் காண். 158

154. வன்கற்றான் - (என்பால் இரங்காமையால்) கடினமான கல்லுத் தான்.

155. சவி - ஒளி. தவிர்ப்பு - தவிர்ந்து - நீங்கி. வயங்கல் - பிரகாசித் தல். வீறி - இறுமாந்து.

156. தேனார் - மாதர். முறுவல் - சிரிப்பு.

157. காயும் - கோபிக்கும். எயும் - பொருந்தும். வாயுறும் - வாய்ந்த; வாயின் உள்ளே உறும். மூரல் - பல். முகிழ்த்தல் - அரும்புதல் - சிறிது தோன்றல்.

158. பயவாது - தராது. மெய்யே - உண்மையாகவே.

அமிர்தம் அடைந்திடயான் ஆழிகடை அந்நாள்
நிமிர்வெவ் விடம்எழுதல் நேரும்,—தமியனேன்
உன்காதல் எய்தமுயல் வுற்றிடும்இந் நாள்உனது
வன்கோபம் மேலெழுதல் மற்று. 159

பொங்கி எழுந்தவிடம் போயொழிய, யான்வேட்ட
துங்க அமிழ்துபின்பு தோன்றியாங்(கு)—இங்குனது
வன்கோபம் மாற,யான் வஞ்சித் திடும்உன்றன்
இன்காதல் எய்தும் இனி. 160

### அவன், தன் கிர்மத்தின் இயல்பு கூறல்

'பூவலருங் கற்பகப்பைம் பொங்கர்க் குளிர்நிழற்கீழ்
மேவும்அரி ஆதனமேல் வீற்றிருந்து—தேவருக்கு
மன்னனென வைகலினும், மாதே, உனதடிமை
என்னவுறல் சால இனிது. 161

துன்னுகுழற் கற்பகப்பூஞ் சோலை நிழலடியில்,
மன்னுமுகச் சீத மதிக்குடைக்கீழ்,—நின்னொளிர்பொற்
பாத மகுடம் பரித்தல்போல், வான்பதவி
யாதும் இலைகாண் எனக்கு. 162

என்னரிய செல்வங்கட் கேற்றமாம் செல்வம்நீ;
மின்னுமென கண்கட்கு மிக்ககண்நீ;—உன்னியிடும்
என்னுணர்வு தன்னினுயர் வெய்துணர்வு நீ;தமியேன்
இன்னுயிரின் மேலுயிர்நீ யே. 163

கண்ணினுற் காண்பவெலாம், காதினுற் கேட்பவெலாம்,
எண்ணினுற் சிந்தித் திடுவவெலாம்,—மண்ணெடுவிண்
அல்லால்வே றுள்ள அகலிடத்தும் ஆர்பொருள்கள்
எல்லாம்,நீ ஆனுய் எனக்கு. 164

161. பொங்கர் - சோலை. அரி ஆதனம் - சிங்காதனம்.
162. துன்னு - (உரோமம்) நெருங்கிய. பரித்தல் - தாங்குதல்.
163. என கண்கள் - என்னுடைய கண்கள்.
164. காண்ப - காண்பவை - காணப்படுபவைகள். கேட்ப - கேட்பவை - கேட்கப்படுபவைகள். எண் - மனம். சிந்தித்திடுவ - நினைப்பவைகள்.

அல்லும் பகலும், அகத்திருக்கும் போதும்வெளிச்
செல்லும் பொழுதும்,உன்றன் சிந்தனையே—ஒல்லும்;
உயிர்வாழ் வுறுவதெலாம் உன்காதல் கொண்டே;
அயிரேல்; இஃதுண்மை யால். 165

நீரிடையே வாழ்மீன்,அந் நீரதனை நீங்கிடுமேல்,
ஆருயிர்போய் வீதலுறும் ; அவ்வாறே,—சீரியநின்
காதலிடை வாழ்வேன்,அக் காதலினை நீங்குவனேல்,
வீதலினை மேவிடுவேன் ; மெய். 166

என்றன் இருதயத்தின் ஈற்றுத் துடிப்பறினும்,
என்றன் கடைமூச் சியக்கறினும்,—என்றனுயிர்
காதி,அதை அந்தகனார் கைக்கொளினும், நீங்காதுன்
காதலினை என்றன் கருத்து. 167

**அவன், அவள் இணங்கும்படி பலவாறு வேண்டல்**

'காம்பேநேர் தோளி,உனைக் காண்டலுமே காதலித்தேன் ;
வேம்பானார் மற்றெல்லா மின்னாரும்;—சாம்பாநின்
காதற் கடலின் கரைகாணா தாழ்கின்றேன் ;
பாதப் புணைதா பரிந்து. 168

ஆண்ட இறைநீ, அடிமையான் ஆக,மிகத்
தேண்டு குருநீ,யான் சீடனா,—வேண்டுவரம்
நல்குதெய்வம் நீயாக, நான்தொண்ட னா,இன்பம்
மல்க,எனை நீஆளு வாய். 169

165. ஒல்லும் - பொருந்தும். உன் காதல்கொண்டே - உன் காதலினாலேதான். அயிரேல் - சந்தேகியாதே.

166. வீதல் - சாகுதல். மெய் - (இது) உண்மை.

167. ஈற்றுத் துடிப்பு - கடைசித் துடிப்பு. கடை மூச்சு - கடைசி மூச்சு. இயக்கு அறினும் - அசைவு அற்றாலும். காதி - கொன்று.

168. காம்பு - மூங்கில். சாம்பா - கெடாத.

169. தேண்டு - தேடு. மல்க - நிறைய.

அகநெகிழ்ந்து, தண்ணென் அருள்சுரந்து, கஞ்ச
முகமலர்ந்து, வெண்புன் முறுவல்—மிக,அரும்பிக்
காதலுடன் என்னைக் கடைக்கணித்தா'ட் கொண்டேனென்
ருேதிடுதி ஓர்சொல், உவந்து. 170

தையால், உனக்கன்பு சாலச்செய் குற்றமன்றி,
மெய்யே தமியனேன் வேறுபிழை—செய்யேன்;
உனக்காக என்ஞு ருயிருமுவந் தீவேன்;
எனைக்காதல் செய்வாய் இனி. 171

மானே, எனைஎய்யும் மாரன் உனைஎய்யான்;
ஏனோ எனில்,மயலை யார்க்குஞ்செய்—தானே,நின்
மெய்யினெழில் கண்டுமயல் வேலையினுள் வீழ்ந்திறவா
துய்யமென அஞ்சுதலால் ஓர். 172

காதற் கெதிர்காதல் கைம்மாறு நீஎனக்கிங்
கீதற் கியையாய் எனில்,எளியேன்—மீதற்ப
ஏழைகளுக் கெய்திரக்கம் எய்தி,வேள் கொல்லாமே
வாழ,உயிர்ப் பிச்சை வழங்கு. 173

உருக்கவினைச் சால உனக்களித்த வேதா,
இரக்கமுமிக் கீந்தே யிருப்பான்;—இரக்கம்
ஒருசிறிது கொண்டெ'ன் உயிரைப் புரப்பாய்,
கரிசுதவிர் நற்குணநங் காய். 174

மதிபோல் மனங்கவரும் மாதே உனக்கும்
மதிபோல் உளதோர் மறு;மற்—றதுதான்
நிறை;அதனை என்பொருட்டு நீக்கில், மறுவில்
நிறைமதியை நேருவாய் நீ. 175

170. தண்ணென் - குளிர்ந்த.

171. தையால் - தையலே - பெண்ணே. மெய்யே - உண்மையாகவே. இனி - இப்போது.

172. உய்யம் - பிழைக்கமாட்டோம்.

174. உருக் கவின் - உடம்பின் அழகு. கரிசு தவிர் - குற்றம் நீங்கிய. நங்காய் - நங்கையே - பெண்ணிற் சிறந்தாளே.

175. நிறை - கற்பு. நிறைமதி - பூரண சந்திரன்.

பொன்னே, அமரர் புசியாத புத்தமுதே,
இன்னே அருள்செய் திசைவாயேல்,—என்நேயம்
நித்தமா மேவ நிலையுறுத்தும் முத்திரையா,
முத்துவேன் உன்றன் முகத்து. 176

இருவரமே வேண்டும்;ஒன்றே ஈந்திடினும் நன்றவ்
வரம்எவை ?கூ றென்னில், வகுக்கேன்—ஒருவரம்யான்
நின்முகத்தே முத்தமிட நேருதல்; மற்றொன்றுநீ
என்முகத்தே முத்த மிடல். 177

கன்னி,உனை யான்முனமே கண்டுகேட் டுண்டுயிர்த்துற்
றெங்கலமும் துய்த்தேன்; இதுமெய்யே.—துன்னும்
கனவிலுன்னின் புற்றேன்; கனவு நிகழுந்
தனையுமுண்மை அன்றோ?நீ சாற்று. 178

**அவன், தன் கருத்தை நிறைவேற்றமல் அவளை விடேனெனல்**

'சோர்ந்ததுயிற் காலத்தே, தோன்றியநற் சொப்பனத்திற்
சார்ந்தநினைத் தப்பவிடாத் தன்மையேன்,—தேர்ந்த
விழிப்பார் நனவில் விடுவனெனும் எண்ணம்
ஒழிப்பாய்; இசைவாய் உவந்து. 179

எல்லாமா ஞாலத் தினியபொருள் யாவுமொரு
நல்லாளாய், என்தவத்தின் நற்பயனு—வல்லே
உறப்பெற்ற செல்வம் ஒழியேன், ஒழியேன்,
மறப்புற்றும் கைவிடேன் மற்று. 180

176. புத்தமுது - புது அமுது - புதிய அமிழ்தம். இன்னே - இப்பொழுதே. நித்தமா - நித்தியமாக - அழியாததாக.

178. உயிர்த்து - மோந்து. உற்று - பரிசித்து. தனையும் - அளவும் - வரையும்.

179. விழிப்பு ஆர் - விழித்தல் பொருந்திய. நனவு - சாக்கிரம்.

180. நல்லாள் - பெண். ஒழியேன்- விடமாட்டேன்.

நாணுளும் செல்வமதை நாடி, நனிவருந்தி,
வாணுள் மிகக்கழிந்த மாமிடியோன்,—பேணுது,
கையகத்தே வந்த கருந்தனத்தைக் கைவிடுதல்,
வையகத்தே உண்டோ? வழங்கு. 181

ஒருபொருளை யல்லால், உயிரையுமுள் ளிட்ட
பொருளையெலாம் தோற்றிடினும், புந்தி—தெருமரேன்;
சொன்ன ஒருபொருளைத் தோற்றேனேல், ஆற்றேன்யான்;
அன்ன பொருள்நீ அறி. 182

எவ்வாறே யான்அறியா தென்னு ருயிர்வெளிப்போய்,
வெவ்வாள்நேர் கண்ணணங்கா வேடம்பூண்(டு)—இவ்வேளை
ஈண்டென் எதிர்தோன்ற, யான்சிக் கெனப்பிடித்தேன்;
மீண்டும் பிரியவிடேன் மெய். 183

சாவுறுவோன் கையகத்தேய் சாவா மருந்தினை,நீ
ஒவிடுவாய் என்னின்,உண்ணு தோவுவனே?—தூவெளிய
இன்நகையாய், யான்கொண்ட எண்ணம்நிறை வேருதேல்,
உன்னைவிடேன் என்பதனை ஓர். 184

ஆள்வழக்கே இல்லா அடவி நடுவே,இவ்
வேள்விமிக்கேய் ஆச்சிரமம் மேயதிங்குன்—கேள்வனிலன்;
யான்,வலிந்துன் இன்புதுய்த்தால், யாரே தடுத்திடுவார்?
தேன்மலிந்த சொல்லணங்கே செப்பு. 185

181. மா மிடியோன் - பெருந் தரித்திரன். கருந் தனம் - பெருநிதி.

182. அல்லால் - அல்லாமல். தோற்றிடினும் - இழந்தாலும். புந்தி- சிந்தை. தெருமரேன் - கவலையுறேன்.

183. மீண்டும் - திரும்பவும். மெய் - (இது) உண்மை; (என்) தேகத்தினின்றும்.

184. ஒவிடுவாய் - ஒழிப்பாயாக.

185. ஆள் வழக்கு - ஆள்கள் வழங்குதல் - ஜன ஸஞ்சாரம். அடவி - காடு.

என்னுயிரை விட்டிடினும், என்னுயிரின் மிக்கினிய
நின்னைவிடல் ஒண்ணுதால்; நேருதலே,—இன்னினிநீ
செய்யத் தகுந்ததெனத் தேர்ந்து தமியனேன்
உய்யத் தயைசெய்'என்றான் ஓர்ந்து. 186

**அவள், ஒழுக்கத்தின் உயர்வு கூறி, அவன் தீயகருத்தைத் தவிர்க்கச் சொல்லல்**

'ஒழுக்கம் அழித்துயிரை ஓம்ப முயல்வோய்,
ஒழுக்கம், உயிரினுமிக் கோம்பும்—விழுப்பொருளென்
றான்றோர்கள் கூறும் அறஉரையின் மாண்பொருள்நீ
தான்றேர்தல் செய்கிலையோ? சாற்று. 187

பொன்றும் உடலிற், பொருளின், உயிரின்,அறம்
நன்றென் றறிஞர்நிலை நாட்டினரால்;—என்றும்
அறங்கொன் றுயிரை அளித்தல், அறிவின்
திறங்குன் றிழிஞர் செயல். 188

அறத்தை அழித்தால், அதனோ டுயிரும்
இறத்தல் துணிவே; இனிய—அறத்தைப்
புரந்தார், உயிரும் புரந்தார்; இதுநூல்
தெரிந்தார் தெளிந்த தெளிவு. 189

அறத்தாற் றொழுகி அடைதுன்பும், இன்பம்;
புறத்தாற் றடைஇன்பும், புன்கண்;—அறத்தாற்றின்
மேவுமக்கள் தோல்வியுமே, வென்றி;இழ வும்,பேறு;
சாவும்,நித்த வாழ்வு;சர தம். 190

186. நேருதல் - சம்மதித்தல். இன்னினி - இப்பொழுது.

187. மிக்கு ஓம்பும் - மிக (மிகுதியாக) ஓம்பும். சிந்தாமணி 1078-ம் பாட்டுரையில் 'மிக்குச் செய்ய' என்பது மிகச் செய்ய என்ற பொருளில் வருதல் காண்க. விழுப்பொருள் - சிறப்பான பொருள். அற உரை - நீதி வசனம்.

188. பொன்றும் - அழியும் தன்மையுடைய. பொன்றும் என்ற அடை, உடல் பொருள் உயிர் மூன்றுக்கும் உரியது. அளித்தல் - காத்தல்.

190. புன்கண் - துன்பம். நித்த வாழ்வு - நித்தியமான வாழ்வு - என்றும் அழியாத வாழ்வு. சரதம் - (இப்பொழுது கூறியது) உண்மை.

அறியாதோர் கால்,நெஞ் சடங்காது, காம
வெறியேறி மேவிடினும், மீள,—அறிவால்
அதனைவச மாக்கி,நல் லாற்றுப் படுத்தல்,
முதிரும்அறி வாளர் முறை. 191

அகமும்,வெய்ய தீயுமிஞ்சா தாள்வோர் தமக்கு,
மிகவும்நல்ல சேவகர்கள்; விஞ்சும்—வகைதம்மை
விட்டுவிடு மாக்களுக்கு, வெய்யபெருங் கேடுபுரி
துட்டஎச மானர்களங் தோ! 192

அறன்அல்வழி ஏகா தகத்தை அடக்கும்
திறல்முனிவர் தாங்கு சிவிகை—உறும்உரவோய்,
தீய நெறிச்செல்லுன் சித்தத்தை மீட்டதனைத்
தூய நெறிச்செலுத்தாய் சூழ்ந்து. 193

### அவள், பகைவரிடத்தன்றி, பெண்பாலரிடத்தில் வலிசேலுத்தல் தகாதேனல்

'மிறைசெய் விருத்திரனே, வெய்ய வலனே,
சிறைகொள் மலேயோ,யான்? தெவ்வர்—திறமதனில்
வன்பாற் செலுத்தற்காம் மாவலியைப் பெண்பாலாம்
என்பாற் செலுத்தஎண்ணல் என்? 194

பெண்ணெனின்,வெம் பேயும் பெரிதிரங்கும்; வேண்டுவையேல்,
கண்ணெனினும் நல்குவேன்; கைக்கொள்வாய்;—திண்ணமிதே'ன்
இன்னுயிரே வேண்டுகினும் ஈவேன்; மறுக்கலேன்;
என்நிறையை நீக்கேல்; இரங்கு. 195

191. அறியாது - (மனம், தான் செய்வது தப்பென்று) தெரியாமல். அடங்காது - (ஒரு முறை அறிவினல் தடுத்தும்) அடங்காமல். மீள - மறுபடி. நல்லாற்றுப்படுத்தல் - நல்வழிப்படுத்தல் - நல்வழியுறச்செய்தல்.

193. அறன் அல் வழி - தருமநெறியல்லாத நெறியில். திறல் - வலி. உரவோய் - அறிவுடையோய்; வலியுடையோய். சூழ்ந்து - ஆராய்ந்து.

194. மிறை - குற்றம்.

மாதேவன் மேலாணை, மற்றையபல் தெய்வதங்கள்
மீதாணை, நின்செங்கோல் மேலாணை,—கோதாரும்
ஒட்டாரை வென்றுதிகழ் உன்வீர மீதாணை
இட்டேன்;என் கற்பையழி யேல். 196

**அவள், கற்பின் மேம்பாடு கூறி, அதை அழியாதிருக்க வருந்தி இரத்தல்**

'பொன்னால் மணியாலாம் பூண்களுக்கு மேலாம்பூண்,
மின்னார் புடைவைக்கு மேற்புடைவை,—இன்னுவிக்
கேற்றமாம் ஆவி,நிறை; ஏழையருக் கந்நிறையைத்
தோற்றல்போல் உண்டோ துயர்? 197

எஃதுண்டேல், யாவுமெனக் கெஞ்ஞான்றும் உள்ளனவாம்?
எஃதின்றேல், யாவும் இருந்திலவாம்?—அஃதென்
நிறை;அதனை நீக்கலினும் நீஎனக்குச் செய்வெம்
மிறைஉளது கொல்லோ? விளம்பு. 198

என்நிறையை யான்இழந்தால், எல்லாம் இழந்தேனே!
என்நிறையை நீநீக்கில், என்பெறுவாய்?—மன்ன,
நிலையாச் சுகமும், நிலையாம் நரகும்,
தொலையாப் பழியுமலாற், சொல்! 199

'என்னுயிரின் மிக்கினியாய்' என்றென்னைச் சொற்றாய்;என்
இன்னுயிரின் மிக்கினிய என்நிறையைக்—கொன்னே
அழிப்பனென ஓதுதற்கெவ் வாறெழுந்த துன்நா?
ஒழித்திடுதி அந்நினை வும். 200

196. ஒட்டார் - பகைவர்.

197. மின் ஆர் - ஒளிபொருந்திய. ஏழையர் - பெண்கள். தோற்றல்- இழத்தல்.

198. மிறை - துன்பம்.

200. 'என்னுயிரின் மிக்கினியாய்', 186-ம் பாட்டைப் பார்க்க. சொற்றாய் - சொன்னாய். கொன்னே - பயனின்றி. உன் நா - உனது நாக்கு.

கூறுகூ றுகக் குறைத்தென் உயிருடல்கள்
வேறுவே றாக்க விழைந்திடினும்,—மாறுகொளீஇ,
நின்னை விலக்கும் நினைவுமுறேன், வேந்தே,நீ
என்னை நிறையழியா யேல். 201

அஞ்சலிப்பேன், நன்றி அறிமொழிகள் கூறுவேன்,
எஞ்சலற்றே ஊழிவாழ் கென்றிசைப்பேன்,—மிஞ்சி
நிறையழியா தென்னுயிரை நீக்கப் புகுந்தால்;
அறிகுதி;ஈ துண்மை'என்றாள் ஆங்கு. 202

**அவன், சில போலி நியாயங்கள்கூறி, அவளை இணக்க முயலல்**

'அயலான தாடை,அந்த ஆடையினீர்த் தூவல்,
மெயினீழல், காற்றிவைகள் மேவா(து)—உயிர்போலும்
நன்நிறையை ஓம்புகென்ப; நான்உன்னைத் தொட்டிட்ட
பின்,நினது கற்புளதோ? பேசு. 203

கிட்டியுனை யான்தொடவே கெட்டதால் நின்நிறை;கெட்
டிட்டஅது மீளா தினிஎன்றும்;—பெட்டிடுநற்
றூவிரதங் கெட்டும், சுகத்தை விடுவானேன்?
நீவிரைவின் இன்னருள்செய் நேர்ந்து. 204

இன்னேநீ சம்மதித்தால், யார்அறிவார்? உன்கொழுநன்,
உன்மீதே சந்தேகம் ஒன்றுமுறான்;—மின்னே,
தெரியா நவையெல்லாம், செய்யா நவைபோல்,
உரையார் எவரும்; உணர். 205

201. குறைத்து - (என்னை) வெட்டி. மாறுகொளீஇ - பகைமையுற்று - எதிர்த்து.

202. எஞ்சல் - சாதல்; சிந்தாமணி 1122-ம் பாட்டைப் பார்க்க.

203. மெ(ய்)யின் நீழல் - தேகத்தின் நிழல். என்ப - என்று சொல்வார் (பெரியோர்).

204. பெட்டிடும் - விரும்பும். தூ விரதம் - பரிசுத்தமான விரதம். நேர்ந்து - சம்மதித்து.

205. இன்னே - இப்பொழுதே. யார் அறிவார் - (நீ சம்மதித்ததை)

நின்இசைவை யான்தூற்ற நேர்கிலேன்; நீதூற்றாய்
பின்இதனை எங்ஙன் பிறர்அறிவார்?—பொன்னே,நம்
எண்ணமதை விள்ளேமேல், யாரஃ தறிவார்?அவ்
வண்ணமுறும் நின்சம் மதம். 206

வேந்துகரம் பற்றின், விதிவசமா நேர்ந்ததென,
ஏந்துமிழை மின்னார் இசைதலே,—போந்த
முறையதென முன்னோர்சொல் மூதுரையை முன்னி,
இறையளவுந் தாழா திணங்கு. 207

ஆறில் ஒருகூ றரசற் குரியதெனக்
கூறும் முறை,உன் கொழுநன்ஓர்—கூறு
தவத்தே எனக்குத் தரல்போல், நிறையில்
உவப்போ டொருகூ றுதவு. 208

“இந்தா மணிமுத்தம்” என்றருளி ஈவாயேல்,
சிந்தா மணியாதி செல்வமெலாம்—தந்தே,யான்
சாவா மருந்தும் தருவன்;உண்டு சாவென்றும்
மேவா திருப்பை’என்றான் வேந்து. 209

**அவள், அந்த நியாயங்களின் போலித்தன்மையை விளக்கி, இணங்க மறுத்தல்**

‘ஏதிலான் ஆடைபடின் என்?மெய்யே தீண்டினும்என்?
மாதரார் தங்கள் மனத்திடையே—காதலோர்
அற்ப மெனினும் அணுகாரே ஆகி,அவர்
கற்பு நிலைதிரியாக் கால். 210

ஒருவரும் தெரியமாட்டார்கள். தெரியா நவை யெல்லாம் - (செய்யப்பட் டிருந்தும் ஒருவரும்) அறியாத குற்றங்கள் ஒன்றையும். உரையார் - எடுத்துப் (பழித்துப்) பேசமாட்டார்கள்.

207. விதிவசமா நேர்ந்தது - (அரசன் கையைப் பிடித்தது) விதியால் விளைந்தது. தாழாது - தாமதியாமல்.

209. இந்தா - இங்கே வந்து வாங்கு.

தொட்டதும்நற் கற்புத் தொலைந்ததெனல், கோட்டைபிடி
பட்டத்தைச் சூழ்ந்தவெளிப் பக்கமதைக்—கிட்டியஅப்
போதே எனல்நேர்; புரட்டுரையால் நீகொள்பயன்
யாதோ? இலைஒன்று மே. 211

செய்ததவ றேனோர் தெரியா ரெனினும்,செய்
கைதவன துள்ளக் கரிஅறியும்;—செய்குவன
எல்லாம் உணர்இறையும், எய்யாமற் றீங்கியற்ற
வல்லான் உளனோ? வழங்கு. 212

காந்தைக்கு வேந்தன்,அவள் காந்தனே; மேலாகப்
போந்திட்ட தெய்வம், புருடனே;—வாய்ந்த
அறமும்,அவன்; அன்னானை யன்றி, அறத்தாற்
பெறுபயனும் இல்லை பிறிது. 213

தவத்துக் கிடையூறு சாராது காப்பார்
தவத்திற் பகுதிபெறுர்; சாற்றும்—தவத்தின்
பயனில்ஓர் பங்குறுவர் பார்த்திபர்கள்: கற்பின்
பயனில்ஓர் பங்கேஉன் பங்கு. 214

காக்குங் கடனுடையாய் காவாது கற்பதனை
நீக்குங் கொடுமை நினைந்தனையால்!—தேக்குமநீர்
பாயச் செழித்துவளர் பைங்கூழைச் சூழ்வேலி
மேயப் புகுந்த விதம். 215

211. புரட்டுரை — அழியாத கற்பை அழிந்ததாகவும், பிறர் அறியாமற் செய்த குற்றமும் செய்யவேபடாத குற்றமும் (எனவே குற்றமும் குற்றமின்மையும்) சமமென்பதாகவும், உண்மையைப் புரட்டிக் கூறும் வார்த்தைகள்.

212. ஏனோர் - பிறர். கைதவன் - வஞ்சகன். உள்ளக் கரி - மனச்சாட்சி. எய்யாமல் - அறியாமல்: 'எய்த்து (-அறிந்து) அடிச்சிலம்பிரங்கும்.'—சிந்தாமணி 2683. வழங்கு - சொல் - சொல்வாயாக.

213. காந்தை - மனைவி. காந்தன் - கணவன்.

214. பார்த்திபர் - அரசர். வேலை வேறு கூலி வேறுதல் போலத், தவமும் கற்பும் வேறு, அவற்றின் பலன் வேறு என்பது தெளிய உணர்த்தப்பட்டது.

வெய்யபவ வேலைநின்று மீண்டு வியன்முத்திச்
செய்யகரை சேர்பொருட்டும், செந்நெறிச்செல்—தையலார்
கற்பொழியார்; கற்பொழிந்தேய் கைலையினும் மேலாகும்,
கற்பொழியா தெய்துநர கம். 216

பொன்னுலகும் பூவுலகும் புத்தமுதோ டீந்திடினும்
வெந்நரகஞ் சேர்ந்திடினும், விட்டுவிடேன்—என்நிறையை;
தன்னையிழந் தெவ்வளமும் சார்உலகு முற்றும்உற்றால்,
என்னபயன்?' என்றாள் எதிர்ந்து. 217

**அவன், வலிந்து தன் கருத்தை முடிக்கத் துணிதல்**

''நீல மயிலே, நினதிறகொன் றீ'என்று
சால இரந்தாலும் தாராது,—வாலைநன்கு
பற்றி வலிதிற் பறித்தாற் கொடுக்கும்அதன்
பெற்றி உடையாய் பெரிது. 218

கருப்பிரசம் ஆலையினிற், கார்அகிலின் தூமம்
நெருப்பதனின் எய்தல் நெறியாம்;—விருப்பின்
மெலியா இரந்தும்,நல்கா மின்னார்தம் இன்பை
வலியால் உறலே வழி. 219

வெற்பினுச்சி நின்றுருண்டு வீழ்பெரிய பாறையிடை
நிற்புறக்,கை கொண்டுதட்கல் நேருமால்,—வற்புமிக்க
என்மனத்தின் எண்ணநிறை வேறு திடைதடுக்கும்
உன்முயற்சி' என்றான் உருத்து. 220

216. பவ வேலை - பிறவிக் கடல். ஏய் - அடைகின்ற.

217. பொன்னுலகு - தேவர் உலகம். பூ உலகு - மண்ணுலகம்.

218. பெற்றி - தன்மை.

219. கருப்பிரசம் - கரும்பு இரசம் - கரும்பின் சாறு. விருப்பின் - ஆசையினால். மெலியா - மெலிந்து.

220. தட்கல் - தடுத்தல். வற்பு - வலி. உருத்து - கோபித்து.

### அவள் மூர்ச்சையடைந்து கற்பழிக்கப்படுதல்

அறைமொழிகேட் டன்னம் அனையாள், அசுணம்
பறையொலிகேட் டென்னப் பதைத்து,—மிறையுற்
றுயிர்த்தாள்,மார் பூடம் புருவுமயி லொத்தாள்,
வியர்த்தாள்,சோர் வுற்றாள், வெருண்டு. 221

ஏங்கினள், தன்முயற்சி யெல்லாம்வீ ணாக,உயிர்
நீங்கினா ளென்ன நினைவிழந்தாள் ;—ஆங்கவ்
அயர்வுற்றாள் தன்மையினை ஆரே அறைவார் !
செயலற்றாள், உற்றாள்மூர்ச் சித்து. 222

செயத்தக்க தீது செயத்தகா தீதென்
றுயுத்தத்தும் காதலினும் உண்டோ ?—அயுத்தம்
எனஒன்றும் இன்றவ் இருகருமத் தெல்லாம்
நனிநன்றென் றுன்னினன்மன் னன். 223

செம்மான் தனைப்பற்றித் தின்னப் புகுந்தபுலி,
அம்மான் பதறியுணர் வற்றுறினும்,—சும்மா
தினாது விடாவாறே, தேவர்கோன் அந்தோ !
தனாது கருத்தைமுடித் தான். 224

பிணத்தினிடத் தேய்பொருளும் பெட்டுக் கவரும்
குணத்திருடர்க் காங்குவமை கொண்டான்—விணத்திறைவன்
எத்தகையோ ரேனும் இழிவுறுவார், வெங்காமப்
பித்துடையார் ; ஈடேறார் பின்பு. 225

221. அசுணம் - இனிய இசைக்கு மயங்கி அவசமாகுந் தன்மையும் வல்லோசை கேட்டால் சாம்புந்தன்மையும் உடைய ஒரு பிராணி. மிறை - வருத்தம். உயிர்த்தாள் - பெருமூச்செறிந்தாள்.

222. அயர்வு - தளர்வு - சோர்வு. ஆரே அறைவார் - யார் சொல்ல வல்லார்.

223. உயுத்தம் - யுத்தம். அயுத்தம் - அயுக்தம் - தகாதது.

225. பெட்டு - விரும்பி.

## கௌதம காண்டம்

### கௌதமர் தம் ஆசிரமத்துக்குத் திரும்புதல்

இல்லை யகன்றமுனி, ஈர்ங்கங்கை ஆடிடப்போம்
எல்லை, விடியாமைக் கேதுவென்னென்—றெல்லையில்ஆய்ந்
த'ற்றமொன்று நேர்ந்ததென, ஆங்குநீ ராடாமே
உற்றனன்மீண் டுந்தன் னுழை. 226

### அவர், இந்திரன் களவைக் கண்டு, அவனைச் சபித்தல்

தூயஅவி வவ்வி,அதைத் துய்த்தோ டிழிதிருட்டு
நாயென,விண் வேந்தேக நா(டு)அமயம்,—சீயமெனக்
கோதமன்இல் வந்துகண்டு கொண்டான் ; அவன்செய்முழுப்
பாதகமும் ஓர்ந்தான் பதைத்து. 227

காலாந்தம் மேவு கனல்நேர் சினங்கொண்டு,
காலாந்த ருத்திரன்போற் கண்சிவந்து,—மேலாந்தன்
இல்வாழ்வின் மாண்பை இரித்த மகவானைக்
கொல்வானின் நோக்கினன் கூர்ந்து. 228

உட்கி, அடங்கி, ஒடுங்கி, நடுநடுங்கி,
வெட்கி, மெலிந்து, வெளிறி,ஒளி—மட்கி,
உலைந்தான், குலைந்தான், உடைந்தான், இடைந்தான்,
அலைந்தான், மலைந்தான் அவன். 229

226. ஈர்ங் கங்கை - குளிர்ந்த கங்கை. அற்றம் - சோர்வு. உழை - இடம் ; இருப்பிடம்.

227. அவி - தேவர்க்கு வேள்வித் தீயிற் கொடுக்கும் உணவு. சீயம் - சிங்கம். ஓர்ந்தான் - தெளிவாயறிந்தான்.

228. கூர்ந்து - (முன்கொண்ட) கோபம் அதிகப்பட்டு.

229. உட்கி - அஞ்சி. மட்கி - மழுங்கி. உலைந்தான் - மனங் கலங்கினன். குலைந்தான் - ஒழுங்கு கலைந்தான். உடைந்தான் - தளர்ந் தான். இடைந்தான் - பின்னிட்டான். அலைந்தான் - தள்ளாடினன். மலைந்தான் - பிரமையடைந்தான். (வெளியே செல்லற்குக் கால் எழமாட் டாமல் ஸ்தம்பம்போல் நின்றான்.)

'மயங்கு நிலையுற்ற மாவைப் பிறமா
முயங்க முயலாதால்; மூர்ச்சித்—துயங்கும்
இலங்கிழைபால் இன்பத்தை எய்தி, இழிந்த
விலங்கினும்நீ தாழ்ந்தாய் மிகுந்து. 230

செவ்வழியிற் றீர்ந்திட்ட தீயோரிற் றீயோய்,கேள்!
இவ்வழிவைச் செய்தநினக் கேற்றமுறை—செய்வல்;நீ
வெள்க,நினைக் காண்போர் மிகநக,நீ வேட்டஉருக்
கொள்கவுட லெங்கும்என்றான் கோன். 231

**அவன், தன் சாபம் கொடியதென வருந்தி, மறைவிடந்தேடி உறைதல்**

சாவதற்கோ அஞ்சிலேன்; சாவதனின் மிக்ககொடுஞ்
சாவம்உற்றேன்; என்றன் சபைநிற்க;—யாவரைத்தான்
காணுவேன்! என்னையான் காணுதற்கும் சாலவே
நாணுவேன்! என்றான்மன் நைந்து. 232

ஈண்டெவரும் எள்ளும்உரு எய்துடலை நீத்திடுவான்
மாண்டிடுவெ னென்னின்,யான் மாள்வுறேன்;—வேண்டிடினும்
சாவா விணோர்வாழ்க்கை; சாகுமணோர் வாழ்க்கையினும்
ஆவா! அறக்கொடிதென் றான். 233

சுளித்துமுனி சொன்னஉருத் துன்னுகுறி தோன்ற,
ஒளித்திடுதல் உன்னி ஒதுங்கி,—வெளிப்படூஉ,
விண்ணவரும் வேறெவரும் மேவாஓர் வேறிடத்தை
அண்ணி,மறை வாகஉற்றான் ஆங்கு. 234

230. மா - மிருகம். உயங்கல் - சோர்தல். விலங்கினும் - மிருகத்தைக்காட்டிலும்.

231. செவ் வழியிற் றீர்ந்திட்ட - நன்னெறியினின்று நீங்கிய. தீயோரில் தீயோய் - தீயவர்களெல்லாரினும் மிகுந்த தீமையுடையோனே. நினைக் காண்போர் நக - உன்னைப் பார்ப்போர் இகழ்ந்து சிரிக்க. கோன், இங்கே கௌதமரைக் குறித்தது.

232. சாவம் - சாபம்.

233 எள்ளும் - இகழும். விணோர் - விண்ணோர் - தேவர். மணோர் - மண்ணோர் - மனிதர்.

234. சுளித்து - கோபித்து. வெளிப்படூஉ - வெளிப்பட்டு. வேறிடம் - ஏகாந்தம் - தனித்திருக்குமிடம்.

**கௌதமர் அகலிகையை மூர்ச்சை தெளிவித்தல்**

நடந்த தறியாமே, நல்லுணர்வு நீங்கிக்
கிடந்த அகலிகையைக் கிட்டி,—ஒடுங்குமுயிர்
தேர்ச்சி அடைந்து திரும்பும் சிகிச்சைசெய்து
மூர்ச்சை தவிர்த்தான் முனி. 235

**அவள், கற்பிழந்ததறிந்து திரும்பவும் மூர்ச்சையடைய, கௌதமர் திரும்பவும் மூர்ச்சை தெளிவித்தல்**

விழித்தாள்; உணர்வுமெல்ல மேவினுள்; கற்பை
ஒழித்தே ஒழிந்தானென் ருேர்ந்தாள்,—புழுத்தான்
எரியும்அழல் எய்தினு லென்னத் துடித்தாள்;
திருமியுணர் வற்ருள்அத் தேன். 236

மீண்டும் முனிஉணர்வு மேவுவிக்கப், 'பாவியுயிர்
மாண்டு விடாமல் மறித்துமறித்(து)—ஈண்டதனை
மீட்டல்,அந்தோ! அஃதொடகல் வெய்ய துயரினையும்
மீட்டலன்ருே?' என்ருள்அம் மின். 237

**அவள் இந்திரனுல் உற்ற தோஷத்துக்குக் கௌதமர் பரிகாரம்செய்தல்**

'நின்னை அறியாமல் நேர்மாசு நீங்க,அதை
உன்னி உனித்துன் புறல்தவிரத்,—துன்னியுள
பொல்லாத வன்பழியும் போயொழிய, நின்மேனி
கல்லாக' என்ருன் கனிந்து. 238

**அவள், தான் பயந்து உணர்விழந்ததனுல் தனக்கு விளைந்த கேட்டை நினைந்து வருந்தல்**

என்னலுமே, தான்முன் இருந்த உயர்நிலையும்,
துன்னியதாழ் வாய துயர்நிலையும்—உன்னி,
மனக்குளே வெய்ய வருத்தம் வளரத்,
தனக்குளே சாற்றுகின்ருள் தான். 239

236. திருமி - திரும்பி - மறுபடியும்.
237. மீண்டும் - திரும்பவும். மறித்து மறித்து - திரும்பத் திரும்ப.
239. மனக்குளே - மனத்துக்குள்ளே.

நெஞ்சம் நினைவகல நேர்ந்தது; நேர்தலுமே,
வஞ்சன் எனதுகற்பை மாற்றினான்;—நஞ்சம்
அருந்தினவர்ப் போன்றேன்; அவர்க்குமருந் துண்டு;
வருந்துமெனக் குண்டோ மருந்து. 240

உருக்கெனஎன் நெஞ்சை உறுதிஉறச் செய்து
வெருக்கொடுணர் வேக விடாமல்—தரிக்கநிறீஇ,
என்னுயிர்போம் மட்டுமியான் என்நிறையைக் காவாத
வெந்நவைநேர் குற்றமுண்டோ வேறு! 241

ஆகம் பிறன்உறினும், அஞ்சாமல் நெஞ்சினைக்கல்
ஆக நிறுவாஎன் ஆகம்கல்—ஆகும்
இது,பழிசேர் வாழ்வின்இனி தெங்கோனை நீங்கும்
அதுகொடிதே! அம்மா!அம் மா! 242

**அவள், தான் மனமறியாமல் உத்தமக் கற்பிற் சிறிது வழுவின்மையால், பிறன் தன்னை இச்சித்தான் என்றெண்ணல்**

மெய்யாம் நிறையினரை வேறெவரும் வேட்டிடார்;
பொய்யாம் நிறையுடைய பூவையரை—நொய்தாக
வேட்பார் பிறர்;பொய்நிறை மேயதனால், யான்பிறனாற்
கோட்பா டடைந்தேன் கொடிது. 243

241. உறுதி - வலி - தைரியம். வெருக்கொடு - பயங்கொண்டு. நிறீஇ - நிறுத்தி. நவை - குற்றம்.

242. ஆகம் பிறன் உறினும் - உடம்பு அந்நியன் வசப்பட்டாலும். நிறுவா - நிறுத்தி. அம்மா! அம்மா! - ஐயோ! ஐயோ! சிந்தாமணி 1804-ம் பாட்டில் 'ஆவம்மா வம்மாவெ னம்மா வகன்றனையே' என்பதில் அம்மா என்ற பதம் ஐயோ என்னும் இரக்கப் பொருள்பட வருதல் காண்க.

தன் உடம்பு இந்திரன் கைவசப்பட்டிருந்தாலும், தான் பயத்துக் கிடங்கொடாதிருந்தால், தன் நெஞ்சு, கல்லுப்போல உறுதியாயிருந் திருக்கும்; அப்படியிருந்தால் அது தளர்வுற்று, நினைவு நீங்கி, மூர்ச்சை யடைந்தமை நேர்ந்திராது; மூர்ச்சியாதிருந்தால், கற்பழியாமல் காத் திருக்கலா மென்றெண்ணி அகலிகை இவ்வாறு தன்னுள்ளே கூறினாள்.

243. பிறனால் கோட்பாடடைந்தேன் - பரபுருடனாற்கொள்ளப்படுதல் (ஆகிய தூர்க்கதியை) அடைந்தேன்.

நீரிடையே வெப்பை, நெருப்பிடையே தண்மையினை
ஆரடைவான் வேட்பார்? அயலவர்கள்,—சீருடைய
மெய்க்கற்பார் பால்இன்பம் வேளார்; மிகவேட்பார்
பொய்க்கற்பார் பால்இன்பம் போந்து. 244

என்னுடையோ? என்னணியோ? என்நடையோ? என்மொழியோ?
பின்னெதுவோ? தேறேன், பிறன்என்னைப்—பொய்ந்நிறைசார்
மாதரைச்சேர் மாதா மயங்கச்செய் தென்னையவன்
காதலுக்கா ளாக்கியது காண். 245

பின்னமுறப் பத்தினிநற் பெண்டிர்பிறர் நெஞ்சுபுகார்
என்ன,நிறைப் பெற்றியினை எற்றமா—நன்னருணர்
முத்தமிழோர் கூறும் முறைதேர்ந்தும், தேரார்போல்
இத்தவறேன் செய்தேனோ யான்? 246

**அவள், மனம் அறியாத சிறுதுறையின் பெருவிளைவுக்கு வருந்தல்**

தெரியாத் தவறெனினும், தீயேன் தவறே,
உரியாற்(கு) அலாமல் ஒருவிப்—பிரியாஎன்
கற்புப் பிரிதற்குக் காரணமா யுற்றது:மா
வெற்பிற் பெரிதென் வினை. 247

நிறைநீர் நிலைகாத்து நின்ற நிலையிற்
சிறிதே திறம்பினேன் தீயேன்;—நிறைநீர்
அறவே அகன்றேடிற் றந்தோ! அனைத்தும்
அறைபோய் அழிந்த தறிவு. 248

244. அடைவான் - அடையும்படி. அயலவர்கள் - பரபுருஷர். வேளார் - விரும்பார்.

246. கற்புடைய மாதர், தாம் ( - தங்கற்புப்) பின்னம் அடையும்படி, பரபுருடர் நெஞ்சிலே (காமக்கருத்து உண்டாகும்படி) தோன்றார்கள். தம் நடை, உடை, பார்வை. பேச்சு முதலியவற்றால் பரபுருடர் தம்மைத் தாய் தங்கையர் போல நினையும்படி நடந்து கொள்வார்கள். இத்தவறு, மேற் கூறிய, பரபுருடன் காதலுக்குள்ளான தவறு.

247. உரியாற்கு - உரியவனுக்கு - கணவனுக்கு.

248, 249. திறம்புதல் - தவறுதல். அறைபோதல் - அற்றுப்போதல். 'அறிவறை போயினர்', கந்தபுராணம். அடிமுடிதேடிய படலம் 56.

நிறையாய குன்றுச்சி நின்றுநிமிர்ந் துற்றேன்,
இறைசாய்தல் நேர, எனையான்—அறியாமல்
வீழ்ந்தேன்; அதோகதியே மேவினேன்; தாழ்ந்தாரிற்
ருழ்ந்தார் தமிற்ருழ்ந்தேன் தான். 249

**அவள், கற்பின் சிறப்பைக் கூறுதல்**

போற்று பொருளதனிற் போதச் சிறந்ததுடல்;
ஆற்ற அதினுயர்ந்த தாவி;அதின்—ஏற்றமுறும்
நாண்;அதனின் மேலாம் நலங்கூர் நிறை;அதனைப்
பேணல்செயாள், பெண்ணன்று; பேய். 250

உரிய தவன்சாவா தோர்பெண், எதனுல்
இரவு விடியா திருக்கப்—புரியவலி
மேயினுள்? அந்த வியன்கற்பைக் காவாதாள்,
நோயெலாம் ஓர்உருக்கொள் நோய். 251

பதிக்கன்பாம் பத்தியினேர் பாலனே போலப்,
பதிக்கன்பாம் கற்பினெரு பாலே,—கொதித்த'யமன்
கொல்லாமற் காத்தாள் கொழுநனை:அக் கற்போம்பாள்
கொல்லாமற் கொல்லுகின்ற கூற்று. 252

சிறிதே திறம்பலும், இறை சாய்தலும் 245-ம் பாட்டிலே மனமறியாமல் செய்ததாகக் கூறிய செயலைக் குறித்தவை. அறவே - முழுதும். தாழ்ந்தாரில் தாழ்ந்தார் தமில் தாழ்ந்தேன் - இழிவடைந்தோரிலும் அதிக இழிவடைந்தேன்.

250. போத - அதிகமாக. ஆற்ற - அதிகமாக.

251. தவன் - கணவன். பெண் - இங்கே, நளாயினி.

252. (முதற்) பதி - சிவன். (இரண்டாம்) பதி - கணவன். பாலன் - சிறுவன் - மார்க்கண்டன். பாலே - பெண் - சாவித்திரி. கொதித்து - கோபித்து.

முன்னமொரு மாது,திரி மூர்த்திகளை மும்மகவாத்
தன்நிறையின் மாண்பாற் சமைத்து'யர்சீர்—மன்னினளால்;
அன்னதகைக் கற்பை அகலவிடு பேதையைப்போல்,
இன்னலினுக் கேதுவின்றி'ன் றி'ன்று. 253

வையமுறு கற்புடையீர்! வஞ்சன்வெஞ் சூழ்ச்சியின்யான்
துய்யநிறை தோற்றவா தோலாமே—உய்யுமின்கள்;
யானழிவை எய்திடினும், என்சரிதம் நீர்உய்தற்
கானபயன் உள்ளதென்றாள் ஆங்கு. 254

**அவள், தன் பிழையையும், கௌதமர் பொறுமையையும் ஒப்பிட்டுருகல்**

ஒருவருக்கு மாற்றார் உஞற்ற உனற்கே
அருவருக்கும் தீமையெலாம், ஆங்கோர்—உருவெடுத்த
வானுலும் ஒவ்வா அறக்கொடுந்தீங் காற்றினேன்
யானேஎன் நாயகனுக் கே. 255

ஆண்டார் திறத்தில் அபராதம் செய்துபழி
பூண்டார் எவர்என்போற் பொல்லாரே?—யாண்டே,
குலமகளிர் கற்புக் குலைந்தும்உயிர் நீங்கா
நிலைமையினில் உள்ளார் நிலத்து? 256

சேயுற்ற நோயதனைத் தீர்க்கும் சிகிச்சையைத்தாய்
ஆயுற்று நன்குசெய்த லாமென்ன,—ஆயுற்றென்
தன்றேடம் தீர்க்கத் தகுந்த பரிகாரம்
குன்றாது செய்தானெங் கோன். 257

253. மாது - பெண் - அநசூயை. மும்மகவா - மூன்று குழந்தைகளாக.

254. தோற்றவா - தோற்றவாறு - இழந்தபடி. தோலாமே - இழவாமல். உய்யுமின்கள் - (கற்பிழக்கும் அபாயத்தினின்று) தப்பிக் கொள்ளுங்கள். என்றாள் - என்றெண்ணினாள்.

255. உஞற்ற - செய்ய. உனற்கே - உன்னற்கே - நினைக்கவும் கூட.

256. யாண்டே நிலத்து உள்ளார் - பூமியில் எங்கே யிருக்கிறார்கள்.

257. சேய் - குழந்தை. ஆயுற்று - ஆய்ந்து - ஆராய்ந்து - தெரிந்தெடுத்து.

இணையில்பொறை எம்பெருமான் இன்னருளென்! என்கேன் ?
உணர்வுளதேல், துன்பும் உளதென்—றுணர்வதிலாக்
கல்லாக என்று, கருணைவெள்ளத் தாழ்த்தினன்,என்
பொல்லாத குற்றம் பொறுத்து. 258

**அவள், அவரைச் சரணமடைதல்**

இன்னும் இரங்கிடுவான், இன்னருளுக் கெல்லையில்லை,
துன்னும் துகளைத் துடைத்தினியும்—தன்னடித்தொண்
டாற்ற அருளுவன்என் றன்னான் அடிவீழ்ந்து
'போற்றி! புகல்!'என்றாள் பொன். 259

தக்கோன் அடியில் தடித்தெனமெய் ஒல்க,ஐம்பால்
மைக்கா ரெனக்குலைய, வாய்விட்டு—மிக்கேங்கி
வெய்துயிர்ப்புக் காற்றுமிக வீசக்,கண் ணீர்மாரி
பெய்து,துக்கம் உற்றாள் பெரிது. 260

**அவர், அவளைத் தேற்றல்**

தன்னுயிரே தன்தாளில் தாழ்ந்து விழுந்திட்டா
லென்னவிழ லுற்றாள் எழச்செய்து,—'மின்னனையாய்,
ஊழ்வினையால் ஏதிலன்கைக் குள்ளாகி, உற்றனைஇத்
தாழ்வினை;நீ நோதல் தவிர். 261

தன்னைத்தான் காக்குந் தனிப்பொருளாஞ் சால்பொழித்துத்,
தன்னைத்தான் காவாச் சடப்பொருள்போல்—நின்னைத்தான்
செய்து,மா பாவிசெய்த தீவினையின் மாசன்றி,
எய்துமா சொன்றுமுனக் கின்று. 262

258. பொறை - பொறுமை(யுடைய). என் என்கேன் - என்னென்று சொல்வேன்.

259. துகள் - தோஷம். போற்றி - பாதுகாத்துக்கொள். புகல் - (நீயே) புகலிடம் - பற்றுக்கோடு. பொன் - இலக்குமி (போன்ற அகலிகை.)

260. தடித்து - மின். ஒல்க - துவள. ஐம்பால் - கூந்தல். ஏங்கி - அழுது; சத்தஞ்செய்து. வெய்துயிர்ப்பு - நெடுமூச்சு.

261. விழலுற்றாள் - விழுந்து கிடந்தவள்.

262. சால்பு - மேன்மை. சடப் பொருள் - அறிவில்லாத பொருள்கள். நின்னை - உன்னை. தான் - இந்திரன். மனைவி, பொருள் என்று "பிறன் பொருளாள்" என்ற குறளிலும், அவள் தன்னைக் காத்தல் "தற்காத்து" என்ற

வஞ்சன், உடல்நிறையை மாற்றினுன்; அன்றி,உன்றன்
நெஞ்சின் நிறைசிறிதும் நீங்கிலதால்;—நெஞ்சம்
நினைவிழந்த பின்னர் நிகழ்ந்த செயலுக்
குனையிகழ்ந்து கொள்ளுவதென் ஞே? 263

நெஞ்சின் நிறைசிறிதும் நீங்கா து'டலினிறை,
வஞ்சம் வலிஇவற்ருல், மற்றதனுல்,—எஞ்சலுற்ற
மாதர்,குற்றம் அற்றவரே; மன்ற,அவர் முன்னையினும்
ஆதரிக்க மிக்குரிய ரால். 264

ஆடையுறு மாசை அகற்ற,உவ ராம்மாசை
ஆடையுறு மாறுசெய்த லாமென்னத்,—தோடமென
நின்மெயிடைச் சேர்மாசை நீக்கக்,கல் லாம்மாசை
நின்மெயுறச் செய்தேன் நினைந்து. 265

தீயநா கம்தீண்டத், தேகத்தேய் நஞ்சு,மா
ருயதீ நஞ்சால், அகல்வுற்று—மாயல்போல்,
தீயனு கம்தீண்டச், சேர்கறை,கல் லாம்கறையால்
மாயும்;நீ ஓர்தி'என்ருன் மற்று. 266

குறளிலும் கூறப்படுதல் காண்க. இல்வாழ்வானுடைய பல பொருள் களுள் தன்னைத் தான் காக்கும் ஒரே பொருள் மனைவியென்பது புலப்படத் "தன்னைத் தான் காக்கும் தனிப்பொருள்" என்று கௌதமர் கூறினர்.

264. வஞ்சம் வலி இவற்ருல் மற்றதனுல் - (பரபுருடர் தம்மைச் சொந்தப் புருடரென்று மயங்கும்படி செய்தல், மயக்க மருந்தால் அவச முறச் செய்தல்போன்ற) வஞ்சகத்தினுலாவது, வலாற்காரத்தினுலாவது (அவர் தாம் சொந்தப் புருடரென்று தாமே உண்மை தெரியாமல் எண்ணு தலாகிய அறியாமையோடு மாதரும் அவ்வாறே அவரை நம்புதல் போன்ற) வேறெந்தக் காரணத்தினுலாவது. எஞ்சலுற்ற - அழிந்த. மன்ற - நிச்சய மாக. முன்னையினும் - உடற் கற்பழியும் முன்பினும் அதிசமாக.

265. மாசு - அழுக்கு; தோஷம்.

266. நஞ்சு - பாம்பு விஷம். மாருய நஞ்சு - பாம்பு விடத்தை மாற்றும் மருந்தாகிய வெள்ளைப் பாஷாணம் முதலிய நஞ்சுகள். 'விடமெனப் பட்டதுக்கெல்லாம் குழம்பொன்று விளம்புகி றேன்வெள்ளைப் பாஷாணம்'

**அவள், அவர் அடிமையாயிருத்தற்கும் தகுதியற்றமைக்கு வருந்தல்**

‘உறப்,பெரிய பாக்கியஞ்செய் துன்னையுற்றேன்; நீங்க,
அறப்பெரிய பாவஞ்செய் த்ந்தோ!—மறக்கடையேன்,
இவ்வாறு கெட்டிழிந்தேன்; ஈசனொப்பாய், நின்திருமுன்
எவ்வாறு நின்றிடுவேன் யான்! 267

அந்நியை,நின் இன்னருளுக் கானேன்; அதிசுத்த
சந்நிதியில் நின்றிடவும் தக்கேனோ?—உந்தமாம்
செய்யசுரர் நாட்டுமுன்,ஆழ் நிரகும், ஒண்கதிர்முன்,
மையிருளும், நின்றிடுமோ மற்று? 268

மயிர்இழந்த மானும், மதிஇழந்த வானும்,
உயிர்இழந்த மெய்யும் உறழச்,—செயிரில்
நிறைஇழந்த நான்பொறையே நீர்ப்புடவிக் கென்ப
தறிய,வன்கல் ஆதல்அமை வால். 269

கல்லேயான் ஆகக் கவல்கிலேன்; நின்னில்லா
எல்லேனு ஆதற்கும் அல்லலுறேன்;—நல்லோய்,
திருவடிக்காம் குற்றேவல் சென்னியிற்செய் செல்வம்
ஒருவுதற்கே நைவென்’ என்றாள் ஓர்ந்து. 270

என்று ஆரம்பிக்கிற, பாம்பு விஷத்துக்கு முறிப்பு மருந்து கூறும் சித்தராரூட நூற்பாட்டைப் பார்க்க. அகல்வுற்று மாயல் - நீங்கி யொழிதல். தீயனாகம் தீண்ட - தீயன் ஆகம் தீண்ட - பொல்லாதவன் (ஆகிய இந்திரன் அகலிகை) தேகத்தைத் தொட்டதனால்; தீயன் நாகம் தீண்ட - பொல்லாதவன் ஆகிய (இந்திரன் என்ற) பாம்பு (போன்ற கொடியோன்) தீண்டியதனால். கறை - விஷம்; மாசு.

267. உற - (உன்னை) அடைய. நீங்க - (உன்னைப்) பிரிய. அறப் பெரிய - மிகப் பெரிய. மறக்கடை - பாவத்தின் அந்தம் - மிக்க பெரும் பாவம். ‘மறக்கடையேன்’ என்பது துக்கத்தின் முனையின் முடிவை யுடையவன், அதாவது அத்தியந்த துக்கமுடையவன் என்ற பொருள் படும் ‘துக்காக்கிராந்தன்’ என்ற வடமொழித்தொடர் போல்வது. நின் திருமுன் - உன் சந்நிதானத்தில் - உன் எதிரில்.

268. அந்நியை - அந்நியமானவள்.

269. உறழ - ஒப்பாக. செயிர் இல் - குற்றம் இல்லாத. பொறை - பாரம். நீர் (- கடல்) புடவி (- பூமி) - கடல் சூழ்ந்த பூமி.

270. நல்லோய் - நல்லோனே; கற்றோனே. ‘நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே கல்லார்கட்பட்ட திரு’—என்ற குறளில், நல்லார் கற்றார் ஆதல் காண்க.

**அவர், அவள் கல்லுருவம் நீங்கி மீண்டும் தம் மனைவி ஆவாள் என்றருள, அவள் நன்றியறிவுற்று மன அமைதியுடன் கல்லாதல்**

'கல்லாநீ ஆர்தல் கழுவாயா, மீண்டுமெனக்
கில்லாவாய்; மாயோன், இராகவனாய்,—வில்லோடு
தோன்றிடுவான்; அன்னோன்தாள் தோய்ந்திட,நீ தொல்லுருவம்
ஏன்றிடுவாய்' என்றான் இனிது. 271

என்ற அருள்மொழிகேட் டென்புருக நெக்குருகி,
நன்றி அறிவு நனிஎய்திக்,—'கொன்றனதீங்
கென்போல் இழைத்தவர்கள் இல்லை; பொறுத்தவர்கள்
உன்போல் இலை'என்றாள் ஓர்ந்து. 272

'இறைவற் குலகுகைம்மா றென்னியற்றும்? யான்என்
இறைவற் கியற்றுவதும் இல்லை.—குறைவற்
றகத்திருத்தி ஆர்ந்தேன்'என் றன்னாள்,கல் லாய்க்,கான்
அகத்திருத்த லானாள் அமைந்து. 273

**அவர், தேவர் வேண்ட, இந்திரன் சாபத்தை ஒருவாறு மாற்றல்**

வானாடு கோனின்றி மாழ்க,விண்ணோர், தம்குருவால்
கோனுரு மாறறிந்து, கோதமன்பாற்—போனார்,தாள்
வீழ்ந்தார், அவன்சாப வீடிரந்து வேண்ட,முனி
சூழ்ந்தான் புகன்றான் துணிந்து. 274

271. கழுவாய் - பிராயச்சித்தம் - பரிகாரம். இல் ஆவாய் - மனைவி ஆகுவாய். ஏன்றிடுவாய் - பொருந்துவாய்.

272. கொன்றன தீங்கு - கொன்றால் அன்ன தீங்கு - கொன்றதை ஒத்த தீமை.

273. இயற்றுவதும் - செய்வதாகிய கைம்மாறும். அகத்திருத்தி - அகத் திருப்தி - மனரம்மியம். ஆர்ந்தேன் - பொருந்தினேன்.

274. கோன் - அரசன் - தேவராசன். மாழ்க - மயங்க. விண்ணோர் - விண்ணோர் - தேவர்கள். சாப வீடு - சாபத்தின் விடுதலை. சூழ்ந்தான் புகன்றான் - ஆலோசித்துச் சொன்னான்.

‘இந்திரனுக் கேய்ந்தஉரு, என்றும்அவற் கவ்வுருவா,
நொந்துளேயத் தோன்றி,மற்றோர் நோக்கினுக்குச்—சந்ததமும்
துன்றுவிழி யாகஇனித் தோன்றும்;அவன், நாணுமே,
அன்றென,நன் காள்க அரசு’. 275

கண்கடுப்ப ஏனையவர் காணுமுரு, வாசவற்குப்
புண்கடுப்ப இன்னல் புரிதல்போல்,—விண்களிப்ப
ஓங்காசும், தன்நெஞ் சுணர்குற்றம் உண்மையால்,
ஆங்கவனை இன்னலுறுத் தன்று. 276

**திருமால், இராமராக அவதரித்து, விசுவாமித்திர மகருஷியுடன், அகலிகை கல்லுருவம் அமைந்திருந்த வனத்தை அடைய, அவர் பாதபரிசத்தால், அவள், தன் தொல்லுருவம் பெறுதல்**

உணர்வில் நிலைமையினை உற்றுநிறை தோற்றாள்,
உணர்வில் சிலையாம் உருவை—நணி,நெடுநாள்
செல்ல,நெடு மால்,கோடாச் செங்கோற் றசரதற்குச்
செல்வனென உற்றான் செகத்து. 277

தாசரதி, தாடகையைச் சங்கரித்துக், காதிசுதன்
மாசறநன் காற்றும் மகம்முடித்துக்,—காசில்
விழிகொளா ஏர்கூர் மிதிலைநகர் செல்வான்,
வழியிலோர் கானுற்றான் வந்து. 278

கான்உற்ற காகுத்தன் கால்படலும், ஆங்கொருகல்
மான்ஒத்த கண்ணணங்கா மாறவே—ஞானத்த
கோசிகன்,அவ் ஏந்திழையாள் கோதமனில் என்று,முன்பு
பேசுவர லாறுரைத்தான் பின்பு. 279

276. ஏனையவர் - மற்றவர்கள். கடுப்ப - போல. இன்னல் - துன்பம். இன்னலுறுத்தன்று - இன்னல் உறுத்தது - துன்புறச்செய்தது.

277. தோற்றாள் - இழந்தவள். சிலை - கல். நணி - நண்ணி - பொருந்தி. செல்வன் - மகன்.

278. தாசரதி - தசரதன் மகன் - இராமன். காதிசுதன் - விசுவாமித்திரன். ஏர்கூர் - அழகு மிகுந்த. கான் - காடு.

279. கோதமன் இல் - கௌதமன் மனைவி. முன்பு பேசு - (இந்நூலிலே இதற்கு) முன்னாக (விவரித்துச்) சொல்லப்பட்டிருக்கின்ற. பின்பு- (கோதமன் மனைவி யென்று சொல்லிய) பின்.

ERSITY EXTENSION LI

**அவ்வாறு அவள் கல்லுருவம் நீங்கித் தோல்லுருவம் பெறச்செய்ததைப் பற்றி, விசுவாமித்திரர் இராமரைப் புகழ்ந்துரைத்தல்**

'தீய வினைஅரவம் தீண்டிநுங்கத், தேசொருவி,
மாய லுறீஇவைகி, வாள்அரவம்—வாயினின்று
நீங்க உமிழ, நிலவும் மதிபோல,
ஈங்கு மிளிரும் இவள். 280

வன்கொலைஞர் முன்னன மாகொடிய பாதகர்,நின்
மென்கழலை உன்னுவரேல், வீட்டினையும்—நன்குறுவர்;
அன்னகழல் தீண்டும் அரும்பெரும்பே றுற்றஇவள்
தொன்னிலையை எய்தலரி தோ? 281

கல்லுருவம் நீங்கியவள், கற்பிழந்த மெய்புற்று
ளல்லள்;நிறை நீங்குமுனம் ஆர்ந்தமெய்யும்—புல்லலள்;அத்
தொன்மெய்யைப் போன்ற'தனிற் றாய்தாய்க், கெடாததாய்,
மன்மெய்யைப் பெற்றுள் மகிழ்ந்து. 282

முந்தஇவள் உற்றஉரு, முண்டகத்தோன் கைசமைத்த
திந்தஉரு நின்திருத்தாள் ஈந்ததால்;—அந்தஉரு,
மாசடைவும் மாய்வுமுறும்; மற்றிவ் உரு,என்றும்
ஆசடைவும் வீவுமில தாம். 283

280. தீயவினை அரவம் - (அகலிகையின்) தீவினையாகிய பாம்பு; (சொல்லும்) கொடுஞ்செய்கையுடைய பாம்பு. மாயல் மறைதல். மிளிரும் - பிரகாசிக்கின்றுள்: செய்யுமென்முற்று.

281. முன்னன - முதலான. தொன்னிலை - தொல் நிலை - (கல்லாகு முன்னுள்ள) பழைய நிலைமை. எய்தலரிதோ - எய்தல் ( - அடைதல்) அரியதோ.

282. மன் மெய் - (முந்திய தேகம் போலக் கற்பழிதலாவது உரு அழிதலாவது இல்லாமல்) நிலைபெற்ற அழியாத தேகம்.

283. மாசு அடைவு - (கற்பு அழியும்) தோஷம் அடைதல். மாய்வு - மாய்தல் - உரு அழிந்தொழிந்திறத்தல்.

நிறையதனை மூர்ச்சித்து நீங்குபு,கல் லாம்தாழ்
வறிய,மண மங்கையர்,கால் அம்பி—உறமிதிப்பர்;
நின்னடிதோய் மாண்புணர, நெஞ்சில் நிதம்இவளை
உன்னியெழா நிற்கும் உலகு. 284

தீயமன வாசவன்கை தீண்டியபெண் கல்லானாள்;
தூயமன ராகவன்கால் தோய்ந்தகல்பெண்—ஆயினது;
பொல்லாரைச் சேரின்உறும் பொல்லாங்கு; பூதலத்தே,
நல்லாரைச் சேரின்உறும் நன்று. 285

கற்கனியா நின்றதுநின் காலால், தொழுநர்மனக்
கற்கனியா நின்றசெயல் காட்டுமால்;—முற்கான்
இடைக்கொடியாள் மாய்ந்தனள்நீ எய்தலால் இக்கான்
இடைக்கொடியாள் தோன்றினள்இன் னே. 286

காலேறு முன்னமே காலிற் படிந்ததுாள்
மேலேற வல்லியற்கல் மெல்லியற்பெண்—பாலாக
மாறிற் றெனின்நின் மலரடியின் மாண்பெவரே
கூறிப் புகழார் குறித்து. 287

284. நீங்குபு - நீங்கி. அறிய - உலகம் அறியும்படி.

286. நின்காலால் கல் க(ன்)னியா(க) நின்றது - உன் கால் தோயப் பெற்றதனால், கல்லானது அகலிகையாகிய பெண்ணாகி நின்றது. நின் காலால் தொழுநர் மனக்கல் கனியா நின்ற செயல் காட்டும் - உன் பாதங்களால் (அப்பாதங்களை) வணங்குவோர் நெஞ்சக்கல் கனிந்துருகா நின்ற செயலைக் காட்டும். நீ (அம்பு) எய்தலால் முன் கானிடைக் கொடியாள் மாய்ந்தனள் - நீ அம்பு எய்தலால் நீ முன்பு உற்ற அந்தக் காட்டிலே கொடியாளாகிய தாடகை இறந்தாள். நீ எய்தலால் இக்கான் இடைக் கொடியாள் தோன்றினள் - நீ வந்ததனால் இந்தக் காட்டில் இடையாகிய கொடியை உடையவளாகிய அகலிகை (கல்லினின்றும்) பிறந்தாள். மாய்ந்தாளென்பதற்கு மறைந்தாளென்ற பொருளும் தோன்றினாள் என்பதற்குக் கட்புலனாகத் தோன்றினாளென்ற பொருளும் கொள்ளினும் பொருந்தும். இன்னே- இன் (இப்பொழுது) ஏ (அசை).

ஓரறிவே இல்லாமல் உற்றவொரு கல்லாறு
பேரறிவார் பெண்மணியாப் பெற்றதுநின்—சீரடியா
லென்றால்,அவ் ஆறறிவும் ஏய்ந்தமக்கள் நின்தாளால்
ஒன்றாத பேறுமுள தோ? 288

தோளால்முன் நீரிலொரு தோகைவந்தாள்; இன்றுனது
தாளால்வன் கல்லிலொரு தையல்வந்தாள்;—தோளே
அவள்அடைந்தாள் உன்திருத்தாள் ஆம்கோ தமனே
இவள்அடைந்தால் ஏற்புடைய தே. 289

ஒருசிலையிற் கால்வைத் துரிமையைஉன் அன்பன்
மருவியிடச் செய்தல், மறித்தும்—ஒருசிலையிற்
கைவைத் துரிமையாம் கன்னிகையை நீஅடைதல்
செய்தற் கறிகுறியாம்; தேர். 290

இடையிலுற்ற மாசுதனை ஏற்றபரி காரப்
புடம்அகற்ற, முன்னினொளிர் பொன்போன்(று),—அடுதலுற்ற
இன்பால்போல் முன்னின் இனியளாம் கோதமற்கி'ங்
நன்பாவை' என்றான் நயந்து. 291

288. கல் (சாதாரணமான கல்) மணி (சிறந்த இரத்தினம்) ஆனதென்பது தொனிப்பொருள். ஓரறிவும் இல்லாதிருந்த (விரும்பத்தகாத) கல் ஆறறிவுடைய பெண்மணி (- பெள்மணி - விரும்பத்தக்க இரத்தினம்) ஆகப் பெற்றது. நட்டல், நட்பு, நட்டார் முதலியவற்றுக்கு நள் பகுதியாதல் போல, பெட்டல், பெட்பு, பெட்டார் முதலியவற்றுக்குப் பெள் பகுதியாம்.

289. முன்பும் இன்றும், தோளும் தாளும், மென் நீரும் வன் கல்லும் (சிரமப்பட்டு நெடுங்காலம் கடைதலும் சிரமமில்லாமற் கணநேரம் மிதித்தலும்) எதிரிடைப் பொருள்களாகவும், இரு சமயங்களிலும் ஒரு கன்னிகை உற்பவித்தல் ஒற்றுமைப் பொருளாகவும் இருக்கின்றன. நீரில் - கடலில். அடியாரைத் திருவடிகளென்பது வைணவ சம்பிரதாயம். பெரிய திருவடி, சிறிய திருவடி, சடகோபம் சாத்தல் என்பவைகளை நோக்குக. எல்லா மதத்தினரும் பெரியோரை அடிகள் என்பதனையும் கவனிக்க.

290. முந்திய சிலை கல்லையும் பிந்திய சிலை வில்லையும் குறித்தன. உரிமை - மனைவி. மறித்தும் - திரும்பவும்.

### அகலிகை கௌதமரை அடைதல்

மாதவன்சீ ராமன்,அந்த மாதினொடு சென்றவளைக்
கோதமன்பால் உய்த்து,விடை கொண்டகன்று—போதப்,
பிரிந்த உயிர்மெய்கள் பேர்த்துஞ்சேர்ந் தென்னப்
பொருந்தி, அவர்வாழ்ந்தார் போந்து. 292

கருங்கலாய்ச் செங்கனியாம் காதலியும், காதல்
சுருங்கலாக் கோதமனும், தூநெஞ்—சொருங்கி,இரு
கண்ணொருமித் தோர்பொருளைக் காண்டலே போற்,பண்டை
வண்ணம்நடத் துற்றார்இல் வாழ்வு. 293

292. உய்த்து - சேர்த்து. போத - போக. பேர்த்தும் - பெயர்த்தும் - மறுபடியும். போந்து - வந்து - (பல நன்மைகளும்) - வரப்பெற்று. 'போந்த உதாரனுக்குப் பொன் துரும்பு' —ஔவை.

293 செங்கனி - நல்ல கன்னி ; சிவந்த பழம் (தொனிப் பொருள்). ஒருங்கி - ஒருவழிப்பட்டு.

காண்டம் மூன்றுக்கு வெண்பா 293.

# அகலிகை வெண்பா வசனம்

## கடவுள் வாழ்த்து

எந்தப் பொருளை எல்லாச் சமயங்களும், 'நான் கண்டுகொண்டேன்,' 'நானே அறிந்துகொண்டேன்' என்று தனித்தனி சொல்லா நிற்குமோ? எந்தப் பொருளைச் சாத்திரங்களெல்லாம் தத்தமக்குரிய முறைப்படி நன்ருக ஆராய்ந்து உன்னி எட்டமாட்டாமல் இளைப் படையா நிற்குமோ? எந்தப் பொருளை நாத்திக மதம், 'நான் ஒரு சிறிதும் தெரியேன்' என்று பிடிவாதமாகக் கூருநிற்குமோ? அந்தப் பரம்பொருளையே, எனது நெஞ்சே! நீ பற்றுக்கோடாகப் பற்றி உய்வாயாக.

## அவையடக்கம்

காலையில் துயிலுணர்ந்தெழும்போது தம்மைத் தியானிப்போர் தோடங்களெல்லாம் நீங்கும்படியான மகத்துவமுடைய பஞ்சகன்னியருள் ஒருத்தியான அகலிகையின் கதையை, யான், கற்ற பெரியோரைத் தியானித்துக்கொண்டு, கூறுகின்ற இந்நூலானது, அவ்வாறு தியானித்தல் காரணமாகத், தோடங்கள் நீங்கப்பெற்றுச் சிறப்புடையதாகும். அகலிகையைத் தியானித்தல் காரணமாகத், தியானிப்போர் செய்யும் பாவங்கள் நீங்குதல்போலக் கற்ருேரைத் தியானித்தல் காரணமாகத், தியானிப்போன் கூறும் நூற்குற்றங்கள் நீங்கும். இந்நூலுக்கு, இப்போது கூறியதல்லாமல், வேறு அவையடக்கம் கூற வேண்டியதில்லை.

## இந்திர காண்டம்

பா எண்

கற்ருேரும், மற்ருேரும், தாங்கள் தாங்கள் புகழ்ந்து புனைந்து கூறும் நாடு நகரங்களை, முறையே பொன்ஞட்டையும் பொன்னகரத்தையும் ஒக்குமென்று கூறுவது பெருவழக்கு; அப்படி மற்ற நாடு நகரங்களுக்கெல்லாம் சிறந்த உவமானமாகவுள்ள பெருமை 1

இந்திரன் தனது சபாமண்டபத்தில் கொலுவிருத்தல்

படைத்த நாட்டையும் நகரத்தையும் ஆளும் தேவராசன் ஒரு நாள் தனது சபாமண்டபத்திலே கொலுவிருந்தான். அவன், சிரசுக்கு மேல் வெண் 2

கொற்றக்குடை பிரகாசிக்க, இருபுறத்தும் தேவமாதர்கள் நின்று வெண்சாமரம் வீசக்,கின்னரர்கள் யாழ் இசைத்துப் பாட, எதிரே தேவநடனமாதர் நர்த்தனஞ்செய்யச் சிங்காதனத்திலே இந்திராணி சமேதனுக

3 வீற்றிருந்தான். ஒருபுறத்திலே மேனகை நின்று விசிறிகொண்டு வீச,
மற்றொரு புறத்திலே திலோத்தமை நின்று வெற்றிலை மடித்துக்
கொடுக்க, அவ்விருவர்போலவே அழகிற் சிறந்த ஊர்வசி, அரம்பை
முதலிய மற்றைத் தேவமாதர்கள் அவனுடைய ஏவல்களைச்செய்தற்குச்
4 சித்தமாக அவனைச் சூழ்ந்து நின்றார்கள். கின்னரர்கள், கந்தருவர்கள்,
கிம்புருடர்கள், வித்தியாதரர்கள், நாகலோகவாசிகள், இயக்கர்கள்,
முனிவர்கள், தேவர்கள், பூலோகத்து அரசர்கள், ருத்திரர்கள், நவக்
கிரக தேவதைகள், நக்ஷத்திர தேவதைகள், அஷ்ட வசுக்கள், அசுவினி
தேவர்கள் முதலியோர்கள் அந்தச் சபையில் வந்து நெருங்கி யிருந்
தார்கள்.

**கொலுவிருக்கும் இந்திரன் அகலிகையை நினைதல்**

5 தேவ தருக்கள் ஐந்தும், சங்கநிதி பதுமநிதி இரண்டும், காமதேனு
வும், சிந்தாமணியும், இந்திரன், யார் யாருக்கு, யாது யாது கொடுக்கும்
படி கட்டளையிடுகின்றானென்று குறிப்பறிந்து
கொடுத்துக், குற்றேவல் செய்துகொண்டு நிற்க;
கட்டியக்காரர் அவனது விஜயப்பிரதாபங்களை எடுத்
துக் கூறிப் புகழாநிற்க; தேவர் முதலியோர் தத்தம் குறைகளை வணக்கத்
தோடு கூறி இரந்து நிற்க; அந்தக் குறைகளைத் தீர்த்துக் குதூகலமாக
அவன் இருக்கும்போது, மனத்தைப் பிளந்தாற்போலத் துன்பு
செய்துகொண்டு, சொந்தக் குறை ஒன்று, அவன் நினைவிலே
6 தோன்றியது. அதாவது, 'உலகெங்கும் உள்ள பல பொருள்களிடத்தும்
காணப்படும் சகல பேரழகுகளும் ஒருங்கே கூடித் திரண்டு ஒரு பெண்
ணுருவெடுத்தாற் போன்றவளும், எனது நெஞ்சம உண்ணும் அமுத
மானவளும் ஆகிய அகலிகையை யான் அடையச்செய்யும் பலன் தருவ
தல்லாத எனது பாக்கியம், எவ்வளவு பெருமையுள்ளதா யிருந்தாலும்,
அவ்வொரு பலன் தராததால், பயனற்றதாம்' என்பது. மேலும்,
7 அவன் பின்வருமாறு பற்பல விதமாக எண்ணுவானாயினன். 'அவள்
என்னைக் கடைக்கண்ணால் நோக்கும் பாக்கியத்தை ஒரு முறையே
பெறுவேனானாலும், அதற்குப் பிரதியாக, கற்பகதரு, சங்கநிதி, பதும
நிதி முதலான எனக்குள்ள சகல செல்வத்தையும் கொடுப்பேன். இம்
மட்டோ, அப்பார்வையைப் பெறுதற்கு எனது உயிரையுங்கூடச்
8 சந்தோஷமாகக் கொடுப்பேன். நாம், நம் அருமைக் குழந்தையை
எடுக்க விரும்பி, அதன் அருகே செல்லும்போது, அது அதற்கிசையா
மல், நம்மைத் தூரத்தள்ளினால், அப்போது வருத்தமடையும் நம்
முடைய மன நிலைமையானது, வேறொரு பிள்ளை தானே வந்து
நம்மை அணையும்போதுள்ள மன நிலைமையினும் அதிக இனிமையான
9 தன்றோ? அவ்வாறே, நான் அகலிகையை அணுகிப் "பெண்ணே, உன்

பாதமே கதி" என்று அவளைச் சரணடையுங்கால், அவள் இரக்கங்
கொள்ளாமல் என்னைத் தள்ளுவாளானால், அப்போது அவளை அடையப்
பெருமையினால் உண்டாம் துன்பம், வேறெந்த மாதும் என்னை வலிய
அடையும் இன்பத்திலும் இனிமையானது.

முதலாம் சபதம்

'தேவர்கள் அமிர்தம் பெறுதற்காகக் கடலைக் கடைந்த காலத்திலே 10
உண்டாகிய உண்ணமுதோடு அப் பெண்ணமுதும்
தோன்றினாள். அவள் தோன்றிய அப்பொழுதே
நானும் கௌதமனும் அவளைக் காதலித்தோம். எங்களில் யார் அவளைப்
பெறுதற்குரியரென்று முடிவுசெய்தற்காக, பிரமதேவர் எங்களை
நோக்கி "நீங்கள் இருவீரும் இந்தக் கடல்நீர்க்குள் முழுகுங்கள்; உங்க
ளில் எவன் பின்னெழுவானோ, அவனே இவளுக்கு நாயகன்" என்றார்.
அவ்வாறு நாங்கள் முழுக, நான் முன்னெழுந்துவிட்டேன். பின்
னெழுந்ததனால், அவன் வெற்றி அடைந்தான்.

இரண்டாம் சபதம் நியமிக்கும்படி பிரமதேவரை இந்திரன் வேண்டல்

' "பிரமதேவரே, யானும் யோகஞ்செய்யும்படி நேர்ந்த சமயங் 11
களில் மூச்சடக்கப் பழகியுள்ளேனாயினும், இவன் அதுவே எப்போதும்
செய்வோனாய், என்னினும் அதிகமாக மூச்சடக்கப்
பழகியிருக்கிறான். ஆதலினாலேதான், இப்போது
நீர் கூறிய சபதத்தில் வெற்றிபெற்றான். இது
இருவருக்கும் சமமான சபதமன்று. நியாயம்
தவறிப்போகாமல், எங்கள் இருவருக்கும் சமமானதாக, வேறொரு
சபதம் கூறுதல் வேண்டும்" என்றேன். உடனே பிரமதேவர் என்மேற் 12
கோபங்கொண்டு, "சீ சீ! இந்திரா, இப்படிப்பட்ட வார்த்தைகள் கூறு
வது யோக்கியமாமோ! ஆசையினாலே புத்திகெட்டுப் போனாயோ!
அயோக்கியர் கூறும் வார்த்தைகளைக் கூறினாய்! போ! போ! தூர
ஒழிந்துபோ!" என்றார். உடனே, கௌதமன், பிரமதேவரை நோக்கி 13
"ஈசுவரன் கிருபையினால் நானே இன்னமும் வெற்றி பெறுவேன்;
இவன் வேண்டிக்கொண்டபடியே வேறொரு சபதம் நியமிப்பீராக"
என்றான். அப்போது, பிரமதேவர், என்னை நோக்கி, "உன் எதிரியே 14
வேறொரு சபதங்கூறும்படி சொன்னதனால், நான் புதுமையானதாக
ஒரு சபதங் கூறுவேன். இதுவே முடிவானது. இனிமேல் வேறொரு
சபதமுங் கூறமாட்டேன். இது உறுதியென்று நன்றாகத் தெரிந்து
கொள்வாயாக.

இரண்டாம் சபதம்

' "அந்தச் சபதமாவது முன்புறம்போலப் பின்புறமும் முகமுள்ள 15
ஒரு பசுவை எவன் முந்திக் கண்டு மூன்றுமுறை
வலம்செய்து வருவானோ, அவனே இவளுக்குக்
கணவனாவான் என்பது" என்று கூறினார்.

16 இவ்வாறு பிரமதேவர் கூறவே, 'இந்தச் சபதம் எனக்கே அநுகூல
மானது. ஏனெனில், இந்தக் கௌதமன் வாகனம் ஒன்றும் இல்லாதவ
னாதலால், காலால் வருந்தி நடந்து திரிந்து தேடி
அப்படிப்பட்ட அருமையான பசுவைக் காணமாட்
டான். நான் மேகவாகன மேலேறி விரைவாக
எங்கும் சென்று அதனைக் கண்டு, அதனால் மேன்மை
யும், மகிழ்ச்சியுங்கொண்டு, இங்கே திரும்புவேன். திரும்பின உடனே
17 அகலிகையை அடைந்துவிடுவேன். இவன் *அணிலேறவிட்ட நாய்
போல ஆகி, ஏக்கமடைந்து வருந்த, நான் இவளை இந்த மண்ணுலகத்
திலே கல்யாணம் செய்துகொண்டு, இவளுடன் விண்ணுலகம் போய்,
அங்கே என் குடிகளாகிய தேவர்களை இவள் குடிகளாகச்செய்து, இவள்
கிரீடம் சூடிச் செங்கோல் கைக்கொண்டு அரசாள, நான் இவளுக்கு
அடிமைக்கும் அடிமையாய்த் தொண்டு புரிந்து வாழ்வேன். அவ்வாறு
வாழ்வது நான் இதுவரை அரசாண்ட இன்பத்தினும் அதிக இன்பந்
18 தருவதாம். சரசுவதியைக் கல்யாணஞ் செய்துகொண்ட இந்தப் பிரம
தேவரும், இலக்குமியைக் கல்யாணஞ்செய்துகொண்ட அந்தத் திருமா
லும், பார்வதியைக் கல்யாணஞ்செய்துகொண்ட பரமசிவனும் இவளைக்
கல்யாணஞ் செய்துகொண்டபின் எனக்குச் சமானமாகார். ஆதலால்,
மற்றைத் தேவருள் என்னை நேர்வார் யார் இருக்கின்றார்? ஒருவரு
19 மிலர். மேற்கூறிய மூன்று மாதரும் முறையே தங்கள் கணவரது
நாவையும், மார்பையும், இடப்பாகத்தையும் தாங்கள் வாழும் இடமாகக்
கொண்டு, தங்கள் கணவரது உடலையே அடைந்தார்கள். உடலிலும்
முழுதும் அடையாமல் ஒவ்வொரு பாகத்தையே அடைந்தார்கள். ஆத
லால், அவர்கள் அறிவில்லாதவர்கள். இவளோ, தனது கணவனாகிய
எனது (உடலை இலட்சியம் பண்ணாமல், அதனினும் மிகச்சிறந்த)
உள்ளம் முழுமையுமே தனக்கு உறைவிடமாகக் கொள்ளைகொண்டு
20 விட்ட கள்ளம் மிகுந்த சமர்த்தியாயுள்ளாள். இவள் தன் கணவனது
இருதயத்திலே வாழ்தல்போலத் தாங்கள் தங்கள் கணவரது இருதயத்
திலே வாழப்பெற்றோமில்லையே என்ற ஏக்கத்தினாலே, அவர்களுள்
சரசுவதி வெளுத்தும், இலக்குமி சிவந்தும், பார்வதி பசந்தும், நிறம்
21 மாறிப்போனார்கள். அவர்களெல்லாரும், தங்கள் தங்கள் கணவரது
உடலிலே எப்போதும் நீங்காமல் வாழ்வோராய்த் தங்கள் கணவருக்கு
உடலோடுடலானார்கள். இவளோ, தன் கணவனாகிய எனக்கு உயிரோ
22 டுயிரானாள். கண்ணிற் சிறந்த கண்ணாகவும், கருத்திற் சிறந்த

இரண்டாம் சபதத்தைப்பற்றி இந்திரன் எண்ணுதல்

* அணிலேறவிட்ட நாய்போல என்பது ஒரு பழமொழி. தான் பிடிக்க முயன்ற அணிற்பிள்ளையைத் தான் ஏறக்கூடாத மரத்தின்மேல் ஏறவிட்ட நாய் போல என்பது கருத்து.

கருத்தாகவும், உயிரிற் சிறந்த உயிராகவும் உள்ள இவளோடு கூடி வாழும் வாழ்வே வாழ்வாவது : மற்றெந்த வாழ்வும் தாழ்வாவதேயன்றி வேறொன்றுமாகாது.

'என்று பலபல இனிய எண்ணங்களை எண்ணிக்கொண்டு மேக 23
வாகனத்தின் மீதேறி எல்லாத் திசைகளிலும் சென்று, நான் அந்தப்

*இந்திரன் இரண்டாம் சபதத்தை நிறைவேற்ற முயன்று தவறி வருந்தல்*

பசுவை நாடித் தேடுவேனாயினேன். பகலெல்லாம் தேடியதனோடு அமையாமல், என் ஏவுதலால் மேகம் மின்னா நின்று இருளை ஓட்டிவிட, இரவு பகல்போலாக, இராக்காலங்களிலும் விடாமல் நான் தேடி
அலைந்து நொந்து சோர்ந்து துன்பமடைந்தேன். அந்தப் பசுவை நான் 24
பூலோகத்திலே காணவில்லை. தேவலோகத்திலும் காணவில்லை. பாதாளலோகத்திலேயுங் காணவில்லை. இவ்வாறாக அப் பசுவைக் காணாததனால் எனக்கு உண்டாகிய துன்பம் மிகவும் கொடிதா
யிருந்தது. இப்படிக் கொடுந்துன்பமடைந்திருந்த சமயத்திலே, யான் 25
விரைவான மேகத்தின்மேலேறிப் பலநாளாக இராப்பகல் ஓயாமல் எங்கெங்கும் அலைந்து தேடியும் காணமுடியாமற்போன பசுவை ஒரு வேளை கௌதமன் கண்டுவிட்டானோ என்ற நினைவு தோன்றவே, என் தேகம் வேர்க்க, மனம் சாகுந்தருணத்தி லுள்ளார் படும் மரண வேதனைபோன்ற வேதனையை அடைந்தது.

'யான், இவ்வாறாக மனவேதனையோடு அந்தப் பசுவைத் தேடி 26
அலைந்துகொண்டிருந்தேன். கௌதமன் அதை "எவ்வாறாயினும் கண்டு

*நாரதர் உதவியால் கௌதமர் இரண்டாம் சபதத்தை நிறைவேற்றல்*

கொள்ளுதற்கு ஈசுவரன் அருளும்படி அவரை நோக்கித் தவஞ்செய்வேன்" என்று தியானம்பண்ணிக்
கொண்டிருந்தான். அப்படி அவன் தியானம் 27
செய்துகொண்டிருந்தபோது, வானத்திலே, நெடுந் தூரத்திலே, ஒரு சோதி பிரகாசிக்கக் கண்டான். கண்டவன் அது எவ்வாறு தோன்றியது, என்ன தன்மையுடையது என்று ஆராய ஆரம்பிக்குமுன்பே, அந்தச் சோதி அவனை நோக்கி விரைந்து நெருங்க, அதிலே சிவந்த மேனியும் சடைமுடியும் தோன்ற, தான் தியானித்துக் கொண்டிருந்த சிவபெருமானே பெருங் கருணைபுரிந்து பிரத்தியட்ச
மாகக் காட்சிதந்தருள வந்தாரென்று கருதிப், பூமியின்மீதே "பக 28
வானே!" என்று தோத்திரஞ்செய்துகொண்டு விழுந்து வணங்கினான். அப்படிப் பணிந்த சமயத்திலே கிட்டவந்துவிட்ட *நாரதர் அவனை வாரி

---

* மிகுந்த தூரத்திலே கேவலம் பகுத்தறியக்கூடாத ஒரே பிண்டமான சோதியாகவும், குறைந்த தூரத்திலே சிவந்த தேகமும் ஜடை முடியும் உடையதாகத் தோன்றித் தாம் தியானித்துக்கொண்டிருந்த சிவனேயாகவும் (சிவனென்றெண்ணிக் கீழேவிழுந்து தொழுதுகிடந்த தாம் தூக்கி நிறுத்தப்பட்டபோது) சமீபத்திலே தம் சிநேகிதராகவும் கௌதமர் கண்டது நாரதர் உருவை.

எடுத்துத் தழுவி "எனது நண்பனே, இங்கே நடந்ததெல்லாம் நானறி
வேன். நீ சொல்லித் தெரியவேண்டியதொன்றுமில்லை. எப்படி யறிவே
29 னென்றால், சொல்கிறேன்; கேள். ஒருவர் மனத்திலே நினைப்பது தூரத்
திலேயுள்ள மற்றொருவருடைய மனத்திலே தோன்றுவது, ஆச்சரிய
30 மானதாயினும், உண்மை நிகழ்ச்சியன்றோ! அத்தகைய தூரஉணர்ச்சியி
னாலே, நீ பிரமதேவர் கூறிய பசுவை எவ்வாறு காண்பது, கண்டாலன்றி
அகலிகையை அடையலாகாதே யென்று கவலையடைந்தது, என் மனத்
திலே தோன்ற, உடனே அந்தக் கவலையை நீக்கும்பொருட்டு நான் உன்
பால் வந்தடைந்தேன். ஒருவன் தன் சிநேகிதனைச் சந்தித்து அளவளா
வுங்கால், அவன் கவலையுள்ளவனாயிருந்தால், அந்தக் கவலை (சிநேகித
னால் பங்கிடப்பட்டுப்) பாதியாகுதலும், களிப்புள்ளவனாயிருந்தால்,
அந்தக் களிப்பு (சிநேகிதனாற் கூடச்சேர்ந்து அநுபவிக்கப்பட்டு)
31 இரட்டியாதலும் அநுபவசித்தமானவை. உன்னை உலகத்தார்
"பிரமசாரி பிரமசாரி" என்று வழங்குவது ஒழிய, ஓர் அழகிய
மனைவியுடன் இல்வாழ்வானாக வைக்கும்படி யான் நெடுங்காலமாகக்
கருதியிருந்த கருத்து நிறைவேறுங்காலம், நான் எதிர்பார்த்ததி
32 னும் விரைவாக வந்திருக்கின்றது. அதோ தோன்றுகின்ற சமீபத்
திலே உள்ள தொழுவிலே, ஆயிரம் பசுக்கள் நிற்கின்றன. இந்தக்
காலம் பசுக்கள் பூரணகர்ப்பமாகி யிருக்குங் காலமாதலால், நீ பார்க்க
வேண்டிய முன்னும் பின்னும் முகமுள்ள பசுவை அங்கே போய்
எளிதிற் காண என்னோடு வா. வேறிடங்களிற் காணக் கருதி வீண்
33 முயற்சி செய்யவேண்டாம்" என்று நாரதர் கூறக், கௌதமன் அவரை
நோக்கி, "இந்தப் பூமியிலே முன்புறத்திலே இரண்டு முகமுடைய
கன்றை நான் பார்த்திருக்கிறேனென்றாலும், எந்த இடங்களிலும்
உள்ள பசுக்களிலும் முன்னும் பின்னும் முகமுடைய பசுவொன்
34 றையும் நான் பார்த்ததில்லை" யென்று கூறினான். அதற்கு, நாரதர்,
மறுமொழி யொன்றுங் கூறாமல், அப்படிப்பட்ட பசுவைப் பிரத்தி
யட்சமாகக் காட்டுதலே தக்க மறுமொழியாமென்று கருதிக், கௌதம
னது கையைப்பற்றிச் சென்று, முன்சொன்ன தொழுவினுள்ளே
கொண்டுவிட்டு, அங்கே நின்ற பசுக்கூட்டத்திலே சூலுளைந்துகொண்
டிருந்த ஒரு பசுவைச் சுட்டிக்காட்டி "அந்தப் பசுவுக்குப் பின்புறமும்
35 முகமிருக்கிறது, கிட்டப்போய் உற்றுப்பார்" என்றார். அப்படியே
கௌதமன் அப்பசுவின் அருகே போய்ப் பார்த்து நாரதர் சொன்ன
படி பின்புறத்தே முகம் காணப்படாமையால், "ஏ, நாரதா, நீ என்னைப்
பரிகாசம்பண்ணுகின்றாயோ?" என்று சொல்ல ஆரம்பித்த தற்சமயத்
திலே, அப்பசுவின் பின்புறத்திலே கன்றின் முகம் வெளிப்பட,
அதனால் முன்போலப் பின்னும் முகமுடையதாகத் தோன்றிய அந்தப்

பசுவை மூன்றுமுறை வலம்வந்து, அகலிகையை அடைந்துவிட்டோ மென்று மனமுவந்து தன் தோழனைப் பார்த்துக் கூறுவான்.

நாரதருக்குக் கௌதமர் நன்றி கூறல்

"" தியானஞ்செய்வோர்களுடைய துன்பங்களெல்லாவற்றையும் நிவிர்த்திசெய்யும் சிவபெருமானது திருவடிகளைத் தியானித்து அவருடைய திருவருளால் யான் அடையவிரும்பியதை அடையப்பெற்றேன். அவ ருடைய திருவடிகள் வாழ்க. அவரே போல வந்து என்னை வாழ் 36
வடையச்செய்த நீ எல்லா நன்மைகளும் எய்தி வாழ்வாயாக. ஆடை 37
அவிழ்ந்தவன் கை, அவன் வேண்டாமலே, அதனை உடனே கட்டி உதவு தல்போல, எனக்குற்ற கவலையை நான் வேண்டாமலே உடனே நீக்கி உதவிசெய்தாய். நீ எனக்கு என் உயிருக்குயிராகிய அகலிகையைத் தந்ததனால், சாதாரணமான தேவியைத் தந்தாயல்லை, எனது ஆவிக்கு
ஆவியையே தந்தாயானாய். ஆகாயத்திலே நீண்ட சடையுடனும் 38
சிவந்த மேனியுடனும் தோன்றிச் சிவபெருமானே யென்று நான் காலில் விழுந்து கும்பிடச்செய்த உருவினாலும், (நான் அகலிகையை அடைய) எண்ணியதை எண்ணியபடியே அடையும்படி செய்த
அருளினாலும் நீ ஈசனை ஒத்தாய். எனக்கு என்னினும் இனியவளும் 39
எல்லாப் பொருள்களினும் சிறந்தவளுமாகிய அகலிகையையே கொடுத் துதவினாய். அவ்வாறு உதவிய உனக்குச் செய்யத்தக்க கைமாறு ராச ராசர்களிடத்துமே இல்லை. அப்படியிருக்க, என்னிடத்தில் உனக்குப் பிரதிஉபகாரமாகக் கொடுக்கத்தக்கது யாதிருக்கக் கூடியது. என்னை யன்றி வேறு ஒன்றுமில்லை. ஆதலால், என்னையே கொடுத்தேன். ஏற்றுக்கொள்வாயாக. உனக்கு உன்னையன்றி ஒப்பாவார் ஒருவருமிலர். உனக்கு உடைமையாகிய எனக்கு யானே நேர்: எனக்கு என்னையன்றி
ஒப்பாவார் வேறொருவரும் இலர்" என்றுபுகழ, நாரதர், அவ்வாறு 40
புகழ்வதைத் தடுத்து "எனக்கு உபசாரவார்த்தை எதற்காகக் கூறு கின்றாய்? அந்நியனுக்கன்றோ கூறவேண்டும். நான் உன்னினின்று வேறானவ னல்லேனன்றே. ஆராய்ந்து பார்த்தால், நாம் இருவேமும் ஒருவேமே. உன்னினின்று நான் வேறல்லேன், என்னினின்று நீ வேறல்லாய். எல்லாம் தெரிந்த உனக்கு இவ்வுண்மை தெரிந்தது
தானே. நாம் இருவரும் அபேதமாய் ஒருவராகவே இருத்தலாலன்றோ, 41
நீ ஒருவருக்கும் சொல்லாமல் உன் மனத்துக்குள்ளே நினைத்ததை, நினைத்தபடியே என் மனம் உணர, அதனால் நான் உன்னிடம் வந்து சேர்ந்தேன். அவ்வாறு சேர்ந்த என்னை நீ அந்நியனாகக் கருதிப் புகழலாமோ" என்று கூறிப் பின்னும் கூறுவான்.

*அகலிகையைக் கௌதமர் அடைதல்*

42 ‘‘நான் உபசாரவார்த்தைகளில் விருப்பில்லாதவன். அகலிகையை
நீ அடைவதற்குப் பிரமதேவரது கட்டளையைப்
பெறும்படியாக, நாம் இனித் தாமதஞ்செய்யாமல்
அவரிடம் செல்வதே நல்லது’’ என்று கூறி, வள
மாகப் பால் கொடுக்கும் பசுக்கள் வாழும் அந்தத்
43 தொழுவை நீங்கித் தம் சிநேகிதனோடு பிரமதேவரை அடைந்து, அவர்
நியமித்த சபதத்தைக் கௌதமன் நிறைவேற்றிய விவரத்தைத் தெரிவித்
தார். உடனே, அவர் ‘‘இந்நாள் நன்னாள், இன்றே அகலிகை
கல்யாணத்தை நிறைவேற்றுக’’ என்று சொல்லிக் கௌதமனுக்கு
அகலிகையைக் கொடுத்து இருவருக்கும் விடைகொடுக்க, அவர்கள்
44 மகிழ்ச்சியடைந்து தங்களிடம் சென்றார்கள். இமைப்பொழுதும்
இளைப்பாறுதற்கும் தங்காமல் பொறுமையுடனே அலைந்து (என்
தெய்வப்பிறப்புக்கு இயல்பாகவுள்ள) இமையாத கண்களால் அந்தப்
பசு எங்கேயுள்ளதென்று நான் தேடிப்பார்த்துக்கொண்டிருந்த நாட்
களிலே கடைசியான ஒரு நாளில் இந்த வரலாறு முழுதும் கேள்வி
யுற்றேன். அதனால் வாடி வருந்தினேன். வேறொன்றும் செய்
45 தற்கில்லாதவனாயினேன். துக்கமேலீட்டால் தரையில் விழுந்து
புரண்டேன். மண்ணைவாரித் தலைமேல் போட்டுக்கொண்டேன்.
தலையின் மயிரைப் பிய்த்தெறிந்தேன். கொல்லப்படுவார் போன்று
46 மறுகி அழுதேன். நான் மேகவாகனனோடனாய்ச் சுவர்க்க மத்திய பாதாள
மென்ற திரிலோகங்களும் சென்றும் எனக்குக் கிடையாத அகலிகை
கௌதமனுக்கு எளிதாகக்கிடைத்தது, மேகந் தோயும்படி உயர்ந்த
கொம்பிலுள்ள தேன் ஒரு முடவனுடைய வாய்க்கு நேராக வாய்ந்து
47 வடிதலினை ஒத்தது. கொடிய தீயிலேவிழுந்து சுடப்பட்டெழுந்தோர்
திரும்பவும் அந்தத் தீயிலே விழுந்தாற்போலவும், ஒருமுறை மாண்டார்
மறுமுறையும் மாண்டாற்போலவும், நான் இரண்டுமுறை தோல்வி
யடைந்து வருந்துவேனாயினேன்.

*அகலிகையின் வடிவ வருணனை*

48 ‘மின்னானது, தன்னைச் சூழ்ந்து பொதிந்து மறைத்துக்கொண்
டிருந்த கரிய மேகத்தை, அவ்வாறு மறையாமல், தனக்குப் பின்புறத்
திலே தொங்கும் கருங் கூந்தலாக்கி ஒதுக்கிக்
கொண்டு, திருமகளும் விரும்பும்படியான அழகு
மிகுந்த பெண்ணுருவம் கொண்டது. அவ்வாறு
பெண்ணுருவங்கொண்ட மின்தான், என் கண்ணையும் கருத்தையும்
49 விட்டகலாமலிருக்கிற அகலிகை. ‘பிரபஞ்சத்தில் உள்ள கட்புலனாகக்
கூடிய சகல பொருள்களுக்கும் நிழல் உண்டு. ஆயினும், அப்பொருள்க
ளெல்லாவற்றையும் விளங்கச்செய்கின்ற ஒளிக்குமட்டும் நிழல் இல்லை’

என்று சொல்லுவோர்களே, கேளுங்கள்! சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், அக்கினி ஆகிய ஒளிப்பொருள்க ளெல்லாவற்றின் நிழல் தான், அவைகள் யாவற்றிற்கும் பிற்புறத்தே காணப்படுகின்ற நீலநிற வானம்; ஒளியே அகலிகையாகியது; இதைத் தன் நிழல் தெரிந்து, அவளுடைய கூந்தலாகியிருக்கின்றது; இவ்விஷயங்களைத் தெரிந்து கொள்வீர்களாக! பாசி சூழ்ந்து விளங்கும் தாமரை மலர் பாசியையும், 50
பாசி தாமரை மலரையும், இராத்திரியிலே பிரகாசிக்கும் சந்திரன் இராத்திரியையும், இராத்திரி சந்திரனையும், அததற்கு இயல்பாக உள்ள அழகினும் அதிக அழகுபெறச் செய்வதுபோல, அவளுடைய முகமும் கூந்தலும் ஒன்றையொன்று அதிக அழகுபெறச் செய்கின்றன. தே 51
னுண்ண வந்த ஆண் வண்டும் பெண் வண்டும் இணையாக இருந்து விளங்கப்பெற்ற பூவானது அவளுடைய கண்களோடு கூடிய முகமாம்; பூவிலுள்ள தேன் அவளுடைய சொல்லாம்; பூவிலுள்ள மலர்ச்சி, அழகு, வாசனை, மிருதுத்தன்மை, குளிர்ச்சி ஆகிய இவை யெல்லாம் அவள் முகத்திலும் அமைந்திருக்கின்றன. அவள் முகம் சந்திரனையும், 52
அவள் கண்கள் சந்திரனது களங்கமாகிய மானையும், அவள் சொல் சந்திரனிலுண்டாகிற அமுதத்தையும், அவள் பல் சந்திரனிடத்துப் பிறக்கும் முத்தையும் ஒக்கும். சிவந்த வரிகள் சிதறப்பெற்று, 53
அதனால் இனிய அழகுவாய்ந்த அவளுடைய வெண் கண்கள் நடுவில் கருங்கண்கள் விளங்கும் காட்சிப்பொலிவு, செம்பவளக்கொடிபடர்ந்த வெண்பாற்கடல் மத்தியில் நீலவிஷம் தோன்றிப் பிரகாசித்தலை ஒக்கும். காதலாகிய அலைகள் புரளாநின்ற அந்தக் கண்களாகிய சமுத்திரங்கள், 54
வருத்தம் செய்யும் பார்வையாகிய விடத்தையும், அவ்வருத்தத்தை நீக்கும் பார்வையாகிய அமுதத்தையும், மிகவும் கொடுப்பனவாம். 'விருபம் இல்லாதவள்' என்று பொருள்படுகிற 'அஹல்யை' என்ற 55
பெயரை அவளுக்கிட்டது, மாதர்களுள் அவளைப்போல் வடிவத்தில் ஒரு சிறிதும் குற்றமில்லாதவள் வேறு ஒருத்தியும் இல்லை என்னும் உண்மையை யாவரும் தெரிந்துகொள்ளும் பொருட்டேயாம்; அப்படி யானால் அவள் அழகு வருணிக்கும் தரமுடையதாமோ? அவள் தன் 56
கரிய புருவமாகிய வில்லையும், அழகிய கண்ணையும், மன்மதனுடைய ஆயுதங்களான கரும்பு வில்லாகவும், மலர் அம்பாகவும் கொண்டு, அவற்றின் உதவியால் உலகத்திலுள்ள ஆடவர் யாவரும் தன்னைக் காமுறச்செய்து வெற்றிபெற்றவள். ஆகவே, அவள் இருக்குங்கால், மன்மதனும் அவன் ஆயுதங்களும் வேண்டியதில்லை.

57 'கடலிலே அந்த ஸ்த்ரீஜோதி உதயமான உடனே, எனது இருதயமாகிய வானத்திலே அதற்கு முன் பிரகாசித்துக்கொண்டிருந்த மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலிய மாதராகிய நக்ஷத்திரங்கள் இருந்த இடமும் தெரியாமல் மறைந்தொழிந்துபோயின; அந்த இருதய வானத்தில் மிகச் சிறந்து விளங்கிய இந்திராணியாகிய சந்திரன் பகற்

இந்திரன் காமம்

58 சந்திரன்போல் ஒளி மழுங்கிவிட்டது. அகலிகையின் மிருதுவான மேனி என்னுடைய கற்பகதருவின் தளிரை ஒக்கும்; அவள் கழுத்தும் முகமும் முறையே என்னுடைய சங்கநிதி பதுமநிதிகளின் வடிவத்தை ஒக்கும்; அவள் இனிய சொல், என் காமதேனுவின் பாலை ஒக்கும்; அவளுடைய ஒளி என்னுடைய சிந்தாமணியின் ஒளியை ஒக்கும்;
59 ஆதலால், அவள் என் செல்வமெல்லாம் ஆவாள். மரங்களுள்ளே உயர்ந்த கற்பக தருவும், பசுக்களுள்ளே உயர்ந்த காமதேனுவும், மணிகளுள்ளே உயர்ந்த சிந்தாமணியும், எனக்கு உரியவைகளாயிருப்பது போலவே, பெண்மணிகளுள்ளே உயர்ந்த அகலிகையும் எனக்கு
60 உரியவள். பலவான பொருள்களுள்ளே, காந்தம் ஒன்றே வன்மையுடைய இரும்பைக் கவர்வதுபோல, பலராகிய மாதர்களுள்ளே, அகலிகை ஒருத்தியே, எனது வன்மையான நெஞ்சைக் கவர்பவளா
61 யிருக்கின்றாள். திசையறிகருவியிலுள்ள ஊசி, வேறெந்தத் திசையையும் நாடாமல், வடக்குத் திசையொன்றையே நாடும்; அதுபோல், என் மனம், வேறெந்தப் பெண்ணையும் நாடாமல், அகலிகை ஒருத்தியையே
62 நாடும். அவள் திருமேனியையே இடைவிடாமல் பார்த்துக் கொண்டிருக்கவும், அவள் கண்டத் தொனியையே எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கவும், அவள் சமீபமாகவே அநவரதகாலமும் தங்கியிருக்கவும், அவள் நிழல்போல் நீங்காமல் அவள் போகுமிடமெல்லாம் விடாது பின் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கவும், நான் மிக்க
63 பேரவாவுடையேனா யிருக்கின்றேன். நான், அவள் திருமேனியைக் கண்டபோது கண்மயமாயும், அவள் இன்சொற்களைக் கேட்டபோது காதுமயமாயும், அவள் என் பார்வையினின்று நீங்கியது முதல் அவளை ஓயாமல் நினைந்து நினைவுமயமாயும் ஆகியுள்ளேன்; அவள் காதலினாலாகிய துன்பத்தினால் நான் இன்னும் சாவாமல் உயிர் தாங்கிக்கொண்டிருப்பது, அவளைத் திரும்பக் கண்டு களிக்கலாமென்னும் ஆசையினா
64 லேயே. நான் அவளுடைய அழகை இமை மூடாமல் இடை விடாது நோக்கலுற்றதனால், கண் இமையாதவன் ஆயினேன். 'அரசன் எப்படி, குடிகள் அப்படி' என்று வழங்குதல் உண்டன்றோ? அப்படியே என் குடிகளாகிய தேவர்களெல்லோரும் என்னைப்போல 'இமையார்' ஆனார்கள். இவ்வாறு செயற்கையாக என்னை யுள்ளிட்ட தேவரெல்லாம்

இமையாரான உண்மையை அறியாதவர்கள், தேவர்கள் இயற்கையாக
இமையாரென்று சொல்வாரானார்கள். அவளைப் பார்த்த கணத்திலேயே 65
என் நெஞ்சிலே பற்றிக்கொண்ட காமாக்கினியானது, சில காலஞ்
சென்றால், தணிந்து அவிந்துவிடுமென் றெண்ணியிருந்தேன். அவ்வாறு
அவிவதற்கெதிராக, அது இதுவரையும் மேலும்மேலும் வளர்ந்தெரியா
நின்றதேயன்றிச் சிறிதும் தணியாததாய், என்னைக் கொல்லுதல்போல
மிகவும் வருத்தாநின்றது. ஆ! ஆ! எரிந்தொழிகின்றேன். எரிந்தே 66
யொழிகிறேன். கொடிதான ஒருவகைத் தீயினால் பற்றப்பட்டு மிக
வும் எரிக்கப்படுகின்றேன். இனி இரேன். இப்போதே இறந்தேனா
னேன். வேகம் மிகுந்த நரகத்தீக்கூட இந்தக் கடுவேகமுடைய
விரகத்தீப் போலச் சீறி அடர்த்துச் சுட்டு அழிக்குமோ!

அக் காமத்தின் நெறி பிறழ்வு

'சன்மார்க்க ஞானசமுத்திரம் நிறைந்திருந்த என் நெஞ்சில் உற்ற 67
காமத்தீயானது, வளர்ந்து பெருகி வடவாமுகாக்
கினியை ஒத்து, அந்தச் சமுத்திரத்தை ஒரு துளியும்
இல்லாமல் குளிர்ச்சியென்னும் பெயரும் ஒழிய
வாட்டித் தீத்து வற்றச் செய்துவிட்டது. தீய நினைவு, ஏகதேசமாக 68
வேனும், தோன்றாத நெஞ்சுள்ள நல்லோரும், நல்ல நினைவு, எக்காலத்
தேனும், தோன்றாத நெஞ்சுள்ள தீயோரும் இலரென்றே கூறலாம்.
ஆயினும் நெஞ்சில் தீய எண்ணம் தோன்றினால், நல்லார் தோன்றின
உடனே நீக்கிவிடுவார்கள். தீயாரோ, அந்த எண்ணத்தை விருப்பத்
தோடு ஆதரித்துத் தந்நெஞ்சில் நிலைத்து நிற்கவிடுவார்கள். வீட்டிலே 69
தீப்பிடித்த உடனே அத்தீயை அவித்துவிடுதல் அதி சுலபமானது. அது
போலவே, நெஞ்சிலே பற்றும் காமத்தீயையும் ஆரம்பத்திலேயே
அவித்துவிடுவது மிகவும் எளியது. இருவகைத் தீயும் மிகுதியாகப்
பெருகி மிதமிஞ்சியபின் அவித்தல் முடியாது. இவ்வுண்மையை
நினைத்துப் பார்த்து என்னெஞ்சிற் பற்றிய காமத்தீயை அது மிஞ்சி
விடுமுன்னே ஐயோ! அவிக்கத் தவறிவிட்டேன். அவள் கன்னியா 70
யிருக்கும்போது நான் அவளிடம் காதல்கொண்டது குற்றமானதன்று;
அவள் பிறன் பொருளாளான பின்னும், அக்காதலை ஒழிக்காததே என்
குற்றம்.

அக்காமத்தின் வன்மை

'அந்த மாது மற்றொருவனுடைய மனைவியான பின்பு, என் 71
நெஞ்சினுள்ளே புகுந்த பொருந்தாக் காமமாகிய
பேயை உடனே வெளியே ஓட்டிவிடாததனால்,
அதை இப்போது வெளியே போகச்செய்தல் அரி
தாகிவிட்டது. அவள் காரணமாக எனக்கு உண்டான காதலானது, 72
கண் காது முதலிய பல பொறிகள் வழியாக, அவளுடைய அழகிய

உருவத்தின் ஒளி இனிய குரலின் ஓசை முதலிய பல புலன்களின்
மயமாய், என் தேகத்தின் உள்ளே புகுந்து, அங்கே தங்கும் உள்ளத்
தோடு உள்ளத்தின் மயமாய், அறிவோடு அறிவின் மயமாய், உயிரோடு
உயிரின் மயமாய் இரண்டற ஒன்றிக் கலந்திருக்கின்றது. அப்படிப்
பட்ட காதல் ஒழியவேமாட்டாது; ஒருக்கால் ஒழிந்தால் உயிரோடு
73 தான் ஒழியும். அவ்விதம் அபேதமாய் ஒன்றோடொன்று கலந்திருக்
கிற என்னுடைய காதலையும் என்னுடைய உயிரையும் வெவ்வேறாகப்
பிரிப்பது, உயிர்களை உடல்களினின்றும் எளிதாகப் பிரித்துவிட வல்ல
74 இயமனாலும் ஆகாது. அந்தக் காதல் ஆரம்பத்தில் அதற்குரியவளை
அடையலாமென்னும் இனிய எண்ணத்தினால் இன்பம் தருவதாயிற்று;
பின்பு அவளை அடையாததனால் உண்டாகிய வருத்தமான நினைவினால்
துன்பம் தருவதாயிற்று. இப்படித் துன்பம் தருவதாக ஆன காதல்,
பின்னும் அவளை எப்படியாயினும் அடையலாமென்னும் நம்பிக்கை
உண்டாகத் திரும்பவும் இன்பம் தருவதாயிற்று. இவ்வாறு மாறிமாறி
இன்பம்போன்று துன்பமும், துன்பம்போன்று இன்பமும் தரும்
காதலை, யான் துன்பம் தரும் இன்பமென்று சொல்வேனோ? அன்றி,
இன்பம் தரும் துன்பமென்று சொல்வேனோ? யாதென்று சொல்வேன்?
75 காதலின் இயல்பு இவ்வாறிருத்தலாலன்றோ, காதலுற்றோர், தம் காதற்
குக் காரணமான பெண்களை, அக்காதலால் துன்பம் மிகும்போது தம்
உயிரைக் கொல்லும் கூற்று என்றும், இன்பம் மிகும்போது தம் உயிர்
76 என்றும் சொல்வாராயினர். கொல்லும் தொழிலுள்ள தென் திசைக்
குரிய இயமனே, நான் அமுதமுண்டு சாவினின்றும் நீங்கிய தன்மை
யைத் தெரிந்து, இனிக் கொலையால் துன்பஞ்செய்தல் பயன்படா
தென்று நினைத்து, மோகத்தை யுண்டாக்குகின்றவனும், தென்றற்
காற்றைத் தேராக உடையவனுமான மன்மதனாக மாறுவடிவங்
கொண்டு, அவ்வடிவத்தோடு என் எதிரே தோன்றிச் சண்டை செய்
தால் நான் கொன்றுவிடுவேனென்று பயந்து, உருவை ஒளித்துக்
கொண்டு, அரூபியாக நின்று என்மேற் கொடிய போர்செய்கிறான்.
அவன் என் முன் தோன்றினால், நான் அவனை வெகு விரைவிற்
கொன்றுவிடுவேனன்றோ!

**இந்திரன், அகலிகையை அடைய நிச்சயித்தல்**

77 'விண் அமுதத்தால் சாகும் துன்பம் நீங்கியது; அந்தப் பயங்கர
மான சாதற்றுன்பத்தைக் காட்டிலும் சகிக்க
முடியாத கொடுந்துன்பத்தைச் செய்கின்ற காதற்
றுன்பமோ, அகலிகையென்னும் பெண்ணமுதால்
78 நீங்குமேயன்றி வேறெதனாலும் நீங்காது. என் அரசாட்சியின் மாட்சி
அழகாயிருக்கின்றது! என் ஆளுகைக்குள்ளடங்கிய குடிகளுள், ஓர்

ஏழை வைதிகப் பார்ப்பான் நான் காதலித்த அந்தப் பெண்மணியை
எளிதாகக் கவர்ந்து இறுமாப்போடு சுகமாக வாழ்ந்துகொண்டிருக்க,
நான் அவனைக் காட்டிலும் அற்பமான ஏழைபோல அந்தப் பெண்
மணியைக் கைப்பற்றுதற்குரிய செயல் யாதொன்றுமில்லாமல் ஏங்கிப்
பொருமித் தாழ்ந்திருந்து வருந்துகின்றேன். பலமான காமத்தீயும், 79
கௌதமனுக்குத் தோற்றதனால் உண்டாகிய அவமானத்தீயும், சேர்ந்து
என்னை வெதுப்புதல் என்னால் பொறுக்க முடியவில்லை. அவளுடைய
குளிர்ந்த மேனியாகிய நீரிலே தோய்ந்தாலன்றி அவ்வெப்பம் தணி
யாது. உலகத்தார் ஒப்பும் கல்யாணமாகிய வழியால் யான் அடைய 80
முடியாமற்போன அவளை உலகத்தார் ஒப்பாத தப்புவழியால் இப்
பொழுதே அடைய முயல்வேன். அவ்வாறு அடையாவிட்டால் எவ்
விதத்தினாலும் நான் பிழைப்பது அரிதாயிருக்கிறது,' என்று நினைத்து
இந்திரன் தன் சபையை நீங்குவானாய் ஆங்கிருந்தாருக்கு விடை
கொடுத்தான்.

அவன் கௌதமரது ஆச்சிரமமுள்ள வனத்தைச் சேர்தல்

சபையினின்று நீங்கின தேவராசன், தான் வெளியே புறப்படும் 81
போதெல்லாம் வழக்கமாகக் கூடச்செல்லும் சேனை
யையும் பரிசனங்களையும் கூடவராமல் நிறுத்தி
விட்டுத் தனியனாகி, தான் குறித்த பெண்ணை
அடையும்படி அவள் இருக்கும் இடத்தை நோக்கி
வழிச்சென்று, மாலை நேரத்திலே, கௌதமரது ஆச்சிரமத்தைச் சூழ்ந்
துள்ள வனத்தை அடைந்தான்.

வன வருணனை

இலைப் பகுதியே பூவாகப் பரிணமித்துப் பின்பு பழமாகிற 82
தென்று தாவர நூல்வல்லார் சொல்வார்கள். அவ்
வாறே அந்த வனம், இருண்ட பச்சிலையாகிய இரும்
பைச் சிவந்த பூவாகிய செம்பாகச் செய்து, திரும்பவும் மஞ்சள்
வருணமுள்ள பழமாகிய தங்கமாகச் செய்து, * இரும்பைச் செம்
பாக்கித் திரும்பப் பொன்னாக்கும் இரசவாதியரை ஒக்கும். காற் 83
றடிப்பதனால் இந்திரன்முன் அவ் வனம் தலை வணங்கலானது, மழை
பெய்து தன்னைப் பாதுகாக்கின்ற மேகத்தை வாகனமாகவுடைய
அவன் தன் பால் வந்ததனால் உவகை பொங்கி நன்றியறிவுடன்
அவனுக்குத் தலைவணங்கல்போல இருக்கின்றது. இலைகளினின்று 84
சொட்டும் பனிநீரே அருக்கியபாத்தியங்களாகவும், பூக்கள்

---

* 'இரும்பு செம்பானால் திரும்பப் பொன்னாகும்' என்பது ஓர் இரசவாதப் பழமொழி.

வடிக்கும் தேனே ஆசமனீயமாகவும், உதிர்ந்த பூப்பரப்பே ஆசனமாகவும், அவனுக்குக் கொடுத்து அதிதிபூசை புரிந்து, அவனை மிகுந்த விருப்போடு அந்த வனம் வரவேற்காநின்றது.

மா வருணனை

85 அவ்வனத்து மரங்கள், அவன்மேல் விழுந்து அவனைக் குளிர்விக்கும் தங்கள் நிழலே அபிடேக ஜலமாகவும், மலர்களே அருச்சிக்கும் பூக்களாகவும், பழங்களே நைவேத்தியமாகவும் கொண்டு, அவனுக்குப் பூசை செய்கின்றன. அம்மரங்கள் தேவர்க்குப் பூசைசெய்தல் உசிதமென்றும், அவன் தேவர்
86 தலைவனென்றும், தெரியும் அறிவுடையனவா யிருக்கின்றனவோ! அவ்வனத்து மரங்கள், மிகவும் உயர்ந்தவைகளாயிருத்தலால், அவைகளைப் பார்ப்போர் தலைநிமிர்ந்து மேல் நோக்கிப் பார்த்து அதிசயத்தால் வாய் திறக்க, அவர் வாயில் இனிய தேனை வார்த்து உண்பித்தும், ஆகாயத்தை அளாவிய கிளைகளின்மேல் மயில்கள் ஆடுதலைக் கண்டு நேத்திரானந்தமடையச்செய்தும், குயில்கள் பாடுதலைக் கேட்டு சுரோத்திரா
87 னந்தமடையச்செய்தும், இன்பம் அநுபவிக்கும்படி செய்யும். இனிமையான பழங்களை, அவ்வனத்துள் வருவோர்க்கு வாயளவு தாழ்ந்த சில கொம்புகளால் வாயிற் சேர்த்தும், கையளவு தாழ்ந்த வேறு சில கொம்புகளால் கையிற் சேர்த்தும், பின்னும் சில கொம்புகளால் கால் இடறும்படி உதிர்த்தும், இவ்வாறு பலவிதமாகத் தமது பழங்களை எளிதாக அடையும்படி செய்து, அங்கேயுள்ள மரங்கள் எக்காலத்தும் உணவளிப்பனவா யிருக்கின்றன.

கொடி கொம்பு களின் வருணனை

88 அந்த வனத்திலே உள்ள மெல்லிய பூங்கொடிகளும் பூங்கொம்புகளும், குளிர்ந்த பனிநீராகிய நீரிலே முழுகி, அழகிய தளிராகிய பட்டை உடுத்துப், பல நிறம் படைத்த ஒளி மிகுந்த மலர்களாகிய பல வருண மணிகள் இழைத்த ஆபரணங்களை அணிந்து, அசைந்து ஆடிக், காண்போர் கண்
89 குளிர, மாதர்போல விளங்குகின்றன. அந்த வனத்திலே காற்றினாலே அசைகின்ற மரக் கொம்புகளும், அவைகள் மேற்படர்ந்த கொடிகளும், தங்கள் தளிர்களாகிய கைகளினால் தம்மிடம் வரும்படி சைகை செய்து, அங்கே வருவோரை மலர்வாய் திறந்து, 'வாருங்கள்' என்று வண்டிசையினால் அழைத்து வரவேற்க எதிர்கொள்ளும் மாதர்களை யொத்திருக்கின்றன.

மலர் வருணனை

90 மலராகிய மாது, வாசனையென்ற தோழியைத் தூதாக அனுப்பி வண்டாகிய விருந்தை வரவழைத்துத் தேனாகிய
91 அமுதை ஊட்டி விருந்தோம்பும். தம்மைத் தேடிப் பாடி வருகின்ற வண்டுகளுக்குப், பொன்னிறமுடைய மகரந்தப்

பொடியையும் செந்தேனையும் கொடுக்கின்ற காவலர்கள்* தம்மைப்
பாடிவரும் பாவாணர்க்குப் பொன்னைத் தான நீரோடு உதவும் காவலர்
களை† நேரும். பூவானது, தன் வாசனையே தூபமாகவும், தானே தீப 92
மாகவும், தன் தேனே நிவேதனமாகவும், தன்னிடம் வந்து பாடும் வண்
டின் பாட்டே தேவாரப் பாட்டாகவும், சிவபூசை செய்யும். மலரில் 93
வெளியேயுள்ள புற இதழ்கள் கண்ணிமைகள் போலவும், உள்ளே
யுள்ள அக இதழ்கள் கண்ணைப் போலவும், அதன் தேனை உண்ண
வந்து அதன் மத்தியிலிருக்கும் வண்டு கண்மணியைப் போலவும்
இருத்தலால், முன்னோர் 'கண், மலர் ஒக்கும்' என்று சொன்னார்கள்
போலும். கண்டு, கேட்டு, உண்டு, மோந்து, பரிசித்து அநுபவிக்கும் 94
ஐம்புல இன்பங்களும் ஒருசேரப் பெண்ணிடத்து மாத்திரம் உண்டென்
போர், மலரினிடத்தும், அழகு, (வண்டின்) இனிய தொனி, தேன்,
மணம், மென்மை ஆகிய ஐம்புல நுகர்ச்சிக்குரிய பொருள்களும் ஒரு
சேர இருப்பதைத் தெரியார்கள் போலும். பல நிறங்களுள்ளவைகளாய் 95
விரிக்கப்பட்டும் சுருக்கப்பட்டும் விளங்குகின்ற சிறகுகளையுடைய
பூச்சிகள் பூங்கொம்புகளிலே உள்ள மலர்களில் இருத்தல், அந்தப் பூங்
கொம்புகள் போன்ற மாதரது மலர்போன்ற கைகளிலே மடக்கு விசிறி
இருத்தலை ஒக்கும். இந்திரன் அந்தி நேரத்திலே காமத்தை வளர்க் 96
கின்ற அழகு மிகுந்த அந்தச் சோலையிலே நின்று துன்புற்ற பொழுது,
மனம் நொந்து காம பரவசனாய்ப், பின்வருமாறு தன் நெஞ்சோடு
சொல்வானானன்.

'மன்மதன் செய்யும் போரைக் கடக்கக் கருதிப் புறப்பட்ட யான் 97
(சோலையாகிய) அவனுடைய படை வீட்டிலேயே வந்துசேர்ந்தேன்.

வனக்காட்சி முதலியவற்றால் இந்திரன் காமநோய் மிகுதல்

இங்கே (பெண்கள் கூட்டமாகிய) அவனுடைய
படைகள், மயில்கள், மான்கள் முதலிய பல வடிவங்
கொண்டு, என்மேற் போர்செய்பவை போல என்
னருகே வருகின்றன. அவளுடைய அழகிய உருவமானது, ஒரு 98
பொருளும் இல்லாத வெறு வெளிப்பரப்பினும் நான் கண்டு மயங்கித்
துன்பமடையும்படி உருவெளித்தோற்றமாகத் தோன்றும். அப்படி
யிருக்க, அவள் வடிவம்போன்ற பூங்கொடிகளும் பூங்கொம்புகளும்
யான் மோகமுறும்படி நிறைந்திருக்கிற இந்த வனத்திலே எந்த இடத்
திலே யான் அக்கொடி கொம்புகள் அவளைப்போலத் தோன்றிச் செய்
யும் துன்பத்திற்கு உயிர்தப்பப்பெற்றுப் பிழைத்திருப்பேன்? மனித
ருக்கு விருத்தப் பருவத்தில் மற்றெல்லா ஆசைகளும் அற்றுவிட்டாலும் 99
பொருளாசைமட்டும் அற்றுப்போகாது. அதுபோலச் சூரியனுக்குப்

---

* வனமலர்கள் † அரசர்கள்

பால குமார விருத்தப் பருவங்களென்று சொல்லத்தக்க காலே,
மத்தியானம், மாலை என்ற பகல் முப்போதுகளுள்ளே விருத்தப் பருவ
100 மாகிய மாலைக்காலத்திலே சூரியன் அத்தகிரியை* அடைந்தான். மாலைக்
காலமே! நீ கரிய நீர்மேகத்தைச் சிவந்த தீயாகச்செய்து அதற்கு மறு
பேராகச் செவ்வானமென்று பேர்மாற்றி, அந்தச் செவ்வானத் தீயினால்
என்னை அஞ்சும்படியாக வெதுப்புகின்றாயே. அவ்வாறு நீ என்னை
வெதுப்புதற்கு யான் உனக்குச் செய்த தீங்கு யாது? சொல்வாயாக.
101 இந்த மாலைக் காலத்திலே ஒளிக்குக் காரணமான சூரியன் மறைந்த
பின்னும் ஒளி (சாயங்கால வெளிச்சம்) நீங்காதிருத்தலானது, காதலுக்
குக்காரணமான அகலிகை என் முன் இல்லாத போதும் என் காதல்
நீங்காதிருத்தலை ஒக்கும். இவ்வாறு காரணப் பொருள்களில்லாமல்,
102 காரியப் பொருள்களிருத்தல் ஆச்சரியமானதே. பரந்த விடமே
திரண்டு பறவையுருக்கொண்டாற்போலும் கரிய உருவமுடைய
குயிலே! நீ கூவும் குரலும் அவ்விஷத்துக்குச் சமானமே. ஆயினும்,
அமுதுண்டிருக்கும் தன்மைபற்றி, கொல்லுந் தன்மையுள்ள அந்த
விஷத்துக்குப் பயப்படேன்; இந்த உனது தொனியாகிய விஷத்துக்கே
103 பயப்படுகின்றேன். சிவபிரானுடைய திரிநேத்திரங்களுள்ளே ஒரு
நேத்திரமே குளிர்ச்சியானதென்றும் அந்த நேத்திரம் சந்திரன் என்றும்
சொல்லுவோர்கள், அக்கினிக் கண்ணிலும் சூரியனாகிய கண்ணிலும்
இதோ விளங்குகின்ற கொடிய சந்திரனாகிய கண் மிகுந்த வெப்ப
104 முள்ள தென்பதை அறியார்கள்போலும். மாலைப்பொழுதாகிய இயம
னுக்கு, நீலவானம் கரிய உடலாகவும், இப்போது ஒருங்கே தோன்று
கின்ற இளம்பிறைச் சந்திரனும் செவ்வானமும் முறையே பல்லாகவும்
சிவந்த பெரிய வாயாகவும் அமைய, அந்த இயமனுக்கு நான் உணவா
105 யமைந்தேன். சந்திரன் மட்டுமேயன்றி, அது மறைந்தபின், இருளும்
என்னை வருத்துகின்றது. இயமன், கரிய இருள் வண்ணமுடையான்
என்று சொல்வதன் பொருளை இதுவரை யான் தெரியவில்லை. இப்
போதுதான் தெரிந்தேன். எப்படியெனில், இயமன் போலவே
இருளும் பயமடையச் செய்து கொல்லும் தொழிலைப் பொருந்தி
106 யிருப்பதை அநுபவித்துணர்ந்து தெரிந்தேன். புதிதாக மலர்ந்த பூக்
கள்தோறும் புகுந்து அவைகளில் உள்ள மகரந்தப்பொடி, தேன்,
மணம் முதலியவற்றைக் கிரகித்து என்னை எதிர்நோக்கி வந்து மெல்ல
உலாவுகின்ற தென்றற்காற்றும்கூட எனக்கு வருத்தத்தை உண்டாக்கு
கின்றது. இது அதன் குற்றமன்று; என் குற்றமே: வெல்லம் கசப்
107 பது, வாயின் குற்றமேயன்றி, வெல்லத்தின் குற்றமாமோ? தீர்தற்
கரிய சகல வியாதிகளும் சஞ்சீவியாகிய ஒரு மருந்தினால் தீர்ந்துபோம்.

* அத்தகிரி — அஸ்தமனகிரி; பொருள்மலை—பெருந்தனம்.

பாவநோயெல்லாம் சிவபிரானுடைய தாளை அடையவே நீங்கிவிடும். அவ்வாறே, என்னை வருத்துகின்ற பலவகைப்பட்ட காம நோயும் அவளுடைய தோளை அடையப்பெற்றால் தொலைந்தொழிந்து போம்' என்று, இவ்வாறு அவன் பலவிதமாக நினைத்து, செவ்வந்தி வானத்தை 108
யும், வெண் சந்திரனையும், காரிருளையும், பசுந்தென்றலையும் துணையாகக் கொண்டு மன்மதன் செய்யும் துன்பத்தினால் வருந்தி, அகலிகையை அடையும்படி தான் கொண்ட கருத்தை நிறைவேற்று தற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துப் பொறுமையோடு காத்திருந் தான். அவ்விதம் அவன் பதுங்கிக் காத்திருந்த சமயம், ஊடே ஊடே 109
ஆந்தைகள் அலறும் ஒலியே யன்றி, வேறு யாதோர் அரவமுமில்லாத சமயம்; இருள் மிகுந்த சமயம்; அயலார் பொருளை விரும்பும் திருடரும், அயலார் மனைவியரை விரும்பும் சோரரும், கொலை செய்யும் கொடியரும், கொல்லும் மிருகங்களும் அல்லாமல், வேறு யாரும் விழித்திராத சமயம்.

---

## அகலிகை காண்டம்

இந்திரன், கௌதமர் வெளியே போக உபாயஞ்செய்தல்

அப்படிப்பட்ட அந்த நள்ளிரவிலே, கௌதம முனிவருடைய 110
ஆச்சிரமத்தின் அருகே இந்திரன் சென்று, ஒரு கோழி போலக் கூவினான். கூவவே, அவர், விடியற்காலம் கிட்டிய தென்று நினைத்தெழுந்து, காலைக்கடன் கழித்தற்காக வீட்டினின்று விரைவாக வெளியேறினார்.
அவர் மனத்தில், அஞ்ஞான இருள் அணுகாமல், மெய்ஞ்ஞான தீபம் 111
பிரகாசித்துக்கொண் டிருந்தது போல, அவர் கிருகத்தில், உலகம் முழுதும் மூடிய இருள் அணுகாமல், விளக்கு எரிந்துகொண் டிருந்தது.
கௌதம முனிவரின் வடிவம்பூண்டு, இந்திரன், அம் முனிவர் வெளியே 112
போனபின், அந்தப் பரிசுத்தமான கிருகத்தினுள்ளே போக, அவரை வழியனுப்பிவிட்டு அங்கே நின்றுகொண்டிருந்த அகலிகை, வீட்டினின்று போனவர் யாது காரணத்தாலோ திரும்பிவந்தா ரென்று எண்ணி, வழக்கம்போல எதிர்சென்று வரவேற்றாள்.

இந்திரன் அகலிகையைப் பற்றல்

தன்னைக் கணவனென்று எண்ணி வணங்கி வரவேற்று நின்ற 113
அகலிகையின் கையை இந்திரன் பிடிக்கவே, (அவனுடைய பரிசமும் பிடிக்கும் விதமும் கௌதமருடையவைகளினின்று வேறுபட்டிருந்ததனால்) அவன் கௌதம ரல்லனென்று அவள் தெரிந்து கொண்டு, 'சீ! விட்டிடு' என்று சொல்லிப் பின்னிடைந்தாள். பின்னிடையவும் அவன் அதிக இறுக்கமாகப் பிடிக்கவே, அவள் வலையிற் சிக்கிய மயில்போற் பதை

114 பதைத்தாள். அவன், தன் வலக்கையினால் அவள் இடக்கையைப் பற்றி,
தன் இடக்கையினால் அவள் முதுகை அவள் பின்போகவிடாமல் பற்ற,
அவள், வலிய புலியானது பற்களினால் கௌவி நகங்களாற் பற்றிய
115 மான்போலப் பயந்து, கொடிய துன்பமடைந்தாள். அவள், துன்ப
மானது வாள்போல நெஞ்சைப் பிளக்க, வீணே மிகுந்த கண்ணீர்விட்
டழுது, கலங்கிப் பொருமிப் பெருமூச்செறிந்து, வேர்த்து, நடுநடுங்கி,
இன்னது செய்வதென்று தெரியாளாய்ப், பின்வருமாறு தனக்குள்ளே
சிந்திக்கலானாள்.

அகலிகை தன்னுள் வருந்தித் தவித்தல்

116 'நான் யாது செய்வேன்! யாது செய்வேன்! இனி எப்படித்
தப்புவேன்! யான் முந்திய சென்மங்களிற் செய்த பாவங்களெல்லாம்
திரண்டு வந்து யான் தப்ப வழியில்லாமல் என்னைச்
சூழ்ந்து கொண்டனவோ! என் கற்புக் கெடாமல்
தப்பும்படி இந்த நிமிஷமே என் உயிரை மாய்த்துக்
கொள்வேனென்றாலோ, அதுவும், யான் தப்பமுடியாமல் அகப்பட்டுக்
கொண்டிருக்கும் இந்த நிலைமையில் செய்யமுடியாததா யிருக்கிறதே!
எனக்கு நேர்ந்த இத்துக்க சம்பவத்தை ஐயோ! நான் எவ்வாறு சகிப்
117 பேன்! மேகமும் மின்னும் இல்லாமல் வெள்ளிடி விழுந்தாற்போல,
இந்த மிகக் கொடிய ஆபத்து நேர்ந்துவிட்டதே! ஐயோ! கெட்டே
தீரவேண்டியவ ளாகிவிட்ட யான், இந்த விபத்து வருவதன் முன்னாக
அறிந்து தப்பிக்கொள்ள இடமில்லாமற் போயிற்றே! யான் செத்திருந்
தால் நன்மையா யிருக்கும்; அதுவும் நிகழாமற் போயிற்றே! தப்பவா
வது சாகவாவது முடியாமற்போன எனக்கு இப்போது என்ன புகல்
118 இருக்கிறது? என் கற்புக் கெடாதபடி தப்புதற்கோ மார்க்கமில்லை.
சாவோமென்றாலும் அதற்கும் வழியில்லை. அந்தோ! என் விதி நான்
இப்படிப்பட்ட துர்த்தசை அடையும்படியாகவோ இருந்தது! எனக்கு
நேர்ந்த இக்கதி எவளுக்கும் நேருமென்று நான் கனவிலும் எண்ண
வில்லையே! அப்படிப்பட்ட கதி எனக்கே நனவிலேயே நேர்ந்ததே! ஆ!
119 தெய்வமே! இப்போது என்னை, அல்லது இவனை, அல்லது இருவரை
யும், புலி பாய்ந்து கொன்றாலும், இடிவிழுந்து கொன்றாலும், மலை
சாய்ந்து மேல்விழுந்து மாய்த்தாலும், சமுத்திரம் பொங்கிவந்து ஆழ்த்
தினாலும், அப்பொருள்கள் போலத் தூரத்தில் இல்லாமல் இங்கேயே
உள்ள பூமி, வாய் பிளந்து விழுங்கினாலும் நன்மையா யிருக்குமே!
120 இந்தக் கொடும்பாவி, இந்த நள்ளிரவில், திக்கற்ற என்னை வஞ்சனையால்
தன் கைக்குள் சிக்கச் செய்திருக்கிற இந்த மோசத்தின் தன்மையைக்
கவனித்தால், தூங்குவோன் தலையில் கல்லைத் தூக்கிப்போட்டுக் கொல்
லுதலும், சந்தேகப்படாம லிருக்கிறவனை நல்லுணவென்று நம்பச்

செய்து, நஞ்சு கலந்த உணவை உண்பித்துக் கொல்லுதலும், இதற்கு ஒப்பாகுமோ? இவன் வஞ்சகத்தை என்னென்பேன்! சிவபிரா 121
னுடைய திருக்கழுத்திலே சேரப்பெற்றதனால் தனக்கு இயல்பாக உள்ள தீக்குணம் நீங்கியிருந்த விஷமானது, இவனுடைய நெஞ்சிலே புகுந்து வஞ்சகமாகி, நீங்கியிருந்த தீக்குணம் முழுவதையும் திரும்பப் பெற்றுவிட்டதோ? மாதர்கள் கற்பை இழக்கும்படி நேர்ந்தால், உயிரை 122
விட்டு, அக்கற்பைக் காக்கக்கூடுமானால் அவ்வாறு செய்து காத்தல் முறையாம். அவ்வாறு உயிரைவிட்டுக் கற்பைக் காக்கும் புண்ணியமு மில்லாத பாவியேன் இப்படியான சமயத்தில் செய்தற் குரியது ஒன்று மில்லையே?' என்று பலவாறு நினைந்து வருந்தித் தவித்தாள்.

அவள் கற்பழிந்து போமென்று நிச்சயித்து அவ் விரவே சாகத் துணிதல்

'பாம்பு, தன் வாய்க்குள் அகப்பட்ட தவளையைப் பிழைக்கவிட்டா 123
லும், இயமன், தன் கைக்குட் சிக்கிய உயிரைத் தப்பவிட்டாலும், இவன் என்னைச் சும்மா விடமாட்டான்; கற்பழித்தே விடுவான்' என்று நினைத்து அவள் ஒருவாறு மனந் தேறிப் பின்வருமாறு சிந்திப்பாள்: 'தென்றற்காற்று 124
மெல்லென வீசுதலும், சந்திரன் பிரகாசித்தலும், வாசனை பொருந்திய மலர்கள் மலர்தலும், அழகு மிகுந்த மயில்கள் தோகை விரித் தாடுதலும், குயில்கள் கூவுதலும், கற்பழிந்த பின் எனக் குச் சந்தோஷத்தை உண்டாக்கமாட்டா. தீண்டாத குலத்தான் 125
தொட்டிட்ட மட்கலத்தை, அவன் தொடுமுன் ஆண்டுகொண்டிருந்த உயர்குலத்தான் தொடமாட்டா னன்றே! அப்படியே இச்சண்டாளன் தொட்டுக் கெடுத்தபின், என்னை என் நாயகர் தொட மாட்டார். அவருக் காகாதபடி தோஷம் அடைந்து கெட்ட உடலை ஒழித்து நான் இறப் பதே நல்ல வழியாகும். என் கற்பு அழியாமல் காத்தற்கு, என் உயிரை விடமுடியாமற் போய்விட்டது. அப்படிக் கற்பைக் காத்தற்கு உதவா 126
மற்போன உயிரைத் தங்கவிட்டால், "இவள் கற்பழிந்தாள்" என்று பிறர் பழிக்கும் பழி என்னைப் பொருந்தித் துன்புறச்செய்யும். ஆத லால், அப்படி என்னைப் பழிசேர்ந்து பாதிப்பதற்கு முன்னே நான் என் உயிரை மாய்த்துக்கொள்வேன். அவ்விதம் செய்யாவிடில் நான் நிந்தனைக்காளாவதன்றி, என்றும் பிரியாத என் நாயகரைப் பிரிந்து, பிரிவாற்றாமையால் என் உயிர் நீங்குமன்றோ? ஆதலால், இவ்விரவே நான் உயிரை மாய்த்துக்கொள்ளல் மிகவும் நிச்சயம். சற்றும் பற்றில் 127
லாத அந்நியரும், என் நாயகருடைய அருளுக்குப் பாத்திரராய் அவரைக் கண்குளிரக் கண்டு, அவரருகே அமரும் பாக்கியமுடையவரா யிருக்க, முற்றும் பற்றுடையவளாய் அவருக்கு உரிமையாயுள்ள யான், கற்பழிதலால், அவரைப் பார்க்கமுடியாமல், அவர் கண்ணுக்கு

எட்டாத தூரத்திலே துரத்துண்டு நீங்கியபின்பும், உயிரோடிருப்
பேனோ? கற்பிழக்க நேர்ந்தபோது சாவாமற்போனாலும், இழந்தவுடனே
யாவது சாவவேண்டிய யான், வெளியே துரத்தப்படும்வரை உயிரோ
டிருந்தால், அவ்வுயிரை, யான் மாய்க்க வேண்டிய அவசியமில்லாமல்,
128 என் அவமானமே மாய்த்துவிடுமே! யான் இப்போது கற்பழிக்கப்படு
வதனால், எனக்கு நேரிடவிருக்கிற, யான் சாகுமளவும் தொலையாத
துன்பம், தொலைந்தொழியும்படி இவன் என்னைவிட்டு நீங்கினவுடனே
என்னுயிரை மாய்த்துவிடுவேன். ஆதலால், இந்த இரவு என்மட்டில்
விடியமாட்டாது. யானொருத்தி ஒழிய, இந்தப் பூமியில் உள்ள எல்
லோரும் கண்டு களிக்கும்படி, நாளை உதயமாகும் சூரியன் யான்
காணும்படி உதயமாகான். பூமியும் வானமும் அவைகளிலுள்ள எல்லாப்
129 பொருள்களும் எனக்கு இல்லாதனவாய்விடும். பூமியே! வானமே!
வனங்களே! அருவிகளே! மலைகளே! ஆறுகளே! கடல்களே!
மேகங்களே! நீங்கள் எல்லீரும் எனக்கு விடை தருவீர்களாக! யான்
கற்பழிந்து இன்றே இறந்துவிடுவேன். இதுவரை யான் கற்போ
130 டிருந்து கண்டு களித்த உங்களை இனிமேல் காணமாட்டேன். நான்
என்னை மறக்கமுடியுமானாலும், யாரை மறக்கமுடியாதோ, அந்த என்
நாயகரை நான் முன் செய்த தீவினையினால் பிரியும்படி நேர்ந்துவிட்
டதே!' என்று பலபல நினைந்து நெஞ்சு புண்ணாகிக், களைந்து எறி
யப்பட்ட பூமாலை வெயிலில் அகப்பட்டு வாடுதல்போல, வாடி வருத்த
131 மடைந்தாள். 'என்னினும் எனக்கு இனியவராகிய நாயகர் என்னைத்
தள்ளிவிடுவாரென்றால், இனிமேல் யான் உயிரோடிருப்பேனோ?
இப்போதே சாதற்கு இந்தச் சண்டாளன் தடையாயிருக்கிறானே!'
என்று மிகுந்த ஆபத்துக்குள்ளாகிய அந்தப் பெண்மணி மீண்டும்
மீண்டும் இறப்பதையே கருதி மனமொடிந்து நின்றாள்.

132 இவ்வாறெல்லாம் தன் மனத்துள் எண்ணிச் சாகத்துணிந்து
தைரியமடைந்த அகலிகை, தனக்கு இன்னானென்று தெரியாத
இந்திரனை நோக்கிக் கூறுகின்றாள். 'சடையும்
தாடியும் மரவுரியும் தரித்து, என்னுடைய நாயகர்
வடிவம் போலத்தோன்றும் மாய உருவங்கொண்டு,
என்னை வஞ்சிக்கும்படி வந்தோனே! புலித்தோல்
போர்த்துப் புலத்தில் மேய்ந்த எருது அடிபட்

அவள், அவன் செய்கை அபாயமானதென, அவன் தன்னை வெளிப்படுத்தி, அவ்வபாயத்தினும் தன் காமம் கொடியதெனல்.

133 டிறந்தது போல, நீயும் சாவாய். அரசன் இல்லாத சமயத்தில், அவன்
சிங்காதனத்தில் இருந்த கிரீடத்தை, ஓர் ஏழை கண்டு, அதனைத் தன்
தலையில் கணநேரம் சூடிப்பார்க்க ஆசைப்பட்டு அதைத் தொடவே,
அச் சிங்காதனத்தின் மேலாகச் சுழன்றுகொண்டிருந்த ஆக்கினை

சக்கரத்தால் தலை அறுப்புண்டு இறந்தானன்றோ? அந்த அறிவில்லாத ஏழையைப்போல, நீ கௌதம மகருஷியின் தபோபலம் உன்னை யாது செய்யுமென் றறியாமல் தகாத எண்ணங்கொண்டு அவர் பத்தினியைப் பிடித்தாய். உன்னைப்போல அறிவில்லாதவன் எங்கும் இலன். இந்தத் 134
தீயதொழிலைச் செய்யப் புகுந்த உன்னை, என் நாயகர் கண்டால், உனக்கு என்ன பெருங் கேடு நேரும் என்று தெரிந்தாயில்லை. இப்படிச் செய்யப் புகுந்தவன் இந்திரனே யானாலும், அவருடைய கோபாக்கினிக்குத் தப்பிப் பிழைக்கமாட்டானே! அக்கோபத் தீயால், பொங்கு கடல் சூழ்ந்த பூமி முழுதுமே, அக்கடலாகிய பெரிய ஜலத் திரளாலும் தப்பமாட்டாமல், அக்கடலோடு பற்றி எரிந்து சாம்பலாய் விடுமே! நீ நன்றாக ஆராய்ந்து பாராமல் இந்தத் தீச்செயலைச் செய் தாய். நீ மிகவும் அறிவீனன்' என்று கூறினாள். 'இந்திரனும்' 135
என்று தன்னை உயர்த்திச் சிறப்பித்துக் கூறியதைக் கேட்டு மகிழ்ந்த இந்திரன் 'திருமகளும் ஒப்பாகாத அழகுடையாளே! உன்னாலாகிய காமாக்கினியால் தகிக்கப்பட்டுக்கொண் டிருக்கின்றேன். அந்த அக்கினிக்குட்பட்ட யான் அதனிலிருந்து தப்பிப் பிழைத்து வெளிப் பட்டாலன்றோ, உன் நாயகரது கோபாக்கினி என்னைத் தொடுதலும் சுடுதலும் கூடும். நீ சிறப்பித்துக் கூறிய தேவராசனே இப்போது இங்கே உன்னோடு இருக்கின்றான், தெரிவாயாக' என்று கூறினான்.

'நீ! தேவராசனே! நல்லது, அப்படியானால் வேறு எவனாவது 136
இப்படிப்பட்ட கெட்ட செய்கையைச் செய்வானானால், அவன் வருந் தும்படி தண்டிக்கும் ஆக்கினையையும் கடமையையும் உடையவனாயிருக்கின்றாய் ஆகையால், இந்தத் தீச்செய்கையை அருவருத்து என்னை விட்டு விடுவாயாக. இந்தத் தகாத செய்கையினால் உன்னுடைய வெற்றிகள் 137
கறைப்பட்டுவிடும். உன் வீரம் பழுதாய்விடும். உன் வயிரவாள் மழுங்கிப்போம். உன்னுடைய பகைவர்கள் உன்னைப் "போர்த் தொழிலிற் சிறந்த சூரன் அல்லன், அயலான் மனைவியின் கற்பைத் திருட்டுத்தனமாகக் கெடுக்கும் சோரன்" என்று பழித்து வசை கூறுவர்; ஆதலால், வீரனே, என்னை விட்டுவிடுவாயாக. அற்பராயுள்ளோர்க்குப் 138
பழி உண்டானால், அவர் தெரியப்பட்ட இடம் சிறிதாயும், அவரை அறிந்தோர் சிலராயும், அந்தச் சிலரும் அவரைப்பற்றிய எதனையும் நெடும்பொழுது நினையாராயும் இருத்தலால், அந்தப் பழியானது பல இடத்தும் பரவாமல் தோன்றியபொழுதே தோன்றிய இடத்தே மறைந்துபோம். உன்னைப்போன்ற பிரபல சிரேட்டருக்குப் பழி உண்டானாலோ, அது, பல இடங்களிலும், எடுத்துக்கூறப்பட்டுச்

அவள், அவன் செய்கை தகாத தெனல்

சுவர்க்க மத்திய பாதளமாகிய மூன்றுலகங்களிலும் வியாபித்து, இக் காலத்தவரே யன்றிப் பிற்காலத்தவரும் நினைவுகூரும்படி, கவிகளிலும் காவியங்களிலும் சித்திரங்களிலும சிலைகளிலும் வரையப்பட்டு, நீடூழி காலம் நிலைநிற்பதாகும். உன் தீய எண்ணம் நிறைவேறினல் உனக்கு இப்பொழுது எவ்வளவு உயர்ந்த பதவி வாய்ந்திருக்கிறதோ, அவ்வளவு தாழ்ந்த பதவி வந்துவிடும்; ஆதலால், என்னை விட்டுவிடுவாயாக. நீ
139 என்னைக் கற்பழித்து விடுவாயானல், அது தெரிந்தவுடனே, "அயலான் மனைவியை இழிவாக வஞ்சித்துக் கற்பழித்த கொடிய திருடனே என் கணவன்" என்று உன் மனைவியும், "சீ! இப்படிப்பட்ட இழிஞனே எம் தந்தை, இவனுக்கோ நாம் பிறந்தோம், நாம் பிறவாதிருந்தால் நலமா யிருக்குமே" என்று உன் புத்திரரும், "இத்தகைய கேவலமான செய் கையை உடையவனே நமது நண்பன், இவனோடு நாம் நட்புச் செய்ததே தவறு" என்று உன் சிநேகிதரும், "இவ்வளவு வெட்கமான செய்கையைச் செய்தவனையோ நாம் பந்து, நமது பந்து என்று பெருமை பாராட்டினோம்" என்று உனது உறவினர்களும், "இப்படிப் பட்ட துட்டனையோ எங்கள் அரசனைப்போலச் சிறந்த நீதிமானன அரசனில்லையென்று நாம் எண்ணி மகிழ்ந்திருந்தோம்" என்று உன் குடி களும், இவ்வாறு உன்னைச் சேர்ந்த மற்றைய பலரும், தங்கள் தங்கள் மனத்துள் எண்ணி வெட்கமடைந்து உன்னை நொந்துகொள்வார்கள். அவர்களெல்லாரும் அப்படி நொந்துகொள்ளல் நேராமல் என்னை
140 விட்டுவிடுவாயாக. இழிவான களவினல், அச்சத்தின் நடுவிலே, அயலான் மனைவியினிடத்து அடையும் இன்பம், இன்பம்போலத் தோன்றுமே யல்லாமல் உண்மையில் இன்பமாகாது; அது நிலையாமல் நீங்கிவிடும்; துன்பத்தைச் செய்யும்; நிலையான பழியை உண்டாக்கும்; உயிரை அழித்துவிடும்; இறுதியில் எரிவாய் நரகத்தில் தள்ளிவிடுதலும்
141 செய்யும். ஆகையால், என்னை விட்டுவிடுவாயாக. இதனல் உன்னைச் சாரக்கூடிய, பாபத்துக்கு அஞ்சி, பழிக்கு அஞ்சி, அறக்கடவுள் கோபத்துக்கு அஞ்சி, கௌதம மஹருஷியின் சாபத்துக்கு அஞ்சி, உன் நெஞ்சே உன்னைத் துன்புறுத்துவதற்கு அஞ்சி, நரகத்துக்கு அஞ்சி, என்னை விட்டுவிடுவாயாக.

142 'நீ கள்வன்போல இங்கே வந்து செய்யப் புகுந்த கொடிய செய்கையானது, மரத்தைச் சார்பாகப் பற்றிப் படர்ந்து தழைத்துக் கொண்டிருக்கும் கொடியை, அதன் கனிகளில் ஒன்றே பெறும் பொருட்டு வேரோடறுத்து
143 அழித்துவிடுதலை ஒக்கும். ஆதலால் என்னை விரை வாக விட்டுவிடுவாயாக. இந்த ஓரிராத்திரியிலே

அவள், ஒருபோது இன்பத்திற்காக நிலையான கேடு புரியாதபடி வேண்டல்

நடுச்சாமக்கோழி கூவியதுபோல, பல இராத்திரிகளிலும் கூவுமோ?
அப்படியே கூவினாலும் என் நாயகர் இன்று தவறிப்போனது போல
இனியும் தவறி வெளியே போவாரோ? நிகழக்கூடாத இவையெல்
லாம் நிகழ்ந்தாலும், யான் கற்பிழந்தபின்பு உயிர்வாழ்வேனோ? வாழ
மாட்டேன். ஆதலால், என்னை விட்டுவிடுவாயாக. நீ, ஒருவன் 144
மனைவியாக இருப்பதாகவும், அயலானொருவனுடைய வஞ்சனையால்
அவன் கைக்குள் அகப்பட்டுக்கொண்ட தாகவும், அவன் கற்பழிக்க
முயல்வதாகவும், அதனால் நீ கலங்கிப் பரிதபிப்ப தாகவும் பாவிப்பாயாக.
அப்படிப் பாவிப்பாயானால், உடனே என்னை விட்டுவிடுவாய். ஆண்
பாலான நீ பெண்பாலாகப் பாவிக்க உனக்கு வல்லமை இல்லாமற்
போனாலும், நீ என்னைக் கற்பழிக்க முயலல்போல, வேறொருவன் உன்
மனைவியைக் கற்பழிக்க முயல, அப்போது உன் மனைவி என் நிலையை
அடைய, அதனால் உன் மனம் படும் பாட்டையாவது நினைத்துப்
பார்த்து என்னை விட்டுவிடுவாயாக. பொருளைக் கவர்தல் தீயது. 145
உயிரைக் கவர்தல் அதனினும் மிகத் தீயது. மாதர்கள் உயிரினும்
சிறந்த அவர்கள் கற்பைக் கவர்தல், அவ்விரண்டினும் மிகத் தீயது.
இப்படிப்பட்ட கொடுந் தொழிலைச் செய்ய நினைத்தல் தகாது. என்னை
விட்டுவிடுவாயாக' என்று அகலிகை அவனை மன்றாடி வேண்டிக்
கொண்டாள்.

'மன்மதன் எனக்குச் செய்யும் துன்பம் சொல்லமுடியாது. 146
அதன் அளவு, அதற்குக் காரணமாகிய என் காதலின் அளவு
எவ்வளவோ, அவ்வளவே. என் காதலின் அளவோ,
அதற்குக் காரணமாகிய உன் அழகு எவ்வளவோ,
அவ்வளவே யாயிருக்கின்றது. உன் அழகுதான், 147
என்னை, ஊண் உறக்கம் இல்லாமல், இனிய உயிரை

அவன், தன் கையுள் அவள் உற்றதற்குக் காரணம் அவள் அழகே எனல்

யும் பொருளாகக் கருதாமல், எவ்வளவோ தூரம் நடந்து இங்கு வந்து
உன்னைக் கைப்பற்றச் செய்தது. ஆதலால், நீ அவ்வாறு செய்த உன்
அழகை நோவ வேண்டியிருக்க, அதனை நோவாமல், என்னை ஏன்
நோகின்றாயோ தெரியவில்லை. என்னை என் பகைவர்கள் "களவாளி" 148
என்று தூற்றுவார்கள் என்றாய். நீ களவாளியோ? நான் களவா
ளியோ? என்னை நீ அளவில்லாத மையலுக்குள்ளாக்கி என் மனம்
முழுதையும் நீ கொள்ளைகொண்டிருப்பதை நீ கவனிக்கவில்லை
போலும். "விட்டுவிடு", "விட்டுவிடு" என்று பல முறை சொன் 149
னாய். என் முழுமனத்தையும் வஞ்சித்துக் களவுசெய்து வைத்திருக்
கிற உன்னை நான் தேடிப் பிடித்துக் கட்டினேன். களவு கொடுத்த
வர்கள் களவு கொண்டவர்களைப் பிடித்துக் கட்டல் குற்றமாமோ?

150 நீயே சொல்வாயாக. உனது மென்மையான நாவே வன்மையான
வில்லாக, "நான் உன்னை விரும்பேன்" என்று என்னை நோக்கி நீ
கூறிய உன் சொல்லே அம்பாக, அந்த அம்புக்கு என் உயிர் இலக்காக,
"விரும்பேன்" என்ற சொல்லைச் சொல்லுதலே அவ் அம்பை எய்த
லாக, அவ்வாறு எய்தலால் என்னை நீ துன்புறச் செய்தல் புண்ணுறச்
செய்தலாக, என்னைக் கொல்லுதலோ உனது குறிப்பு!

அவன், அவள் கோபகாலத்தழகை வியத்தல்

151 'பேசத்தக்க வரம்பு கடவாமல், நாவை அடக்கிக் காத்துக்
கொண்டு, என் நெஞ்சில் தைக்கும்படி வற்புறுத்திச் சொல்லக்கூடி
யவை யெல்லாவற்றையும் ஒன்றும் விடாமற்
சொல்லி, உன் மனத்தினுள்ளே என்னால் நீ துன்ப
மடைதலை வெளிப்படையாகத் தெரியச்செய்தாய்.
அவ்வாறு வெளிப்படுத்தாமல் உள்ளே அடக்கிய கோபத்தை ஒளியா
மல் நான் தெரிந்துகொள்ளும்படி உன் திருமேனி சிவந்து காட்டு
152 கின்றது*. இயல்பாகச் சிவப்பாயுள்ள உன் தேகம், உன் மனத்தி
னுள்ளே உள்ள கொடுங்கோபத்தினால், அதிகச் சிவப்பானது பெரிய
தோர் ஆச்சரியமன்று. அக்கோபத்தினால் உன் கருங்கண்களே செங்
153 கண்களா யிருக்கின்றனவே! கோபத்தால் அதிகமாகச் சிவந்து விளங்
கும் உன் திருமேனி கோபத் தீயேயாக, உன் கரிய கூந்தல் அத்தீயின்
புகையேயாக, அத்தீச் சடசடவென்று முழங்கிச் சுவாலித்தல்போல,
154 நீ படபடவென்று வார்த்தை வழங்கிப் பிரகாசியாநின்றாய். வன்மை
யான கல்லேயென்று சொல்லும்படியான நெஞ்சுடையாளே! உலகங்க
ளெல்லாவற்றையும் அழிக்கக் கோபாவேசம் கொள்ளும் சங்கார
ருத்திரனே ஒரு பெண்வடிவங்கொண்டு இங்கே தோன்றினாற்போல,
155 நீ கோபங்கொண்டு விளங்காநின்றாய். யான் உன்னைப் பிடித்தவுடன்
உன் மனத்தில் உண்டாகிய பயத்தினால், உன் திருமுகம் ஒளி குறைந்து
பகற்சந்திரன் போல மழுங்கி விளங்கியது; பின்பு நீ பயம் நீங்கித்
தைரியமடைந்து கோபங்கொண்டதனால், அது சிவந்து, உதயமாகும்
156 போது சிவந்து பிரகாசிக்கும் சந்திரனைப்போல விளங்காநின்றது.
இப்போது கோபத்தோடு விளங்குகின்ற உன் முகம், குறுஞ்சிரிப்புக்
கொண்டு மகிழ்ந்து மலர்ந்த மற்ற மாதர் முகங்களினும், அதிக
இனிமையானது. நீ இப்போது என்னைக் கடிந்து கூறிய வன்சொற்
கள், மற்ற மாதர் மகிழ்ந்து கூறும் இன்சொற்களைக்காட்டிலும் இனிமை
157 யுடையவை. எனக்கு உன்னுடைய கோபமுகமும் கொடுஞ்சொல்லுமே
இவ்வளவு இன்பத்தைக் கொடுக்குமானால், சந்தோஷ முகமும் சரச
158 வார்த்தைகளும் எவ்வளவு இன்பத்தைக் கொடுக்கும்! கடுங்கோபம்

* 'வெஞ்சினம் உருவிற்றென்னு மேனியர்' என்பதுபோல.

மிகக் கொண்டிருக்கிற நீ, என்னைக் காலால் உதைப்பாயானால், அத
னால் எனக்கு உண்டாகும் ஆனந்தம், மற்ற மாதர் சந்தோஷம் பொங்
கிக் கையால் என்னை யிறுக அணைத்தலினாலும் உண்டாகமாட்டாது.
இஃது உண்மை. யான் இந்நாளில் உன் காதலை அடையும்படி முயல் 159
கின்றபோது உன்னுடைய கோபம் மூளுதலானது, அந்நாளில் யான்
அமிர்தத்தைப் பெறும்பொருட்டுக் கடலைக் கடைந்த காலத்தில்
விடமெழுந்ததை யொக்கும். அப்படி யெழுந்தவிடம் நீங்கியொழிய, 160
யான் விரும்பிய அமிழ்து அதன்பின் தோன்றியதுபோல, இனி உனது
கடுங்கோபம் மாறி, யான் விரும்பும் உனது காதல் எனக்குக் கைகூடும்.

**அவன் தன் காமத்தின் இயல்பு கூறல்**

‘மலர்கள் நிறைந்த பசிய கற்பகச் சோலையினது குளிர்ச்சியான 161
நிழலின் கீழே உள்ள சிங்காதனத்தின் மேலே, தேவர்களுக்கு அரசனாக
வீற்றிருந்து வாழும் வாழ்க்கையைக் காட்டிலும்,
உனக்கு அடிமையாக வாழ்தல் அதிக இனிமையா
னது. உன் கூந்தலாகிய கற்பகப் பூஞ்சோலையின் 162
நிழலடியிலே, உன் முகமாகிய சந்திரவட்டக் குடையின் கீழே, உனது
செம்பொற்பாதமே என் பொற்கிரீடமாக, என் தலைமேற் சூடி அமர்தல்
போல, உயர்ந்த பதவி ஒன்றுமில்லை. நீ என் செல்வத்தினும் சிறந்த 163
செல்வமாகவும், என் கண்ணினும் சிறந்த கண்ணாகவும், என் உணர்வி
னும் சிறந்த உணர்வாகவும், என் உயிரினும் சிறந்த உயிராகவும் இருக்
கின்றாய். நான் என் வசமிழந்து உன்மேற்கொண்ட காதல் மிகுதி 164
யினால், என் கண்ணாற் காண்பனவும், காதாற் கேட்பனவும், மனத்தால்
நினைப்பனவுமாகிய எல்லாம் நீயேயாகத் தோன்றி, எனக்குப் பூவுலகத்
தும் வானுலகத்தும் வேறுலகத்தும் உள்ள எல்லாப்பொருள்களும்
நீயே ஆனாய். இரவிலும் பகலிலும், வீட்டிலிருக்கும் போதும், 165
வெளியே சென்றுகொண் டிருக்கும்போதும், உன்னைப்பற்றிய சிந்த
னையே என் மனத்தில் நீங்காது குடிகொண்டிருக்கின்றது. உன்
காதலினாலேயே, நான் உயிர்வாழ்கின்றேன். இது மெய்யே; சந்தே 166
கிக்கவேண்டாம். நீரிலே வாழ்கின்ற மீன், நீரை நீங்கினால் உயிர்
போய்ச் செத்துவிடும். அது போலவே, உன் காதலே உயிர்ச் சார்பாக
வாழ்கின்ற யான், உன் காதலை நீங்குவே னானால், இறந்துபடுவே
னென்பது உண்மை. நான் கருப்பையிலிருந்த காலமுதல் துடித்துக் 167
கொண்டிருக்கும் என் இருதயத்தின் கடைசித் துடிப்பு அடங்கினாலும்,
நான் பூமியிலே பிறந்த உடனே தானும் பிறந்த என் சுவாசத்தின்
கடைசி அசைவு ஒடுங்கினாலும், எமன் என் உயிரைப் பிடித்துக்
கொண்டு போனாலும், யான் உன்மேற்கொண்ட காதல், என் கருத்தை
விட்டொழியாது.

168 ‘உன்னைக் கண்டமாத்திரத்திலே உன்மேற் காதலுற்றேன்.
உடனே மற்றெல்லா மாதர்களும் வேம்பு போன்றவராய் வெறுக்கப்

*அவன், அவள் இணங்கும்படி பலவாறு வேண்டல்*

பட்டவர்களானார்கள். உன் காதற்கடலில் வீழ்ந்
தேன். அதன் கரைகாணாமல் ஆழ்கின்றேன். நீ
இரங்கி உன் பாதமாகிய தெப்பத்தைத் தந்து காப்
169 பாற்றுவாயாக. நீ எனக்கு எசமானியாக, நான்
உனக்கு ஏவல் செய்யும் அடிமையாகவும், நீ நெடுங்காலம் தேடி
அடைந்த குருவாக, நான் உன் சொற்படி நடக்கும் சீடனாகவும், நீ
வேண்டும் வரமெல்லாம் தந்தருளும் தெய்வமாக, நான் உனக்கு அன்பு
செய்யும் தொண்டனாகவும், உற்றிருந்து கீழ்ப்படிந்து வாழும்படி நீ
170 என்னை ஆட்கொண்டு ஆண்டருள்வாயாக. நீ மனம் இளகி இரங்கி
முகமலர்ச்சி காட்டிக் குறுஞ்சிரிப்புத் தோன்றக் காதலோடு என்னைக்
கடைக்கண்ணாற் பார்த்து “நான் உன்னை ஆட்கொண்டேன்” என்று
171 ஒரு வார்த்தை சொல்லியருள்வாயாக. நான் உன்னை அதிகமாக
நேசிப்பதாகிய ஒரே ஒரு குற்றமல்லாமல் வேறு எந்தக் குற்றமும்
உண்மையாகவே செய்தறியேன். உன் பொருட்டு என் அருமையான
உயிரையும் தியாகஞ்செய்யச் சித்தமாயிருக்கிறேன். ஆதலால், நீ
172 என்னைக் காதலிப்பாயாக. நான் உன்னைக் காதலிக்கும்படி என்
முன்பு துணிவாக வந்து என் மேல் அம்பு எய்யும் மன்மதன், நீ என்னைக்
காதலிக்கும்படி உன்மேல் அம்பு எய்ய உன் முன்பு துணிந்து வரமாட்
டான். பலசாலியாய் ஆண்பாலாக உள்ள என்முன் அஞ்சாமல் வருப
வன், அபலையாய்ப் பெண்பாலாக உள்ள உன்முன் ஏன் வரமாட்
டானென்றால், அவன் உன்முன் வந்தால், உன் பேரழகைக் கண்டு,
யாரையும் மயக்கும் தானே மயங்கி மோகசமுத்திரத்தில் மூழ்கிச்
173 சாவாது தப்பமாட்டோமென்ற பயத்தினால் என்க. நான் உன்னைக்
காதலித்த உபகாரத்திற்குப் பிரதி உபகாரமாக, நீ என்னைக் காதலிக்கச்
சம்மதிக்காவிட்டாலும், நீ, அற்பரான ஏழைகள்மேல் இரக்கங்கொள்
ளல்போலவாயினும் என்மேல் இரக்கங்கொண்டு, என்னை மன்மதன்
174 கொன்றுவிடாமல், எனக்கு உயிர்ப்பிச்சை அளிப்பாயாக. உனக்குத்
தேக அழகை இவ்வளவு மிகுதியாகக் கொடுத்த பிரமதேவர் மன
இரக்கத்தையும் அதிகமாகவே கொடுத்திருப்பார். ஆதலால், அந்த
இரக்கத்தில் ஒரு சிறிதுகொண்டு நீ என் உயிரைக் காப்பாற்றுவாயாக.
175 மனத்தைச் சந்திரன் கவர்தல் போலக் கவர்கின்ற மாதே! அந்த
மதிக்கு மறுவிருப்பதுபோல உனக்கும் ஒரு மறு இருக்கின்றது. அது
உன் கற்பே. அதை என் நிமித்தம் நீக்குவாயானால், நீ மறுவற்ற
176 முழுமதியை நிகர்ப்பாய். இலக்குமி தேவியைப்போன்ற வனப்புடைய
வளே! தேவர்கள் உண்டறியாத புதிய அமுதமானவளே! நீ இப்போது

கிருபைசெய்தால், உன்பால் எனக்குள்ள காதலை என்றும் மாருத தாய் நிலையானதாக்கும் அடையாளமாக முத்திரையிடல்போல, உன் முகத்தில் முத்தமிடுவேன். எனக்கு இரண்டு வரங்களே வேண்டும்; 177
அவ் இரண்டையுங்கொடுக்க மனமில்லா திருந்தால், ஒன்றேனும் கொடு; அதனல் திருப்த்தி அடைவேன். நான் கேட்கும் இரண்டு வரம் எவை என்னில், சொல்லுகின்றேன் கேள்; ஒரு வரம் நான் உன் முகத்தில் முத்தமிடுதற்கு நீ சம்மதித்தல்; மற்றொரு வரம் என் முகத்தே நீ முத்திடுதல். யான் கண்ணுற் கண்டும், காதாற்கேட்டும், 178
மூக்கால் மோர்ந்தும், நாக்கால் உருசித்தும், தேகத்தால் பரிசித்தும், அனுபவிக்கப்படும் எல்லா ஐம்புல அனுபவங்களையும், இதற்கு முன்பே உன்பால் அடைந்திருக்கின்றேன். இது பொய்யன்று, மெய்யே. எவ்வாறென்றால், சொல்வேன் கேள்; சொப்பனத்திலே இவ்வனுபவங்களை உன்பால் அடைந்திருக்கின்றேன். நாம் சாக்கிர நிலைமையில் இருக்கும்போது சாக்கிரம் எப்படி உண்மையாக இருக்கின்றதோ, அப்படியே நாம் சொப்பன நிலைமையிலிருக்கும் வரையும் சொப்பனமும் உண்மையாகவே இருக்கிறதென்பது யாருக்கும் அனுபவசித்தமான உண்மையன்றோ? நீயே கூறுவாயாக.

'சோர்ந்து தூங்கும் காலத்திலே தோன்றிய சொப்பனத்திலே 179
என்பால் வந்த உன்னைத் தப்பிப்போகவிடாத நான், தெளிவாய் விழித்திருக்கும் இந்தச் சமயத்திலே சிக்கிய உன்னைத் தப்பிப்போக விடுவேனே? விடமாட்டேன். விடுவேன் என்ற எண்ணத்தை அறவே ஒழித்துவிட்டுச் சந்தோஷமாக என் கருத்துக்கு இணங்குவாயாக.

அவன், தன் கருத்தை நிறைவேற்றுமல் அவளை விடே னெனல்

இந்தப் பூவுலகமேயன்றி மற்றெல்லா உலகங்களிலும் உள்ள இன்பந் 180
தரும் பொருள்கள் எல்லாம், ஒருங்கே திரண்டு ஒரு பெண்ணுருக் கொண்டு, யான் பல சன்மங்களிலும் செய்த தவங்களின் பயனுக, என் கைக்குள் வரப்பெற்றேன். அப்படிப்பெற்ற பாக்கியமாகிய உன்னை விடுவேனே? விடமாட்டேன்; விடமாட்டேன். மறந்தும் விடமாட்டேன். செல்வத்தை விரும்பி அதை ஒருநாள்போலப் பல 181
நாளும் இடைவிடாமல் வருந்தித் தேடியும் பெறுமல், தன் வாழ்நாள் பலவும் கழிந்த ஒரு பெருந் தரித்திரன், கையிலே பெரும் பொருள் அகப்பட்டால், அவன் அதைப்பேணிக் காப்பாற்றுமல், கையசலவிடல் எங்காயினும் உண்டோ! சொல். ஒரே ஒரு பொருள் தவிர, என் 182
உயிரையும் உள்ளிட்ட மற்றெல்லாப் பொருள்களையும் யான் ஒருமிக்க இழக்கும்படி நேரிட்டாலும், அதற்காக மனவருத்தம் அடையமாட்டேன். மற்றைப் பொருள்களுள் ஒன்றையும் இழக்காமல், மேலே

விலக்காகக்கூறிய ஒரு பொருளைமட்டும் இழப்பேனானால், நான் சகிக்க
183 முடியாத வருத்தம் அடைவேன். அந்தப் பொருள் நீயே. என் உயிரானது, அதற்குரிய யானே அறியாமல், எப்படியோ மாயமாக என் தேகத்தைவிட்டு வெளியேபோய்க், கொடிய வாள்போன்ற கண்ணையுடைய ஒரு பெண்ணாக வேடம்பூண்டு, இங்கே என் எதிரே தோன்றியது. உடனே அதைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டேன். இனி அதைத் திரும்பவும் என் தேகத்தினின்று பிரியவிடமாட்டேன்.
184 இது சத்தியம். பசியால் செத்துவிடப்போகிறவன் கையில் அகப்பட்ட சாவாமருந்தாகிய தேவாமிர்தத்தைத் தூரத்தே எறிந்துவிடு என்றால், அவன் அதை உண்ணாமல் எறிந்துவிடுவானோ? அவ்வாறே, யான் கொண்ட கருத்தை நிறைவேற்றாமல் உன்னை விடுதல் சாத்தியமானதன்று.
185 இதனை அறிவாயாக. இப்போது நாம் இருவர்மாத்திரம் இருக்கின்ற இந்த ஆச்சிரமமானது, சனசஞ்சார மில்லாத காட்டின் நடுவிலே இருக்கிறதென்பது உனக்குத் தெரியாததன்றே. இந்தச் சமயத்தில் உன் கணவரோ வெகுதூரம் போயிருக்கிறார். ஆகையால், உனக்குத் துணையாக உதவுவார் ஒருவரும் இலர். யான் வலிமையால் என் கருத்தை நிறைவேற்றுவேனானால், என்னைத் தடுத்தற்கு யார்
186 இருக்கின்றார்கள்? சொல்வாயாக. என்னுடைய அருமையான உயிரை விட்டாலும், அந்த உயிரினும் இனிமையான உன்னை விடமாட்டேன். நீ நெஞ்சு உவந்து சம்மதித்தலே, இந்தச் சமயத்தில் செய்யத்தக்கதாக இருக்கின்றது என்பதை ஆலோசித்துத் தெளிந்து, நான் மன்மதனாற் சாவாமல் பிழைத்திருக்கும்படி தயை செய்வாயாக' என்றான்.

187 'நீ உன் காமக் கருத்து நிறைவேறவில்லையானால், செத்தேவிடும்படி நேருமென்று கூறி, பிறர் மனைவியரை விரும்பாமையாகிய

அவள், ஒழுக்கத்தின் உயர்வுகூறி, அவன் தீய கருத்தைத் தவிர்க்கச் சொல்லல்

ஒழுக்கத்தை அழிக்கவும், அதனால் உயிரைக் காக்கவும் முயற்சிசெய்கின்றாய். ஒழுக்கமானது, உயிரைக் காட்டிலும் அதிகமாகப் பேணிப் பாதுகாத்தற்குரிய சிறப்புடையதென்று சான்றோர் கூறும் நீதி
188 வசனத்தின் சிறந்த பொருளை நீ தெரியவில்லையோ? அழிந்தொழிந்துபோம் தன்மையுடைய உடல் பொருள் ஆவி மூன்றினும், ஒழுக்கம் சிறந்ததென்னும் உண்மையை, அறிவுடையோர் மறுக்க வொண்ணாதவாறு மெய்ப்பித்து நிலைநிறுத்தியிருக்கின்றார்கள். எக்காலத்திலும் எத்தேசத்திலும் உயிரைக் காக்கும்பொருட்டு, ஒழுக்கம் தவறுதல் சிற்
189 றறிவுடையோர் செயலாம். ஒழுக்கம் உண்மையாக உயிரைக் காத்தற்கு இன்றியமையாதது. ஒழுகத்தை விட்டால், உடனேயோ, தாமதித்தேயோ, அதை விட்டமை காரணமாக, உயிரையும் விடும்படி நேரும்.

ஆதலால், ஒழுக்கத்தை அழித்தால், அதனோடு உயிரும் அழிதல் நிச்சயம். ஒழுக்கத்தைப் பேணுவோரே உயிரையும் பேணுவோர். இந்த உண்மை, நூல்களை நன்காராய்ந்த அறிவுடையோர் சந்தேகமின்றித் தெளிவாகத் தெரிந்ததாம். நல்வழியிற் செல்வோர் துன்பம் அடையும் 190
படி நேரிட்டாலும், அந்தத் துன்பமும், தான் நிலையாததாய்ப் பின்பு நிலையான இன்பத்தைத் தருதலால் இன்பமேயாம். அல்வழியிற் செல்வோர் இன்பமடைந்தாலும், அந்த இன்பமும் தான் நிலையாததாய்ப் பின்பு நிலையான துன்பத்தைத் தருதலால் துன்பமேயாம். நல்வழியைக் கடைப்பிடித்தவர்களது தோல்வியும், தோற்றத்தில் தற்சமயத்தில் தோல்வியேயாயினும், உண்மையில் நிலைத்த வெற்றியே; அவ்வாறே அவர்கள் நஷ்டமும் இலாபமே; அவர்கள் செத்தாலும், நிலையாகப், புகழுடம்போடு இவ்வுலகத்திலும், புண்ணிய சரீரத்தோடு பரலோகத்திலும் வாழ்வோரே. இது சத்தியம். ஒரு சமயத்தில், மன 191
மானது, தன் செய்கை தீங்கானதென்று தெரியாமல், தடுத்தும் அடங்காமல், காமவெறிகொண்டு அவசமாய்விட்டாலும், பின்பு அறிவினால் அதை வசமாக்கி நல்வழியிற் செலுத்துவார்கள் அறிவுடையோர். அவ்வாறு செய்தலே உனக்குத் தகுதியுடையதாம். மனமும் தீயும், அவை 192
களை அளவு கடவாமல் அடக்கி ஆள்வோர்களுக்கு மிகவும் உபயோகமாக வேலைசெய்கின்ற நல்ல சேவகராம்; அவைகளை மிதமிஞ்சி அடங்காமற் போகும்படி விட்டுவிடுவோர்களுக்கு, அவைகள் மிக்க பெருங்கேடு விளைக்கும் பொல்லாத எசமானர்களாம். இதைச் சிந்தித்து நீ உன் மனத்தை அடக்கி ஆள்வாயாக. மனத்தை அடக்கும் வல்லமை 193
உடைமையால் தவம்செய்வோர் முனிவர்கள். அம் முனிவருட் சிறந்தோர் அகத்தியர் முதலிய சத்தருஷிகள். அவர்களெல்லாரினும் அதிகமாக நீ மனத்தை அடக்கி ஆளும் சக்தியுடையவனாதலால், அவர்களால் ஆகாத அரும்பெரும் தவஞ்செய்து, அவர்களை ஏவலராகக் கொண்டு, அவர்களுக்கு இறைவனாய், அவர்கள் சுமக்கும் சிவிகைமேல் ஏறி வீற்றிருந்து செலுத்துவோனாயிருக்கின்றாய். அப்படிப்பட்ட நீ, உன் மனத்தை அடக்கி ஆளக்கருதினால், அது முடியாததன்று. ஆதலால், இப்போது பிறன் மனைவியை விரும்பும் கெட்ட வழியிலே சென்றுகொண்டிருக்கும் உன் மனத்தைத் திருப்பி நல் வழியிலே செல்லச் செய்வாயாக.

அவள், பகைவரிடத்தன்றி, பெண்பாலரிடத்தில் வலி செலுத்தல் தகாதெனல்

194 'வலாற்காரம் செய்வேனென்று சொன்னாயே. அப்படிச் சொல்
லியதற்குக் காரணம் யாது? என்னை, உனக்குப் பலத்த பகையா
யிருந்த விருத்திராசுரனாகவேனும், வலாசுரனாகவே
னும், சிறகுகள் உள்ள மலையாகவேனும், நினைத்
தாயோ? உன் பகைவர்களிடத்தில் வன்மையுடன்
செலுத்தற்பாலதாகிய உன் பேராற்றலைப் பெண்
195 பாலாகிய என்னிடத்தில் செலுத்த எவ்வாறு எண்ணினாய்? பெண்
ணென்றால் கொடிய பேயுங்கூட மிகுதியாக இரக்கங்கொள்ளுமே. நீ
என் கண்ணை விரும்பினாலும் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன்.
ஏற்றுக்கொள்வாயாக. யான் இப்போது கூறுவது உறுதியானதே.
என் இனிய உயிரையே நீ வேண்டினாலும் கொடுப்பேன்; தடை
சொல்லமாட்டேன். இரக்கமுற்று என் கற்பைமட்டும் நீக்காதிருப்பா
196 யாக. தேவதேவனாகிய பரமேசுவரன்மேலும், மற்றெல்லாத் தெய்வங்
களின்மேலும், உன்னுடைய செங்கோலின்மேலும், கொடிய பகைவர்
களை வென்று விளங்கும் உன் வீரத்தின்மேலும், ஆணை வைத்தேன்.
என் கற்பை அழியாதிருப்பாயாக.

அவள், கற்பின் மேம்பாடு கூறி, அதை அழியாதிருக்க வருந்தி இரத்தல்

197 'மாதர்களுக்குத், தங்கத்தினாலும் இரத்தினங்களாலும் செய்யப்
பட்ட ஆபரணங்க ளெல்லாவற்றிற்கும் மேலான ஆபரணமாகவும்,
பிரகாசிக்கும் ஆடைகள் யாவினும் உயர்ந்த ஆடை
யாகவும், இனிய உயிரினும் சிறந்த உயிராகவு
முள்ளது கற்பு. அவர்களுக்கு அதை இழந்த
லால் உண்டாகும் துன்பம்போன்ற துன்பமும்
198 உண்டோ? எந்த ஒரு பொருளிருந்தால்மட்டும், எனக்குள்ள எப்
பொருள்களும் உள்ளனவாகப் பயன்படுமோ, எந்த ஒரு பொருளில்லை
யானால், எனக்கு மற்றெல்லாப் பொருள்களும் இருந்தாலும் இல்லா
தனவே போலப் பிரயோசன மற்றவைகளாய்விடுமோ, அந்த ஒரு
பொருள் என்னுடைய கற்பே. அதை நீக்குவதைக் காட்டிலும் நீ
199 எனக்குச் செய்யக்கூடிய கொடிய துன்பம் யாதிருக்கின்றது? யான்
என்னுடைய கற்பை இழந்தேனானால், எல்லாம் இழந்தவ ளாவேன்.
என் கற்பை நீ நீக்கினால், நிலையாத இன்பமும் நிலையான நரகமும்
200 தொலையாத பழியுமல்லாமல் யாது பெறுவாய்? சொல்வாயாக. நீ
என்னை உன் உயிரினும் இனியவளென்று சொன்னாய். அப்படிப்பட்ட
என்னுடைய இனிய உயிரினும் அதிக இனிமையான என்னுடைய
கற்பை 'அழிப்பேன்' என்று சொல்லுதற்கு எப்படி உன் நாக்கு எழுந்
ததோ தெரியவில்லை. கற்பழிப்பேனென்று எண்ணியதே தகாதது. ஆத
லால், கற்பழிப்பேனென்று சொல்வதை ஒழிப்பதேயல்லாமல் அந்த

எண்ணத்தையுங்கூட ஒழித்துவிடுவாயாக. நீ என் கற்பைமட்டும் 201
அழிக்காது விடுவாயானால், என் உடலைக் கூறுகூறாக வெட்டி, என்
உயிரையும் உடலையும் வேறுவேறாகப் பிரியும்படி சித்திரவதைசெய்து
கொல்ல விரும்பினையானாலும், அதற்கு விரோதமாக உன்னைத் தடுக்க
நினைக்கவுமாட்டேன். நீ என் கற்பை நீக்காமல் என்னுயிரை நீக்கப் 202
புகுந்தாயானால், அதற்காக நான் உன்னைக் கும்பிடுவேன். உனக்கு
நன்றியறி வசனங்கள் வழங்குவேன். சாவில்லாமற் பல்லூழி வாழ்வா
யாக என்று வாழ்த்துவேன். இது சத்தியம்' என்று அகலிகை
அவனை இரந்தாள்.

' "கணவனொழிய வேறெந்த ஆடவனுடைய ஆடையாவது, அந்த 203
ஆடையிலே தோய்ந்த நீர்த்துளியாவது, அவன் நிழலாவது, அவன்

அவன் சில போலி நியாயங்கள் கூறி, அவளை இணக்க முயலல்.

மேற்பட்ட காற்றாவது, தம்மேற்படாமல் மாதர்கள்
விலகித் தங்கள் கற்புக்குக் குற்றம் வராமல் காத்துக்
கொள்வாராக" என்று பெரியோர் கூறுவார்கள்.
அப்படியிருக்க, நான் உண்மையாக உன்னைத்
தொடுதலே செய்துவிட்டபின்பு உன் கற்புக் கெடாமல் இருக்கிற
தாமோ? அது போய்விட்டதன்றோ? நான் நெருங்கி உன்னைத் 204
தொட்ட கணத்திலேயே உன் கற்பு அழிந்துபோய்விட்டது. போன
கற்போ இனி ஒருபோதும் திரும்பமாட்டாது. எந்த நல்விரதத்தைக்
காத்தற்காகச் சுகத்தை அடையாமல் மறுத்துக்கொண்டிருந்தாயோ,
அந்த நல்விரதமாகிய கற்புக் கெட்டபின்பு, அதன் பொருட்டு அடையா
திருந்த சுகத்தை அடைதற்குத் தடையாக உள்ளது யாது? ஒன்றுமே
இல்லை. இதனைத் தெளிவாக அறிந்து விரைவாகச் சம்மதிப்பாயாக.
இப்போது தாமதம் செய்யாமல், நீ சம்மதிப்பாயானால், அப்படிச் 205
சம்மதித்ததை ஒருவரும் அறியமாட்டார்கள். உன் கணவனுக்கு
உன்னைப்பற்றிச் சந்தேகம் சிறிதும் உண்டாகாது. செய்யப்படாத
குற்றங்களைப்பற்றி யார் பேசுவார்கள்? ஒருவரும் பேசார். அது
போல, பிறர் அறியாமற் செய்யப்பட்ட குற்றங்களைப்பற்றியும் எவர்
களும் பேசமாட்டார்கள். நீ உடன்பட்டாயானால், அப்படி உடன் 206
பட்டதை, நான் உன் சிநேகனாதலால், ஒருவருக்கும் சொல்லேன்;
உனக்கு விரோதமாக நீயும் சொல்லாய்; ஆகவே, அதைப் பிறர்
எவ்வாறு அறியக்கூடும். நாம் நம்மனத்தினுள்ளே உள்ள எண்ணத்தை
வெளியாகச் சொல்லவில்லையானால், அவ்வெண்ணத்தை யார் தெரிதல்
கூடும். அதுபோலவே, உன் சம்மதமும் ஒருவரும் தெரியாததாகும்.
"அரசன் கையைப்பிடித்தால் விதிவசம்" ஆக நேர்ந்ததென்று, மாதர் 207
கள், தடைசெய்யாமல் சம்மதித்தலே கிரமமாக ஏற்பட்ட நியாயம்

என்று, முன்னோர் கூறும் மூதுரையைச் சிந்தித்துத் தேர்ந்து,
பூலோகத்திலுள்ள பல அரசருள் ஒருவனாயில்லாமல், தேவலோக
முழுவதையும் ஏக சக்கராதிபதியாக ஆளும் தேவ ராசனை எனக்கு
208 இம்மியும் தாமதஞ்செய்யாமல் சம்மதந்தருவாயாக. அரசர்க்கு ஆறி
லொரு கூறு உரியதென்று சொல்லுகிற முறைப்படி, உன் நாயகன்
அவன் தவத்தில் ஒரு கூறு தந்து வருகின்றான். அதுபோல, நீயும்,
209 உன் கற்பில் ஒரு கூறு எனக்குக் களிப்புடன் கொடுப்பாயாக. "இந்தா!
முத்தம் தருகிறேன்" என்று நீ தருவாயானால், அதற்குக் கைம்மாறாக,
யான் உனக்கு என்னுடைய சிந்தாமணி முதலிய செல்வப் பொருள்
களெல்லாவற்றையும் தருதலல்லாமல் தேவாமிர்தத்தையும் தருவேன்.
அதை நீ உண்டு தேவர்கள்போல என்றென்றும் சாவாமல் வாழ்ந்திருப்
பாய்' என்று இந்திரன் கூறினான்.

**அவள், அந்த நியாயங்களின் போலித் தன்மையை விளக்கி, இணங்க மறுத்தல்**

210 'மாதர்கள் மனத்திலே காமக்கருத்துச் சிறிதும் அணுகாமல் அவர்
கள் கற்புநிலை திரியாதிருக்கும் வரை, அவர்கள் சரீரத்தில் பர புருடர்
வஸ்திரம் பட்டாலும், தேகமே பட்டுவிட்டாலும்,
211 யாதொரு தோஷமும் இல்லை. நீ என்னைத் தொட்ட
தனால், என் கற்புத் தொலைந்துவிட்டதென்று கூறு
வது, ஒருவன் தன் பகைவனது கோட்டையைச்
சுற்றியுள்ள வெளிப்பக்கத்தைச் சமீபித்த மாத்திரத்திலேயே, அந்தக்
கோட்டை பிடிபட்டுவிட்டதென்று சொல்வதை ஒக்கும். அழியாத
கற்பை அழிந்ததாகவும், பிறர் அறியாமற் செய்த குற்றமும் செய்யவே
படாத குற்றமும், எனவே குற்றமும் குற்றமின்மையும் சமமென்ப
தாகவும், நீ உண்மையைப் புரட்டிக் கூறும் வார்த்தைகளால் நீ
அடையக்கூடிய பிரயோசனம் ஒன்றுமில்லை. என்னை விட்டுவிட்டுப்
212 போவாயாக. ஒருவன் பிறர் அறியாமற் செய்யவேண்டுமென்று செய்த
குற்றத்தை ஒருவரும் அறியாமற்போனாலும், அவனுடைய மனச்சாட்சி
யும் அறியாமற்போகுமா? எங்கும் எப்போதும் நிகழும் எல்லா
வற்றையும் சருவசாட்சியாக நின்று அறியும் கடவுளுக்குத் தெரியாமல்
குற்றம்செய்ய வல்லவன் எவனாயினும் இருக்கின்றானோ? கூறுவாயாக.
213 மனைவியாயுள்ளாள் ஒருத்திக்கு அவள் கணவனே அரசனாவான்;
அவளுக்குத் தெய்வமும் அவனே; தகுதியான தருமமும் அவனே;
214 தருமபலனும் அவனையல்லாமல் வேறில்லை. அரசர்கள் தவசி
களுடைய தவத்துக்கு இடையூறு வராமல் பாதுகாப்பதற்காக, அத்
தவசிகளின் தவத்திற் பங்கு பெறுவதில்லை; தபோபலத்தில்தான்
பங்கு பெறுகிறார்கள். அதுபோல என் கற்பின் பயனில் ஒரு பங்கு
தான் உனக்கு உரியதாம்! கற்பில் ஒரு சிறிதும் உரியதாகாது.

நீ கற்பைக் காக்கும் கடமை பூண்டுள்ளாய். அப்படியிருக்கவும், காவாது 215
சும்மா இருத்தலோடமையாமல், அதனைக் கெடுக்கும் கொடிய
நினைப்பைக் கொண்டாய். இது வேலியே பயிரை மேய்ந்தாற்
போலிருக்கிறது. உலகத்திலே மகாஞானிகளாயுள்ளார் முயல்வ 216
தெல்லாம் மாறி மாறி வரும் பிறவித் துன்பத்தினின்று நீங்கி நிலை
யான முத்தியின்பத்தை அடைதற்கே. அவ்வாறிருக்கவேயும், கற்பு
நெறி வழுவாமல் உயிர்வாழும் மாதர்கள், தம் கற்பைக் கைவிடுவதனால்
பிறவிக் கடலினின்று மீண்டு முத்திக்கரையேறக் கூடுமானாலும்,
அதற்காகவும் தங்கள் கற்பை விடமாட்டார்கள். கற்பை விட்டு
அடைகிற கயிலாய வைகுந்தாதி பதவிகள் எதனினும் கற்பை விடா
மல் அடையும் நரகம் சிறந்ததாகும். பூலோக ராச்சியமும் தேவலோக 217
ராச்சியமும் நிலையாதவைகள்; அவைகள் நிலைத்தவைகளாயினும்,
அவைகளை ஆளப்பெற்றோர்களுடைய ஆயுள் நிலையாதது: நான் உனக்கு
இணங்கினால், அப்படிப்பட்ட இரண்டு லோக ராச்சியங்களையும் என்
றும் நிலைநிற்பவைகளாகச்செய்து, அவ்விராச்சியங்களை, நான் என்
றென்றும் ஆளும்படி மரணத்தை நீக்கும் தேவாமிர்தத்தோடு கொடுப்
பாயானாலும், அந்த நன்மையை அடைதற்காகவாவது, இணங்காவிட்
டால் என்னை நரகத்தில் தள்ளுவாயானாலும், அந்தத் தீமையை விலக்
குதற்காகவாவது, நான் என் கற்பைக் கைவிடமாட்டேன். ஒருவன்,
தன்னை யிழப்பதனால், அனுபவித்தற்குரிய எல்லாப் பொருள்களும்
அடங்கிய உலக முழுவதையும் பெறலாமானால், அதனால் யாது பிர
யோசனமுளது? ' என்று அவள் கூறி மறுத்தாள்.

' "மயிலே, மயிலே, இறகு கொடு" என்று வருந்தி யிரந்தாலும் மன 218
மிரங்கித் தானே கொடுக்குமோ? வாலைப் பலமாகப் பிடித்து வலிதாகப்
பிடுங்கினால்தான் கொடுக்கும். நீ அவ்வித மயி
லின் குணமுடையவளாயிருக்கின்றாய். கரும்பை 219
வன்மையாக ஆலையில் இட்டு அரைப்பதே, அதன்

அவன், வலிந்து தன் கருத்தை முடிக்கத் துணிதல்

இரசத்தைப் பெறுதற்குத் தக்க உபாயம். கரிய அகிற்கட்டையின்
இனிய வாசமுள்ள புகையைப் பெறுதற்கு, அக்கட்டையை நெருப்பி
லிட்டுக் கருக்கலே ஏற்ற முறை. அவ்வாறே, ஆசையினாலே மெலிந்து
வருந்தி இரந்தும் பெறக்கூடாத மாதரது இன்பத்தைப் பெறுதற்குரிய
மார்க்கம் பலவந்தமேயன்றி வேறில்லை. என் மனத்தில் மிகவும் 220
உறுதியாகவுள்ள எண்ணம் நிறைவேறாமல் இடையே தடை செய்யும்
உனது முயற்சியானது, உயர்ந்த மலையின் உச்சியிலிருந்து உருண்டு
விழுந்துகொண்டிருக்கும் பெரும்பாறையை இடையிலே தங்கிவிடும்படி

ஒரு பேதை கையினல் தடுக்க முயலுவானுனல், அதை ஒக்கும்,' என்று இந்திரன் கோபத்தோடு கூறினன்.

221 இவ்வாறு அவன், அவள் தடையை லட்சியஞ்செய்யாமல் வலாற்காரமாகத் தன் கருத்தை நிறைவேற்றக் கருதியிட்டதை வெளிப்படுத்தி, இடி இடித்தாற்போலக் கூறிய கடூர வார்த்தைகளை, இனிய இசைக்கு மயங்கி அவசமாகும் தன்மையும் வல்லோசை கேட்டால் சாம்புந் தன்மையும் உடைய அசுணமானது பறையோசையைக் கேட்டாற்போல, அவள் கேட்ட உடனே அளவற்ற துன்பமடைந்து பெருமூச்செறிந்தாள்; நெஞ்சினூடே அம்பு உருவப்பட்ட மயிலை ஒத்தாள்;

அவள் மூர்ச்சையடைந்து கற்பழிக்கப்படுதல்

222 பயந்து வேர்த்துச் சோர்வடைந்தாள். தன் கற்பைக் காக்க அவள் பரிதாபமாகப் பலவாறு மன்றாடி முயன்று பட்டபாடெல்லாம் பயனற்றுப் போனதைக் கண்டு ஏக்கமடைந்தாள். உயிர் நீங்கினுள்போல உணர்வற்றாள். அவ்வாறு உணர்வு நீங்கியவளின் நிலைமையை யாரே சொல்லவல்லார்? அந்நிலைமை, இன்னதென்று சொல்லும் தன்மையதன்று. அவள் மூர்ச்சையடைந்து எச்செயலும் அற்றவளானாள்.

223 அவள் இவ்வாறாக, இந்திரன் காமாவேசத்தினல் அவள் பரிதாப நிலைக்கு இரங்காமல் 'யுத்தமுற்றாரும் காதலுற்றாரும் தாம்தாம் எடுத்துக்கொண்ட காரியம் நிறைவேறும்பொருட்டு எதுவுஞ் செய்யலாம். அவர்களுக்கு இன்ன செய்கை தக்கது, இன்ன செய்கை தகாததென்பதில்லை. யுத்தம், காதல் என்ற இரண்டு காரியங்களையும் முற்றுப்பெறச்செய்யும் எதுவும் கெட்டதன்று; நல்லதே' என்று தான்கொண்ட

224 கொள்கைக் கியையத் தப்பாக எண்ணினுன். ஒரு புலி, தான் தின்னக் கருதிப் பிடித்த மானைத் தின்ன ஆரம்பித்தபோது, அந்த மான் பயத்தினுல் பிரக்ஞையற்றுச் செத்தாற்போலானலும், அதைத் தின்னுமற் சும்மாவிட்டுப் போகாதவாறு, இந்திரன் தன் எண்ணத்தை முடித்

225 தான். இவ்வாறு தேவராசன் கொடிய புலியை மட்டுமோ ஒத்தான்? அருவருப்பான சவத்தினிடத்துள்ள பொருளையும் இச்சித்துத் திருடும் இழிகுணமுள்ள திருடரையும் ஒத்தான். காமப் பித்தேறினர் எவ்வளவு உயர்ந்தோராயினும் இழிந்தோராய்விடுவார். அவருக்கு ஈடேற்றம் என்றும் இல்லை.

## கௌதம காண்டம்

தமது கிருகத்தைவிட்டு வெளியேபோன கௌதமர், கங்கையை அடைந்தபோது விடியாமலிருக்கக் கண்டு, அதன் காரணம் யாதென்று விரைவில் ஆலோசித்துப் பார்த்து, ஒரு சோர்வு நிகழ்ந்துவிட்டதென் றுணர்ந்து, நீராடாமல் விரைவாகத் தமது ஆச்சிரமத்துக்குத் திரும்பினார். 226

கௌதமர் தம் ஆச்சிரமத்துக்குத் திரும்புதல்

தேவர்க்குரிய பரிசுத்தமான அவியுணவைத் திருடி உண்ட திருட்டு நாய்போல, இந்திரன் அகலிகையைப் பிரிந்து வெளியே புறப்படும் சமயத்தில், சிங்கம்போலக் கௌதமர் வந்து கண்டுகொண்டார். கண்டு, அவன் செய்து விட்ட அகிருத்திய முழுவதையும் தெரிந்துகொண் டார். உடனே, யுகாந்த காலத்திலே உண்டாகும் வடவாமுகாக்கினி போன்ற பெருங்கோபம் உண்டாக, அவர், காலகாலனாகிய உருத்திர மூர்த்தியையே ஒத்துக் கண் சிவந்து தமது உயர்வான இல்வாழ்க்கை யின் மாட்சிமையை அழித்த இந்திரனைக் கொல்பவர்போலக் கோபித்துப் பார்த்தார். அவரை அவன் கண்டு அஞ்சி, அடங்கி, ஒடுங்கி, நடுங்கி, வெட்கமுற்று, உடம்பு மெலிந்து, வெளுத்து, ஒளி மழுங்கி, மனங் கலங்கிக், குலைந்து, தளர்ந்து, பின்னிட்டுத், தள்ளாடிப், பிரமை யடைந்து வெளியே செல்லக் காலெழமாட்டாமல் நின்றான். 'பிரக்ஞை யற்ற ஒரு மிருகத்தினிடத்திலே மற்றொரு மிருகம் இன்பமடைய எண்ணவுஞ் செய்யாது; அப்படியிருக்க, உணர்ச்சியின்றிச் சோர்ந்து கிடக்கும் இவள்பால் நீ இன்பமடைந்து, கடைப்பட்ட மிருகங்களி னும் கடைப்பட்டவனாயினாய். நன்னெறியினின்று நீங்கிய தீயோ ரெவரினும் மிக்க தீயோனே! நினைக்க வொண்ணாத அருவருப்பான இந்த இழிந்த தீச்செயலைச் செய்த உனக்குத் தகுந்த சிட்சை செய் வேன். நீ வெட்க மடையும்படியாகவும், உன்னைக் காண்போர் இகழ்ந்து சிரிக்கும்படியாகவும், நீ இச்சித்த அங்கமே உன் தேக முழுதும் உடையவனாகக் கடவாய். என்முன் நில்லாதே' என்று கௌதமர் அவனைச் சபித்தார். 227 228 229 230 231

அவர், இந்திரன் களவைக் கண்டு, அவனைச் சபித்தல்

தனக்குக் கொடுக்கப்பட்ட சாபத்தைக் கேட்ட இந்திரன், 'நான் அகலிகையை அடையச் செய்த முயற்சியில் உயி ரைக் கொடுக்கும்படி நேரினும் கொடுக்கச் சித்தமா யிருந்தேன்; ஆதலால், நான் சாகப் பயப்படவில்லை. சாகச் சபிப்பதினும் கொடிய சாபம் இராதென்று நினைத்திருந்தேன்; இப்போது உண்மையில் சாவினும் கொடிய 232

அவன், தன் சாபம் கொடியதென வருந்தி மறைவிடம் தேடி உறைதல்

சாபமே விதிக்கப்பெற்றேன். கண்டார் சிரித்து இகழும்படியான இந்த உருவத்தோடு தேவர் முதலிய பலரும் கூடிய என்னுடைய சபா மண்டபத்துக்குப் போவதைப்பற்றி நினைக்கவே வேண்டியதில்லை. யாரொருவரையாவது தனித்துத்தான் நான் எப்படிப் பார்ப்பேன்? என்னையே நான் பார்க்க நாணம் உறுவேனே', என்று எண்ணி மனம்
233 நைந்தான். 'எல்லாரும் இகழும்படியான உருவத்தை அடையும்படி சபிக்கப்பட்ட இந்த உடலைவிட்டு நீங்கும்படி செத்துவிடுவேனென்றாலோ, நான் அமுதம் சாப்பிட்டுச் சாவாத்தன்மை அடைந்திருத்தலால், சாக முடியாதவனாயிருக்கிறேன்; இதுவரையும், சாகும் மனிதர் வாழ்க்கையைக் காட்டிலும் சாவாத தேவர் வாழ்க்கை சிறந்ததென்றெண்ணியிருந்தேன்; மனிதர் என்றென்றும் சாவாதிருக்க முடியாதென்றாலும், அவர்கள் வேண்டியபோது உயிரை மாய்த்துக்கொள்ளலாம்; ஆகையால், சாகவேண்டுமென்று விரும்பினாலும் சாகமுடியாத தேவ வாழ்க்கை, வேண்டுமானால் சாகக்கூடிய மனித வாழ்க்கையினும்
234 மிகவும் கொடியது', என்று துக்கித்தான். கௌதமர் கோபித்துச் சபித்த வடிவம் தனக்கு வர ஆரம்பிக்கும் அடையாளம் உண்டாக, இந்திரன், பிறர் காணும்படி நிற்பதற்கு நாணி ஒளித்துக்கொள்ள எண்ணி, மெல்ல ஒதுங்கிக் கௌதம ஆச்சிரமத்தைவிட்டு வெளிப்பட்டுத், தேவர் முதலிய யாவரும் சஞ்சரியாத ஒரு தனி இடத்தைச் சேர்ந்து அங்கே தனியனாய் ஒளித்திருந்து காலந்தள்ளினான்.

கௌதமர் அகலிகையை மூர்ச்சை தெளிவித்தல்

235 நடந்தது இன்னதென்று தெரியாதவளாய், உணர்வற்றிருந்த அகலிகையைக் கௌதமர் அணுகி, ஒடுங்கிக் கொண்டிருந்த அவள் உயிர் தேற்றமுற்று மீளத் தக்க சிகிச்சைகள் செய்து மூர்ச்சை தெளியச் செய்தார்.

அவள் கற்பிழந்த தறிந்து திரும்பவும் மூர்ச்சையடைய, கௌதமர் திரும்பவும் மூர்ச்சை தெளிவித்தல்

236 அவள் மூர்ச்சை தெளியவே, கண் திறந்து பார்த்தாள். மெல்ல மெல்ல உணர்வு வரப்பெற்று இந்திரன் தன் கற்பை ஒழித்தேயொழிந்தானென்று தெரிந்தாள். தெரிந்ததும் நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடித்துத் திரும்பவும்
237 மூர்ச்சையடைந்தாள். கௌதமர் அவளைத் திரும்பவும் மூர்ச்சை தெளிவிக்கவே, 'இந்தப் பாவியின் உயிர் ஒரே முறையாக இறந்தொழிந்து விடாமல், அதைத் திரும்பத் திரும்ப மீட்டலானது, அவ்வுயிர் போம்போது அதனோடொழிந்துபோன துக்கத்தையும் மீட்டலாகின்றதன்றோ? போன உயிரை மீட்டாதிருந்தால் நலமாயிருக்குமே' என்று அவள் வருந்தினாள்.

அவள் துக்கம் பொறுக்கமுடியாமல் இவ்வாறு கூறினளென்று 238
கௌதமர் தெரிந்து, மனம் உருகி, அவளை நோக்கி 'நீ அறியாமல் உன்னை அடைந்த மாசு கழியும்படியாகவும், அதை நீ நினைந்து நினைந்து துன்புறுதல் அற்றுவிடும்படியாகவும், நீ மாசடைந்ததைப்பற்றிய உலக நிந்தை மறக்கப்பட்டு நீங்கி யொழியும்படியாகவும், உன் தேகம் கல்லாக மாறுக' என்றருளினர்.

அவள் இந்திரனுல் உற்ற தோஷத்துக்குக் கௌதமர் பரிகாரஞ்செய்தல்

இவ்வாறு ஏககாலத்தில் தோஷ பரிகாரமும் துக்க நிவாரணமும் ஆகும்படி, அவர் அருள்செய்து கூறியதை அகலிகை கேட்டவுடனே, தனது முந்திய உயர்ந்த நிலைமையையும், இப்போதைய தாழ்ந்த நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்துத், துக்கம் பொங்கத் தனக்குள்ளே சிந்திக்கலானுள். 'அந்தக் கொடிய 239 240
வஞ்சகன் கோபித்துப் பயமுறுத்த நான் பயம் அடைந்ததனுல், நினைவிழக்கும்படி நேர்ந்தது. அப்படி நேர்ந்து நான் செயலற்றிருந்த நிலைமையில், அவன் என்னைப் பங்கப்படுத்தினுன். அதனுல் நான் நஞ்சூட்டப்பட்டவரை ஒத்திருக்கின்றேன். நஞ்சூட்டப்பட்டவருக்கு நஞ்சின் கொடுமையை மாற்ற மருந்து உண்டு. எனக்கோ மருந்தில்லை. நான் பயந்ததனுலன்ருே, என் நினைவு நீங்கியது. நினைவு நீங்கியதனு 241
லன்ருே, என் கற்பு அழிக்கப்பட்டது. இவ்வாறு நேராதபடி நான், என் நெஞ்சு உருக்குப்போல வன்மையுறும்படி, அதற்கு என் ஆன்ம சத்தியால் ஊக்கமூட்டி ஆற்றல் அளித்து, அந்தப் பயத்தினுல் உணர்வு நீங்கிவிடாமல் நிலையாக நிற்கச்செய்து, என் உயிரை அக் கொடியோன் நீக்கிவிடும்வரையும் என் கற்பை நீக்காமற் காக்கும் கடமையை நிறை வேற்றத் தவறிய என் தவறுபோன்ற கொடிய தவறு வேறில்லை. நான் 242
எதிர்பார்த்துத் தடுக்கமுடியாத விதமாக, என் தேகம் அந்நியன் வசம் அகப்பட்டதானுலும், நான் பயத்துக் கிடங்கொடா திருந்தால், என் நெஞ்சு கற்போல உறுதியாயிருந்திருக்கும் ; அது உறுதியாயிருந்திருந்தால், நான் மூர்ச்சை யடைந்திருக்கமாட்டேன் ; மூர்ச்சையடையா திருந்தால், என் கற்பை அழியவிடாமற் காத்திருப்பேன். அவ்வாறு காக்க மார்க்கமின்றி நான் அச்சத்துக் கிடங்கொடுத்து, அதனுல் கற்போல நிறுத்தப்படாத எனது நெஞ்சும் கற்பழிக்கப்பட்ட தேகத்தோடு சேர்ந்து கல்லாகுதல், கற்பழிந்தா ளென்று பழிக்கப்பட்டு உயிர்வாழ்தலினும் இனிமையானதே. ஆயின், அவ்வாறு கல்லாவதில் என் நாயகரைப் பிரியும்படி யிருப்பதுதான் கொடுமையா யிருக்கிறது! மிகவும் கொடுமையா யிருக்கிறது !

அவள், தான் பயந்து உணர்விழந்ததனுல் தனக்கு விளைந்த கேட்டை நினைந்து வருந்தல்

243 ‘மெய்க் கற்புடையாரை அந்நிய புருடரொருவரும் இச்சியார்கள்.
அவர்கள் பொய்க் கற்புடையோரையே காமிப்பார்கள். யான், பிற
னால் மோகிக்கப்பட்டு, அவன் கையிலகப்பட்டுத்
துர்க்கதி அடைந்ததனால், என் கற்பு மெய்க் கற்பன்
244 றென்றே ஊகிக்க வேண்டியிருக்கிறது. யாரும்
நீரிலே வெம்மையையும் நெருப்பிலே தண்மையை
யும் பெற விரும்பார்கள். அதுபோல, பரபுருடர்
எவரும் மெய்க் கற்புடையோரிடத்திலே இன்ப
மடைய விரும்பார்கள். அவர்கள் பொய்க் கற்புடையாரையே
245 இச்சிப்பார்கள். என்னெஞ்சறியாமல், என்னுடைய ஆடையோ
ஆபரணமோ நடையோ பேச்சோ வேறேதோ, மெய்க் கற்புடை
யோருக் குரியதினின்று வேறுபட்டு, பொய்க் கற்புடையோருக்
குரியதுபோலத் தோன்றி, யான் பொய்க் கற்புடையார் கூட்டத்தைச்
சேர்ந்த ஒருத்தி யென்று பிறன் கருதும்படி செய்ய, நான் அவன்
246 மோகத்துக்கு இலக்கானேன். “தம் கற்புப் பின்னப்படும்படி கற்புடைய
மாதர் பரபுருடருக்கு எவ்வகையினாலும் காமக்கருத்து உண்டாக அவர்
நெஞ்சிலே தோன்றார். தம் நடை உடை பேச்சு முதலியவற்றால் பர
புருடர் தம்மைத் தாய் தங்கையர்போல நினைக்கும்படி நடந்துகொள்
வார்கள்” என்று, கற்பின் உண்மை யிலக்கணத்தை நன்றாகத் தேர்ந்த
முத்தமிழ்வாணர் கூறும் முறையை, நான் தெரிந்திருந்தும் தெரியாத
மகளிர் போலவே, மேற்கூறியவாறு பிறன் இச்சிக்கும்படியான
தவற்றை என்ன காரணத்தினாற் செய்தேனோ? தெரியேன்.

அவள், தான் மனமறியாமல் உத்தமக் கற்பிற் சிறிது வழுவினமையால், பிறன் தன்னை இச்சித்தான் என்றெண்ணல்

247 ‘அந்தத் தவறு நான் தெரியாமற் செய்ததாயினும், அது என்
தவறேயன்றி வேறெவருடைய தவறுமன்று. அப்படிப்பட்ட என்
தவறே, அந்நியன் என் கற்பைப் பிரித்தற்குக்
காரணமாகியது. அந்தத் தவற்றை நான் அறியா
மலே என்னைச் செய்வித்த என் பழவினை பெரிய
248 மலையினும் பெரியது. கற்பாகிய நீர்க்கட்டு ஒரு
சிறிதும் ஒழுகிப்போகாதபடி நெடுங்காலம் நிலையாகக் காத்துநின்றேன்.
அப்படிக் காத்துநின்ற நிலைமையில் அறியாமல் (நடை உடை முதலிய
வற்றில் எதிலோ) சிறிது தளர்வுற்றேன். உடனே அக்கற்பாகிய நீர்க்
249 கட்டு முழுதும் அகன்றோடி யொழிந்துவிட்டது. அதனால், அந்தோ!
எனது அறிவு அடியோடு அற்றுப்போய்விட்டது. கற்பாகிய மலையின்
மேலேறி அதன் உச்சியிலே சாயாமல் நிமிர்ந்து நெடுங்காலம் நின்றேன்.
அப்படி நின்ற யான் சற்றே சாயும்படி நேர்ந்தது. உடனே என்னை
யறியாமல் தன் வசம் இழந்து தடுமாறி அதோகதியாய்க் கீழே

அவள், மனம் அறியாத அச்சிறு குறையின் பெருவிளைவுக்கு வருந்தல்

விழுந்துவிட்டேன். தங்கள் தங்கள் நிலையிழந்து இழிவடைந்த மக்களுள்ளே கீழாகவுள்ளா ரெல்லோரிலும் நான் கீழாகிவிட்டேன்.

அவள், கற்பின் சிறப்பைக் கருதல்

'பொருளைக் காட்டிலும் அதிகமாகப் பேணுதற்குரிய சிறப் 250
புடையது உடம்பு; உடம்பினும் சிறந்தது உயிர்; மாதருக்கு உயிரினும்
சிறந்தது நாணம்; அவருக்கு நாணத்தினும் சிறந்
தது கற்பு. அவ்வளவு அத்தியந்தமான சிறப்
புடைய கற்பைப் பேணாதவள், பெண்ணன்று; பேயே. நளாயினி, 251
ஓர் இரவில் தான் அறியாமல் மௌத்கல்ய முனிவரை வருத்தமடையச்
செய்ய, அவர், "விடிந்த உடன் உன் கணவன் இறப்பானாக" என்று
சாபங்கொடுக்க, தன் கணவன் சாகாதிருக்கும் பொருட்டு, "விடியா
திருக்க" என்று எதிர்ச்சாபம் கொடுத்தாளன்றோ? எந்தக் கற்பின்
பலத்தினால் அவள் அவ்வாறு செய்தாளோ, அந்தச் சிரேட்டமான
கற்பைக் காவாது விடுபவள், உலகத்துள்ள நோயெல்லாந் திரண்டு ஓர்
உருவெடுத்தாற்போன்று துன்பஞ்செய்யும் நோயே. பரமபதியாகிய 252
சிவபிரானிடத்து வைத்த அன்பாகிய பக்தியின் பலத்தினால், மார்க்கண்
டேய முனிவர் தாம் பதினாறு வயதானவுடனே இறக்கும்படி யிருந்த
விதியை வென்று சிரஞ்சீவியாயினதுபோல, சாவித்திரி யென்னும்
பதிவிரதை, தனக்குப் பதியாகிய கணவனிடத்து வைத்த அன்பாகிய
கற்பின் பலத்தினால், தான் கலியாணமான வருஷங் கழியுமுன் விதந்து
ஆகும்படி யிருந்த விதியை வென்று தீர்க்க சுமங்கலையாயினாள்.
அவ்வளவு சிறப்புப் பொருந்திய கற்பைக் காவாதவள், கொல்லாமற்
கொல்லுகின்ற கூற்றே. முன்னாளில் அநசூயை தனது கற்பின் 253
மகிமையினால், பிரம விஷ்ணு ருத்திரராகிய திரிமூர்த்திகளையும் செய
லற்ற மூன்று சிறு குழந்தைகளாகச் செய்து, உயர்வான கீர்த்தி
நிலைக்கப்பெற்றாள். அப்படிப்பட்ட கற்பைக் காவாமல் நீங்கவிடுகின்ற
பேதையைப் போலத் துன்பத்துக்குக் காரணம் ஒன்றும் இல்லை;
முக்காலும் இல்லை. கற்புடைப் பெண்டிர்காள்! இந்திரனது கொடிய 254
வஞ்சகத்திலகப்பட்டு நான் கற்பிழந்தவாறு நீங்கள் கற்பிழக்காமல்
உங்களைக் காத்துக்கொண்டு உயிர்வாழ்வீர்களாக; நான் வஞ்சிக்கப்
பட்டுக் கற்பழிந்தொழிந்துபோனாலும், என் சரித்திரம் உங்களை
எச்சரித்துச் சாக்கிரதைப்படுத்திக் காப்பாற்றும் பயன் உடையதாகும்.

255 'யாவராயினு மொருவருக்கு, அவருடைய பகைவருள் யாருமே செய்ய — அன்று, செய்யும்படி நினைத்தற்குமே, கூசும்படியான கொடுஞ்செயல்களெல்லாம் கூடித் திரண்டு ஓர் உருவெடுத்தாலும் ஒப்பாகமாட்டாத மிகக் கொடுமையான தீமையை, என்னுடைய தலைவருக்கு, அவருக்கு உரியவர்களெல்லாரிலும் அதிக உரிமையாக

**அவள், தன் பிழையையும் கௌதமர் பொறுமையையும் ஒப்பிட்டுருகல்**

256 வுள்ள நானே செய்தேனானேனே! அடிமைகளாயுள்ளாருள், தங்கள் ஆண்டவர்களுக்கு விரோதமாகத் தவறுசெய்து பழிக்காளானவர்களும் இருக்கிறார்கள். ஆயினும், அப்படிப்பட்டவர்களுள்ளே என்னைப் போலக் கொடியார் யார் இருக்கிறார்கள்? குலமாதர்களுள் கற்பிழந்த

257 பின்னும் யார் என்னைப்போல உயிர் நீங்காதிருக்கிறார்கள்? தன் குழந்தைக்குற்ற நோயைத் தீர்க்கத் தக்க பரிகாரத்தை ஆராய்ந்து தெரிந்து தாய் செய்தல்போல, எனக்குற்ற தோஷத்துக்குத் தக்க

258 பரிகாரத்தை ஆராய்ந்தறிந்து என் நாயகர் செய்திருக்கிறார். மகா பாவியாகிய என் திறத்தில், ஒப்பற்ற பொறுமையுடைய எம்பெருமானுடைய பெருங்கருணை இருந்தவாறு என்னென்று சொல்வேன்! அவர், மிக்க அருள் சுரந்து நான் செய்த கொடிய குற்றத்தைப் பொறுத்துக்கொண்டதன்றி, உணர்விருக்குமானால் துன்பமும் இருக்குமென்று கருதி, என்மீது இரக்கமுற்று, உணர்ச்சியற்ற கல்லாம்படி கற்பித்து, என்னைத் தமது அருள் வெள்ளத்தில் முழுகச்செய்தார்.

259 'இவ்வளவு இரங்கியவர் இன்னும் அதிகமாகவும் இரங்குவார். அவருடைய அருளுக்கு எல்லையே இல்லை. யான் கற்பிழந்ததனால் உண்டாகிய தோஷத்தை, அவர் தபோபலத்தினால் நிவாரணம்செய்து, சுத்தமுடையவளாக்கி, என்னை முன்போலவே அவருக்குப் பாத பணிவிடை செய்யும்படி கட்டளையிட்டருள்வார்', என்று நினைத்துக் கௌதமர் காலில் விழுந்து 'உமது திருவடிகளே எனக்குத் தஞ்சம். காப்பாற்றியருள்

**அவள், அவரைச் சரணமடைதல்**

260 வீராக' என்று இலக்குமியே போன்ற அகலிகை கூறினாள். அவள் தேகம் மின்போலத் துவள, கூந்தல் கருமேகம்போலக் குலைய, துக்க மிகுதியினால் வாய்விட்டேங்கி அழுது அரற்றும் ஒலி* முழங்க, நெடு மூச்சுப் பெருங்காற்று உண்டாக, கண்ணீர்மழை பெய்து துக்கித்துக் கொண்டு, அவருடைய பாதத்தடியிலே கிடந்தாள்.

---

* ஒலி—ஓசை, இடி (தொனி அர்த்தம்).

கௌதமர், அவருடைய உயிரே அவர் காலில் விழுந்து கிடந்தாற் 261
போலக் கிடந்த அகலிகையை எழச்செய்து, 'பெண்ணே! ஊழ்வினை

அவர், அவளைத் தேற்றல்

வலியால் நீ அந்நியன் கைக்குள் அகப்பட்டு மதி மயங்கிச் செயலற்று இந்தத் தாழ்வை அடைந்தாய். நீ வீணாக நொந்துகொண்டிருப்பதை விட்டிடு.
இல்வாழ்வானுக்குரிய பல பொருள்களுள், மனைவிமட்டும் தன்னைத் 262
தானே காத்துக்கொள்ளும் பொருளாக உள்ளாள். அப்படித் தன்னைத்
தான் காக்கும் ஒரே பொருளாக நீ இருந்த மேன்மையை நீக்கி, தம்மைத்
தாம் காக்கமாட்டாத வீடு மாடு முதலிய அறிவுஞ் செயலுமில்லாத
சடப் பொருள்கள்போல ஆம்படி, உன்னை அந்தத் தீயோன் செய்த
பின்பு, அவன் செய்த தீவினையினாலாகிய தோஷமன்றி வேறெந்தத்
தோஷமும் உனக்கு இல்லை. அந்த வஞ்சகன் உன் உடற் கற்பினை 263
நீக்கினானேயல்லாமல், உன் உள்ளக்கற்பு ஒரு சிறிதும் நீங்கவில்லை;
நீ பிரக்ஞையில்லாமல் யாதொன்றும் செய்யச் சக்தியற்றவளா
யிருந்தபோது நிகழ்ந்த காரியத்துக்காக, உன்னை நீ இகழ்ந்துகொள்ள
வேண்டியதில்லை. மாதர்கள் உளக் கற்புச் சற்றும் மாறாமல், பர 264
புருடர் தம்மைச் சொந்தப் புருடரென்று மயங்கும்படி செய்தல்,
மயக்க மருந்தால் அவசமுறச் செய்தல்போன்ற வஞ்சகத்தினாலாவது,
வலாற்காரத்தினாலாவது, பரபுருடர் தாம் சொந்தப் புருடரென்று
தாமே உண்மை தெரியாமல் எண்ணுதலாகிய அறியாமையோடு
மாதரும் அவ்வாறே நம்புதல்போன்ற வேறெந்தக் காரணத்தினாலாவது
உடற் கற்பழியும்படி நேர்ந்தால், அவர்கள் நிரபராதிகளாயினும் உடற்
கற்பழிந்ததற்காகத் துக்கத்துக்குள் ளானவர்க ளாதலால், முன்னிலும்
அதிகமாக அன்பும் ஆதரவும் செய்தற்குரியராவார். நீ உடற் கற்பிழந் 265
ததனால் நான் உன்பால் அன்பு குறைந்தேனல்லேன். ஆயினும் "நின்
மேனி கல்லாக" என்று நான் கூறியது எதற்காகவென்றால், ஆடை
யிலே அடைந்த மாசை நீக்குதற்கு அதனோடு வேறொரு மாசு ஆகிய
உவர்மண் உறும்படி செய்தல்போல, உன் தேசத்துக்கு உற்ற மாசை
நீக்குதற்கு அது கல்லாகும் மாசு உறும்படி செய்தேன். நாகம் 266
தீண்டத் தேகத்தில் உற்ற நஞ்சு, அதற்கு மாற்றாய வேறு நச்சு
மருந்தினால் நீங்கியொழிதல்போல, இந்திரன் ஆகிய பாம்பு தீண்டின
தனால் உன் தேகம் உற்ற கறை*, அத் தேகம் கல்லாகும் கறையினால்
நீங்குமென்று நீ தெளிவாக அறிவாயாக', என்று கூறினார்.

* கறை—மாசு; நஞ்சு.

267 'பூர்வ சென்மத்தில் எவ்வளவோ பெரும் புண்ணியம் செய்த தனால் உம்மை நாயகராகப் பெற்றேன். அதுபோலவே, உம்மை நீங்கும் படியாகவும் மிகப் பெரும்பாவஞ் செய்ததனால், கொடும் பாவியாகிய நான், இவ்வாறு கற்பழிக்கப் பட்டு இழிகதி யடைந்தேன். ஈசுவரனையே ஒத்த அதி பரிசுத்தராகிய உம்முடைய சன்னிதானத்தில்

அவள், அவர் அடிமையாயிருத் தற்கும் தகுதியற்ற மைக்கு வருந்தல்

268 எவ்வாறு நான் நிற்பேன்! உம்முடைய திருவருட் பிரசாதம் பெறு தற்கு அருகள் அல்லளாயினேன்; உம்முடைய பரிசுத்த சந்நிதியிலே நிற்கவும் யான் தகுதியுடையேனே! உயர்ந்த நல்ல சுவர்க்கலோகத் தின் எதிரிலே தாழ்ந்த தீய நரகமும், பிரகாசமான சூரியன் முன்னே

269 கரிய இருளும் நிற்கமுடியுமோ! மயிர் நீங்கிய கவரி மானையும் சந்திரன் நீங்கிய வானத்தையும், உயிர் நீங்கிய உடலையும் போலக், கற்பு நீங்கின நான் பூமிக்குப் பாரமாயிருத்தலை யாவரும் தெரிந்து கொள்ளும்படி, கனமான கல்லாகும்படி சபிக்கப்பட்டது பொருத்த

270 மானதே. நான் கல்லாகும்படி நேர்ந்ததற்காகக் கவலைப்படுகின்றேனே வென்றால், அதற்காகக் கவலைப்படவில்லை; உம்முடைய மனைவியா யிருந்த நிலைமை நீங்கியதற்காக வருந்துகின்றேனே வென்றால், அதற்காகவும் வருந்தவில்லை; நீர் காலால் இட்ட குற்றேவல்களைத் தலையால் செய்யும் பாக்கியம் நீங்கி விடுதற்காகவே விசனிக்கிறேன்' என்று அகலிகை கூறினாள்.

271 'நீ சிலகாலம் கல்லாக இருத்தலே உனக்கு உற்ற தோஷத்துக்குப் பரிகாரமாகும். திருமால் கோதண்டபாணியாய் ஸ்ரீ ராமபிரானாக அவதரிப்பார். அக்காலத்தில் அவர் வனசஞ்சாரஞ் செய்யும்போது, அவருடைய திருப்பாதம் தோயப் பெற்று அதனால் உன்னுடைய பழைய வடிவத்தைப் பொருந்தி எனக்கு நீ மறுபடியும் மனைவியாவாய்' என்று மனம் உவந்து கௌதமர் கூறியருளினார்.

அவர், அவள் கல்லுருவம் நீங்கி மீண்டும் தம் மனைவி ஆவாள் என்றருள, அவள் நன்றியறி வுற்று மன அமைதி யுடன் கல்லாகுதல்

272 இவ்வாறு கௌதமர் கூறிய அருள் மயமான வார்த்தைகளை அகலிகை கேட்டமாத்திரத்திலே எலும்பும் உருகும்படி இளகி உருகி மிகுந்த நன்றியறிவுற்று, 'கொலை புரிந்தாற்போலும் தீங்கைச் செய்தவர்களுள் என்னைப்போன்ற பாவியும், அப்படிப்பட்ட தீங்கைப் பொறுத்தவர்களுள் உம்மையொத்த புண்ணியசாலியும், எங்கும் எக்காலத்திலும் இல்லை' என்று திரும்பவும் வணங்கிக் கூறினாள்.

273 'உலக நாயகனான கடவுளுக்கு அவனால் எல்லா நன்மைகளையும் அடைந்துள்ள உலகம் என்ன கைம்மாறு செய்யக்கூடும். அவ்வாறே எனக்கு நாயகரானவருக்கு நான் செய்யக்கூடிய கைம்மாறும் இல்லை;

யான் என் குறைவு நீங்கி மன அமைதி நிறையப் பெற்றேன்' என்று தான் சொல்லக் கருதியதைச் சொல்லி முடித்தாள். பின்பு கல்லாகிக் காட்டிலே அமர்ந்தாள்.

இந்திரன் ஒளித்துக்கொண்டிருந்ததனால், தேவ ராச்சியமானது 274
ஆளும் அரசனில்லாமல் சீர்குலைந்து கலக்கமுற்றது. அதனால், தேவர்கள், தம் அரசனாகிய இந்திரனை எங்கும் தேடிக் காணாமல், தம் குருவாகிய வியாழபகவானிடம் போய் வினவ, அவர், அவன் கௌதமர் சாபத்தினால் மறைந்திருக்கின்றானென்று சொல்ல,

அவர், தேவர் வேண்ட, இந்திரன் சாபத்தை ஒருவாறு மாற்றல்

அவர்கள் கௌதமரிடம் சென்று காலில் வீழ்ந்து வணங்கி இந்திரனுக்குச் சாப நிவிர்த்தி செய்யும்படி பிரார்த்திக்க, அவர், அவன் செய்த குற்றத்துக்குத் தண்டனையில்லாமற் போகக்கூடாதென்றும், அவனுடைய தண்டனையினால் மற்றவர்கள் வருந்தலாகாதென்றும் கருதி, அவனுக்கு விதித்த தண்டனை தண்டனையாகவே இருக்கும்படி யாகவும் ஆலோசித்து, 'இந்திரன் இப்போது அடைந்துள்ள உருவம், 275
அவனுடைய குற்றத்தை நினைப்பூட்டி மனவருத்தம் உண்டாக்கிக் கொண்டு, இப்போதுள்ளபடியே அவனுக்கு எப்போதும் தோன்றும். ஆயினும், அந்த உருவம் பிறர் பார்வைக்கு எப்போதும் அழகான உருவமாகத் தோன்றுவதாகும். ஆதலால், அவன் இனி நாணம் அடையாமல் அவனுடைய அரசை முன்போல நன்றாக ஆள்வானாக' என்றருளினார். அதுமுதல் மற்றவர்கள் கண்டு சந்தோஷிக்கும்படி 276
விளங்கிய இந்திரனுடைய உருவமானது, அவனுக்குப் புண்போன்று அவனுடைய குற்றத்தை ஒவ்வொரு கணமும் நினைவு கூரச்செய்து வெட்கப்படுத்தி வருத்தியதுபோல, தேவலோகவாசிகளுக்கெல்லாம் சந்தோஷம் உண்டாகும்படி உயர்வு பொருந்திய அவனுடைய அரசாட்சியும், அவனுடைய நெஞ்சு உணரும் குற்றம் உண்மையினால்*, அவனுக்குத் துன்பத்தைச் செய்யா நின்றது.

உணர்வு நீங்கியிருந்தபோது கற்பிழந்த அகலிகை உணர்வில்லாத 277
கல்லாகமாறி நெடுநாள் செல்லத், தசரத சக்கரவர்த்திக்குக் குமாரராகத்

---

* வானுயர் தோற்ற மெவன்செய்யும் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்' — குறள்

திருமால் ஸ்ரீராமராக அவதரித்து விசுவாமித்திர மகருஷியுடன் அகலிகை கல்லுருவம் அமைந்திருந்த வனத்தை அடைய, அவர் பாத பரிசத்தால், அவள் தன் தொல்லுருவம் பெறுதல்

278 திருமால் பூமியில் அவதரித்தார். அந்த அவதார
புருஷனான ஸ்ரீ ராமர் தாடகையைச் சங்கரித்து,
விசுவாமித்திரர் யாகத்தைக் குற்றமற நடைபெறச்
செய்துவிட்டு மிதிலைக்குப் போகும் வழியில் ஒரு
279 காட்டை அடைந்தார். காட்டு வழியே செல்லும்
போது அங்கே அவர் கால் படவும் ஒரு கல் பெண்
ணாக மாறியது. அவரோடுகூடச் சென்றுகொண்
டிருந்த விசுவாமித்திர முனிவர், அவள் கௌதம
முனிவருடைய பத்தினியாகிய அகலிகையென்று தெரிவித்து, அப்
படிப்பட்ட மகருஷி பத்தினிக்குக் கல்லாகும் கதி எவ்வாறு நேர்ந்தது,
எவ்வாறு திரும்பப் பெண்ணானாளென்று தெரியும்படி இதற்கு முன்னே
கூறப்பட்ட அவளுடைய வரலாறு முழுவதையும் மொழிந்தார்.

அவ்வாறு அவள் கல்லுருவம் நீங்கித் தொல்லுருவம் பெறச் செய்ததைப்பற்றி விசுவாமித்திரர் ஸ்ரீராமரைப் புகழ்ந்துரைத்தல்

280 ‘தீவினைப் பாம்பினால் விழுங்கப்பட்டு, அதனால் தேசு நீங்கி
மறைவுற்றிருந்து, பின்பு அப்பாம்பு வாயினின்றும் மீள உமிழவே
வெளிப்பட்டுப், பிரகாசியாநின்ற சந்திரன்போல
281 இவள் விளங்குகின்றாள். வன்மையான கொலை
புரிந்தோர் முதலிய மகா பாதகர்களும் உம்முடைய
மென்மையான திருவடியை நினைப்பாரானால்,
எல்லாப்பதவிகளிலும் சிறந்த மோக்ஷ பதவியையே
அடைவார்கள். அப்படிப்பட்ட மகத்துவமுடைய
பாதத்தைத் தொடவே செய்யும் அரிய பெரிய
பேறுபெற்ற இவள், கேவலம் தன்னுடைய பழைய நிலைமையைத்
282 திரும்ப அடைந்தது ஆச்சரியமாமோ? உமது பாதம் பொருந்தப்
பெற்றதனால் கல்லுருவம் நீங்கி இங்கே நிற்கின்ற இந்த மாது, கற்
பிழந்ததற்குப் பின்னும் கல்லாவதற்கு முன்னும் இருந்த அசுத்தமான
தேகத்தை அடைந்திருக்கிறாளோ என்றால், இல்லை. கற்பிழக்கு
முன்னிருந்த சுத்த தேகத்தை அடைந்திருக்கிறாளோ என்றால், அதுவு
மில்லை. வேறு எத்தன்மையான தேகத்தை அடைந்திருக்கிறாள்
என்றால், கற்பிழக்குமுன் இருந்த தேகத்தைத் தோற்றத்தில் ஒத்து
உண்மையில் அதனிலும் அதி பரிசுத்தமானதும் அது கற்பிழந்து
கெட்டதுபோல என்றும் கெடக்கூடாததுமான தேகத்தை அடைந்
283 திருக்கின்றாள். இவளுடைய முன்னைய தேகம் பிரமாவின் கையினால்
செய்யப்பட்டது; இவளுடைய இந்தத் தேகமோ, உமது திருப்பாதம்
பிரசாதித்தருளப்பெற்றது. அந்தச் செயற்கையான தேகம் கற்பிழந்து
கறையுற்றொழிந்ததுபோல, இந்தச் சுயம்புவான தேகம் அசுத்தமடை
284 தலாவது அழிதலாவது எக்காலத்துமே இல்லாததாம். இவள்

வெருண்டு மூர்ச்சித்துக் கற்பிழந்து மேன்மை நீங்கித் தாழ்வடைந்த
குறைவு விளங்கும்படி, இவள் கற்பிழந்து கல்லானதற்கு அறிகுறியாக
அம்மிக்கல்லின்மீது பெண்கள் கல்யாண காலத்தில் தம் கால்
பொருந்த மிதிப்பார்கள்; இவள் உமது திருப்பாதம் தீண்டப்பெற்ற
மாட்சிமை விளங்கும்படி பெரியோர் தினந்தோறும் காலையில் தூக்கம்
நீங்கி எழும்பொழுது இவளைத் தமது நெஞ்சிலே தியானஞ்செய்து
கொண்டு எழுவார்கள். தீய சிந்தையுள்ள இந்திரன் கையால் தீண் 285
டிய பெண் கல்லாகவும், தூய சிந்தையுள்ள இராமபிரான் காலால் தீண்
டிய கல் பெண்ணாகவும் உற்றது, என்றும் பொல்லாரைச் சேர்பவர்
தீமையையும் நல்லாரைச் சேர்பவர் நன்மையையும் உறுவார்களென்
னும் உண்மையை விளக்குவதாம். உமது திருப்பாதம் தோய்தலால் கல் 286
கனியா நின்றது*; அந்தத்திருப்பாதங்களைத் தியானித்தலால் தியானிப்
போருடைய நெஞ்சக் கல் கனியாநின்ற†. செயல் காட்டும். நீர்
எய்தலால்‡ முந்திய காட்டினிடைக் கொடியாள்§ மாய்ந்தாள்; இந்தக்
காட்டில் நீர் எய்தலால்¶ இடைக் கொடியாள்†† தோன்றினாள். உமது 287
திருப் பாதங்கள் தீண்டுதற்கு முன்பே, அந்தப் பாதங்களிற் படிந்திருந்த
தூள் பட்ட அளவிலேயே வன்மையான கல் மென்மையான பெண்
ணாக ஆயினதென்றால், உமது திருப்பாத மகத்துவத்தை யார்தாம்
வாயாரப் புகழாதிருப்பார்? புற்பூண்டுகளுக்கும் உள்ள பரிச 288
உணர்ச்சியாகிய ஓரறிவுகூட இல்லாமற்கிடந்த கல்லே, உமது திரு
வடியால் ஆறறிவுடைய பெண்மணியாக விளங்குமானால், அந்த ஆறறி
வுகளையும் உடைய மக்களாயுள்ளார் உமது திருப்பாதங்களால்
அடையக்கூடாத பேறு யாதேனும் உண்டோ? நீர் முன்னாளில் 289
தோளால் கடைந்ததனால் கடலிலே இலக்குமி தேவி உதித்தாள். இந்
நாளில் தாளால் மிதித்ததனால் கல்லிலே அகலிகை உற்பவித்தாள்.
உமது தோளாலுண்டான அவள் உமது தோளை அடையப்பெற்றாள்.
உமது தாளால் உண்டான இவள் உமது தாளேயாகிய கௌதம
*முனிவரை அடைதல் பொருத்தமானதே. ஒரு சிலையில்† கால் 290
வைத்து உமது அன்பன் மனைவியை அடையச்செய்தது, ஒரு சிலையில்‡
கைவைத்து உமது மனைவியை நீர் பெறுதற்கறிகுறியாகும். கலப்
பற்ற சுத்தத் தங்கம், செம்பு முதலிய வேறு உலோகக் கலப்புற்றுப் 291

---

*கன்னிகையாக நின்றது †கனிந்து உருகாநின்ற ‡அம்பெய்தலால் §கொடியாளாகிய தாடகை ¶வந்ததனால் ††இடையாகிய கொடியையுடையாளாகிய அகலிகை.

*அடியாரைத் திருவடி என்பது வைணவ வழக்கம். எல்லா மதத்தினருமே பெரியோரை 'அடிகள்' என்று கூறுதல் மரபு.

†ஒரு கல்லில் ‡ஒப்பற்ற வில்லில்.

பழுதடைந்து பின்பு புடமிடப்பட்டு அதனால் பழைய சுத்தத் தங்கமே ஆதல்போல, ஆதியில் பரிசுத்தமாயிருந்த இவள் இந்திரன் கலப்பினால் அசுத்தமடைந்து கௌதமர் செய்த பரிகாரத்தினால் பழைய பரிசுத்த மடைந்திருக்கிறாள். அன்றியும் இயல்பாகவே இனிமையான பால் தீயினால் காய்ச்சப்பட்டு முன்னிலும் அதிக இனிமை உறுவதுபோல, இயல்பாகவே இனிய குணமுடைய இவள் வருத்தப்பட்டு முன்னிலும் அதிக இனிய குணமுடையவளாயிருக்கிறாள்' என்று விசுவாமித்திரர் சொன்னார்.

292 பின்பு விசுவாமித்திர முனிவரும் இராமரும் அகலிகையுடன் கௌதமரிடம் சென்று, அவர் பால் அவளைச் சேர்த்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு தம் வழியேபோக, பிரிந்த உயிரும் உடலும் திரும்பச் சேர்ந்தாற்போல, நெடுங் காலம் பிரிந்திருந்த அந்த நாயக நாயகியர் இருவரும்

அகலிகை கௌதமரை அடைதல்

293 ஒன்றுசேர்ந்து விளங்கினார்கள். கருங்கல்லாகிச் சிவந்த க(ன்)னியான அகலிகையும் காதல் குறைவுபடாத கௌதமரும் ஒருமனப்பட்டு, இரண்டு கண்களும் ஒரு பொருளைத் தனித்தனி நோக்காமல் ஒருமித்து நோக்குதல்போல, முன்போல் இல்வாழ்க்கையை ஒற்றுமையுடன் நடத்துவாராயினர்.

# செய்யுள் முதற்குறிப்பகராதி

[ எண் — பக்கவெண் ]


அகநெகிழ்ந்து 37
அகமதனிற் 15
அகமும் வெய்ய 41
அஞ்சலிப்பேன் 43
அஞ்ஞான 24
அடைவுற் 15
அண்ணுவா 19
அணிலேற 5
அங்கியை 57
அமிர்தம் 35
அயல்எய் 8
அயலவன் 15
அயலான 43
அல்லும் 36
அலக்கணீர் 25
அவ்வமயம் 24
அவ்வாயிழைபிறன் 16
அவ்வாயிழைஎழில் 14
அவரெலாம் 6
அவலமெலாம் 9
அவள்உரு 14
அற்பர் 30
அறத்தாற் 40
அறத்தை 40
அறன்அல் 41
அறியாதொர் 41
அறைமொழி 47
அன்னமின் 5
அன்னியரும் 28

ஆகம் 51
ஆடையுறு 56
ஆண்ட 36
ஆண்டார் 54
ஆரமுதொ 3
ஆள்வழக் 39
ஆற்றல் 17
ஆறில் 44

இடையிலுற் 62
இணையில் 55
இந்தா 44
இந்திரனுக் 59
இப்பாரில் 8
இமையா 10
இரவுபகல் 6
இருவரமே 38
இருவேம் 10
இல்லை 48
இலைநறுங் 18
இவ்வா 7
இவருசை 5
இழிகரவில் 31
இறைபொற் 29
இறைவற் 58
இன்னும் 55
இன்னேநீ 43

ஈண்டெவ 49

உட்கி 48
உடுக்கை 9
உணர்வில் 59
உயிரை 16
உரிய 53
உருக்கவினை 37
உருக்கென 51
உரைமகளை 5
உள்ளேவெங் 33
உறப்பெரிய 57
உன்காமத் 30
உன்னுபவர் 1
உனைப்பிரம 8

எஃதுண்டேல் 42
எங்கோன் 30
எதிரியே 4
எந்நாடும் 1
எல்லாமா 38
எவ்வாறே 39
என்செய்கேன் 25
என்நிலையில் 31
என் நிறையை 42
என்ற அருள் 58
என்றன் 36
என்றுபல 6
என்றுநினைந் 23
என்ன அயன்கூற 4
என்ன அவன் என்னை 9
என்ன அவன் வாய் 8
என்னரிய 35
என்னலுமேகோதம 4
என்னலுமே தான் 50
என்னன்பன் 31
என்னின் 29
என்னுடையோ 52
என்னுயிரின் 42
என்னுயிரை 40
என நாரதன் 10
எனையான் 28

ஏக 22
ஏங்கினள் 47
ஏத்திமத 1
ஏதிலான் 44

ஐதெனிறை 17

ஒண்டொடி 21
ஒப்பு 17
ஒருசில 62
ஒருபொருளை 39
ஒருமுறை 3
ஒருவருக்கு 54
ஒருவன் 7
ஒழுக்கம் 40
ஒளிநீழல் 11

ஓரறிவே 62

கடியசினம் 34
கண்கடுப்ப 59
கண்ட 14

கண்ணின் 6
கண்ணினுற் 35
கரிய 23
கருங்கலாய் 63
கருப்பிரசம் 46
கரும்புருவ 13
கல்லாநீ 58
கல்லுருவம் 60
கல்லேயான் 57
களவாளி 32
கற்கனியா 61
கற்பழியா 27
கன்னிஎழில் 14
கன்னிஉனை 38

காக்கும் 45
காதல்இயல் 16
காதல்செய் 17
காதலலை 12
காதற்கெதிர் 37
காந்தை 45
காம்பேநோர் 36
காமன் 21
காயும் 34
காலாந்தம் 48
காலேறு 61
கான்உற்ற 59

கிட்டியுனை 43
கின்னரர்கள் 2

கூறுகூ 43

கோதமனே 24

சங்கரன் 23
சடைதாடி 29

சாவதற்கோ 49
சாவுறுவோன் 39

சிலகொம்பு 20

சினத்தீ 33

சீசி 4
சீறும் 34

சுடரென 13
சுரபதி 30
சுளித்து 49

சூழ்தலுறீஇ 11
சூள்முடித்த 10

செம்மான் 47
செய்ததவ 45
செயத்தக்க 47
செவ்வழி 49

சேயுற்ற 54
சோதிஒன்று 7
சோர்ந்த 38

தக்கோன் 55
தண்பணி 20
தப்பிடற்கோ 26
தருநிதிகள் 2
தருவினை 31
தருவுளுயர் 13
தவத்துக் 45
தளிர்க்கை 20
தன்மணமே 21
தன்னுயிரே 55
தன்னைத்தான் 55
தன்னைமகிழ் 24

தாசரதி 59
தாமரையை 12
தாருமுறி 13
தானைபரி 18

திசையை 14

தீண்டார் 27

தீய நா 56
தீய மன 61
தீய வினை 60
தீருநோ 23

துஞ்சொருத்தன் 26
துன்பு தரும் 16
துன்னுகுழற் 35

தூயஅவி 48

தெரியாத் 52
தெவ்வு 32
தென்றல் 27

தையல் 3
தையால் 37

தொட்டதும் 45

தோளால் 62

நடந்த 50
நடுயாமம் 31
நம்மகவை 3
நல்லா ரலார் 15

நாகாவா 33
நாணுளும் 39
நாவேவல் 33
நான்முக 10

நிலமேல் 11
நிழலே 19
நிறைகேட்டை 27
நிறைநீர் 52
நிறையதனை 61
நிறையாய 53
நின் இசைவை 44
நின்னழகே 32
நின்னை 50

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நீரிடையேவாழ் | 36 | பொறிகள் | 16 | முன்னமொரு | 54 |
| நீரிடையேவெப்பை | 52 | பொன்றும் | 40 | | |
| நீருடை | 22 | பொன்னால் | 42 | மெய்யாம் | 51 |
| நீலமயிலே | 46 | பொன்னுலகு | 46 | | |
| | | பொன்னே | 38 | மேகமின்றி | 26 |
| நெஞ்சம் | 51 | | | மேல்வெண் | 1 |
| நெஞ்சின் | 56 | போகிவிடம் | 26 | மேனகை | 1 |
| | | போற்று | 53 | | |
| பதிக்கன் | 53 | | | ராசராச | iii |
| பயந்து | 34 | மதனின் | 32 | | |
| பவளக் | 12 | மதிபோல் | 37 | வஞ்சன் | 56 |
| பனிநீர் | 19 | மதிமானும் | 12 | வன்கொலை | 60 |
| | | மதுரைத் | iii | | |
| பாடிவரும் | 20 | மயங்கு | 49 | வானாடு | 58 |
| பாதிநிசிப் | 24 | மயிர்இழந்த | 57 | | |
| பாபபயம் | 31 | மலர்களெனும் | 20 | விட்டிடென | 33 |
| பாரதன் | 7 | மழைபெய்து | 19 | விடம் ஓர் | 22 |
| | | மன்னன் | 25 | விண்ணமுதாற் | 17 |
| பிணத்தினிடத் | 47 | மனக்கவலை | 8 | விண்ணிடை | 9 |
| பின்னமுறப் | 52 | | | விரிந்து | 21 |
| | | மாதவன் | 63 | விருதுகள் | 30 |
| புதிய | 23 | மாதேவன் | 42 | விருத்தப் | 22 |
| புறஇதழ் | 21 | மாலைப்பொழுதாம் | 23 | விருபமிலள் | 12 |
| | | மாலையிடைமாலை | 21 | விழித்தாள் | 50 |
| பூதலத்து | 6 | மாலையிடை | | | |
| பூமேவு | iii | வெய்யோன் | 22 | வெங்கோப | 34 |
| பூவலரும | 35 | மானேஎனை | 37 | வெந்தீயில் | 11 |
| | | | | வெய்யபவ | 46 |
| பெடையோடு | 12 | மிறைசெய் | 41 | வெய்யபுலி | 26 |
| பெண்ணெனின் | 41 | மின்னை | 9 | வெற்பினுச்சி | 46 |
| | | | | | |
| பேரழகு | 3 | மீண்டும் | 50 | வேகின்றேன் | 15 |
| | | | | வேதஇவன் | 3 |
| பையரவம் | 27 | முகில்மிசை | 11 | வேந்துகரம் | 44 |
| | | முடியாத | 28 | | |
| பொங்கிஎழு | 35 | முந்த இவள் | 60 | வையமுறு | 54 |
| பொருள்கள் | 14 | முன் போலப் | 4 | வையமே | 28 |

# அநுபந்தம்.

## முதற்பதிப்பு முன்னுரை

“ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி”

என்ற திருக்குறளில், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனுர், சருவநீதி சாரமாக, மனத்தை அடக்கி நன்னெறியில் நின்ருர் அடையும் பெருமையையும் அடக்காமல் தீயநெறியிற் சென்ருர் அடையும் சிறுமையையும் விளக்குதற்குச் சிறந்த உதாரணமாகத் தெரிந்தெடுத்துக் குறிப்பித்ததாக ஆன்ருேர் கூறுங் கதையை இந்நூல் கூறுகின்றது. இக்கதை, கௌதமர், இந்திரன், அகலிகை யென்னும் மூவரையும் பற்றியதாயினும், முதலிருவர் பெருமை சிறுமை விளங்குதற்கு அகலிகை காரணமாக விருந்ததனுல், இக் கதையை அகலிகை கதையெனல் பொருந்தும். இவ்வகலிகை கதையை வெண்பாவினுல் கூறுவதனுல், இந்நூல் **அகலிகை வெண்பா** எனப் பெயர் பெற்றது. இக்கதை, இராமாயணத்திலும் வேறு பல நூல்களிலும் கூறப் பட்டுள்ளது. ஆயினும் இதனை அந்நூல்கள் ஒரே படியாகக் கூறவில்லை. வான்மீகமும் கம்பராமாயணமும் ஒன்றுக்கொன்று பேதமாக இதனைக் கூறுவதாக இரண்டு நூல்களையும் ஆராய்ந்தோர் கூறுவர்.

2. இவ்வாறு பலவாருகக் கூறப்பட்டுள்ள அகலிகை கதையில் பெரும்பாலும் ஒற்றுமையான பாகங்களை ஆதாரமாகக்கொண்டு இந்நூலை இயற்றியிருக்கிறேன். இதில் கூறப்படுவோர், அவ்வவ் அமையங்களில் நடந்துகொள்ளும் தன்மையையும், பேசும் இயல்பையும், நினைக்கும் நினைவுகளையும், ஆங்கில திராவிட நூல்முறைகள் இரண்டுக்கும் இயைய, என் மனோதர்மத்துக் கியன்றவாறு கூறியிருக்கிறேன். பழைய நூல்களில் கூறியபடியுள்ள கதையின் போக்குக்கு இன்றியமையாத, அகலிகை கல்லாக மாறுதல் போன்ற, சுபாவாதீத சம்பவங்கள் தவிர மற்றைய இயற்கைக்கு மாருன நிகழ்ச்சிகளைக் கூடியமட்டும் முன்னோர் கூறியவற்ருேடு முரணுமலும் இயல்பாகவும் கூறியிருக்கிறேன். அகலிகைக்கும் இந்திரனுக்கும் நிகழும் சம்வாதத்தில், சில பகுதிகளில் (60, 65, 66, 70, 88, 89-ம் பாட்டுக்களில்)* ஷேக்ஸ்பீய மகாகவியின் சாதுரியமான கருத்துக்களைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் ஏற்றபெற்றி உபயோகப்படுத்தியிருக்கிறேன்.

* இப்பதிப்பில் 133, 138, 139, 142, 205, 206.

3. அகலிகை கதை, யாவரும் அறிந்த கதைகளுள் ஒன்று. கல்யாண காலத்தில் மணமகளை அம்மி மிதித்து அருந்ததி பார்க்கச்செய்யும் கிரியை, இன்றும் தவறாமல் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. அக்கிரியையில், அம்மி, அகலிகை கற்பிழந்ததற்குப் பிராயச்சித்தமாக அவள் கணவனைப் பிரிந்து கல்லாக இருந்த இழிந்த நிலைமையினையும், அருந்ததி, சிறந்த கற்புடைமையினால் கணவனைப் பிரியாமல் நக்ஷத்திர மண்டலத்தில் இருக்கும் உயர்ந்த நிலைமையினையும் விளக்குவதாகப் பெரியோர் கூறுவர்.

4. இந்நூலில், பாட்டுக்களைச் செய்யுள் இலக்கணத்துக் கிணங்கத் தளை சிதையாமல், பொருள் நன்கு புலப்படும்படி சந்தி பிரித்தும், நிறுத்தி வாசிக்கவேண்டிய இடங்களைக் காட்டக் குறியிட்டும் இருக்கிறேன். அன்றியும், சில முக்கியமான அரும்பதங்களுக்கும் தொடர்களுக்கும் எழுதிய குறிப்புரையை அடிக் குறிப்பாகவும், செய்யுட் பயிற்சி யுடையாரேயன்றி இல்லாதோரும் எளிதாகத் தெரிந்துகொள்ளும்படி குறிப்புப் பொருள்களை விளக்கி விரிவாக எழுதிய **அகலிகை வெண்பா வசனத்தை** அநுபந்தமாகவும் சேர்த்திருக்கின்றேன். இவ்வசனம் தற்காலத்தில் ஆங்கில நூல் முறையை அநுசரித்து எழுதப்படும் நவீன கதைகள்போல, வாசித்தற்கு இனியதாக விருக்குமென்று நம்புகின்றேன்.

5. இந்நூலை யான் வாசித்துக் காட்டியபோது, சில திருத்தங்கள் குறிப்பித்து உதவிய பல வித்துவ நண்பர்களுக்கும் எனது நன்றியறிமொழிகள் உரியன. அரிய பெரிய பழைய பன்னூலாராய்ச்சியின் இடையே, எளிய சிறிய புதிய இந்நூலையும் கேட்டுச் செம்மையுறச் செய்த பிரமஸ்ரீ மஹா மஹோபாத்தியாயர், வே. சாமிநாதைய ரவர்களுக்கு யான் மிகக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னபட்டினம்
5—4—1914

**V. P. Subramania Mudaliar.**

# இரண்டாம் பதிப்பு முன்னுரை

இந்நூலிலுள்ள பாட்டுக்களுள் நான் முதல் முதல் இயற்றியவை 76 முதல் 83 இறுதியாக உள்ளவை. இவைகளை, இயற்றியபோது, ஒரு நூலின் பகுதியாக்கலா மென்றாயினும் எப்போதேனும் வெளிப்படுத்தலா மென்றாயினும் கருதாமல், கேவலம் பொழுது போக்காகவும் கற்புடையா ளொருத்தி கற்பழிய நேர்ந்த சமயத்தில் பொறுத்தற்கரிய மனவருத்தமடை யும் அதி பரிதாபமான கட்டத்தை வருணிக்கவுங் கருதியே இயற்றினேன். இவ்வாறியற்றிச் சில காலஞ் செல்ல, அகலிகை கதையை ஒரு சிறு நூலாக இயற்றலாமென்றும், அதனில் மேற்குறித்த பாட்டுக்களை இடைப்பெய்து இணைக்கலாமென்றும் ஒரு நினைவு தோன்றியது. அந் நினைவின் முற்றுப் பேறே இந் நூலின் முதற் பதிப்பு.

2. அப் பதிப்பைப் பார்வையிட்ட நண்பருட் சிலர், அகலிகை கற்பழிந்தாளாகக் கூறும் பகுதியை மாற்றல் நலமென்று குறிப்பித்தனர். அவர்களுள், திருநெல்வேலியிலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ P. M. கைலாசம் பிள்ளையவர்கள், B. A.,|| அவ்வாறு மாற்றுதலைப்பற்றி மிகவும் வற்புறுத்திக் கூறி இப்பதிப்பு வெளியாதற்கு முக்கிய காரணராய் எனது விசேட நன்றியறிவுக்குரியரா யுள்ளார்கள்.

3. அந் நண்பர்களது கருத்துக் கிணங்கவும், முந்திய பல நூல்க ளுடனும் இந்நூலின் முதற் பதிப்புடனும் விசேடமாக வேறுபடாமலும், உள்ளக்கற்புக்குப் பங்கமின்றி உடற்கற்பைமட்டும் அகலிகை இழந்தாளாக இப்போது கூறியுள்ளேன். இந் நூலை வாசிப்போருள், புராதன முறையைப் பிரதானமாகக் கருதுவோரும் இவ்வேறுபாட்டைப் பெரிதாகப் பாராட்டார்க ளென்று நம்புகிறேன். ஸேது ஸமஸ்தான மகா வித்வான், பிரமஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள்* இந் நூல் முகவுரையில் இனிதெடுத்துக் காட்டியிருக்கிறபடி கம்பர் அகலிகையை 'நெஞ்சினாற் பிழைப்பிலாள்' என்று கூறியிருப்பதும், அவர், வான்மீகர் கற்பிழந்தாளாகக் கூறும் (வாலி மனைவி) தாரையைக் கற்புடையாளாகக் கூறியிருப்பதும் இங்கே கவனிக்கத் தக்கவை.

4. மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் P. I. சின்னச்சாமிப் பிள்ளையவர்கள் || எழுதி, இந்து தேச நேசன் எனப் பொருள்படும் 'இந்தியன் பேட்ரியட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் 1915-ம் வரு பிப்ரவரி மீ 5உ பிரசுரமா யிருக்கிற, இந்நூல் முதற்பதிப்பு மதிப்புரையில் 'அகலிகை ஸ்ரீராமபிரா னாலேயே வணங்கப்பெற்றுத் தேவர்களால் கௌரவிக்கப்பட்டாளென்று

---

|| இக் குறியிடப்பெற்றவர்கள் தற்போது காலஞ்சென்றவர்கள்.

* தற்சமயம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாள பாஷா கவிசேகரர்.

புலப்படுத்தும் வான்மீக ராமாயண பாகத்தினுல், அவள் [பெரியோர் தினந் தோறும் காலையில் நித்திரை நீங்கி யெழும்போது தியானிக்கும் பஞ்ச கன்னியருள் ஒருத்தியாய்த்] தற்காலத்தில் வணங்கப்படுதல்போலவே முற் காலத்திலும் வணங்கத்தக்காளா யிருந்தாளென்பது விளங்கும்' என்று கூறி யிருப்பதும், இந்திய மாதருக்கு இடப்பட்டுவரும் பெயர்களுள் 'அஹல்யா பாய்' என்பது ஒன்றென்பதும் இங்கே நோக்கற்குரியன.

5. மேற்கூறிய ராமாயண பாகத்தின் கருத்தாவது:— 'இராகவர், இலக்குமணர் சகிதராய், விசுவாமித்திரரை முன்னுகச் செல்லச்செய்து, (கௌதமரது) ஆச்சிரமத்திலே பிரவேசித்தார். அங்கே கடவுளால் தெய்வீக வசீகரத்தோடு கூடியவளாய்ப் பெண்கள் நாயகமாகப் படைக்கப் பட்டாற்போன்று, தேவாசுரரும் அதி சமீபத்தில் நின்று நோக்கமாட்டாத தேஜஸோடு தன் தவமகிமையினுல் சுவாலியாநின்று விளங்கும் அந்த மகத்துவ மாதை (அகலிகையை)க் கண்டார்கள். இரகு வமிசத்திற்ருேன்றிய (இராம லக்குமணர்) இருவரும் (வணங்கி) அவள் பாதங்களைப் பற்றினுர்கள். அவள், கௌதமர் ('ஸ்ரீ ராமரால் உன் சாபம் நீங்கும்' என்று சொன்ன) வார்த்தைகள் ஞாபகத்திற்குவர, அவர்களுடைய பாதங்களைத் தான் பற்றினுள். பின் அவள் மனத்தை ஒருமைப்படுத்திக்கொண்டு அவ்விருவ ருக்கும் அர்க்கிய பாத்தியங்கள் அளித்து விதிப்படி அதிதிபூசை புரிந்தாள். உடனே தேவதுந்துபி முழங்கப் புஷ்பமாரி பெருமிதமாக வருஷித்தது. தேவர்களும் அப்சரசுகளும் சந்தோஷங்கொண்டாடினுர்கள். தேவர்கள் 'உத்தமம் உத்தமம்' என்று ஆரவாரித்து அகலிகையைக் கௌரவப்படுத்தி னுர்கள்' என்பது.

6. முதற்பதிப்பு, இராமநாதபுரத்தில் 1914-ம் வருஷத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதின்மூன்ருும் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாடு தற்குக் கூடிய சபையில் அரங்கேற்றுதற்கு உதவும்படி விரைவாகப் பதிப் பிக்கப்பட்டதனுல், சில குறைபாடுகள் உள்ளது. அக்குறைபாடுகளை நீக்குவதும் இப்பதிப்பின் நோக்கம்.

7. இப்பதிப்பில், மேலே கூறியுள்ள வேறுபாட்டுக்கியைய, முற் பதிப்பிலுள்ள பழைய பாட்டுக்கள் சில நீக்கப்பட்டும் சில மாற்றப்பட்டும் புதுப்பாட்டுக்கள் சில* சேர்க்கப்பட்டுமிருக்கின்றன. பழைய பாட்டுக்கள் சிலவற்றிற் போலவே புதுப்பாட்டுக்கள் சிலவற்றினும் ஆங்கில திராவிட வாணரது அருமையும் இனிமையும் அறிவுறுத்துவனவுமாகிய கருத்துக்கள் அவ்வவ் அமயங்களுக்கேற்ற வேறுபாட்டோடு எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

---

* 8, 9, 13, 19, 21, 22, 24–26, 29, 30, 35–38, 45–56, 59, 61, 64, 88, 10, 91. 102, 107, 110–139, 143–149, 163, 165–178, 183, 188–192, 194, 196–200, 204, 216–219, 230, 231, 243, 246-ம் பாட்டுகள்.

8. இப்பதிப்பில், நூல், இந்திர காண்டம், அகலிகை காண்டம், கௌதம காண்டமென மூன்று பெரும்பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், அப்பெரும்பகுதிகள் முற்பதிப்பினும் அதிகமும் விவரமுமான தலைப்புக்களுடைய பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இத்தலைப்புக்கள் பொருளடக்கத்தில் வரிசையாகப் பதிப்பித்திருப்பதைப் பார்ப்போருக்கு, நூலின் முக்கிய விஷயங்கள் தொடர்பாய் வரலாற்றுமுறையாக நன்கு புலப்பட்டுக் கதை அமைப்புச் செவ்வனே விளங்குவதாகும். * பாட்டுக்களின் பொருள் நன்கு விளங்கும்படி தளை சிதையாமல் வேண்டும் இடங்களிற் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. அக்குறியீட்டு முறையை விளக்கிக்காட்டும் குறிப்பொன்று நூல் ஆரம்பத்திற் சேர்க்கப்பட்டிருக்கிறது.

9. அகலிகை வெண்பா வசனம், முற்பதிப்பிற்போலவே, பாட்டுக்களின் குறிப்புப் பொருள்கள் விசதமாக விளங்கும்படி, விரிவாகவும், 'நாவல்கள்' என்ற நவீன கதைகள்போல வாசித்தற் கினியதாகவும் இருக்கும்படி கருதி எழுதப்பட்டிருக்கின்றது. ஆயினும், இப்பதிப்பில், அப்பதிப்பிற்போல, ஒவ்வொரு பாட்டுக் குரிய வசன பாகமும் வெவ்வேறாகப் பிரித்துப் பதிப்பிக்கப்படாமல், செய்யுட் பாகத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிய தொடர்ந்த பல பாட்டுக்கள் ஒரு தலைப்பின்கீழ்ப் பதிப்பிக்கப் பட்டிருப்பது போலவே, அந்தப் பல பாட்டுக்களுக்குரிய வசனப் பகுதியும் ஒன்றுசேர்ந்து ஒரு பிரகரணமாக † அந்தத் தலைப்புடன் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. ஒரு பிரகரணத்தில் பல பாட்டுக்களுக்குரிய வசன பாகங்களைத் தனித்தனி பகுத்துத் தெரிந்துகொள்ளும்படி அவ்வப் பாட்டெண்கள் அவ்வவ் வசனபாகத் தொடக்கத்தில் அவ்வப் பக்கத்தின் ஓரத்தில் சிறிய எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

10. அகலிகை வெண்பாக் குறிப்புரை, முற்பதிப்பிற்போல, பகுதி பகுதியாக அவ்வப் பக்கங்களில் அடிக்குறிப்புக்களாக அச்சிடப் படாமல், தனியாய் ஒரு தொகுதியாக அகலிகை வெண்பா வசனத்திற்குப் பின் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

11. இறுதியாகச் செய்யுள் முதற்குறிப் பகராதி புதிதாகச் சேர்க்கப் பட்டிருக்கின்றது.

12. இப்பதிப்புக்காகச் சித்தஞ்செய்த கையெழுத்துப் பிரதியை என் வேண்டுகோளின்படி பார்வையிட்டுத் திருத்தங்கள் குறிப்பித்துதவிய

பிரமஸ்ரீ மஹா மஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள், ‡
சேது ஸமஸ்தான வித்வான் பிரமஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள், §

---

* மூன்றும் பதிப்பில் இம்முறை ஆளப்படவில்லை.

† பாரா. ‡ தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர். § மகா வித்வான் பாஷா கவிசேகரர்.

காலஞ்சென்ற சிவபுராணப் பிரசங்கம்
பிரமஸ்ரீ சுந்தரேசுவர ஐயரவர்கள்,
திருவாவடுதுறை ஆதீன வித்வான்
மக-ா-ா-ஸ்ரீ ரா. சுப்பிரமணிய கவிராயரவர்கள், ||
மக-ா-ா-ஸ்ரீ V. வேதநாயகம் பிள்ளையவர்கள், M. A., B. L.||
காலஞ்சென்ற மக-ா-ா-ஸ்ரீ எட்டயபுரம் காசிவிசுவநாத பிள்ளையவர்கள் ஆகிய வித்துவ நண்பரனைவருக்கும் எனது மனமார்ந்த வந்தனங்களுரியன.

13. இவர்களுள் பிரமஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் மேற்கூறிய உதவி புரிந்ததேயன்றி இந்நூலுக்கு முகவுரை அளித்துக் கௌரவப் படுத்திய பேருதவியை மிக்க நன்றியறிவுடன் பெரிதும் பாராட்டுகின்றேன்.

14. இந்நூலை அச்சிடுகையில் நேர்ந்த வழுக்களைக் களைந்து செம்மைப் படுத்திய

மக-ா-ா-ஸ்ரீ பென்ஷன் டிப்டி கலெக்டர்
S. V. கள்ளப்பிரான் பிள்ளையவர்கள், B. A. ||
" வக்கீல் T. K. சிதம்பரநாத முதலியாரவர்கள், B. A., B. L.*
" " S. வையாபுரி பிள்ளையவர்கள், B. A, B. L. †
ஆகிய வித்துவ நண்பருக்கும் நான் கடப்பாடுடையேன்.

15. எனது நண்பர், திருநெல்வேலி, ஹிந்து காலேஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர், மக-ா-ா-ஸ்ரீ மே. சோ. சுப்பிரமணிய கவிராயரவர்கள், || எனது சகோதரர் குமாரர் ஹைக்கோர்ட் வக்கீல், V. T. பழநியப்ப முதலியார் அவர்கள் ‡ ஆகிய இருவரும் காலச் செலவையும் சிரமத்தையும் பொருட் படுத்தாமல் மிக்க பொறுமையோடு இந்நூலை என்னுடனிருந்து பன்முறை ஆராய்ந்து திருத்தமுறச் செய்ததேயன்றி இதன் பதிப்பாசிரியர்களாகிச் செய்த நல்லுதவி என்றும் மறக்கற்பாலதன்று.

16. இப்புத்தகத்தை விசேஷ சிரத்தையுடன் பலவகையினும் செவ்வையுற அச்சிட்ட பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ் அதிபர், மக-ா-ா-ஸ்ரீ K. D. முத்தைய பிள்ளையவர்களுக்கும் எனது நன்றியறி மொழிகள் உரியன.

17. மேற்கூறிய யாவரும் இந்நூலிலே காணலாம் நயங்கள் மட்டிற் பங்குடையார்; குற்றங்குறைகள் யாவற்றுக்கும் யானே உரியேன்.

28—2—1920
திருநெல்வேலி

வே. ப. சுப்பிரமணிய முதலியார்.

---

* Ex. Com., H. R. E. Board.
† சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்; ராவ் சாஹேப்.
‡ சப்ஜட்ஜி. (வெல்லூர்.)

# இரண்டாம் பதிப்பு அநுபந்த முன்னுரை

1. அகலிகை வெண்பா இரண்டாம் பதிப்பு அச்சிடப்பெற்ற பின்பு, காலஞ்சென்ற பிரமஸ்ரீ சிவபுராணப் பிரசங்க சிரேட்டர் சுந்தரேசுவர ஐயரவர்களுடன் ஷை நூலைப்பற்றி நான் பேசிக்கொண்டிருந்தபோது "கௌதமன், இந்திரன் இருவரும் நீரில் முழுக, எவன் பின்னெழுவானோ அவனுக்கே அகலிகை உரியவள்" என்று பிரமதேவர் கூற, இருவரும் முழுகக் கௌதமர் பின்னெழுந்து அகலிகையை அடைந்தாரென்னும் கதையே யன்றி, அந்தப் பிரமதேவரே "எவன் முன்னும் பின்னும் முக முடைய பசுவை முன்பாகக் கண்டு மூன்று முறை வலஞ்செய் துவருவானோ அவனே அகலிகைக்கு நாயகனுவான்" என்று கூற, இந்திரன் மேகவாகன மேறி உலகெல்லாந் தேடாநிற்பப், பிரமசாரியாயிருந்த கௌதமரைக் கிருகஸ்தராக்க நெடுங்காலம் கருதியிருந்த நாரதர் சந்தித்து, அத்தகைய ஒரு பசுவினிடம் கொண்டுபோய்விட்டு, அதனை வலம்வரச்செய்து, அகலிகையை அடையச்செய்தாரென்னும் வேறொரு கதையுமுண்டென்று அவர்கள் கூறினார்கள்.

2. இவ் விரண்டு கதைகளுள் முதலாவது, அகலிகை வெண்பா இரண்டாம் பதிப்பில் "ஆரமுதோ" என்னும் 10-ம் பாட்டிற் கூறப்பட்டுள்ளது. அதனோடு இரண்டாவதனை முரணுமற் சேர்த்தற்கு இன்றியமையாத அளவு அந்தப் பாட்டின் இறுதியடியை மாற்றிக்கொண்டு பாடிய புதுப்பாட்டுக்களே இந்த அநுபந்தத்தில் அடங்கியிருக்கின்றன.

3. அந்தப் புதுப்பாட்டுக்களை அகலிகை வெண்பா மூன்ரும் பதிப்பு வெளிவருவதாயிருந்தால், அப்போது அதனோடு சேர்த்துப் பதிப்பிக்கலாமென்றிருந்தேன். அவைகளைப் பார்வையிட்ட எனது நண்பர், திருநெல்வேலி, ஹிந்து காலேஜ், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், மக-ா-ா-ஸ்ரீ மே. சோ. சுப்பிரமணிய கவிராயரவர்கள் இப்பொழுதே வெளியிட்டால் நலமென்று கூறியதற்கிணங்கி, இந்த அநுபந்தத்தை வெளியிடலானேன்.

4. இவ் வநுபந்தத்தில் வரும் பாட்டுக்களுக்குக் குறிப்புரை அதனதனடியிற் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

5. ஷை பாட்டுக்களின் கருத்து விளங்கும்படி எழுதிய வசனம், பாட்டுக்களடங்கிய பகுதிக்குப்பின், இடையீடின்றி ஒருசேர வாசிக்கும்படி, ஒரு தொகுதியாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வப் பாட்டுக்குரிய

வசனப் பகுதியின் தொடக்கத்தில் பாட்டுக்களின் எண்கள் ஓர் ஓரத்திற் பதிப்பிக்கப்பட்டிருத்தலால், ஒவ்வொரு பாட்டுக்குரிய உரையையும் பகுத்துத் தெரிந்துகொள்ளலாம்.

6. அகலிகை வெண்பா இரண்டாம் பதிப்பில் உள்ள 10-ம் பாட்டையும் அதற்குரிய வசன பாகத்தையும் நீக்கிவிட்டு, அவற்றிற்கு மாருக முறையே இவ் வநுபந்தப் பாட்டுப்பகுதி, வசனப்பகுதிகளை வாசித்தல் வேண்டும்.

7. இவ் வநுபந்தக் கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டுத் திருத்தங்கள் குறிப்பித் துதவிய பல வித்துவநண்பர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனங்களுரியன.

8. ஷை பாட்டுப்பகுதி, வசனப்பகுதிகளில் உள்ள "குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்" செய்யும்படி கற்ருேரை வேண்டிக்கொள்கின்றேன்.

24-3-1921,
திருநெல்வேலி.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

## சிறப்புப் பாயிரம்.

(முதற் பதிப்பைப்பற்றியது)

---

பிரமஸ்ரீ மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் வே. சாமிநாதையரவர்கள்

துன்னு பலநூற் சுவையுங் கனிர்திலங்கப்
பன்னு மகலிகைவெண் பாவளித்தான்—மன்னுகடல்
மண்செப்பும் பல்குணமும் வாய்ந்தோன் றமிழ்ச்சுவைதேர்
வண்சுப் பிரமணிய மால்.

ஸேது ஸமஸ்தான மகா வித்வான் பாஷா கவிசேகரர்
பிரமஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள்

தேசமுத்து ராமலிங்க சேதுபதி நல்லவைக்கண்
மாசில் புலவர் மகிழ்பூத்து—நேசமிகப்
பண்சுற் றகலிகைவெண் பாவையரங் கேற்றினன்
வண்சுப் பிரமணிய மன்.

மக-ா-ா-ஸ்ரீ
T. K. சிதம்பரநாத முதலியாரவர்கள், B. A., B. L.
Ex. Com. H. R. E. Board

மன்னும் உளஇயல்தேர் வண்சுப் பிரமணியன்
பன்னும் அகலிகைவெண் பாப்பொருளை—உன்னுவோர்
எல்லாம் அகலிகையா இந்திரனைக் கோதமனைக்
கல்லாவும் ஆவார் கனிந்து.

மக-ா-ா-ஸ்ரீ மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள்

பீடு பெறுசுப் பிரமணிய பேரறிஞன்
பாடு மகலிகைவெண் பாவொன்றே—தேடி
எடுத்தவர்கீழ் வைக்கமன மெண்ணும லாசை
கொடுப்பதுவா சிப்பவருக் கு.

மக-ா-ா-ஸ்ரீ யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள்||

பெற்றே னகலிகை வெண்பாப் பிரதி பெரிதுமகிழ்
வுற்றே னொருநாள வெண்பா நெறியை யுள நினைத்தேன்
வற்றா தொளிர்தருஞ் சொற்பொருள் யாவும் வனப்புளவால்
கற்றார் புகழ்தரு சுப்பிர மண்ய கலாநிதியே.

குன்னூர்
மக-ா-ா-ஸ்ரீ பெரியவீடு குமாரசுவாமி முதலியாரவர்கள்||

ககனமளாஞ் சோலைவெள்ளக் காலூரன் மேலோர்
புகழ்சுப் பிரமணிய பூபன்—அகலிகை
வெண்பா அமுதை விருந்தாப் புலவர்குழாம்
உண்பா னளித்தா னுவந்து.

திருவாவடுதுறை ஆதீன வித்வான்
மக-ா-ா-ஸ்ரீ மு. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள்||

நாவலென்று பொய்க்கதையை நாவல்லோ ரிங்காளி
லேவசன மாக வியற்றுவதி—லாவதென்னே
நல்ல வகலிகைவெண் பாப்போ னவிற்றுவரேல்
எல்லவர்க்கு மின்பமுண்டா மே.

மக-ா-ா-ஸ்ரீ சர்க்கரை இராமசாமிப் புலவரவர்கள்

சர்க்கரையோ தேனோ தனியமுதோ தீஞ்சுவைசார்
முக்கனியோ வென்ன மொழிந்தனனல்—இக்கலித்தோம்
பாறு மகலிகைவெண் பாசுப் பிரமணியத்
தேறும் புலவரா சே.

திருவாவடுதுறை ஆதீனம் இராயஸம்
மக-ா-ா-ஸ்ரீ பொன்னுசாமிப் பிள்ளையவர்கள்

ஒள்ளக்கால் விளங்குதிரு மேனியர னடியவரா
முரவோர் தங்க
ளுள்ளக்கா ளுறுமூறநல் லகலிகைவெண் பாவமுதை
யுதவி னனேர்
கொள்ளக்கால் வீசமலர் தேன்றளித்து நறுமணஞ்செய்
குளிர்பூஞ் சோலை
வெள்ளக்கால் வாழ்தருசுப் பிரமணிய ரமணியப்டா
வேந்தன் றனே.

எட்டயபுரம், மக-ா-ா-ஸ்ரீ காசிவிசுவநாத பிள்ளையவர்கள்||

தகவுயர்பன் னூற்சுவையுந் தந்துமாண் போங்க
வகலிகைவெண் பாவருளி னனற்—புகழுறச்செங்
கேழ்முளரிப் பொன்குலவு கின்றவெள்ளக் காலமர்ந்து
வாழ்சுப் பிரமணிய மால்

---

## அபிப்பிராயங்கள்.

(முதற் பதிப்பைப்பற்றியவை)

---

*M. R. Ry Rao Bahadur P. I. Chinnaswami Pillai Avergal, in the 'Indian Patriot' of the 5th February, 1915 :—*

Mr. Subramania Mudaliar has produced the admirable version of the same [the story of Ahalya] in beautiful verse. His style is simple, lucid and elegant The poem reads, as if it were written by some ancient poet of great eminence. It is written in Venba verse * * * To relate a story in Venba verse, in singularly felicitous language, as Mr. Mudaliar has done, requires consummate knowledge of the higher elements of poetical composition. * * * The struggle of a virtuous woman like Ahalya with a fiend, blinded with animal passion, like Indra, her supplications to Indra to save her from dishonour, the depth of her affliction in her great calamity — all these are described by Mr. Mudaliar in passages of exquisite beauty. * * * Mr. Subramania Mudaliar is to be congratulated on the composition of this very interesting poem, which is well worth reading, and I recommend it most heartily to all who are interested in Tamil language and literature.

*The 'Hindu' dated 27th October, 1915 :—*

The poem is well-worth reading, to judge of it, both from its manner and matter. The easy rendering of the great story in simple verse is not an ordinary business and it speaks volumes about the poetic talents of the classic standard of Mr. Mudaliar, that he has succeeded in producing a poem of high class diction to be read even by the student population. * * *

I have no doubt that the encomiums which you have received from acknowledged scholars are fully justified. I read only your Venba as done by you into prose and I found your treatment of the old familiar story very interesting. There are signs in every direction that the Renaissance of Tamil letters is in full flowering. I only pray that the artistic and judicious blending of old and new, of progressive and conservative ideals, may always, as is evident in your case, form the aim and aspiration of Tamil scholars and poets * * * *

19—9—'15 (*Sd.*) S. SRINIVASA IYENGAR.

# அபிப்பிராயங்கள்

## (இரண்டாம் பதிப்பைப் பற்றியவை)

---

பிரமஸ்ரீ மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர், வே. சாமிநாதையரவர்கள் அகலிகை வெண்பா இரண்டாம் பதிப்புக்குச் சித்தஞ்செய்திருந்த கையெழுத்துப்பிரதியைப் பார்வையிட்டு 10-12-1916ல் எழுதியது:— 'தாங்கள் செய்திருக்கும் புதிய திருத்தங்களும் நூதனமான பாடல்களும் நன்றாக இருக்கின்றன.'

ஷெயார், ஷெ கையெழுத்துப் பிரதியிலுள்ளவைகளோடு வேறு புதுப் பாட்டுக்களும் சேர்த்து அச்சிட்ட பிரதியைப் பார்த்து 3—1—1919-ல் எழுதியது:—'அகலிகை வெண்பாவில் நூதனமாகச் செய்து சேர்த்திருக்கும் வெண்பாக்களைப் பார்த்தேன். இவை சொல்வளமும் பொருள்வளமும் அமைந்து நிரம்ப நன்றாக இருக்கின்றன.....தமிழ்ப்பாஷையில் தங்களுக்குள்ள ஆராய்ச்சி வன்மையையும் அன்பையும் தெரிந்து தெரிந்து மிகவும் ஸந்தோஷிக்கிறேன்.........இந்த நூலமைப்பு, இதுவரையில் தமிழில் காணப்படாத பலவகைச் சுவைகளோடு விளங்கித் தங்கள் புகழை எக்காலத்தும் நிலைநிறுத்துமென்று எண்ணுகிறேன்.'

ஷெயார் அகலிகை வெண்பா, அதன் வசனங் குறிப்புரையுடன் பதிப்பிக்கப்பட்டு, முற்றுப்பெற்றபின் 30—10—1919-ல் எழுதியது:—'மிகவும் அருமையாகச் செய்யப்பெற்றிருக்கும் அகலிகை வெண்பாவைத் தினந்தோறும் மெல்ல ஊன்றிப் படித்து வருகின்றேன். விரைவிற் பொருள் படுவதாக இருந்தும் ஒவ்வொரு செய்யுளும் இரண்டு முறைக்குக் குறையாமற் படிக்கும்படி செய்கின்றது. வெண்பாக்கள் மிக அழகாக அமைந்திருக்கின்றன. பொழிப்புரையாக அமைந்த கதையும் (அகலிகை வெண்பா வசனமும்) குறிப்புரையும் இந்நூலுக்கு இன்றியமையாதனவே.............. இவை (செய்யுள்கள்) தங்களுடைய கல்வி வன்மையையும் ஆராய்ச்சி வன்மையையும் கவித்துவ சக்தியையும் தமிழ்ப்பாஷையில் தங்களுக்குள்ள உண்மையான உள்ளன்பையும் நன்கு புலப்படுத்துகின்றன. நூல் சிறியதாயிருந்தாலும் பெரும் புகழை விளைவிக்கும்.'

ஷெயார் 4—12—1919 ல் எழுதியது:–'முன்பு எழுதியபடி அகலிகை வெண்பாவை முற்றும் மெல்லப் படித்துப் பூர்த்திசெய்தேன். ரஸபுஞ்சமாக இருக்கின்றது. மெல்லத்தான் படிக்கவேண்டும். தமிழ்ப்பாஷையை நன்றாகக் கற்றவர்கள் இதுவரையில் எதிர்பாராத ஓரானந்தத்தை இதனால் அடைவார்களென்று நிச்சயிக்கிறேன். இங்ஙனஞ் செய்யக்கிடைத்தது பெரும் புண்ணியப்பயனே.'

ஷியார் 5—12—19-ல் எழுதியது:—'நூல் மிக நன்றாக இருக்கிறது. பொழிப்புரையும் குறிப்புரையும் அப்படியே. உவமை முதலிய பொருளணிகளும் திரிபு முதலிய சொல்லணிகளும் மிக இன்பம் தருகின்றன; அடைமொழியில்லாமல் சில செய்யுட்கள் அமைந்திருத்தல் மிக அழகாக இருக்கிறது: எதுகைநயம், மோனைநயம் முதலியனவும் அப்படியே.'

ஷியார் 24—12—1919-ல் எழுதியது:—'இதுபோன்ற அழகிய நூல் கிடைத்தற்கரிய தென்பதே எனது அபிப்பிராயம்* * * தங்களை இடைவிடாமற் பார்ப்பதுபோலவே இதைப் பார்த்துவருகிறேன். * * *'

---

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர், ஸேது ஸமஸ்தான மகா வித்வான் பாஷா கவிசேகரர், பிரமஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் மேற்கூறிய கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டு 19—10—1919-ல் எழுதியது:— 'தங்கள் அகலிகை வெண்பாவைப் படித்துப் பெருமகிழ் கூர்ந்தேன். ஒவ்வொரு செய்யுளும் மிகவும் அழகுடையதாக இருத்தலை நான் நோக்கிக் கொண்டேன். தங்கள் கவித்திறம் கற்றோர் பாராட்டுந் தகுதியுடைத்து.'

பின்வருவது ஷியார் ஷி நூலுக்கு அளித்த முகவுரையில் கூறியிருப்பது:—'இக்காண்டம் (அகலிகை காண்டம்) இந்திர காண்டத்தினும் சொல்லானும் பொருளானும் சிறந்து விளங்குவது.........கௌதம காண்டம் முன்னுள்ள காண்டங்களினும் சாலச் சுவை பயந்து நிற்பது ஆராயத்தக்கது. இதனை விந்நூல் நுனியினின்று அடிவரை கரும்பு தின்றாற்போல மேன்மேற் சுவை மிக்கு நிலவுவது என்று அறியலாகும்......... இவ்வினிய நூல் பன்னெறியானும் கற்றோர்க்குப் பெருவிருந்தாதல் ஒருதலை...........ஸ்ரீமான் இராச ராசேசுவர சேதுபதிமகாராசா அவர்கள் நல்லவைக்கண்ணே இவ்வாசிரியர் [இந்நூல் முதற்பதிப்பை] அரங்கேற்றிய காலத்து அந் நல்லவையினை அணிந்த தமிழ் மக்களெல்லாம் இதன் அருமை பெருமைகளை மிகவும் பாராட்டியதனை யான் நன்றறிந்துளேன். இஃது அக்கால நிலையினும் அறிஞரெல்லாம் விழைவுறுமாறு பல்வகை அழகுடனும் சிறந்து வளர்ந்து விளங்குகின்றது.'

---

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், மக-ா-ா-ஸ்ரீ பண்டிதமணி, கதிரேசன் செட்டியாரவர்கள் 24—4—21-ல் எழுதியது:-

'அகலிகை வெண்பாப் பிரதியை வெகுமதியாக அனுப்பியுதவியதற்கு யான் பெரிதும் நன்றியறிவுடையேன். அதனைப் படித்து இன்புற்றேன். அது சிறிய உருவத்தில் பெரிய தெள்ளிய ஒளியை அடக்கித்திகழும் விலைமதிக்கொண்ணு ஓர் அரும்பெரும் இரத்தினம் போல் விளங்குகின்றது.

படிக்குங்கால் பண்டை முத்தொள்ளாயிர முதலிய வெண்பாக்களின் ஞாபகத்தை அடிக்கடி உண்டாக்குகின்றது. மதுரமிக்க சொற்களும் ஆழ்ந்த பொருணுட்பங்களும் அறப்பகுதிகளை எடுத்துக்காட்டும் அழகும் படிக்குந்தோறும் மனத்தை மிகவும் இன்புறுத்துகின்றன. முதனூலி னின்றும் கதை நிகழ்சியின் சில பகுதிகளை உசிதமாக மாற்றியது மக்கள் நன்னெறிப்படுதற்கு மிகவும் ஏற்புடைத்தாகும்.

'தங்கள் அதுல கவித்துவ சக்தி தமிழின் பெருமையை இந்நாளிலும் தலைகாத்துச் சிறப்புச் செய்கின்றதென்பதில் ஐயமின்று.'

---

S. S. BHARATHI, M. A., B. L., *High Court Vakil.*

*Tuticorin,*
*26—1—'27*

*My dear sir,*

I thank you for your very kind note and the kinder compliment in sending me the revised copy of your mock-heroical epic in Venba. Even as a new venture and innovation in our literature, it deserves a high place. Its bold conception and original design, with a new development of the plot and with the charming denouncement arrest attention, and are calculated to startle the pundits as much as to exhort the admiration of all students of Tamil literature. I took a day or two to read the poem through; and although I have read it in its First Edition, and am fairly acquainted with its charms, I must confess to have now enjoyed its reading as if it were my first acquaintance. Perhaps I may say that I was pleased with the charms of the girl before, and now when she reappears with all her beauty in its just blossom I cannot help losing myself in the enthralling fascination of the buxom lass she has since grown into. The new ideas and novel concepts, set off in quick appropriately new and bold figures and phrases, add additional jewels to the stunner you have sent out. I can only wish many younger men copy your model, and show even a fraction of your enthusiasm and earnestness for our language and Literature. With cordial and kindest regards, as ever,

*Yours very sincerely*

(Sd.) S. S. BHARATHI.

ராவ் ஸாஹிப்

# வே. ப. சுப்பிரமணிய முதலியார், C. B. V. C.

இயற்றிய நூல்கள்

1. சுவர்க்க நீக்கம் முதற் காண்டம் ... 0 12 0

('பாரடைஸ் லாஸ்ட்' என்னும் ஆங்கில நூலி லிருந்து விருத்தப்பாவில் மொழி பெயர்த்தது.)

ஷை காலிகோ கட்டடம் ... 1 4 0

'இதில் (சுவர்க்க நீக்கத்தில்) உள்ள செய்யுள் நடையும் வசன நடையும் நிரம்ப நன்றாக இருக் கின்றன. இந்நூல் வேறு ஒரு பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருந்தும், படிக்குங்காலத்து அவ்வாறு தோன்றாமல் நடை விசேடத்தால் நூதன மாகச் செய்யப்பட்ட மூல நூல் போல விளங்கிப் பொருளை வருத்தமின்றி நன்கு புலப்படுத்து கின்றது.'

மகா மகோபாத்தியாய டாக்டர்

(Sd.) உ. வே. சாமிநாதையர்.

'இந்நூலின் முதற்பகுதி முற்றுப்பெற்றிருக் குந் தன்மையைப்பற்றி மனப்பூர்வமான துதி மொழிகளன்றி வேறொன்றும் கூற இடமில்லை. மொழி பெயர்த்தவர் தாம் செய்யப்புகுந்த அரிய வேலையைச் செய்யத் தகுதியுள்ளவர் என்பதை நிரூபித்தற்கு நூலிலிருந்து இங்கு உதாரணங்கள் எடுத்துக் காட்டல் கூடியதன்று. ஆயினும், இம் மொழி பெயர்ப்பை அதிநுட்பமாகக் கவனஞ் செலுத்தி ஆராய்ச்சி செய்த யாம், மொழி பெயர்த் தவர் மூலப்பெருங் காவியத்துக் கிணங்க முட்டுப் பாடின்றி ஒழுகும் இனிய தமிழ்க்கவிகள் அமைத்த தில், மிக அதிகமான - மெய்யாகவே ஆச்சிரியகர மான - சித்தியடைந்திருக்கிறாரென்று கூறக்கட வேன்?' (டாக்டர் போப் ஐயர் தமது ஆயுட்கால வேலையாகக்கொண்டு இயற்றி முற்றுப் பெறுவித்த திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்புப் பெருநூல் முன்னுரையில் இந்நூலைப்பற்றி நன்கு மதித்துக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.)

(Sd.) டாக்டர் G. U. போப்.

'இம்மொழி பெயர்ப்பு, ஸ்ரீ சுப்பிரமணிய முதலி யாரது பிரசித்தமான பாண்டித்தியத்துக்கும், அவர் மொழி பெயர்க்க எடுத்துக்கொண்ட நூல் விஷயத்தின் பெருமைக்கும் தகுதியாக இருக்கின் றது. ஆங்கிலேய மகாகாவிய கவிஞராகிய மிலிட்டனரது கருத்துக்கள் நன்கு கிரகிக்கப்பட்டு தெள்ளிய தமிழ்ப்பாவில் வெளியிடப்பட்டிருக் கின்றன.'

(Sd.) Prof. P. சுந்தரம் பிள்ளை.

2. கோம்பி விருத்தம் (2-ம் பதிப்பு) ... 0 8 0

(சென்னை சர்வகலாசாலை 1934 ம் வருஷத்து இண்டர்மீடியேற்றுப் பாடப் புத்தகத்தில் சேர்க் கப்பட்டிருக்கிறது.)

'இதில் (கோம்பி விருத்தத்துள்) அமைந்துள்ள சொல் நயமும், பொருள் நயமும் மிகப் பாராட்டற் பாலன. இதைப் படிக்கும்பொழுது இடையிலே வைத்துவிட்டு வேறொன்றைச் செய்தற்கு எனக்கு மனம் வரவில்லை.'

மகா மகோபாத்தியாய டாக்டர்
(Sd.) உ. வே. சாமிநாதையர்.

'கோம்பி விருத்தம் மெய்யாகவே என் மனத் துக்கு விருந்தாகியது. அது நரி விருத்தத்தையும் எலி விருத்தத்தையும் காடுகளிலும் வளைகளிலும் மறைவிடந் தேடி யோடச் செய்து, பூவாகிய வயிரங்களாலும், காயாகிய மரகதங்களாலும் அலங் கரிக்கப்பெற்ற, உயர்ந்த பைந்தருச் சிங்காதனத் தின் மேல் உடுமணிகளிழைத்த அகல் விசும்பு விதா னத்தின்கீழ்க் கெம்பீரமாக அரசு வீற்றிருக்கும் போலும்.'

ராவ்பகதூர்
(Sd.) இ. வை. தாமோதரம் பிள்ளை, B.A., B.L.

3. நெல்லைச் சிலேடை வெண்பா (2-ம் பதிப்பு) ... 0 6 0

(இதிற் சில வெண்பாக்கள் சென்னைச் சர்வ கலாசாலை 1936-ம் வருஷத்து B. A. பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.)

'திரிபும் சிலேடையும் செம்பாகமாகவே அமைக்கப் பெற்றிருத்தலால் சிறிது ஊன்றி நோக்கில் பொருள் காண்டல் எளிதே. பொருள் புலப்பட்டவுடன் மனத்து எழும் பெருமகிழ்ச்சிக்கு வரம்பு காண்டல் அரிதாம். நெல்லை என்னும் சொல்லை ஆசாக வைத்து நூறு சிலேடை கூறுதல் மிகக் கொண்டாடற் பாற்று. செய்யுளியற்றும் வன்மையுடையார் இதன் திறங்கண்டு பிரமிப்பது திண்ணம். இதற்கு உரையும் இருக்கின்றது.'

(Sd.) மு. ரா. கந்தசாமிக் கவிராயர்.

4. இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம் ... 2 0 0

(ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தது.)

5. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற அதிக பிராணபாயமான வியாதிகளைப்பற்றிய புஸ்தகம்

(ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து, கவர்ண்மென்றாரால் பிரசுரிக்கப்பட்டது. சென்னைக் கவர்ண்மென்று அச்சுக்கூடம் சூப்பிரிண்டண்டுக்கு எழுதிப் பெறலாம்).

6. இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய ஜாதி வரலாறும் (2-ம் பதிப்பு) ... 0 6 0

7. கல்வி விளக்கம் முதற் பாகம் ... 1 0 0

(ஸ்பென்ஸர்ஸ் எஜுகேஷன் என்ற ஆங்கில நூலிலிருந்து ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ S. V. கள்ளபிரான் பிள்ளையவர்கள், B. A., ஸ்ரீ அப்பாவு பிள்ளையவர்கள், L. M. & S. ஆகிய மூவர்களும் மொழிபெயர்த்தது.)

8. ஜான் மில்டனுர் சரித்திரம் ... 0 4 0

(மேற்குறித்த சுவர்க்க நீக்கம் முதற் காண்டத்தின் ஒரு பகுதி 1911-ம் வருஷத்து இண்டர் மீடியேற்றுப் பரீக்ஷைப் பாடப் புத்தகம்).

9. கால்நடைகளுக்கு வியாதி வராமல் அம்மை குத்தலும் அதன் உபயோகங்களும் ... 0 1 0

10. சருவ சன சேபம் ... 0 1 0

(சென்னைச் சர்வகலாசாலை 1937—1938-ம் ஆண்டு எஸ். எஸ். எல். ஸி., இண்டர்மீடியேற்றுப் பரீக்ஷா பாடப் புத்தகங்களிற் சேர்ந்தது)

11. கம்பராமாயண சாரம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | பாலகாண்டம் | ராப்பர் ... | 1 | 10 | 0 |
| | | காலிகோ ... | 2 | 0 | 0 |
| 12. | ,, அயோத்தியா காண்டம் | ராப்பர் ... | 1 | 6 | 0 |
| | | காலிகோ ... | 1 | 12 | 0 |
| 13. | ,, ஆரணிய காண்டம் | ராப்பர் ... | 1 | 6 | 0 |
| | | காலிகோ ... | 1 | 12 | 0 |
| 14. | ,, கிட்கிந்தா காண்டம் | ராப்பர் ... | 1 | 6 | 0 |
| | | காலிகோ ... | 1 | 12 | 0 |
| 15. | ,, சுந்தர காண்டம் | ராப்பர் ... | 1 | 10 | 0 |
| | | காலிகோ ... | 2 | 0 | 0 |
| 16. | அகலிகை வெண்பா (மூன்றும் பதிப்பு) | ராப்பர் ... | 0 | 10 | 0 |
| | | காலிகோ ... | 1 | 0 | 0 |

17. திருவாவடுதுறை அம்பலவாணதேசிக மாலை (அச்சில்)

18. தனிக்கவித் திரட்டு (அச்சில்)

### கம்பராமாயண சாரம்:

இந்நூல் 'கம்பராமாயண இன்கவித் திரட்டு' என்ற பெயருடன் 'செந்தமி'ழில் வெளிவந்த காலத்திற் கிடைத்த நிருபங்களுள் இரண்டிலுள்ள அபிப்பிராயங்கள்:

ஸ்ரீ C. V. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள், B. A., B. L. (Retired District Judge):

'இன்றயதினம் எனக்குக் கிடைத்த "செந்தமிழ்" 21-ம் தொகுதி 1-ம் பகுதியில், நீங்கள் எழுதியிருக்கிற "கம்பராமாயண இன்கவித் திரட்" டின் முன்னுரையைப் படித்து வெகு ஆனந்தமடைந்தேன். நேற்றிரவு இவ்வூர் ஆனந்த நடராஜகான சபையின் முதல் வருடாந்தக் கொண்டாட்ட சபையில், நான் அவைத் தலைமை வகித்தேன்.........என் முடிவுரையில்

கம்பராமாயணம் வெகு மேன்மையான காவியமாயிருந்தபோதிலும், அது வெகு விரிவாக இருப்பதினுல் இக் காலத்தில் தமிழபிமானிகளும் படித்து ஆனந்திக்க சாவகாசமில்லை என்றும், — அந்தப் பெரிய காவியத்தில் உள்ள இன்கவிகளை, ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் மகாகவியின் கவிகள் "Beauties of Shakespeare" என்று தேர்ந்தெடுத்து பதிப்பித்ததுபோல், பதிப்பிக்க வேண்டுமென்றும், இந்த சத்கர்மத்தைச் செய்யும்படி ஈச னருள்புரிய வேண்டுமென்றும் நடராஜாவைப் பிரார்த்தித்தேன். இவ்வளவு சீக்கிரம் என் பிரார்த்தனை நிறைவேறுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. தாங்கள் எத்தனித்த காரியம் வெகு மெச்சத்தக்கது. இனி ஒவ்வொரு மாதமும் "செந்தமிழ்" பத்திரிகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருப்பேன். சர்வேஸ்வரன் தங்களையும், தாங்களெடுத்துக்கொண்ட காரி யத்தையும் அநுக்கிரகிப்பாரென்று நம்புகிறேன். தங்களை யெனக்கு முன் தெரியாதபோதிலும் தங்களுடைய நன் முயற்சியினுல் ஆனந்தப்பட்டு எழுதினேன்.' 4—1—1923.

---

மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலைத் தலைமை யாசிரியர் ஸ்ரீ திருநாராயணையங்காரவர்கள் :

'கம்பராமாயண இன்கவித் திரட்டைப் பற்றி எனக்குண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதனை நான் தங்களுக்குத் தெரிவித்தால் முகம னென்றெண்ணக் கூடுமோ என்று ஐயமுடையவனுகி இதுகாறு மெழுதா திருந்தேன். பல பிரதிகளை ஒப்புநோக்கி நன்கு பரிசோதித்தெழுதப் பெறுதலால் பல சுத்தமான பாடங்களும், பொருணயங்களும் நன்கு புலப் படுத்தப்படுகின்றன.

தொடர்மொழிகளுக்கு இடையிடையே இசையெச்சத்தானும், பிற குறிப்புக்களானும் விரித்துக் காட்டவேண்டிய சொற்களை இருபிறைக் குறிகளுக்கிடையே அமைத் தெழுதியிருப்பதை யுற்றுநோக்குந் தோறும் உள்ளம் களிப்புறுகின்றது. காவியச்சுவை நுகர விரும்பும் ஒரொரு வரும் தங்கள் உரைநயங் கண்டு களியாதிரார். இக்காலத்துச் சிலர் போலத் தத்தம் கொள்கைகளை நூலிடை நுழைக்க விரும்பாது கவி கருதிய கருத் தெதுவோ அதனையே புலப்படுத்திச் செல்லும் தங்கள் பொது நோக்குடை மையும் புலமைத் திறமையும் பாராட்டத்தக்கன. இத்தகைய புத்துரையை முற்றுவித்துப் புத்தக ரூபமாகப் பதித்துதவினுல் அது தமிழ் நாடு செய்த தவப்பயனென் றெண்ணத்தகும்.' 2—2—1926.

4, 5 இலக்கப் புத்தகங்கள் கையிருப்பில்லை.

மற்றப் புத்தகங்கள் கிடைக்குமிடம் :—

**தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் Ldt.,**

**திருநெல்வேலி & சென்னை.**

UNIVERSITY EXTENSION LIBRARY
22 DEC 1961